0,3:96

# பச்சையம்மாள்

அல்லது

# நோயாளிக் குபகாரி

இது

திவான் பஹதூர்

வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்

(சென்னை சர்வகலாசாலை அங்கத்தினர்; திராவிடகலா சபை அக்ராசனாதிபதி; லண்டன் வித்யாசங்கம் முதலியவற்றின் அங்கத்தினர்; பலநூல்களின் ஆசிரியர்; ஜனவினோதினி, மஹாராணி பத்திராசிரியர்) எழுதிய நூலினின்று திரட்டித் திருத்திப் பதிப்பித்தது.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

---

எம். ஆதி அண்டு கம்பெனி.,

மதராஸ்.

1924.

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றது.)

[ரிஜிஸ்தர் செய்தது.]

'அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு'—குறள்.

03:96

# உள்ளுறை


| அதிகாரம் | | பக்கம். |
|---|---|---|
| 1 | கடற்கரைச் சம்பாஷணை ... | 1 |
| 2 | கணவனும் மனைவியும் ... | 13 |
| 3 | பெண் பேசுதல் ... | 26 |
| 4 | கலியாணம் ... | 50 |
| 5 | காதலர்கள் ... | 59 |
| 6 | பலவித துன்பங்கள் ... | 73 |
| 7 | பரோபகார எண்ணம் ... | 83 |
| 8 | பச்சையம்மாளின் பிற்காலநிலை ... | 102 |
| 9 | அம்மை வடுநீங்க உபாயம் ... | 123 |
| 10 | கமலாக்ஷியம்மாள் ... | 144 |
| 11 | சிக்கனம் ... ... | 160 |
| 12 | பச்சையம்மாளுடைய கதையில் அறியத்தக்க புத்திமதிகள். ... | 189 |

## இந்நூலில் வரும்

# கதா பாத்திரங்கள்.

வேணுகோபாலர்—சென்னையிலுள்ள ஓர் பிரபல்மான செல்வச்சீமான்.

இரத்தினவேலு—வேணுகோபாலரின் மகனார், கதாநாயகன்.

மையூர் மாணிக்கசுந்தரர்—இரத்தினவேலின் மாமனார்.

துபாஷ் சிங்காரவேலு, சிவராமச்சந்திரர் } வேணுகோபாலரின் உறவினர்கள்.

சங்கரலிங்கம் பிள்ளை, தாண்டவமூர்த்தி முதலியார் } வேணுகோபாலரின் சிநேகிதர்கள்.

பரமானந்தர்—ஓர் வித்துவான், மாணிக்கசுந்தரரின் நண்பர்.

அம்பலவாணச் செட்டியார்—ஓர் வியாபாரி.

பாபு—மாணிக்கசுந்தரரின் வேலைக்காரன்.

கதிர்வேல், கந்தசாமி } சுப்பம்மாளின் புதல்வர்கள்.

அருணாசலம், ராஜு } மங்கத்தம்மாளின் புதல்வர்கள்.

சாம்பசிவ சாஸ்திரி, சிவாநந்த சாஸ்திரி, மாத்துவாச்சாரி } புரோகிதர்கள்.

சிவகாமி—வேணுகோபாலர் மனைவியார்.

விசாலாக்ஷி—மாணிக்கசுந்தரர் மனைவியார்.

பச்சையம்மாள்—மாணிக்கசுந்தரரின் மகளார், கதாநாயகி.

கமலாக்ஷி—சிவராமச்சந்திரரின் மனைவியார்.

சௌந்தரவல்லி—ஒரு பெருமாட்டி, சிவகாமி கமலாக்ஷியின் நெருங்கிய பந்துத்துவமுடையவர்.

கௌரி—தாண்டவமூர்த்தியின் மகள்.

| | |
|---|---|
| இலக்ஷ்மி<br>சுப்பம்மாள்<br>மாணிக்கத்தம்மாள்<br>மங்கத்தம்மாள்<br>துளசியம்மாள் | இவ்வைவரும் பச்சையம்மாள் விதவையான பிறகு அறிமுகமானவர்கள். |

மீனாக்ஷியம்மாள்—இலக்ஷ்மியின் தாயார்.

| | |
|---|---|
| சொர்ணம்<br>அன்னம் | மங்கத்தம்மாளின் புதல்விகள். |

சிவகாமி—மங்கத்தம்மாளின் தமக்கை மகள்.

# முன்னுரை.

'உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா' என்னும் பழமொழி, எவ்வளவு உண்மையும், உயர்வும் உடையதென்பதை உலகானுபவத்தில் தேர்ந்து தெளிந்த அனுபவமுடைய அறிவாளிகள் பலரும் சொல்லக் கேட்டிருக்கின்றோம். ஆகையால்தான் அவர்கள், செல்வத்தில் வாழும்போது மகிழ்வதும், துன்பத்தில் உழலும்போது துக்கிப்பதும் இல்லை. ஆனால், அவ்விதம் இன்பத்தையும் துன்பத்தையும் வெவ்வேறாகக் கருதாமல் சமமாகப் பாவித்து, எப்போதும் ஒரே நோக்கத்துடன் வாழும் அறிவாளிகள் இக்காலத்தில் அத்திபூத்தாற்போல் அங்கும் இங்குமாக சிலரே காணப்படுகின்றனர்.

செல்வம் எந்தக் காலத்திலும் ஓரேயிடத்தில் நிலைத்திருப்பதில்லை; தரித்திரமும் ஒருவரிடத்திலேயே தாண்டவமாடிக்கொண்டிருப்பதில்லை. இதை விளக்க ஒரு புலவர், செல்வமும் தரித்திரமும் தம்மை உடையாரிடம் செல்வோம் தரித்திரோம் என்று கூறிக் கொண்டிருப்பதாகக் கூறினார். அது அனுபவமுடையார் ஒப்புக்கொள்ளத் தக்கதேயாம். ஒரு வருஷத்தில் பல பருவங்கள் மாறி மாறி வருவதை போலவும், 'ஆறிடு மேடும் மடுவும் போலாம் செல்வம்' என்பதைப்போல், ஆறுகளிலும் மடுக்களிலும் கரை புரண்டு வெள்ளம் வரும்போதெல்லாம் அங்குள்ள மேடுகள் பள்ளங்களாகவும், பள்ளங்கள் மேடுகளாகவும், மாறுவதுபோல்,

மனித வாழ்க்கையில் செல்வமும் தரித்திரமும், சுகமும் துக்கமும் மாறி மாறி வரும் இயல்பினை யுடையவைகளாய் இருக்கின்றன. இவ்வுண்மையினை ஆழ்ந்துணர்ந்தார் சிலர் இருப்பினும், எள்ளத்தனையும் இவ்வுண்மையைச் சிந்தியாதாரே விரிந்து பரந்துள்ள இவ்வுலகெங்கும் நிறைந்திருக்கின்றனர்.

ஆதலால், இவர்களுக்கிடையில் உள்ள உண்மையினை உள்ளபடி உணர்ந்த பேரறிவாளர்களின் அபிப்பிராயங்கள் கடலிற் கரைத்த காயம்போ லாகின்றன.

ஆகவே, எல்லாமறிந்தார் வார்த்தைகள், இலை மறை காய்போல் நின்று, ஆராய்ந்தறிவார்க்கே புலப்படுவதன்றி ஏனையோர்க்குத் தெரிவதில்லை. அதனால், ஏதுமறியாத சாமானியர் எண்ணங்களும் செயல்களுமே இவ்வுலகில் நிரம்பியிருக்கின்றன.

ஆயினும், அறிவுடையார் கூறும் உண்மை உரைகளையே கடைப்பிடித்து ஒழுகிய ஆண்மக்களும் பெண்மக்களும், ஒரோர் காலத்தில் உலகில்சிற்சில இடங்களில்தோன்றி இருந்தார்கள். அவர்கள், 'வாழ்க்கை நிச்சயமல்ல; தேகம் அநித்தியம்; செல்வமும் தரித்திரமும், இன்பமும் துன்பமும் எல்லார்க்கும் வருவது இயல்பே' என்பன போன்ற உண்மைகளை, ஆன்றோர் வாயிலாக அறிந்தது மன்றித் தங்கள் அநுபவத்திலும் அறிந்திருந்தார்கள்.

ஆதலால், அவர்கள் தனக்கெனவாழாது, பிறர்க்குரியவராக இருந்து, தங்கள் சுகமே பெரிதெனக் கருதாது, பிறர் சுகங் கருதித் தங்களாலான நன்மைகளை உலகத்தார்க்கு உதவியிருந்தனர். அப்படி உலகோபகாரிகளாய் இருந்து

வாழ்ந்தவர்களுடைய பெயர்கள் இன்றளவும் குன்றின்மேல் இட்ட தீபம்போல் பிரகாசிக்கின்றன. அப் பரோபகாரிகளிற் பெரும்பான்மையோர் சாதாரண குடும்பத்தில் தோன்றியவர்களேயாவர். அத்தகையோர் வாழ்ந்த காலத்தில், பிறர் நன்மையைப்பற்றி ஒரு சிறிதும் சிந்தியாது தங்கள் தேகசுகம், தங்கள் செல்வம் இவைகளைப்பற்றியே பெருமையாக எண்ணி இறுமாந்திருந்த தனவந்தர்களின் பெயர்கள் அவர்கள் இருக்கும்போதே மறைந்து விட்டன.

ஆனால், பிறர் நலங்கருதி வாழ்ந்த அம் மகோபகாரிகளின் பெயர்களோ, இன்னும் எத்தனையோ நூற்றாண்டுகள் வரையில் கல்லின்மேல் வரைந்த எழுத்தைப்போல் இவ்வுலகில் மறையாது நிலைபெற்று இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அம் மகோபகாரிகளில் ஒருவராக பச்சையம்மாள் என்னும் பெயரினையுடைய ஒரு பெண்மணியாரும் இருந்தார். அந்த அம்மையார், செல்வம், கல்வி, நாகரிகம் இவைகளிற் சிறந்து விளங்கும் சென்னையில் வாழ்ந்திருந்தார். அவர் உண்மையும், உத்தம குணமும், தெய்வ பக்தியும், பரோபகாரமும், சிறந்த கற்புமே பூஷணங்களாக உடையவர். அன்றியும், தம்முடைய கணவன் குறிப்பறிந்து அதற்கேற்ப நடப்பவர். வரும் விருந்தினரை அகமகிழ்வுடன் ஏற்று உபசரிக்கும் உத்தமகுணம் வாய்ந்தவர், வீட்டில் உள்ளதையே கொண்டு பாங்குபெறக் குடித்தனம் நடத்துபவர். இரப்பவர்க்கு இல்லையென்னாது தம்முடைய நிலைமைக்கு ஏற்றவாறு உதவுபவர். பொறாமை, கோபம், வஞ்சனை முதலிய துர்க்குணம் உடையவர்களோடும் சேரார். தம் கணவர் இருக்கும் இடமே கோயிலாகவும் அவர் உருவமே தெய்வமாகவும் எண்ணி வணங்கி,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்னும் அருள் வாக்குக் கிலக்கியமாக நின்றவர். அன்றியும் அவ் வம்மணியார்

'மாசிலாக்குலத்துவந்தாள், வருவிருந்துவப்பவூட்டும்
நேசமிக்குடையாள், கொண்கன் நினைப்பறிந்தொழுகும்நீரள்
தேசுறு வாய்மைஉள்ளாள், சினந்திடல் என்றுமில்லாள்,
பேசுதிண் கற்புவாய்த்தாள், பெற்றதே கொண்டு வப்பாள்'

என்னும் கருத்திற்கு ஒரு சிறிதும் மாறாக நடந்தறியாதவர். இன்னும் அந்தப் பச்சையம்மாள் என்னும் பெண்மணியார் தம்முடைய வாழ்நாட்களில் ஒரு தீமையாவது செய்தறியாதவர்; மற்ற ஸ்திரீகளைப்போல் வீண் வார்த்தை ஒன்றேனும் பேசி அறியாதவர். அவரிடத்திற்கண்ட நற்குணங்கள் பல உள. சுருங்கக்கூறுமிடத்து, அவ்வம்மையார் எல்லா நற்குணங்களும் நிரம்பித் ததும்பும் கடல்போல் விளங்கினார் என்று சொல்லலாம்.

இத்தகைய சற்குணபாத்திரமாய் விளங்கிய பச்சையம்மாளின் தந்தையும் கணவரும் தனிகர்களேயாவர். அந்த அம்மையார் தம்முடைய வாழ்நாட்களில் அநுபவித்த இன்ப துன்பங்கள் பல உள. அவைகளையெல்லாம் அவர் சமமாகவே பாவித்து, எல்லா நற்குணங்களுக்கும், தாமொரு வழிகாட்டியாய் இருந்தார் என்பதை அறிய, யார்தாம் ஆவல் கொள்ளாதிருப்பர்! அவருடைய சிறந்த பரோபகார குணமே அவர்தம் வாழ்நாள் வரலாற்றை எழுதுவதற்கு, முதற்காரணமாகும். ஆகையால் அதை ஆரம்பிப்போம்.

# பச்சையம்மாள்

## அதிகாரம்—1.

### கடற்கரைச் சம்பாஷணை.

பச்சையம்மாளின் ஜீவிய சரித்திரம், முதன்முதல், உலகத்தில் உள்ள உன்னத கடற்கரைகளில் மூன்றாவதாக விளங்கும் சென்னைக் கடற்கரையில் அநேக வருடங்களுக்கு முன்னே ஒரு நாள் மாலையில் ஆரம்பமாகின்றது.

அன்று வெயில் அதிகமில்லாமல் கொஞ்சம் மப்பும் மந்தாரமுமாகவேயிருந்தது. சில்லென்ற காற்று மெல்லென்று வீசியது. தேக சுகங்கருதி, பலதிறப்பட்ட பெண்களும் ஆண்களும் கால்நடையாகவும், வண்டி வாகனங்களிலேறியும் வந்து, வெள்ளியின் வெண்மையான கடற்கரை மணலின் மீது அமர்ந்து, ஏழைகளென்றும் பணக்காரர்களென்றும் பேதம் பாராட்டாது, எல்லார்க்கும் பொதுவாகக் கடவுள் அளித்துள்ள கடற்காற்றை அனுபவித்துக்கொண்டிருந்தனர். அப்போதுதான் நங்கூரமெடுத்துப் பாய்விரித்துப் * பரவைமேற் செல்லும் ஒரு பாய்க் கப்பலின்

* கடல்.

காட்சியானது, அழகிய அன்னப்பறவை ஒன்று தெளிந்த நீரையுடைய தடாகத்தில், ஆடாதசையாது அழகுபெற நீந்திச்செல்லுவதுபோல் இருந்தது. பின் மாலையில் மீன் வேட்டைமேற் சென்ற வலைஞர், தத்தம் கட்டுமரங்களுடன், தங்கள் வருகையை எதிர் நோக்கியிருக்கும் மனைவி மக்கள் மனமகிழக் கரையை நோக்கி வருவாராயினர்.

பேரிருள் என்னும் அஞ்ஞானத்தில் மூழ்கி, அதினின்று கரையேற வழியறியாது தவித்துக்கொண்டிருக்கும் ஆன்மாக்கள் ஈடேறும் வண்ணம், இறைவன் இன்னருள் சுரந்து, அவர்களுக்கு நல்வழி என்னும் சோதிமயமான ஞான விளக்கைக் காட்டி, இவ்வழியே வாருங்கள் நலம் பெறலாம் என்று அழைப்பதுபோல, தங்குமிடந்தேடி நெடுநீர்ப் பரப்பினையுடைய கடலிற் பல நாட்களாக ஓயாது ஓடி வரும் கப்பல்களை நோக்கி, தங்குமிடம் இங்குளது வரலாம் என்று அழைப்பதுபோல் (Light House) * கடற்றுறை விளக்கு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது மணியோ ஆறு.

அன்று † பூரணையாதலால் கடற்கரைக்கு வந்தாரனை வரும், விளக்குவைக்கு நேரமான பிறகும், தத்தம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லாமல், அப்போதுதான் மெருகிட்டுத் தகதகவென்று பிரகாசிக்கும் வட்டவடிவமுள்ள தங்கத் தகடுபோல் கீழ்த்திசையில் ஜோதி மயமாய்ப் புறப்படும் சந்திரனுடைய காட்சியைக் கண்டு களித்திருந்தனர். அலையோசை முன்னையினும் அதிகமாயிற்று. தங்கத்தை உருக்கி வார்த்தாற்போல் விளங்கிய கடல்நீரில், அலைகள்

* (கலங்கரை விளக்கு) கப்பலையழைக்கும் விளக்கு.
† முழுநிலா வெறிக்குநாள்.

மேலெழுந்து கீழ்மடிந்து விழும்போது, காரிருளில் வீரன் வீசும் வாளொளிபோல் மினிர்ந்தன. இத்தகைய இயற்கை யமைப்பின் காட்சியால், அனைவரும் அடைந்த ஆனந்தம் அளவுகடந்து விளங்கியது.

அப்போது அங்கோரிடத்தில் ஐம்பதும், அறுபதும், இவற்றிற் கிடைப்பட்ட வயதும் உடைய ஆண்மக்கள் மூவர் சென்னப்பட்டணத்தைப் பற்றிய சரித்திர சம்மந்த மான சில விஷயங்களைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு அருகே சற்றுத் தூரத்தில் அவர்களுடைய மனைவியர்களான மூன்று பெண்கள் குடும்ப சம்மந்தமான பற்பல விஷயங்களைப்பற்றி மிகவும் மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய சம்பாஷணை சற்று நாகரிகமாகவேயிருந்தது.

அவர்களுடைய சம்பாஷணைகளுக்கிடையே முப்பது வயதுடைய சௌந்தரவல்லி என்னும் பெயரினையுடைய ஒரு ஸ்திரீ தன்னிலும் சற்று வயதில் முதிர்ந்த சிவகாமி யென்பவளைப் பார்த்து "ஏன் அம்மா! நீங்கள் உங்க ளுடைய மகனுக்கு எப்போது விவாகம் செய்விக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

அவள் அப்படி கேட்டவுடன் மற்றவளான கமலாக்ஷி என்பவளும், "எனக்கும் அதைப்பற்றித் தங்களைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் சில தினங்களாக உண்டு. தங்கள் மகனுக்கு வயதாகவில்லையா, என்ன" என்று சிவகாமியைப் பார்த்துக் கூறினாள்.

"ஏன் வயதாகவில்லை? இருபத்துமூன்று ஆகிறது. இவ்வருஷத்தில் செய்துவிடலாம் என்பது என்னுடைய

கருத்து" என்று அவ்விருவருடைய கேள்விகளுக்கும் சேர்ந்தாற்போல் விடை கூறினாள் சிவகாமி.

சௌந்தரவல்லி :—"ஆம், அம்மா; இவ்வருஷத்திலேயே செய்துவிடுவதுதான் உத்தமம். அடுத்த வருஷம் மகாமக வருஷமாம். அந்த வருஷத்தில் விவாகம் செய்யக்கூடாதென்று சொல்லுகிறார்கள்."

சிவகாமி :—"என்னுடைய இஷ்டமா, அம்மா! வீட்டில் அவர் இஷ்டப்படவேண்டாமா?"

கமலாக்ஷி :—"அவர் இஷ்டப்படாமல், என்ன சொல்லப் போகிறார் அம்மா! அன்று குடிக்கக் கஞ்சியில்லாதவர்களெல்லாம் தங்கள் பிள்ளைகளுக்குக் காலாகாலத்தில் கலியாணம் செய்துவைத்துக் கண்குளிரப் பார்க்கிறார்களே! உங்களுக்கென்ன! உட்கார்ந்து சாப்பிட்டாலும் உங்களுக்கு இருக்கும் * இருப்பு இரண்டு தலைமுறைகளுக்கு வருமே! இருப்பது ஒரே குழந்தை. அதற்கு இன்னமும் விவாகம் செய்யவில்லையென்றால் பார்ப்பவர்கள் என்ன சொல்லமாட்டார்கள்."

சௌந்தரவல்லி :—"பார்ப்பவர்கள் சொல்வதிருக்கட்டும். நமக்குத் தெரியவில்லையா அம்மா! உங்கள் பிள்ளையாண்டான் மிகவும் பொறுமைசாலி. அவன் வாயிலிருந்து ஒரு வார்த்தை புறப்படுவதென்றாலே பகீரதப் பிரயத்தனமாய் இருக்கிறது. அவன் ஊரில் உள்ள சில பிள்ளைகளைப் போல் இல்லையே! அப்படியிருந்தால் அவனே இதுவரையில் சொல்லியிருப்பான். இதையெல்லாம் பெரியவர்களாகிய நாமல்லவா அறிந்து வேண்டியதைச் செய்யவேண்டும்."

---

* ஆஸ்தி.

சிவகாமி:—" ஆம் அம்மா, நீங்கள் சொல்லுவது உண்மைதான். அவனுக்கு நான்குவருடங்களுக்கு முன்னதாகவே விவாகம் நடத்தவேண்டும் என்று அவன் பாட்டியார் பிடிவாதம் செய்தார்கள். அப்போது எங்கள் வீட்டில் உள்ளவரிடம் அவருக்கு சிநேகரான டாக்டர் ஒருவர், 'சுகாதார விதிப்படி ஆண்பிள்ளைகளுக்கு இருபத்திரண்டு வயதும், பெண்களுக்குப் பதினெட்டு வயதும் ஆனபிறகே விவாகம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் தேக சுகம் கெடும், என்று கூறினர். தேக சுக சம்பந்தமான விஷயங்களில் எதையும், அவர், வைத்தியர்களுடைய சம்மதமில்லாமல் செய்வதில்லை. ஆதலால் அவர், தன் தாயார் எவ்வளவு பிடிவாதம் செய்தும் பையனுக்கு விவாகம் என்னும் பேச்சையே அப்போது அடியோடு நிறுத்திவிட்டார். ஆனல் இப்போது அவனுக்கு டாக்டர் சொல்லிய வயதிற்குமேல் ஒரு வயது அதிகமாகவே ஆய்விட்டது. இனி அதற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டியதுதான். ஆனல், " அவனைக் 'கலியாண கோலத்துடன் கண்குளிரப் பார்க்க வேண்டும்' என்று சொல்லிக்கொண்டிருந்த அவன் பாட்டியார்தாம் இருந்து பார்ப்பதற்குக் கொடுத்துவைக்காமல் இறந்துபோய் விட்டார்கள்."

சௌந்தரவல்லி :—"பாருங்கள்! அந்த அம்மாள் இன்னும் இரண்டொரு வருஷம் இருந்திருந்தால் எல்லோருக்கும் திருப்தியாய் இருக்கும். பார்த்தீர்களா, மனிதர்களுடைய காயம் எப்படி இருக்கின்றது! மழையில் உதித்த குமிழி போல, அஃதொரு விநாடியில் தோன்றி மறு விநாடியில் மறைகின்றது. ஆகையால், இதே முயற்சியாக இருந்து இந்த வருஷத்தில் தவறாமல் விவாகத்தை நடத்திவிட வழி பாருங்கள்."

சிவகாமி :—"ஆஹா, அப்படியே."

கமலாக்ஷி :—"என் சிவகாமி அம்மா! இந்த விஷயத்தில் எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது."

சிவகாமி :—"என்ன சந்தேகம்?"

கமலாக்ஷி :—"தங்கள் பிள்ளையாண்டானுக்கு இருபத்திரண்டு வயது வரையில் டாக்டர் சொல்லியபடி விவாகம் செய்யாமல் பிடிவாதமாயிருந்த தங்கள் வீட்டுக்காரர், இப்போது கலியாணம் என்றால் பதினெட்டு வயது பெண் அல்லவா வேண்டும் என்பார்?"

சௌந்தரவல்லி :—"பேஷ், கமலாக்ஷி சொல்லியது நியாயந்தான். அதற்கு என்ன செய்வது அம்மா?"

சிவகாமி :—"ஆம். இதுவரையில் இந்த எண்ணம் எனக்குத் தோன்ற வில்லையே! அந்த டாக்டர் வார்த்தை எவ்வளவு இடையூறாய்விட்டது பாருங்கள்?" (சிந்திக்கின்றாள்.)

கமலாக்ஷி :—"அவர்மேல் குற்றம் என்ன இருக்கிறது? உள்ளதைத்தானே சொல்லியிருக்கின்றார்! ஆனால் சில சமயங்களில் பொய்மையும் வாய்மையாகும் என்பதுபோல சில விஷயங்களில் உண்மையைக் கூறுவதாலும் வருத்தம் நேரிடுகின்றது."

சௌந்தரவல்லி :—"உண்மையை உரைப்பது சில சமயங்களில் ஆபத்தை உண்டாக்குமாயினும் அவ்வாபத்து நீடித்திராது. முடிவில் நன்மையே விளையும். இல்லாவிட்டால் உண்மை என்பதற்கு என்ன கௌரவ மிருக்கிறது!"

கமலாக்ஷி :—"நீங்கள் சொல்லுவது மிகவும் நியாயமான வார்த்தைதான். டாக்டர் கூறியபடி பெண்கிடைத்து விவாகம் நடந்துவிட்டால் மிகவும் நன்மையாகத்தான்

இருக்கும். ஆனால், சிவகாமி அம்மாள் சம்பந்தம் செய்து கொள்ளத்தகுந்த இடங்களில் எங்கும் பெண்கள் கிடைப்பது துர்லபம். கிடைத்தாலும், பத்துப் பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட பெண்கள் கிடைப்பது அருமை. ஏன் சிவகாமி அம்மா, நான் சொல்லுவது உண்மைதானே?"

சிவகாமி :—"நீங்கள் சொல்லுவது எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. இருபது வருடங்களாக எங்களோடு நெருங்கிப்பழகும் உங்களுக்குத் தெரியாத விஷயங்கள் என்ன இருக்கப்போகின்றன?"

சௌந்தரவல்லி :—(சிவகாமி அம்மையும், கமலாக்ஷி அம்மாளையும் பார்த்து) "டாக்டர் சொல்லியபடி நடக்க வேண்டியதுதான். நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாதானாலும் எவ்வளவு நம்மால் சாத்தியம் ஆகுமோ அவ்வளவுதானே நாம் அவர் ஆலோசனையைக் கேட்கலாம். பதினெட்டு வயதுடைய பெண்தான் வேண்டுமென்றால் என்ன செய்கிறது! ஏதோ கிடைக்கக்கூடிய பெண்களில் பெரிய பெண்ணைப் பார்த்து விவாகத்தை நடத்தி விடவேண்டியதுதான். வேறு என்ன செய்கிறது?",

சிவகாமி :—"அப்படி அல்லவே அம்மா! கிடைக்கும் பெண்களில் பெரிய பெண்ணை மட்டும் தேடிவிட்டால் போதுமா? ஆயிரங்காலத்துப் பயிராயிற்றே!"

சௌந்தரவல்லி :—ஆம் அம்மா! நீங்கள் சொல்லுவது உண்மைதான்.

கமலாக்ஷி :—"பெண் பெரியவளா யிருக்கவேண்டுவதோடும், நமது பிள்ளையின் அழகுக்குத் தகுந்த அழகு உடையவளாக இருக்கவேண்டுமே!"

சிவகாமி :—"எல்லாவற்றையும் விட நற்குணம் உடையவளாய் இருக்கவேண்டுமே! எட்டிப்பழம்கூட அழகாகத்தான் இருக்கிறது. பிரயோசனம் என்ன?"

சௌந்தரவல்லி :—"நாம் எதிர்பார்க்கிறபடி பலவிதத்திலும் மனதிற்குப் பொருத்தமான ஒரு பெண் கிடைக்க வேண்டுமே!" (மௌனமாய்ச் சிந்திக்கிறாள்.)

கமலாக்ஷி :—(சௌந்தரவல்லியைப் பார்த்துவிட்டுப் பிறகு அவசரமாக சிவகாமியம்மையை நோக்கி) "இப்போதுதான் அம்மா எனக்கு நினைவு வந்தது. துபாஷ் சிங்கார வேலு மகள்; மையூர் மாணிக்க சுந்தரத்தின் மகள்; ஆக இரண்டு பெண்கள் இருப்பது தங்களுக்குத் தெரியுமே?"

சிவகாமி :—"ஆம் தெரியும்."

சௌந்தரவல்லி :—"ஒன்றுக்கு இரண்டாயிற்றே. இன்னும் என்ன யோசனை? இரண்டு பெண்கள் இருப்பது தெரிந்திருந்தும் இதுவரையில் சொல்லாமல் இருந்திருக்கிறீர்களே?"

(கமலாக்ஷி அம்மையைப் பார்த்து) "அந்த மட்டுக்கும் தங்கள் ஞாபகம் விசேஷந்தான்! இதுவரையில் எனக்குத் தெரியாது."

(மறுபடியும் சிவகாமி அம்மையைப் பார்த்து) "என் அம்மா! அந்த இரண்டு பெண்களில் ஒருத்தியாவது நமது மனதிற்குப் பிடித்தமாய் இருக்கலாம் அல்லவா?"

சிவகாமி :—"இருக்கலாம். ஆனால், அந்தப் பெண்களில் ஒருத்தியும், நமக்குக் கிட்டாள்போல் தோன்றுகிறது."

கமலாக்ஷி :—"ஏன் அம்மா, அப்படிச் சொல்லுகிறீர்கள்? மையூர் மாணிக்க சுந்தரமும், துபாஷ் சிங்கார வேலும் தங்களைப்பார்க்கிலும் அந்தஸ்தில் உயர்ந்தவர்களா?

என்ன! பார்க்கப்போனால் உங்களுடைய அந்தஸ்துதான் அவர்களுடைய நிலைமையைப்பார்க்கிலும் ஒரு படி அதிகம் என்றே சொல்லலாம். நாம் கேட்டாலும் ஒருத்தியும் கிட்டாள்போல் தோன்றுகிறதென்று தாங்கள் என்ன காரணத்தோடு சொல்லுகிறீர்கள்?"

சிவகாமி:—"துபாஷ் சிங்காரவேலுக்கு ஒரே பெண்தான். வேறு சந்ததியே கிடையாது என்று உங்களுக்குத் தெரியுமே! அதனால் அவர் பணக்கார மாப்பிள்ளை வேண்டியதில்லை என்றும் ஏழையானாலும் கொஞ்சம் புத்திசாலியான மாப்பிள்ளையே வேண்டுமென்றும் இருப்பதால் பெண்ணைக் கொடுத்து, அவனைத் தம்முடைய வீட்டோடே வைத்துக்கொள்ளப் போகிறாராம். பணக்கார மாப்பிள்ளையானால் தம்முடைய வீட்டிலே வந்து இருந்துவிடமாட்டானென்றும், அப்படி வந்திருந்தாலும் தம்முடைய இஷ்டப்படி அவன் நடக்கமாட்டானென்றும் அவர் சொல்லுகிறாராம்."

கமலாக்ஷி:—"சரிதான். நமக்கு இருப்பது அருமையாய் ஒரு குழந்தை. அதை அவனுடைய பெண்ணுக்காக அவனிடம் தத்தம் செய்துவிடுவதா! என்ன? அது போகிறது. மைலூர் மாணிக்க சுந்தரத்தின் பெண்ணைப்பற்றி என்ன?"

சிவகாமி:—"அவரும் ஏறக்குறைய அந்த துபாஷின் கருத்துப்படியேதான் இருக்கிறார். அவர் அந்தஸ்தில் தமக்கு மேலானவரிடத்தில் சம்பந்தம் செய்துகொண்டால், அவர்களுக்கு ஏற்றவாறு தம்மால் நடந்துகொள்ள முடியாதென்றும், அப்படி நடந்துகொண்டாலும் மற்றப் பெண்களைக் கொடுக்குமிடத்திலும் அப்படியே நடந்துகொள்ள

வருமென்றும் எண்ணியிருப்பதால், தமக்குச் சமநிலை உடையவர்களோடாவது அல்லது சற்றுத் தம்மினும் கீழ்ப்பட்டவர்களோடாவதுதான், தாம் சம்பந்தம் செய்ய விரும்புகிறாராம்."

கமலாக்ஷி:—"இதென்ன நூதனமாய் இருக்கிறதே! 'பணக்காரர்களிடத்தில் பெண்ணைக்கொடு; ஏழைகளிடத்திலிருந்து பெண்ணைக்கொள்' என்பதல்லவா உலக வழக்கம்"

சிவகாமி:—"அந்த வழக்கத்தை யார் கவனிக்கிறார்கள்? உலகத்தில் உள்ள நல்ல வழக்கத்தைக் கைவிடுவதும் கெட்ட வழக்கத்தைக் கைக்கொள்ளுவதும் எங்கும் சாதாரணமாய் விட்டதே?"

கமலாக்ஷி:—"அம்மா! எனக்கு அந்த இரண்டுபெண்களுடைய தாய்மாரிடத்திலும் அதிக பழக்கமுண்டு நான் எப்படியாவது அவர்களிடத்தில் சொல்லிச் சம்மதிக்கச் செய்துவிடுகிறேன். அவர்களுடைய கணவர்கள் அவ்வளவு பிடிவாதக்காரர்களல்லர். ஆதலால் அவர்கள் சம்மதித்து விட்டால் அவர்களுடைய கணவர்களும் சம்மதித்து விடுவார்கள் என்பது திண்ணம். ஆகையால் அந்த இரண்டு இடங்களில் உங்களுக்கு எந்த இடத்தில் சம்பந்தம் செய்து கொள்ளப் பிரியம் என்பதைக் கூறுங்கள்."

சிவகாமி:—"அம்மா, தாங்களும் சௌந்தரவல்லி அம்மாளும் எங்கள் குடும்ப விஷயத்தில் இவ்வளவு பிரியம் வைத்திருப்பதைப்பற்றி நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் என்பது எனக்குத் தெரியவில்லை. எனக்கு மையூர் மாணிக்க சுந்தரத்தின் முதற்பெண்ணையே நமது குழந்தைக்கு விவாகம் செய்துவைக்கலாம் என்பது கருத்து.

அநேகமாய் அந்தப்பெண்ணையே விவாகம் செய்து கொள்ள நமது பிள்ளையாண்டானுக்கும் விருப்பம் இருக்கலாம்.''

சௌந்தரவல்லி:—(புன்சிரிப்புடன்) "அதென்ன அம்மா! ஜோசியமா, தங்கள் பிள்ளையாண்டானுக்கு விருப்பம் இருக்கலாம் என்பது தங்களுக்கு எப்படித் தெரியும்?''

சிவகாமி:—"மாணிக்கசுந்தரத்தின் மகள் படித்தபெண் என்பதும், ஹார்மோனியம் வாசிப்பதில் நல்ல தேர்ச்சியுடையவள் என்பதும், தங்களுக்கும் கமலாக்ஷி அம்மாளுக்கும் தெரிந்த விஷயந்தானே! நமது பிள்ளையாண்டான் அவர்கள் வீட்டு வழியாகப் பலமுறை வண்டியில் போகும்போதும் அந்தப் பெண் ஹார்மோனியம் வாசிப்பதைக் கேட்டிருக்கிறான்போல் தெரிகிறது. பிறகு, வாசிப்பவள் இன்னாள் என்பதையும் எப்படியோ அறிந்துகொண்டு ஒரு தினம் அவன், என்னிடம் ஏதோ பேசிக்கொண் டிருக்கும்போது, 'மாணிக்கசுந்தரத்தின் மகள் மிகவும் அருமையாய் ஹார்மோனியம் வாசிக்கிறாள் அம்மா! இதுவரையில் ஹார்மோனியம் வாசிப்பதில் அவ்வளவு திறமை யுடையவர்களை நான் எங்கும் கண்டதில்லை' என்று கூறினான். அப்படிச் சொன்னதனால் அவன் அப்பெண்ணின்மீது கொஞ்சம் நோக்கம் உடையவனாயிருக்கிறானென்று எனக்குத் தோன்றிற்று.''

கமலாக்ஷி:—"நல்லதம்மா, அதுவும் உங்கள் நல்ல காலந்தான். அந்த துபாஷ் மகளைப் பார்க்கிலும் மாணிக்கசுந்தரத்தின் மகள், 'கல்வியிலும் குணத்திலும் சிறந்தவள்' என்று எனக்குக் கேள்வி, நான் நேராக அந்தப் பெண்ணோடு பேசியதனாலும் எனக்கு அப்படித்தான் தெரிகிறது. நான் நாளையதினமே வேண்டுமானாலும் அந்த விஷயத்தில் முயற்சி செய்கிறேன். எதற்கும் நீங்கள் முதலில் உங்கள்

கணவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் அவருக்கு அந்த இடத்தில் சம்பந்தம் செய்துகொள்ளப் பிரியம் இருக்குமோ, என்னவோ ?"

சிவகாமி:—"ஆம். அவரைக் கேட்காமல் நான் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. ஆனால், அநேகமாய் அவர் அந்த இடத்தில் சம்பந்தம் செய்து கொள்ளச் சம்மதிக்கலாம்."

இப்படி இவர்களுடைய சம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த இவர்கள் கணவன்மார் மூவரும் வீட்டிற்குப்போகப் புறப்படவே, இவர்களும் அவ்வளவோடு தங்கள் சம்பாஷணைகளை நிறுத்திவிட்டு, அவர்களோடு போகப்புறப்பட்டார்கள்.

## அதிகாரம்—2

### கணவனும் மனைவியும்.

சிவகாமி அம்மாளின் கணவர் உத்தம குணமும் உயர்ந்த நோக்கமும் உடையவர். வேணுகோபாலர் என்னும் அவருடைய பெயர் எங்கும் பிரசித்தம் உடையது.

இரவுமணி ஒன்பது இருக்கும். போஜனம்ஆனவுடன் அவர், சற்று உலாவியபிறகு, ஒரு சாய்வு நாற்காலியில் படுத்து ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார்.

எங்கும் அமைதி குடிகொண்டிருந்தது. அப்போது அவர் பக்கத்தில் தரையின்மேரில் விரிக்கப்பட்டிருந்த சுத்தமான இரத்தின கம்பளத்தின்மேல் உட்கார்ந்து, அவருக்கு வெற்றிலை மடித்துக்கொண்டிருந்த அவர் மனைவி, அவரைப் பார்த்து, "என்ன, உங்களுக்கு அல்லவோ சொல்லுகிறேன்! நான் சொல்லியதற்கு நீங்கள் ஒன்றும் சொல்லாமல் இருந்தால்?" என்றாள்.

அதற்கு அவர் அவளைப் பார்த்து, "என்ன சிவகாமி! நல்ல நேரம் பார்த்து வந்துவிட்டாயே, பேசுவதற்கு?" என்று சொன்னார்.

சிவகாமி:—"எனக்குத் தெரிந்தவரையில் இதுதான் சமயம். நீங்கள் படித்துமுடியும் வரையில் காத்திருப்பதானால் மணிபதினொன்று ஆய்விடும். நேற்றுத்தான் திருவள்ளுவநாயனாரின் மனைவியுடைய சரித்திரத்தைச் சொன்னீர்கள்,

அந்த அம்மாளைப்போல நடந்து கொள்ள என்றால் முடியவில்லையே! இப்போதே தூக்கம் வந்தேன் என்கிறதே?"

வேணுகோபாலர்:—"அதனால்—"

சிவகாமி:—"தூக்கம் வருமுன் இப்போது நான் தங்களிடம் சொன்ன விஷயத்தைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும்."

வேணுகோபாலர்:—"என்ன, சிவகாமி! நீ என்ன சொன்னாய்?"

சிவகாமி:—(ஒரு நிமிஷம் ஏதும் பேசாமல் இருந்து, பிறகு தன் கணவனை நோக்கி, புன்சிரிப்புடன்) "இதுவரையில் நான் என்னதான் சொல்லிக்கொண்டு இருந்தேன்?"

வேணுகோபாலர்:—"அதைத்தானே நான் கேட்கிறேன்! நீ சொல்லியது எனக்குச் சரியாக விளங்கினாலல்லவா, நான் மாறு சொல்லக்கூடும்? என்னவோ பையன் என்றாய்! இன்னும் அதைப்பற்றிக் கவனியாமல் இருக்கிறீர்களே என்றாய்! இப்படியெல்லாம் சொன்னால் நான் என்ன அருத்தம் செய்துகொள்ளுகிறது? தெளிவாகச் சொன்னால் தெரியும்."

சிவகாமி:—"ஒருவருடைய பார்வையிலிருந்து அவர்கள் மனதில் உள்ள எண்ணத்தைத் தாங்கள் அறிந்துகொள்ளுவீர்களே? அவ்வளவு சமர்த்துள்ள தாங்கள் நான் குறிப்பாக இரண்டொரு வார்த்தைகள் சொல்லியும் என் கருத்து விளங்கவில்லை என்று சொன்னால், அதற்குமேல் நான் என்னதான் சொல்லமுடியும்?"

வேணுகோபாலர்:—(புன் சிரிப்போடு) "நீ இவ்வளவு தூரம் என்னுடைய திறமையைப்பற்றி அறிந்துகொண்டது புத்திசாலித்தனந்தான். அதுபோகட்டும். நீ சொல்லுவதை

நான் அறிந்து கொண்டேனோ என்னவோ, அந்தக் கவலை உனக்கு வேண்டாம். உன் மனதில் உள்ள எண்ணம் முழுவதையும் இன்னதென்று விவரமாகச் சொல்லிவிடு என்றுதானே கேட்கின்றேன்?"

சிவகாமி:—"கலியாணம் நம்முடைய——" (அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் மயங்குகிறாள்.)

வேணுகோபாலர்:—(சற்று புன்சிரிப்போடு சிவகாமியம்மையின் பக்கமாகத் திரும்பிக்கொண்டு) "மறுபடியும் பழைய பாடத்தைத்தானே ஆரம்பித்து விட்டாய்? கலியாணம்—நம்முடைய—என்று இழுத்தாற்போல் வார்த்தையை நிறுத்திவிட்டால், மற்ற வார்த்தைகளை நான் ஊகித்துக் கொள்ளவேண்டும்போல் இருக்கிறதே?"

சிவகாமி:—"ஆம்."

வேணுகோபாலர்:—(சற்று ஆலோசித்து விட்டு) "கலியாணம் நம்முடைய—என்பதற்குமேல் என்றால் ஊகித்துக் கொள்ள முடியவில்லையே?"

சிவகாமி:—"நான் பேசுவது எல்லாம் உங்களுக்கு வேடிக்கைதான். கலியாணம் நம்முடைய பிள்ளையாண்டானுக்குச் செய்யவேண்டு மென்றால் தாங்கள் என்னைப் பைத்தியக்காரியாக்கி விடுகிறீர்களே."

வேணுகோபாலர்:—"அதைமுன்னதாகவே இவ்வளவு விளங்கும்படி சொல்லியிருக்கக்கூடாதா? நல்லது எனக்கும் ஐந்தாறு நாட்களாக அவனுக்கு இந்த வருடத்திலேயே விவாகம் செய்து விடவேண்டு மென்னும் கருத்துண்டு. ஆனால், நாம் சம்பந்தம் செய்து கொள்ளக்கூடிய இடம் இன்னது என்பதுதான் தெரியவில்லை!"

சிவகாமி :—“ அதைப்பற்றித் தங்களுக்குக் கவலை வேண்டாம். நான் ஓர் இடத்தைக் குறிப்பு வைத்து இருக்கிறேன். அந்த இடம் உங்களுக்குப் பிரியமாய் இருக்குமோ, என்னவோ!”

வேணுகோபாலர்:—“என்னுடைய அபிப்பிராயம் இருக்கட்டும். நீ குறிப்புவைத்துள்ள இடம்முதலில் நம்முடைய பையனுக்குத் திருப்திதானோ என்று பார்த்துக்கொண்டாயா? ஒரு சமயம் அவனுக்குத் திருப்தியில்லாத இடமாயிருந்தால் நமக்குப் பிரியம்இருந்தால் என்ன, இல்லாவிடில் என்ன?”

சிவகாமி :—“ அவனுக்குத் திருப்திதான் என்பது எனக்கு ஒருவாறாகத் தெரியும். உங்களுடைய அபிப்பிராயந்தான் இன்னதென்று தெரியவேண்டும்.”

வேணுகோபாலர்:—“நல்லது, நீ குறிப்பிட்டிருக்கும் இடம் எது? அந்தப்பெண் யார்?”

சிவகாமி:—“மையூர் மாணிக்க சுந்திரத்தின் மகள்தான்; நல்ல பெண்; நல்ல அழகும் அதிக அடக்கமும் மரியாதையும் உடையவள்; அவற்றோடு நன்றாகப் படித்தவள்; கொஞ்சம் சங்கீதப் பயிற்சியும் உண்டு; அவர்களுடைய அந்தஸ்துதான் நமக்குத் தெரிந்து இருக்கிறது.”

வேணுகோபாலர்:—“அந்தப் பெண்ணுக்கு வயது என்ன இருக்கும்?”

சிவகாமி:—“இப்போதுதான் பதினெட்டு வயது பூர்த்தியானதாகக் கேள்வி. உங்களுக்கு என்று ஒருடாக்டர் எங்கிருந்தோ கிடைத்துவிட்டார். அவர் சொல்லுகிற வார்த்தைகளை வேத வார்த்தைகள் என்றல்லவோ நீங்கள் நினைக்கிறீர்கள் ? இல்லாவிட்டால், நமது குழந்தைக்கு

உங்கள் தாயாரின் இஷ்டப்படியே அவர்கள் இறந்துபோகு முன் விவாகம் முடிந்திருக்குமே ? ”

வேணுகோபாலர் :—“ டாக்டர்பேரில் குறை ஒன்றும் கூருதே! அவர் மிகவும் உண்மையுடையவர்தான். சிறு வயதில் விவாகஞ் செய்வது கூடாது என்று அவர் சொல்லு கிருர். அது சரிதானே ? ”

சிவகாமி :—“ அவர் எதுதான் வேண்டும் என்பார்? எதையும் அவர் விரும்பமாட்டார். உங்களைத் தவிர அந்த டாக்டர் வார்த்தையை அவ்வளவு பெருமையாக யாரும் நினைக்கமாட்டார்கள். அந்த டாக்டர் சொல்லுகிருர், அந்த டாக்டர் சொல்லுகிருர், என்று சொல்லுகிறீர்களே ! நீங்கள் தான் சொல்லுங்கள் பார்ப்போம்? சிறு வயதில் விவாகஞ் செய்வதனல் கெடுதல் என்ன? பாலியத்தில் விவாகஞ் செய்வது கண்களுக்கு அழகு அல்லவா ! ”

வேணுகோபாலர் :—“ உனக்கு என்ன தெரியும் ? ”

சிவகாமி :—“ எனக்கு என்ன தெரியும், அந்த டாக்டருக்கும் உங்களுக்கும்தான் எல்லாம் தெரியட்டுமே! எப்படியானுலும் நான் பெண்பிள்ளைதானே ? ”

வேணுகோபாலர் :—“ நீ பெண்பிள்ளை யானபடியால் உனக்கு ஒன்றும் தெரியாதென்று நான் சொல்ல வரவில்லை. பெண்பிள்ளைகள் எல்லாரும் ஒன்று மறியாதவர்கள் என்பதும் என்னுடைய எண்ணமல்ல. சிறு வயதில் விவாகஞ் செய்வது கண்ணுக்கு அழகு என்று சொன்னுயல்லவா ? அதனுல்தான் உனக்கு என்ன தெரியும் என்றேன். ”

சிவகாமி :—“ அப்படிச் சொல்லியதில் குற்றமென்ன இருக்கிறது ! சங்கரலிங்கம்பிள்ளை தம்முடைய பெண்ணுக்

குப் போனமாதம் பதினெட்டு வயதிற்குமேல் கலியாணம் செய்துவைத்தாரே அந்தக் கலியாணத்திற்கு நீங்களும் தானே வந்திருந்தீர்கள்? அப்போது பார்த்தீர்களா, அந்தப் பெண் மணையில் உட்கார்ந்திருக்கும்போது அதன் தலை மாப்பிள்ளையின் தலையோடு சரியாய் இருந்தது? பார்ப்பதற்கே அழகாய் இல்லை. அது போகட்டும். போன வருஷம் தாண்டவமூர்த்தி முதலியார் தம்முடைய பெண் குழந்தைக்கு விவாகம் செய்தாரே! அப்போது பார்த்தீர்களா, அது சிறிய குழந்தையாய் இருந்தபடியால் பார்க்கப் பார்க்க எவ்வளவு அழகாக இருந்தது! என்னவோ அந்தக் குழந்தையின் தலையெழுத்து அதற்குள் அது விதவையாகும்படி நேர்ந்தது!"

வேணுகோபாலர் :—"சிவகாமி, உனக்கு என்ன தெரியும் என்று நான் கேட்டதற்கு நீ எல்லாம் அறிந்தவள்போல் பேச ஆரம்பித்துவிட்டாயே, இப்போது உனக்கு ஒன்றும் தெரியாதென்று உன்னுடைய வார்த்தைகளால் நன்றாக விளங்கிவிட்டதே."

சிவகாமி :—"எப்படி?"

வேணுகோபாலர் :—"சிறுவயதில் விவாகம் செய்விப்பது கண்ணுக்கு அழகென்று கூறிய தம்முடைய மனைவியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு தாண்டவமூர்த்தி முதலியார் தனது மகள் கௌரிக்குச் சிறுவயதிலேயே கலியாணம் செய்துவிட்டபடியால்தான் பாவம்! அந்தப் பெண் கலியாணமான ஒரு வருடத்திற்குள் விதவையாயினள். இனி அந்தப் பெண்ணின் கதி என்ன? சுவர்ண விக்கிரகம்போல் இருக்கிறது. அதைப் பார்த்துப் பார்த்து முதலியார் வயறு எரிந்து, 'உன்னால் தானே வந்தது, அப்போதே இவ்வளவு

அவசரமாகக் கலியாணம் நடத்தக் கூடாதென்று சொன்னேனே! என்ன, ஒரு ஆண்பிள்ளை சொல்லுகிறான் என்று கேட்டாயா? கலியாணம், கலியாணம் என்று குதித்தாயே? இப்போது படுகிறது யார்?' என்று சமயம் வரும்போதெல்லாம் தன்னுடைய மனைவியைக் கோபித்துக் கொள்ளுகின்றார். பார்த்தாயா, சிறுவயதில் விவாகம் செய்வதால் வருகிற கஷ்டத்தை? ஏன் சங்கரலிங்கம் பிள்ளையைப்போல் தாண்டவமூர்த்தி முதலியார் தமது பெண்ணுக்குப் பதினாறு அல்லது பதினெட்டு வயது ஆகும் வரையில் காத்திருந்து விவாகம் செய்திருக்கக்கூடாது? அப்படிச் செய்திருந்தால், என்னதான் கணவன் அற்ப ஆயுள் உடையவனாக யிருந்தாலும் சிலகாலமாவது அந்தப் பெண் தன்னுடைய கணவனோடு இருந்து வாழ்ந்திருக்க முடியும் அல்லவா? இதை அறியாமல் நீ சிறுவயதில் விவாகம் செய்வது கண்ணுக்கு அழகு என்று சொல்லியபடியால்தான் உனக்கு ஒன்றும் தெரியாது என்றேன். சோம்பேறிகளும், எந்த விஷயத்தையும் புத்தி சாலித்தனமாகச் செய்யத் திறமையில்லாதவர்களுமே தாங்கள் கஷ்டப்படும்போது விதியின்மேல் பழியைப்போடுவது வழக்கம். ஏன்? தங்கள் கஷ்டங்களுக்குக் காரணம் தாங்கள் செய்துகொண்ட மூடக் காரியங்கள்தாம் என்று அவர்களுக்குத் தோன்றுவது இல்லை. எந்தக் காரியத்தையும் பொறுமையாக ஆலோசித்துச் செய்யாமல், பிறகு கஷ்டம் வந்தபோது தங்களுடைய அறியாமையைப் பற்றிக் கொஞ்சங்கூட கவனித்துப் பாராமல் விதி விதி என்று விதியின் மேரில் பழியைப்போடுவது எவ்வளவு கேவலம்! அப்படிக் கூறுவது மிகவும் வெட்கமான விஷயம் என்று கூடச் சொல்லலாம். விதியிருந்தபோதிலும் இல்லாவிட்டாலும் நாம்

மட்டும் சற்று மதியோடு நடந்துகொள்ள வேண்டும். அப்படி நடந்துகொண்டால் விதி விதி என்று நாம் அனுபவிக்கும் அநேக சங்கடங்கள் நம்மை அணுகாது போய்விடக்கூடும். ஆகையால், சிவகாமி! இன்று முதல் நீ விதி என்னும் வார்த்தையை விட்டுவிடு."

சிவகாமி:—"என்ன, நீங்கள் சொல்லுவது வேடிக்கையாய் இருக்கிறதே! நான் நேற்றுத்தான் நளசக்கரவர்த்தியின் கதை படித்தேன். நளசக்கரவர்த்தி எவ்வளவு பெரிய இராஜன் பாருங்கள்! அவர் என்ன புத்தியில்லாதவரா? அவர் எவ்வளவோ திறமையும் புத்திசாலித்தனமும் உடையவர் என்று அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே! அப்படிப்பட்டவர் ஊரைவிட்டு, பெண்சாதி பிள்ளைகளைப் பிரிந்து, ஒரு சாதாரண ராஜனுக்குத் தேரோட்டும் வேலையில் அமர்ந்தாரே! விதி என்பது ஒன்று இல்லாமலா அவர் அப்படியானார்?"

வேணுகோபலர்:—"நல்லது. உன்னுடைய அபிப்பிராயப்படியே நளன் அவ்விதமானது, விதியால் என்றே வைத்துக்கொள்ளுவோம். ஆனால், அவனை மறுபடியும் இருக்கும் இடமறிந்து தேடிக்கண்டுபிடித்தற்குக் காரணமாயிருந்தது தமயந்தியின் மதியல்லவா? சிவகாமி, துன்பம் வந்தபோது அதற்குக் காரணம் இன்னதென்று ஆராய்ந்தறிந்து கொண்டிருப்பது, சிலருக்குக் கஷ்டமாகத் தோன்றுமாகையால், அவர்கள் விதி என்று கூறி மனத்திருப்தியடைகின்றனர்."

சிவகாமி:—"அந்த விஷயம் எப்படியானாலும் ஆகட்டும். எனக்குத் தூக்கம் வருகிறது. நமது பிள்ளையாண்டான் விவாகத்தைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?"

வேணுகோபாலர்:—"சொல்லுவது என்னகிடக்கிறது? இந்த வருஷம் கலியாணம் செய்துவிட வேண்டியதுதான். நீ குறிப்பிட்ட இடம் எனக்கு மிகவும் சம்மதமுடையது தான். மாணிக்க சுந்தரம் மிகவும் நல்ல மனிதர். ஆனால் அவர், அந்தஸ்தில் தம்மைவிட உயர்ந்தவர்களிடத்திற் சம்பந்தம் செய்துகொள்ளுவதில் அவ்வளவு இச்சையுடையவராகத் தெரியவில்லை. அதனால், நாம் போய் அவர் பெண்ணைக் கேட்டால் அவர் கொடுப்பதற்குச் சம்மதிப்பாரோ, என்னவோ?"

சிவகாமி:—"நன்றாய்ச் சொன்னீர்கள்! நீங்கள் கேட்டும் அவர் இல்லை என்று சொல்லிவிடுவாரா, என்ன?"

வேணுகோபாலர்:—"அப்படியல்ல சிவகாமி, முழு மனதோடு ஒருவர் சம்மதிப்பதற்கும், பிறர் சொல்லும்வார்த்தைகளை முக இச்சைக்காக அங்கீகரித்துக் கொள்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்றதே! அதிலும் விவாகவிஷயம் என்றால்; என்ன விளையாட்டா? இன்றோடு நாளையோடு போய்விடும் விஷயமா? நெடுநாளைக்கு நீடித்திருக்கும் காரியமாயிற்றே? ஆகையால், அந்த விஷயத்தில் கொள்வோர் கொடுப்போர் ஆகிய இருவர் மனமும் ஒன்றுபடவேண்டும்."

சிவகாமி:—"ஒன்றுபடாமல் என்ன. அவர்களுக்கும் தங்கள்பெண்ணை நமது பிள்ளையாண்டானுக்குக் கொடுக்கப் பிரியம்தான். அது எனக்குத் தெரியும்."

வேணுகோபாலர்:—"என்ன அவ்வளவு நிச்சயமாகக் கூறுகிறாயே! அவர்கள் எண்ணம் உனக்கு எப்படித் தெரியும்?"

சிவகாமி:—"அன்றைக்கு நாம் கடற்கரைக்குப் போய் இருந்தபோது தங்கள் சிநேகிதர் சிவராமச்சந்திரர் மனைவி கமலாக்ஷியோடு நான் பேசிக்கொண்டிருந்தேன். எங்களுக்குள் நமது குழந்தையின் கலியாண சம்மந்தமான பேச்சுகள் நடந்தன. அப்போது நான் கமலாக்ஷியைப் பார்த்து மையூர் மாணிக்கசுந்தரர், தமது பெண்ணை நாங்கள் கேட்டால் கொடுப்பாரோ என்னவோ என்னும் அருத்தத்தில் ஒருவாறு சொன்னேன். ஏனென்றால் அப்போது அவர் தங்களுக்கு பெண் கொடுப்பாரோ கொடுக்கமாட்டாரோ என்று எனக்கும் கொஞ்சம் சந்தேகம் உண்டாயிருந்தது அதனால் அவ்விதம் சொன்னேன்."

வேணுகோபாலர்:—"நல்லது அதற்குக் கமலாக்ஷி சொல்லியது என்ன?"

சிவகாமி:—"அந்த இடத்தில் சம்பந்தம் செய்து கொள்ளுவது நன்மைதான்; பெண் மிகவும் ஒழுங்கானவள் என்று கமலாக்ஷியம்மாள் சொன்னார்கள், அதோடு தங்கள் அபிப்பிராயம் இன்னதென்று முதலில் அறிந்துகொண்டு தான் எதையும்செய்வது நலம் என்றுகூடச் சொன்னார்கள்."

வேணுகோபாலர்:—"இன்றையதினம் கூடக் கமலாக்ஷி இங்கு வந்து போனதாக நீ சொன்னாயல்லவா?"

சிவகாமி:—"ஆமாம், இந்த விஷயமாகத்தான் வந்து போனார்கள். இன்று காமாக்ஷியம்மாள் மாணிக்கசுந்தரர் வீட்டிற்குப் போயிருந்தார்களாம். அப்போது மாணிக்க சுந்தரர் மனைவி விசாலாக்ஷியம்மாள் தம்முடைய பெண்ணுக்கு இந்த வருஷத்திலேயே எங்கேயாவது நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்துக் கலியாணம் செய்விக்கவேண்டும் என்று சொன்னார்களாம். அப்போது கமலாக்ஷியம்மாள்

தம்முடைய சொந்த அபிப்பிராயமாகச் சொல்லுவதுபோல் நமது பிள்ளையாண்டானைக் குறிப்பிட்டு நல்லபையன்; படித்தவன்; தக்க அந்தஸ்தும் இருக்கிறது என்று, இன்னும் என்னென்னவோ சொல்லியதிலிருந்து விசாலாக்ஷியம்மாளுக்கு இந்தக் கொஞ்சம் நோக்கம் ஏற்பட்டிருக்கிறதாம். இதனால் நாம் போய்க்கேட்டால் அநேகமாய்ச் சம்மதிப்பார்கள் என்று சொல்லுகிறேன்"

வேணுகோபாலர்:—கமலாக்ஷி சொல்லியபிறகு இங்கு அவர்களுக்கு நோக்கமிருக்கலாம். கமலாக்ஷி புத்திசாலித்தனமாகப் பேசுவதில் சமர்த்தி. கடைசிவரையில் விசாலாக்ஷியம்மாள் மனம் மாறாதிருக்க வேண்டுமே!

சிவகாமி:—"அதற்குத்தான் நாம் என்ன செய்யமுடியும். ஒரு முறை அவர்கள் சம்மதித்து விட்டால் பிறகு மாறமாட்டார்கள். நாளைக்கு வேண்டாம், செவ்வாய்க்கிழமை. புதன்கிழமைதினம் நாம் இரண்டுபேருமே போய்க் கேட்டுவரலாமே! அநேகமாய்ச் சம்மதித்து விடுவார்கள் என்றே நினைக்கிறேன்."

வேணுகோபாலர்:—"நல்லது, உன்னுடைய கருத்துப்படியே ஆகட்டும். கலியாண சந்தடியில் தாலிகட்ட மறந்த கதையைப்போல நாம் ஒரு விஷயத்தை மறந்துவிட்டோமே!"

சிவகாமி:—"நாம் எந்த விஷயத்தை மறந்துவிட்டோம்?"

வேணுகோபாலர்:—நாம் எல்லா விஷயங்களையும் பேசி முடிவு கட்டினோமே! அந்தப் பெண்ணின் அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளவில்லையே!"

சிவகாமி:—"என்ன இவ்வளவு நான் தெரிந்துகொள்ளாமலா இருக்கிறேன். கமலாக்ஷி என்ன சாமான்யமா?

அந்தப் பெண்ணுக்குச் சம்மதந்தான். நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.''

வேணுகோபாலர்:—"அதெப்படி கவலைப் படாமல் இருக்க முடியும்? எந்தக் காரணத்தால் அந்தப் பெண்ணுக்குச் சம்மதந்தான் என்று சொல்லுகிறாயோ, அந்தக் காரணத்தை நானும் அறிந்துகொண்டாலல்லவா கவலைப்படாமல் இருக்க முடியும்?''

சிவகாமி:—(புன் சிரிப்புடன் வேணுகோபாலரைப் பார்த்து) "விசாலாக்ஷியம்மாளோடு கலியாண விஷயத்தைப் பற்றிக்காமாக்ஷியம்மாள் பேசிக்கொண்டிருந்தபோது அந்தப் பெண் அங்கே வந்ததாம். அப்போது விசாலாக்ஷியம்மாள் வேறு இரண்டொரு இடத்தைக் குறித்துப் பேசுகையில் அந்தப் பெண்ணின் முகம் அவ்வளவு நன்றாய் இல்லையாம். ஆனால், நம் வீட்டில் சம்மந்தம் செய்து கொள்ளலாம் என்று கமலாக்ஷியம்மாள் சொன்னபோது அவள் முகம் சந்தோஷத்துடன் காணப்பட்டதாம். இன்னும் என்ன வேண்டும் அந்தப் பெண்ணின் சம்மதத்தைத் தெரிந்துகொள்ளுவதற்கு? அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று நீங்கள்தானே எனக்கு எத்தனையோதரம் சொல்லியிருக்கிறீர்கள்?''

வேணுகோபாலர்:—"நல்லது, நேரமாயிற்று. அவசியம் புதன்கிழமைபோய் அவர்களைக் கேட்டுவருவோம்.''

சிவகாமி:—"புதன்கிழமை இராகுகாலம் எத்தனை மணிக்கு வருகிறது? நாள் செய்யும் நன்மை நல்லவர்கள் கூடச் செய்யமாட்டார்கள் என்று சொல்லுகிறார்களே! அதனால் கேட்டேன்.''

வேணுகோபாலர் :—“ அதைப்பற்றி நான் ஒன்றும் குறை சொல்ல வரவில்லை. இராகுகாலம் புதன்கிழமையன்று பன்னிரண்டு மணிமுதல் ஒன்றரை மணிவரையில். நாம் காலையிலேயே போய்வருவோம்.”

அதுவரையில் பொறுமையோடு பேசிக்கொண்டிருந்த சிவகாமியம்மைக்கு நித்திரை மயக்கம் அதிகமாயிற்று. அதோடு சம்பாஷணையும் ஒருவாறு முடிவுபெறவே, தன்னுடைய கணவன் கூறிய கடைசி வார்த்தைக்குப் பிரதியாக ‘நல்லது அப்படியே ஆகட்டும்’ என்று கூறிக்கொண்டே நித்திரை மயக்கத்தோடு தன்னுடைய படுக்கை அறைக்குச் சென்றாள்.

# 3-வது அத்தியாயம்.

## பெண் பேசுதல்.

வேணுகோபாலரைப் போலவே மாணிக்கசுந்தரரும் உத்தம குணமும், உயர்ந்த நோக்கமும் உடையவர். அவருடைய குடும்பத்தில் இருந்த முன்னோர்கள் இலட்சாதிபதிகளென்று எவரும் புகழ வாழ்ந்தார்கள். ஆனால், தற்சமயம் மாணிக்கசுந்தரரை அவருடைய முன்னோர்கள்போல அத்தனை தனவந்தர் என்று சொல்வதற்கில்லை. ஆகிலும் இப்போதும் அவருக்குள்ள ஆஸ்தி, ஒரு நூறுயிரத்துக்குக் குறையாத மதிப்புடையது. யானை விழுந்தால், குதிரையளவேனும் இருக்கு மல்லவா?

காலை மணி எழு இருக்கும். கீழ்த்திசையில் கொஞ்சம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தபடியால், சூரியன் கண்ணுக்குத் தெரியவில்லை. உறக்கத்தில் பிரியமுடையவர்களுக்கு அது ஒரு போக்காக இருந்தபடியால், அவர்கள் இன்னும் மணி ஆறுகூட ஆகவில்லைபோல் இருக்கிறது; இன்னும் சற்றுத் தூங்குவோம் என்று படுக்கையில் படுத்த வண்ணம் இப்படியும் அப்படியும் புரண்டுகொண்டிருந்தார்கள். தேகசுகத்தில் கருத்துள்ளவர் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து குளித்துக் கடவுளை வணங்கித் தத்தம் காரியங்களைப் பார்க்கலாயினர். சிறுவர்கள் வைத்துத் தின்னும் அப்பங்களைத் தந்திரமுள்ள காக்கைகள் சமயம் பார்த்து அபகரித்துக்கொண்டிருந்தன. வெகுதூரத்திலிருந்து விற்

பனைக்காகக் காய்கறிகளைக் கொண்டுவருவோர், விற்பனைக் குறிய காலந் தவறிவிடும் என்று நினைத்துச் சுமைகளைத் தூக்க முடியாதபடி தூக்கிக்கொண்டு, செல்ல வேண்டிய இடத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்றுகொண்டிருந்தனர். அன்று காலையில் தோன்றின இன்னும் பற்பல காட்சிகள் கண்ணுக்குக் காட்சியையும், மனதிற்கு இனிமையையும் தந்தன.

“அப்பனீ அம்மைநீ ஐயனு நீ
அன்புடைய மாமனு மாமியு நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளு நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூரு நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையாயென் னெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவனீ ஏறூர்ந்த செல்வனீயே” (1)

“ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடங்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓடுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாடுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே” (2)

“மண்ணாகி விண்ணாகி மலையுமாகி
வயிரமுமாய் மாணிக்கந்தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக்
கலையாகிக்கலை ஞானந்தானே யாகிப்

பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணுமாகிப்
பிரளயத்துக் கப்பாலோ ரண்டமாகி
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்துமாகி
எழுஞ்சுடரா யெம்மடி கணின்றவாறே"

என்று பக்தி ரசம் சொட்டச் சொட்டப் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தாள் ஒருத்தி. சுருங்கச் சொல்லுமிடத்து அவளுடைய அழகை ஓவியத்தில் வல்ல ஓவியக்காரர்களும் எழுதமுடியாதென்றால் அவள் எவ்வளவு அழகுடையவள் என்பதை இதை வாசிப்பவர்களே ஒருவாறு யூகித்துக்கொள்ளலாமன்றோ! கட்டழகமைந்த அவள்தான் மையூர் மாணிக்க சுந்தாரின் மகள். பச்சையம்மாள் என்னும் பெயரினள்.

அதற்கு முன்னமே பூஜை முடித்துத் தம்முடைய வீட்டின் மேல்மெத்தைக் கூடத்தில் உட்கார்ந்து எதைப் பற்றியோ யோசித்துக்கொண்டிருந்த மாணிக்கசுந்தரர், விசாலாக்ஷி என்று ஒரு முறை, தம்முடைய மனைவியை அழைத்தார்.

உடனே விசாலாக்ஷியம்மை இதோ வந்தேன் என்று சொல்லிக்கொண்டே வெள்ளிப் பாத்திரங்களில் காப்பியும் பலகாரங்களும் எடுத்துக்கொண்டு வந்து அவர் முன்னிலையில் இருந்த ஒரு மேஜையின்பேரில் வைத்துவிட்டு, அவைகளை உண்ணும்படி அவரை உபசரித்தாள்.

அதற்கவர் அவ்வம்மையைப் பார்த்து "இல்லை விசாலாக்ஷி, காப்பியும் பலகாரங்களும் கொண்டுவரும்படி உன்னை நான் இவ்வளவு அவசரமாக அழைக்கவில்லை! நீ நேற்று நமது பச்சையம்மாள் விஷயமாகச் சொன்ன சமாசாரத்

குறிப்பு:—அகத்தியர் தேவாரத்திரட்டு பக்கங்கள் 253 254 and 250.

னதைப் பற்றித்தான் பேச அழைத்தேன்" என்று கூறிக் கொண்டே, விசாலாக்ஷியம்மாள் தமக்கெதிரில் மேஜையின் மேல் கொண்டுவந்து வைத்த பலகாரத்தைப் புசிக்க வாரம்பித்தார். அப்போது விசாலாக்ஷியம்மை அவரைப்பார்த்து, "நேற்று நாம் பேசியதில் இருந்து தங்களுக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்டாள்.

மாணிக்கசுந்தரர்:—"நமது குழந்தைக்கு இரத்தின வேலு விவாகஞ் செய்துகொள்ளப் பிரியம் இருப்பது போல் அவனுக்கும் குழந்தையிடத்தில் பிரியம் உண்டா என்பது தான் என்னுடைய எண்ணம்."

விசாலாக்ஷி:—"இல்லாமலா அவர்கள் இன்றைக்கு இங்கு வருவதாக ஒரு ஆள்வசம் சொல்லி அனுப்பினார்கள்! நாம் நமதுபெண்ணின் கருத்தை அறிந்துகொண்டது போலவே அவர்களும் தமது பிள்ளையின் கருத்தை அறிந்து கொண்டுதான் இருப்பார்களென்று நம்புகிறேன். அன்று கமலாக்ஷியம்மாள் இங்கு வந்திருந்த போதுகூட அவர்கள் பேசிய வார்த்தைகளிலிருந்து இரத்தினவேலுக்கும் நமது குழந்தையை விவாகம் செய்துகொள்ளப் பிரியந்தானென் பது ஒருவாறு விளங்கிற்று."

மாணிக்கசுந்தரர்:—"அப்படியானால் நலந்தான் ஆனால் இந்த விஷயமாகத்தான், அவர்கள் இன்றைக்கு இங்கு வருவதுபோல் தோன்றுகிறது."

விசாலாக்ஷி:—"ஆம், ஆம், அதிலும் சந்தேகமா, என்ன!"

மாணிக்கசுந்தரர்:—"ஆனால் விசாலாக்ஷி, நான் மட்டும் ஒன்று சொல்லுகிறேன். பையன் என்னவோ நான் அறிந்த மட்டில், யோக்கியன்தான். வேணுகோபாலரோ மிகவும்

நல்லவர். அவர் மனைவியும் அப்படியே. ஆனால் இவர்களோடு சம்பந்தம் செய்து கொண்டால் அவர்களுக்கு ஏற்ற வாறு நாம் நடந்துகொள்ள முடியாதே என்பதுதான் என்னுடைய கவலை.''

விசாலாக்ஷி:—“தங்களுக்குத்தான் அந்தக் கவலையாக் கவலையாயிருக்கிறது. அவர்களிடம் நாம் எப்படி நடந்து கொண்டாலும் அவர்கள் குறையொன்றும் சொல்லக்கூடிய வர்களல்லர். தங்களைவிட அந்தஸ்தில் சற்று உயர்ந்தவர்களிடம் பெண்ணைக் கொடுப்பது குறைவானால், ‘உயர்ந்த இடத்தில் பெண்ணைக் கொடு; தாழ்ந்த இடத்தில் பெண்ணைக் கொள்’ என்னும் பழமொழி ஏற்படுமோ பாருங்கள்! உங்களுக்குத் தெரியாத விஷயம் எனக்கு என்ன தெரியும்? எனக்குத் தோன்றியதைச் சொன்னேன்.''

மாணிக்கசுந்தரர்:—நீ சொல்லியதில் குறையொன்றுமில்லை. நேற்று இங்கு வந்திருந்த பண்டிதர் பரமானந்தர் கூட,

கன்னியை யீயத்தந்தை கல்விமான் றனையே வேண்டும்
தன்னிய மீய்ந்தவன்னை தனபதி தனையே வேண்டும்
உன்னிய சுற்றத்தார் நல் உறவினை வேண்டுவார்கள்
மின்னிய கன்னி ரூபவானையே வேண்டி நிற்கும்.

பெண் ணுதவுங் காலை பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம்விரும்பும் ஈன்றதாய்—நண்ணிடையிற்
கூரியநற் சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான் விரும்பும் பெண்.

---

நீதி சாரம் Page 12.
நீதி வெண்பா—31 Stanza.

என்னும் பாட்டின்படி கலியாணப்பெண், அப்பெண்ணின் தாய் தந்தையர், சுற்றத்தார் முதலியவர்கள் முறையேஉள்ள மாப்பிள்ளையின் அழகு, செல்வம், கல்வி குலநலம் முதலிய வைகளை விரும்புவார்கள். அத்தனை பொருத்தமும் உடையவன் இரத்தினவேலன்தான் என்று கூறினாரல்லவா?

விசாலாக்ஷி:—"நல்ல சமயத்தில் அவர் சொல்லியதைக் குறிப்பிட்டீர்கள்! அவர் என்ன, உலகானுபவம் இல்லாதவரா? உலகானுபவப் பொக்கிஷமாய் அல்லவா அவர் விளங்குகிறார்? அவரே அந்தப் பிள்ளையாண்டானைக் குறித்து அப்படிச் சொன்னால், அவனுடைய குணம் எப்படி இருக்கவேண்டும், பாருங்கள்!"

மாணிக்கசுந்தரர்:—'ஆம், பரமானந்தர் அப்படிச் சொல்லிய பிறகுதான் எனக்கு மனம் ஒருவாறு சாந்தமடைந்தது. எப்படியானாலும் அவர் எண்பது வயதுமுற்றி பழுத்த அனுபவமுடையவரல்லவா?"

விசாலாக்ஷி:—"தடை என்ன!"

மாணிக்கசுந்தரர்:—"அப்படியானால் அவர்கள் வந்து பெண் கேட்டால் கொடுப்பதற்குச் சம்மதிக்க வேண்டியது தான்."

விசாலாக்ஷி:—"ஆமாம்."

மாணிக்கசுந்தரர்:—"இப்போது அவர்கள் வரும் நேரமல்லவா?"

விசாலாக்ஷி:—"ஒன்பது மணிக்குள் வருவதாகவல்லவா சொல்லியனுப்பினார்கள்? ஆகையால் ஒன்பது மணிக்குள் எப்போது எந்த நேரத்தில் வருவார்களோ!"

மாணிக்கசுந்தரர்:—"நல்லது, அவர்கள் வருகிறவரையில் நான் இப்படியே உட்கார்ந்து வாசித்துக்கொண் டிருக்

கிறேன். என்னுடைய மேஜையின்மேல் திருவாசகம் இருக்கிறது அதை எடுத்துக்கொண்டுவா.''

உடனே விசாலாக்ஷியம்மை அங்கிருந்துபோய் மேஜையின் மேல் இருந்த திருவாசகத்தை எடுத்துக்கொண்டுவந்து அவரிடம் கொடுத்தாள். அவர் அதை வாங்கிக்கொண்டு, அவ்வம்மையைப்பார்த்து, "பச்சையம்மாள் எங்கே? அதோ பூஜை அறையில் பாடுகிறது யார்?'' என்று கேட்டார்.

விசாலாக்ஷி :—'குழந்தைதான், பூஜை செய்துவிட்டுப் பாடுகிறாள்.''

மாணிக்கசுந்தரர் :—"என்ன பக்தி, என்ன உருக்கம்!''

விசாலாக்ஷி :—நமது குழந்தை என்று நான் சொல்லிக்கொள்ளவில்லை, என்ன, உள்ளபடியே இப்படி தெய்வபக்தியில் ஈடுபட்ட பெண்களை நான் கண்டதில்லை !''

மாணிக்கசுந்தரர் :—" பச்சையம்மாள் பெண்ணாகப் பிறவாமல் ஆணாகப் பிறந்திருந்தால்—''

விசாலாக்ஷி :—" அதற்கென்ன செய்யலாம்? நாம் கொடுத்துவைத்தது அவ்வளவு தான்.''

மாணிக்கசுந்தரர் :—" ஆம், போதுமென்ற மனமே பொன்னுடைத்து, என்று ஒரு பழமொழி இருப்பதை நான் தான் உனக்குப் பலதரம் சொல்லியிருக்கின்றேனே ! ஆண் பிள்ளைகள் உத்தமர்களாய் இருந்தால் அவர்கள் பிறந்த வம்சத்திற்கு மட்டுந்தான் பெருமை. பெண்கள் உத்தமிகளானால் பிறந்த இடத்திற்கும் புகுந்த இடத்திற்கும் புகழ் உண்டாகும். அந்த வகையில் பச்சையம்மாளைப்பற்றி நாம் ஆனந்தப்படவேண்டியதுதான்.''

விசாலாக்ஷி :—"முற்காலத்தில்கூட அப்படிப்பட்ட பெண்கள் பலர் இருந்ததாகத் தாங்கள் எனக்குச் சொல்லி யிருக்கிறீர்களே!".

மாணிக்கசுந்தரர்:—"இல்லாமலென்ன? மதிதய மகா ராஜன் பிள்ளையில்லாமல் வெகுகாலம் வரையில் தவங் கிடந்து எல்லா நற்குணங்களும் அமைந்த ஒருபெண்ணைப் பெற்றான். அவள்தான் சந்திரமதி. அவளால் இதுவரையில் ...என்! இன்னும் எத்தனையோ நூற்றாண்டுகள் வரையில், அவள் பிறந்த இடத்திற்கும் புகுந்த இடத்திற்கும் பெரு மைதான்."

விசாலாக்ஷி:—"அந்த அம்மாளைப்போல் யார் அவ்வ ளவு துன்பப்பட்டும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு நடப் பார்கள். அப்படிப்பட்ட புண்யவதிகளின் சரித்திரங்க ளைக் குழந்தை முதல் நம்முடைய பச்சையம்மாள் படித்த படியால்தான் இப்போது இவ்வளவு குணவதியாய் இருக் கிறாள்."

மாணிக்கசுந்தரர் :—"நல்லது, விசாலாக்ஷி, நீ போ. அதோ குழந்தை பாடிய சப்தம் நின்றுவிட்டது. பூஜை முடிந்திருக்கும். நீ போய் குழந்தைக்குக் காப்பியும் பலகார மும் கொடு. பலகாரம் செய்தானவுடன் குழந்தையை இங்கே வரச்சொல். ஹார்மோனியம் சுதியுடன் அதன் வாயால் நான் பாடக்கேட்டுப் பலதினங்களாயின."

விசாலாக்ஷி:—"அவர்கள் வரும் நேரமாயிற்றே! இப் போதா பாடச்சொல்லப் போகிறீர்கள்?".

மாணிக்கசுந்தரர்:—"அதனாலென்ன."

இவ்விதம் அவர் சொன்னவுடன் விசாலாக்ஷியம்மாள், "ஒன்றுமில்லை, இதோ குழந்தையை அனுப்புகிறேன்" என்று

சொல்லிக்கொண்டே அங்கு இருந்த பலகார வெள்ளித் தட்டை எடுத்துக்கொண்டுபோய்விட்டாள். மாணிக்கசுந்தரரும் கையில் இருந்த திருவாசகத்தில் கவனத்தைச் செலுத்தினார். உண்மையில் அவருக்குத் திருவாசகத்தில் உள்ள பிரியம்போல் எந்த நூலிலும் இல்லை. திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பது உண்மையேயன்றோ?

கால்மணிநேர மாயிற்று.

கையில் இருக்கும் புத்தகத்தில் கருத்துப் பதிந்திருந்தபடியால் கால்மணிநேரம் மாணிக்கசுந்தரருக்கு இரண்டொரு நிமிஷம்போல் சென்றது. அப்போது அசைந்தாடும் பூங்கொடிபோல் அவருடைய செல்வத்திருமகள் பச்சையம்மாள் அவர் சமீபத்தில் வந்து, 'ஏன் அப்பா அழைத்தீர்கள்?' என்று அன்புகசியக் கேட்டாள்.

அவருடைய ஐம்புலன்களும் திருவாசகத்தில் அழுந்தியிருந்தமையால் பச்சையம்மாள் கேட்டது அவருடைய கவனத்தைக் கவரவில்லை. அதை அறிந்துகொண்ட பச்சையம்மாள், ஒரு நிலையில் ஒழுங்குடன் பதிந்திருக்கும் அவர் மனத்தை அந்நிலையில் இருந்து பிரிக்கப் பிரியப்படவில்லை; மறுபடியும் ஒரு சமயம் அவர் தன்னைக் கவனிக்கக் கூடும் என்னும் எண்ணத்தோடு அங்கேயே அமைதியுடன் நின்றுகொண்டு அவரைப் பார்த்தவண்ணமாய் இருந்தாள். பத்து நிமிஷங்களாயின.

எவ்வளவு நேரம் நிற்பது!

அனிச்ச மலரும், அன்னத்தின் தூவியும் அவள் பாதத்திற்கு நெரிஞ்சிப் பழம்போல் இருக்குமென்றால், அவ்வளவு நேரம் நிற்பதால், அவள் பாதத்தில் எவ்வளவு வலி யுண்டா

கக்கூடும். ஆனால் அவள் எதையும் சிந்தியாது, 'தந்தை எதற்கு அழைத்தாரோ! தாயாரும் சொல்லவில்லையே!' என்னும் ஒரே எண்ணத்துடன் நின்றுகொண்டிருந்தாள்.

அப்போது மாணிக்கசுந்தரரின் கையில் இருந்த புத்தகம் அவரையும் அறியாதபடி நழுவிக் கீழே விழுந்தது. அப்போதுதான் நித்திரையில் இருந்து எழுந்தவரைப்போல அவர் திடுக்கிட்டு, கீழே விழுந்த புஸ்தகத்தைக் குனிந்து எடுக்கும்போது, தம் பக்கத்தில், தான் விரும்பிய தெய்வம் தரிசனம் தந்தபோது எதிரில் பணிவு காட்டும் பக்தனைப் போல், பணிவுடன் நிற்கும் தம்முடைய அருமை மகள் பச்சையம்மாளைக் கண்டவுடன் அவர், "வெகு நேரமாய் நிற்கின்றாயா அம்மா?" என்று ஐந்துவயது குழந்தையைப் பார்த்துக் கேட்பதுபோல் அவ்வளவு அருமையாகக் கேட்டார்.

அதற்கு அவள், "இல்லை, அப்பா! அப்படி நின்றால் தான் என்ன? எதற்காக அழைத்தீர்கள்?" என்றாள்.

"ஹார்மோனியம் சுதியுடன் ஏதாவது ஒரு பாட்டு உன்னைப் பாடச்சொல்லிக் கேட்கலாமென்று நான் உன்னை அழைத்தேன். இப்போது உன்னால் பாடமுடியுமா, அம்மா! தேகம் ஒருவேளை சிரமமாய் இருந்தால் வேண்டாம்" என்றார் மாணிக்கசுந்தரர்.

"அதற்குப் பச்சையம்மாள், "அப்படி ஒன்றுமில்லை, அப்பா! எனக்கு என்ன உடம்பிற்கு? நான் சுகமாய்த் தான் இருக்கிறேன். நல்லது. தங்களுக்குப் பிரியமானது திருவாசகமா? அதில் ஏதாவது பாடட்டுமா?" என்று கேட்டாள்.

பொரு



மாணிக்கசுந்தரர்:—"திருவாசகம் என்பதல்ல; உனக்கு எந்தப் பாட்டு பிரியமோ அதைப் பாடும் அம்மா!"

பச்சையம்மாள்:—"எனக்குத் தேவாரம், திருவாசகம், பிரபந்தம் முதலிய எல்லாம் பிரியந்தான். ஆனால், எல்லா உயிர்களிடத்தும் அன்பும், அருளும் உடையவராய் இருந்த ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் பாடல்களைப் பாடுவதில் எனக்கு ஆனந்தம் அதிகம்."

மாணிக்கசுந்தரர்:—"அவருடைய பாடல்களைத்தான் அம்மா, நானும் திருவாசகத்துக்கு அடுத்தபடியாக விரும்புவது. உன்னிஷ்டப்படியே அம் மகான் பாடல்களில் ஒன்றைப்பாடு கேட்போம்."

அவர் இவ்விதம் சொன்னவுடன் பச்சையம்மாள் அங்கு தரையில் விரித்திருந்த கம்பளத்தின்மேல் ஹார்மோனியப் பெட்டியுடன் உட்கார்ந்து, ஆ என்று குரலெடுத்து, அதற்குத் தகுந்தாற்போல் ஹார்மோனியத்தில் சுதி கூட்டிக் கொண்டு,

"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டு
மாருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டு
மெப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
யெந்தைநின தருட்புகழை யியம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்த சிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க வருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினு நீ பொறுத்தல் வேண்டுந்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே."

என்னும் அருமைத் திருப்பாடலை ஆடாதசையாது கல்லுங் கனிந்துருகப் பாடினாள்.

அவள் பாடிக்கொண் டிருக்கும்போது, "பேஷ் பேஷ்" என்று அவளுடைய பாட்டைக் கேட்டு ஆனந்தங் கொண் டிருந்த அவளுடைய தந்தை, அவள் பாடி முடிந்தவுடன், "ஆ அருட்பாவின் அருமையே அருமை! ஸ்ரீமத் இராம லிங்கசுவ மிகளின் பெருமையே பெருமை!" என்று கூறிப் புகழ்ந்துகொண் டிருந்தார்.

அப்போது ஒரு வேலைக்காரி விரைவாக வந்து மாணிக்க சுந்தரரைப் பார்த்து: "அவர்கள் வருகிறார்கள்" என்று கூறினாள்.

அவள் வார்த்தை முடியுமுன் வேணுகோபாலரும், அவர் மனைவி சிவகாமியம்மையும் அங்கு வந்தார்கள்.

சற்று வெட்கத்துடன் பச்சையம்மாள் தன் தாய் இருக்கும் இடத்திற்குச் சென்று, "அவர்கள் வந்திருக்கிறார் கள் அம்மா" என்று சொன்னாள்.

மாணிக்கசுந்தரர் அவர்களைக் கண்டதும் அன்புடன் வரவேண்டும் என்று அவர்களை வரவேற்றார். இதற்கிடை யில் விசாலாக்ஷியம்மை மலர்ந்த முகத்துடன் அங்கு வந்து சிவகாமியம்மையை அளவிலா மகிழ்ச்சியுடன் வரவேற்று, தன்னிடத்திற்கு அழைத்துச் சென்றாள்.

பிறகு மாணிக்கசுந்தரரின் வேண்டுகோளின்படி வேணு கோபாலர் ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்தார்.

இதற்கிடையில் சமையற்காரன் பாத்திரத்தில் காப்பி யைக் கொண்டுவந்து, வேணுகோபாலர்க் கெதிரிலிருந்த மேஜையின்மேல் வைத்தான். அதைப் பருகும்படி அவரை உபசரித்தார் மாணிக்கசுந்தரர்.

"இல்லை. இப்போதுதான் காப்பி பலகாரங்கள் சாப்பிட் டுப் புறப்பட்டேன். நான் ஆகாரம் ஒன்றும் உட்கொள்ளா

மல் வெளியேறுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா ?" என்றார் வேணுகோபாலர்.

மாணிக்கசுந்தரர்:—"பல வருஷங்களாகத் தங்களோடு நெருங்கிப் பழகும் எனக்குத்தெரியாதா, என்ன ? தெரிந்து தான் பலகாரம் ஒன்றும் இல்லாமல், காப்பியைமட்டும் கொண்டுவரச் செய்தேன்."

வேணுகோபாலர்:-"நல்லது, தங்கள் இஷ்டப்படியே" என்று சொல்லி, பாத்திரத்தில் இருந்த காப்பியிற் கொஞ்சம் குடித்து மீதியை எடுத்துப் போகும்படி வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்.

அவன் அந்தப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு சமையல் அறைக்குச் சென்றான்.

அப்போது வேணுகோபாலர், "மப்பும் மந்தாரமுமாய் இருந்தும், எவ்வளவு புழுக்கமாய் இருக்கிறது!" என்று கூறிக்கொண்டே தம்முடைய அங்கவஸ்திரத்தையெடுத்து உஸ் என்று சுவாசம் விட்டுக்கொண்டே விசிறிக் கொண்டார்.

உடனே, மாணிக்கசுந்தரர் 'பாபு' என்று கூப்பிட்டார். 'ஏன்' என்று கேட்டுக்கொண்டே பத்து வயதுள்ள ஒரு வேலைக்காரச் சிறுவன், வெற்றிலை பாக்கும் அதனோடு உபயோகிக்கத் தகுந்த வேறு பல வாசனைச் சாமான்களும் அடங்கிய வெள்ளித் தட்டொன்றைக் கொண்டுவந்து, வேணுகோபாலர்க்கெதிரே மேஜையின்மேல் வைத்துவிட்டு, மரியாதையுடன் மாணிக்கசுந்தரர்க்கெதிரில், "ஏன் அழைத்தீர்கள் ?" என்று கேட்பதுபோல் நின்றான்.

"விசிறியை எடுத்து ஐயாவுக்கு விசிறு" என்று கூறினார் மாணிக்கசுந்தரர்.

உலக வழக்கப்படி, "வேண்டாம்; இன்னும் சற்று பொறுத்தால் எல்லாம் சரியாய்விடும்" என்றார் வேணு கோபாலர்.

"இல்லை; கொஞ்சம் புழுக்கமாய்த்தான் இருக்கிறது. அவன் விசிறட்டும், நீங்கள் வெற்றிலை போட்டுக்கொள்ளுங்கள்" என்று கூறினார் மாணிக்கசுந்தரர்.

அவர் அப்படிக் கூறுவதற்கு முன்பே, சிறுவனும், "என் எஜமான் கட்டளைப்படியேதான் நடப்பேன்" என்பதுபோல் அங்கிருந்த அழகான மயில் விசிறி ஒன்றையெடுத்து வேணுகோபாலருக்கு இளங்காற்றுகப் படும்படி மையை விசிறினான்.

வேணுகோபாலர், வெற்றிலை போட்டுக்கொண்டே; "தாங்கள் காப்பி சாப்பிட்டாயிற்றா?" என்று கேட்டார்.

"ஆஹா! ஆயிற்று" என்று கூறினார் மாணிக்கசுந்தரர்.

"அப்படியானால், தாங்களும் வெற்றிலை போடுகிறது தானே!" என்று கூறினார் வேணுகோபாலர்.

மாணிக்கசுந்தரர்:—"எனக்கு அந்த வழக்கம் இல்லை என்பது தங்களுக்குத்தான் தெரியுமே!."

வேணுகோபாலர்:—"ஆம்,ஆம், தெரியும் அன்று அந்த ஆர். கே. கறுப்பண்ணன் செட்டியார் வீட்டுக் கலியாணத்திற்குத் தாங்கள் வந்திருந்தபோதும், அவர் தங்களை மிகவும் கட்டாயப்படுத்தின பிறகே, தாங்கள் வேண்டா வெறுப்பாய் வெற்றிலை போட்டுக்கொண்டதால் எனக்கு அது நன்றாய்த் தெரியும்."

மாணிக்கசுந்தரர்:—"தங்கள் க்ஷேமலாபங்கள் எப்படி இருக்கின்றன? இந்த வருஷம் எல்லாருக்கும் வியாபாரம் கொஞ்சம் ஒடுக்கந்தான்போலிருக்கிறது!."

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL

வேணுகோபாலர்:—" துணிந்து இறங்கியவர்களுக்கு நல்ல இலாபந்தான். என்னைப்போல், ஏதாகுமோ என்னவோ என்று பின்தங்கி யிருந்தவர்களுக் கெல்லாம் அதிக இலாபம் ஒன்றுமில்லை. ஆனாலும், நஷ்டமு மில்லை."

மாணிக்கசுந்தரர்:—"தாங்கள் நடந்துகொண்டது தான் மிகவும் நல்ல வழியாகும். சந்தேகமான வழியிற் சென்று, தற்செயலாய் ஏராளமான பொருளைச் சம்பாதிப்பதினும், நிச்சயமான வழியிற் பிரவேசித்துக் கொஞ்சம் இலாபத்தை அடைவது மேலல்லவா? பி. கே. ஆர். எம். அம்பலவாணச் செட்டியார், பேராசையால் அல்லவா, கடன் இறுக்கும் வன்மை இன்மையால் இன்ஸால்வென்ஸியாகும்படி நேர்ந்தது. பஜார் நிலைமையைக் கவனியாமல் அவர் மூந்நூறுயிரத்திற்கு நீலச்சரக்கை ஒப்பந்தம் செய்யலாமா!."

வேணுகோபாலர்:-"பெரும்பாலும், வியாபாரத்தில் நஷ்டமடைவதற்குச் சில காரணங்கள் உண்டு. அக் காரணங்களில் முக்கியமானது பேராசை. அதோடு, எந்தப் பொருள் எந்தக் காலத்தில் எவ்விடத்தில் அதிகமாய்ச் செலவழியும் என்பதைத் தெரிந்துகொள்ளாமையும்; அதே பொருளை அதே காலத்தில் எங்கு விலை குறைவாக வாங்கலாம் என்பதை அறிந்துகொள்ளாமையும்; சில சாமான்களை எந்தக்காலத்தில் எவ்விடத்தில் இலாபத்தோடு விற்கலாம் என்பதைக் கூர்ந்து கவனியாமையும்; இலாபம் வருமோ நஷ்டம் வருமோ என்று சந்தேகிக்கக்கூடிய வழியில் துணிந்து இறங்குவதும் நஷ்டத்துக்குக் காரணங்களாகும். இதை அநேகமாய் எவரும் கவனிப்பதே யில்லை."

மாணிக்கசுந்தரர்:—"அதோடு, வியாபாரத்தில் வாக்கு நாணயமும் அதிகமாய் இருக்கவேண்டும். அந்த வகையி

னும் அம்பலவாணச் செட்டியார் தக்கபடி நடந்துகொள்ள வில்லை என்று கேள்வி.”

வேணுகோபாலர்:—“ஆம், ஆம்; அதனால்தான் அவரைக் கை தூக்கிவிட இப்போது ஒருவரும் முன்வர இசைய வில்லை.”

மாணிக்கசுந்தரர்:—“அவருக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கும்?”

வேணுகோபாலர்:—“அந்த நீலச் சரக்கை ஒப்பந்தம் செய்துகொண்டபிறகு, ஒன்றுக்கு மூன்று பங்கு விலை இறங்கிவிட்டது. அதனால் இருபது நூறாயிரம் ரூபாய்க்கு மேல்நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். அவருடையஆஸ்தி, பத்து நூறாயிர ரூபாய்களுக்குமேல் பொறாது. அதனால்தான் அவர் பயந்துகொண்டு கடன்பட்டவன், கடனிறுக்கும் வன்மை யின்மைக் கடையாளமாகத் துரைத்தனத்தார் ஆதரவால், கடன் கொடுத்தவர்களுக்குத் தரும் வெறுங் கடுதாசி மஞ்சள் கடிதத்தை நீட்டிவிட்டார். ஆனால் அவரை நாம் பொதுவாக நோக்கினால், அவர் தரும குணமுடையா ரென்பது நன்கு புலப்படும். தம்முடைய மரபைச் சேர்ந்த மற்ற செட்டிமக்களைப்போல், கோயில் குளங்களையே கட்டிக் கொண்டிராமல் இரண்டு இலவசப் பாடசாலைகளைத் தம்முடைய பெயரால் ஏற்படுத்தி, அவைகளுக்குப் போதுமான மூலதனம் வைத்திருக்கின்றார்.

மாணிக்கசுந்தரர்:—“அந்த வகையில் அவர் புத்திசாலி தான். தம்முடைய புகழுடம்பு நிலை நிற்பதற்குத் தகுந்த வழி தேடிக்கொண்டார். பாவம்! கொஞ்சம் நிதானத்தோடு கூடி வியாபாரம் செய்திருப்பாரானால் அவர் க்ஷேமமாய் வாழ்ந்திருக்கலாம்.”

மாணிக்கசுந்தரர் இவ்விதம் கூறியவுடன், "ஆம் என்ன செய்யலாம்? போனது போயிற்று" என்று கூறிக்கொண்டே அங்கே சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை உற்று நோக்கினார், வேணுகோபாலர்."

அக்குறிப்பை அறிந்துகொண்ட மாணிக்கசுந்தரர் அவரைப்பார்த்து, "உங்களுக்கு நேரமாய் விட்டாற்போல் தெரிகிறது. நீங்கள் வந்த காரியம் என்னவோ? நான் ஏதோ பேசிக்கொண்டிருந்துவிட்டேன்" என்று சொன்னார்.

வேணுகோபாலர்:—"வீண்பேச்சு நாம் ஒன்றும் பேசிவிடவில்லையே! உலகத்தில் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டிய விஷயத்தைப் பற்றித்தானே பேசினோம்? நம்முடைய விஷயங்கள் அதிகமாய்ப் பேசவேண்டியதில்லை. வேறிடமானால் வெகுநேரம் பேசித் தெரிவிக்கவேண்டியகாரியிருக்கும். தங்களைப்போன்றவர்களிடத்தில் எதுவும் இரண்டொரு வார்த்தைகளில் முடிவு பெறக்கூடும். நமது பிள்ளையாண்டான் இரத்தினவேலுக்கு இந்த வருடம் விவாகம் செய்துவிடலாம் என்பது என்னுடைய கருத்து."

மாணிக்கசுந்தரர்:—"ஆம், விவாகத்திற்குரிய வயதாய் விட்டபடியால் செய்துவிட வேண்டியதுதான்."

வேணுகோபாலர்:—"பையனுடைய குணங்களைப் பற்றித் தங்களுக்குத் தெரியும். நான் சொல்லவேண்டியதில்லை."

மாணிக்கசுந்தரர்:—"ஆஹா, திவ்வியமான குணம், எனக்குத் தெரியாதா, என்ன?"

வேணுகோபாலர்:—"அவனுடைய குணங்களுக்குத் தகுந்த பெண் கிடைக்கவேண்டுமே என்பதுதான் என்னுடைய கவலையாய் இருந்தது. கடைசியாக, நம்முடைய குழந்தை பச்சையம்மாள் அவனுக்கேற்ற குணவதியாய் இருக்க

லாம் என்பதை நன்றாய் அறிந்தேன். ஆனால், தங்களுடைய சம்மதம் எப்படியோ என்பதுதான் என் கவலை.''

மாணிக்கசுந்தரர்:—''குழந்தைக்குத் தங்களுடைய குமாரன் தகுந்தவன்தான் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், சம்பந்தம் செய்துகொள்ளுவதற்குத் தங்கள் நிலைமை எங்கே! என் நிலைமை எங்கே! தங்கள் அந்தஸ்திற்கு நான் தகுந்தவனல்லவே என்பதுதான் எனக்குக் கவலை.''

வேணுகோபாலர்:—''தாங்கள் என்ன, என்னை நேற்றுதான் அறிந்தவர்களைப்போல் பேசுகிறீர்களே! என் குணம் தங்களுக்குத் தெரியாதா? தங்களைப்போன்ற குணவான்களுடைய சம்பந்தம் வேண்டுமேயன்றி குணமற்ற பெரும் பணக்காரர்களின் கூட்டுறவு எனக்குப் பிடிக்காது. நற்குணம் சிறிதும் இல்லாத குபேர சம்பத்துடையவர்களைக் காட்டிலும், குணவந்தர்களான தங்களைப் போன்றார் கூட்டுறவே தக்கதென்பது எனக்குத் தெரியும். அந்தஸ்தென்றால் என்ன அருத்தம் தாங்கள் செய்துகொண்டீர்கள்? அதிக பணம் இருப்பதாலேயே அந்தஸ்துடையவர் என்று ஒருவரைக் கூறிவிடலாமா, என்ன? அப்படிக் கூறிவிடுவது சாதாரண ஜனங்களின் வழக்கமல்லவா? உண்மையாக நற்குணம், நற்செய்கை, பரோபகார எண்ணம் முதலியவைகளையுடையவர்களே அந்தஸ்திற்குரியவர்களாவார்கள். அவற்றிற்கு இலக்கியமாயிருப்பவர் தாங்களன்றோ? தாங்கள்தான் உண்மை அந்தஸ்துடையவர்கள் என்று நான் திண்ணமாகக் கூறுவேன்.''

மாணிக்கசுந்தரர்:—''அதென்னவோ! என்னை நான் அவ்வளவு மதிக்கவில்லை. என்னைத் தாங்கள் விசேஷமாகக் கருதுவதும் என் பாக்கியந்தான்.''

வேணுகோபாலர்:—“ஆம், தங்களுடைய நற்குணங்களைப்பற்றித் தங்களால் மதிக்கமுடியாதென்பது உண்மையே. உயர்ந்த நோக்கமுடையவர்கள் தங்களிடத்துள்ள நற்குணங்களைக் கவனியாது, தப்பித்தவறி ஏதாவது தீக்குணங்கள் இருக்கின்றனவா என்று மட்டும் கவனிப்பதால், அவர்களுக்கு அவர்களுடைய பெருமை இன்னதென்றே தெரியாதல்லவா? நோஷ்வரர்களாயினும் சரி, அவர்கள் சம்பந்தம் எனக்கு வேண்டாம். தங்களுடைய உறவைத்தான் நான் விரும்புகிறேன். தங்களுடைய இஷ்டம் என்னவோ அதைத் தெரிவிப்பது எனக்குச் சந்தோஷத்தைத் தருவதாகும்.”

மாணிக்கசுந்தரர்:—“என் விஷயத்தில் இவ்வளவு அன்பு கொண்டிருக்கும் தங்கள் இஷ்டத்திற்கு நான் எப்படி வேறு கூறக்கூடும்?”

வேணுகோபாலர்:—“அப்படியல்ல. என் வேண்டுதலினால் தாங்கள் சம்மதப் படுவது கூடாது. உங்களுடைய மனப் பூர்வமான அபிப்பிராயந்தான் எனக்கு வேண்டும்.”

மாணிக்கசுந்தரர்:—“வேண்டுதலின் பேரில் அல்ல; தங்கள் இஷ்டம்போல் நான் நடக்கச் சித்தமாயிருக்கிறேன் என்றுதான் கூறுகிறேன்.”

வேணுகோபாலர்:—“சந்தோஷம். அவ்வளவு தான் எனக்கு வேண்டியது. விவாகத்தை இவ்வருஷத்திலேயே இன்னும் இரண்டொரு மாதங்களில் நடத்துவதில் தங்களுக்கு ஒன்றும் ஆக்ஷேபனையில்லையே?”.

மாணிக்கசுந்தரர்:—“ஆக்ஷேபனை என்ன? தங்கள் இஷ்டம்போல் செய்யலாம். எல்லாம் தங்களுடைய பொறுப்பு.”

வேணுகோபாலர்:—"ஆஹா! தடையென்ன? நிச்சய தாம்பூலம் முதலியவைகளை உலக வழக்கப்படி நல்ல நாள் பார்த்து நடத்திக்கொள்ளலாம். அந்த நாளையும் கலியாண நாளையும் பார்த்துத் தங்களுக்கு இன்னும் ஒரு வாரத்தில் தெரிவிக்கிறேன்.

"நல்லது, தங்கள் கருத்துப்படியே நடத்துங்கள்" என்று கூறிக்கொண்டே மாணிக்கசுந்தரர் தம்முடைய கையி லிருந்த புத்தகத்தைப் புரட்டினார்.

வேணுகோபாலர்:—"அதென்ன புஸ்தகம்?"

மாணிக்கசுந்தரர்:—"திருவாசகம்."

அவ்வளவே

திருவாசகம் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் இரண்டொரு நிமிஷம் எதையோ நினைத்து ஏங்குகிற வரைப்போல மௌனமாய் இருந்தார் வேணுகோபாலர். பிறகு அவர் உஸ் உஸ் என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே மாணிக்கசுந்தரரைப் பார்த்து, "மாணிக்கவாசகர் என்று இறைவனால் அன்பு கசிய அழைக்கப்பட்ட திருவாதவூரர் அருளிய திருவாசகம், தேனினும் பாலினும் இனியதன்றோ? திருவாசகத்தி லொரு வாசகத்தையேனும் படித்தாலும், படிக்கக்கேட்டாலும் மனம் பக்திவெள்ளத்தில் ஆழ்ந்து விடுமே!" என்று கூறும்போதே, அவர் வார்த்தையை மாணி க்கசுந்தரர் இடைமறுத்து, "ஆம்; தமிழில் 'அ' என்னும் எழுத்தறியாதவர்களும் திருவாசகத்தை இன்னிசையோடு எவரேனும் ஒருமுறை பாடக் கேட்பாராயின், அவர்கள் கன்னெஞ்சமுடைய கொடியவர்களாயினும், சிறிதுநேர மாவது அன்பூறித் திருந்துவார்க ளென்பது திண்ணம். எடுத்த இடமெல்லாம் இன்னருள் உள்ள அனந்தம் திருப்

பாடல்களை அருளிச்செய்த ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள், மாணிக்கவாசகரைப் பற்றியும் அவர் தம் திருப்பாடல்களைக் குறித்தும்,

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கா னற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
னூன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே"

என்றிவ்வாறு பல பாடல்கள் கற்கண்டும் தீம்பாலும் கலந்திருப்பனபோல அன்பும் பக்தியும் அணைகடந்த வெள்ளம் போல் அளவின்றிப் பெருகப் பாடியிருக்கின்றார்" என்று சொன்னார்.

வேணுகோபாலர்:—"அம்மகானின் பெருமையை யாரால் புகழ்ந்துரைக்க முடியும்? ஒன்று பாருங்கள். ஆதியப்பநாய்க்கன் தெருவில் எனது நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவருக்குத் தமிழ் என்பதே கொஞ்சமும் தெரியாது. ஒருதினம் அவர் வீட்டிற்கு நான் போய் இருந்தபோது, பிச்சைக்காரன் ஒருவன் தெருவில் நின்றுகொண்டே திருவாசகத்தில் சில பாடல்களைப் பலபிழைகளுடன் இராகமென்பது ஒரு சிறிதுமின்றிப் பாடிக்கொண்டிருந்தான். அப்பாட்டைக் கேட்ட என் நண்பர், என்னோடு உரையாடுவதையும் நிறுத்திவிட்டு, பின்னும் அதைக் கவனிக்கலானார். பிச்சைக்காரன் அதை முடித்ததும் வேறு ஏதோ ஒரு பாட்டைப் பாடத் துவக்கினான்.

அப்போது எனது நண்பர், "இது அவ்வளவு நன்றாக இல்லை" என்று கூறினார். அந்தப்பாட்டு முடிந்தவுடன் மறுபடியும் அந்தப் பிச்சைக்காரன் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் திருப்பாடல்களில் ஒன்றைப்பாடினான். அதைக்

கேட்ட என் நண்பர் "இது மிக நன்றாயிருக்கிறது" என்று கூறினார். பிறகு நான் அவ்விரு பாடல்களில் ஒன்று மாணிக்க வாசகருடையதும், மற்றொன்று ஸ்ரீமத் இராமலிங்கசுவா மிகளுடையதுமாகு மென்று கூறினேன். அவ்விரு மகான் கள் சரிதத்தையும் அவருக்கு விளங்கும்படி ஒருவாறு சுருங்க உரைத்தேன். அதன்பிறகு அவர் அடைந்த சந் தோஷத்திற்கு அளவில்லை. அது முதற்கொண்டு அவர், எவரேனும் பாடுகிறவர்களைக் கண்டால், திருவாசகம், அருட்பா முதலியபாடல்களையே பாடுவித்துக் கேட்டானந் திப்பது வழக்கம். இவ்வளவும் நான் ஏன் சொல்லவந் தேன் என்றால், தமிழில் ஒன்றுந் தெரியாத வெடுகருக்கே திருவாசகத் திருப் பாடல்களில் அவ்வளவு பிரியம் உண்டா யிற்றென்றால் தமிழராகப்பிறந்து, தமிழருமைமை அறிந்த வர்களைப்பற்றிக் கேட்பானேன் என்பதனுலேயேயாம்.

மாணிக்கசுந்தரர்:—"திருவாசகத்தைப் பாடுவோர் பாடினால் கல்லுங்கரையும்; மலட்டாவும் பால் சொரியும்; ஆடுமாடுகளும் மேய்ச்சல் மறந்து அசைவற்று நிற்கும்; பட்ட மரம் தளிர்க்கும் என்றால் மனிதர்கள் அதைக் கேட்ட போது தேனுண்டவண்டென மயங்கி நிற்பர் என்பதற்குச் சந்தேகமில்லை. இது பற்றியே திருவருட் பிரகாசவள்ள லாராகிய இராமலிங்க சுவாமிகளும்,

"வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளு மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே."

என்றருளினர்.

மாணிக்கசுந்தரர் இவ்விதம் சொன்னவுடன் கடிகாரத் திலும் மணி டாங் டாங்கென்று ஒன்பது முறை ஒலித்

தது. அது கேட்ட வேணுகோபாலர் சுபகாரியமாக வந்தேன். வந்த காரியமும் மனத்திற்கு மகிழ்ச்சியாகவே முடிந்தது. அதோடு சத்விஷயமாகப் பேசும்படி நேரிட்டதையுங் குறித்து எனக்கு மெத்தச் சந்தோஷம், நேரமாயிற்று. இன்னும் சிறிது நேரமிருந்து புண்ணியமொழிகளைப் பேசுவதற்கு இல்லையே என்று வருந்துகிறேன்'' என்று மாணிக்கசுந்தரரைப் பார்த்துக் கூறினார்.

அதற்கு மாணிக்கசுந்தரர், "அதற்கென்ன அம்மகான்களின் பெருமையைப்பற்றி எத்தனை பகலிரவானாலும் பேசிமுடியாது. இன்னும் எவ்வளவு நேரமானாலும் சலிப்புத் தோன்றாது. ஆனல், நேரமாய் விட்டபடியால் இனி உங்களைத் தாமதப்படுத்த எனக்கு இஷ்டம் இல்லை'' என்று கூறி விசிறிக்கொண்டிருந்த சிறுவனைப்பார்த்து, "பாபு! உள்ளே போய், 'ஐயா, வீட்டிற்குப் போகிறார்' என்று சொல்'' என்று கூறினார்.

'நல்லது' என்று மரியாதையுடன் கூறிக்கொண்டே சிறுவன், விசாலாக்ஷியம்மை இருக்கும் இடத்திற்குச் சென்றான். அங்கு ஒரு சோபாவின்பேரில் விசாலாக்ஷியம்மையும் சிவகாமியம்மையும் உட்கார்ந்து அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்குச் சற்று மறைவாக ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்து பச்சையம்மாள் ஏதோ நோயால் வருந்தும் தன்னுடைய நாய்க்குட்டியைக் கனிவுடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தான் இருக்கும் இடத்திற்கு வந்த பாபுவைக் கண்டவுடன் விசாலாக்ஷியம்மை, "என்னடா சமாசாரம்?'' என்று கேட்டாள்.

பாபு:—"இப்போது வந்த ஐயா, போகப்போகிறார்களாம். அதை, இங்கே நம்முடைய ஐயா சொல்லச் சொன்னார்கள்."

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சிவகாமியம்மை சோபாவிலிருந்து எழுந்திருந்து விசாலாக்ஷியம்மையைப் பார்த்து, "நீங்கள் எங்களுடைய எண்ணப்படி ஒப்புக் கொண்டவிஷயத்தில் எனக்கு அதிக சந்தோஷம்" என்று கூறி, "குழந்தை பச்சையம்மாள் எங்கே?" என்றாள்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட பச்சையம்மாள், "இதோ இருக்கிறேன்" என்று கூறுவதுபோல் நாற்காலியை விட்டெழுந்து, தன்னைச் சிவகாமியம்மைக்குத் தெரியும்படி, தான் இருந்த இடத்தில் இருந்து சற்று முன்னே போனாள்.

பிறகு சிவகாமியம்மை, பச்சையம்மாள், விசாலாக்ஷியம்மை ஆகிய இருவரிடத்திலும் அவரவர்களுக்கேற்றவாறு இதங்கூறி, உத்தரவு பெற்றுக்கொண்டு, தன் கணவன் இருக்கும் இடத்திற்குச் சென்றாள்.

# 4-வது அத்தியாயம்

## கலியாணம்

"என்ன, சாஸ்திரிகளே! நான் உமக்காக எவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருப்பது? நேரமாய்விட்டால், அங்கு ஒரு பைசாகூட தட்சணை கிடைக்காமற் போய் விடும்" என்று கூறினார் சிவாநந்த சாஸ்திரிகள்.

அதற்கு மறறவராகிய சாம்பசிவ சாஸ்திரிகள், "என்னங் காணும், கலியாணம் ஒன்பது மணிக்கு நடக்கப்போகிறது. மணி இப்பொழுது எட்டரைதானே ஆகிறது? வாரும் போகலாம்" என்று கூறினார்.

அவர் அவ்விதம் கூறியவுடன், சிவாநந்த சாஸ்திரிகள் "ஆமாங்காணும். 'பந்திக்கு முந்திக்கொள்; படைக்குப் பிந்திக்கொள்' என்றபடி, நாம் நடந்துகொள்ளவேண்டாமா?" என்று கூறிக்கொண்டே அவரோடு போனார்.

போகும்போதே சாம்பசிவ சாஸ்திரிகள், சிவாநந்த சாஸ்திரிகளைப்பார்த்து, "என்ன, ஓய்! பெருமைக்குப் பிராமணார்த்தம் என்று சொல்லிவிட்டு முந்திவந்தவர்களுக்கு அரை குறையாகக் கொடுத்துவிட்டுப் பிந்திவந்தவர்களுக்குக் கதவைச் சாத்திக்கொண்ட பெரியமலைப் பொன்னுசாமித் தேவனைப்போல நமது வேணுகோபாலனை எண்ணிக்கொண்டீரோ? அவர் கர்ணனுச்சுதே! கர்ணனாவது காலைமுதல் பகல் வரையில்தான் தருமம் செய்வது வழக்கம். இந்தப்

பிரபு எந்த வேளையானாலும் இல்லையென்னாது கொடுக்கப் பட்டவராயிற்றே! அதிலும் இன்றைக்கு அருமையாகத் தமக்குள்ள ஒரே குழந்தைக்குக் கலியாணம் செய்கிறார். அதோடு பிராமணன் முதல் எல்லாவகுப்பாருக்கும் சம்பிரமமான சாப்பாடு போடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். கர்ணனைப்போன்ற அப்பிரபு நம்மைப்போன்ற ஏழைப் பிராமணனுக்கு, ஏதோ தலைக்கு ரூபாய் அரை, ஒன்றாவிழுக்காடு கொடுப்பதற்கு மயங்குவார் என்று நீர் நினைக்கவேண்டாம். என்ன பிரமாதம்! இன்றைக்கு எல்லாம் மிஞ்சினால் ஓராயிரம் ஆகப்போகிறது! அதற்கு மேலும் ஆனால் ஆகட்டுமே! இது அவருக்கு ஒரு பெரிய காரியமல்ல."

சிவானந்த சாஸ்திரிகள்:—"என்ன, ஓய்! எனக்கு மேல் விஷயம் உமக்கு அதிகமாகத் தெரிந்து இருக்கிறதே! இன்று போஜனமாங்காணும்?"

சாம்பசிவ சாஸ்திரிகள்:—"என்ன ஓய்! உமக்குப் பிராமண போஜனம் என்னும்போதே வாயில் நீர் சுரக்கிறதே!"

சிவானந்த சாஸ்திரிகள்:—"இல்லை, சாஸ்திரிகளே! போஜனத்தை நினைத்து, அதனால் எனக்கு ஒன்றும் வாயில் நீர் ஊறவில்லை. ஏராளமான ஜனங்கள் இருக்கும் பந்தியில் உட்கார்ந்து சாப்பிடுவதில் எனக்கு ஆனந்தம் அதிகம்."

சாம்பசிவ சாஸ்திரிகள்:—"அப்படியானால் வாரும். இன்று பிராமணபோஜனம் தான். உம்முடைய இஷ்டம் போல் சாப்பிட்டு ஆனந்திக்கலாம்."

சிவானந்த சாஸ்திரிகள்:—"ஏன், சாஸ்திரிகளே! உம்மைக் கேட்டால்தான் தெரியும்: கலியாணப்பெண்ணின் தகப்பன் மெத்த நல்லவரா? ஏன், கேட்கிறேனென்றால்,

நமது வேணுகோபாலருக்குத் தகுந்தவர்தானோ என்பது என் சந்தேகம். ”

சாம்பசிவ சாஸ்திரிகள் :—“ சிவ, சிவா! என்ன அப்படி கேட்டீரே? அவர் ஒரு பெரிய தர்மிஷ்டி. குணத்தில் வேணுகோபாலருக்கு அதிகமென்றே சொல்லலாம் ”

சிவானந்த சாஸ்திரிகள் :—“ அப்படியானால், இன்றைக்கு ஒவ்வொரு பிராமணனுக்கும் ஒவ்வொரு ரூபாயும் நல்ல போஜனமும் கிடைக்குமென்று சொல்லும். ”

சாம்பசிவ சாஸ்திரிகள் :—“ போஜனம் கிடைப்பது நிச்சயம். அதில் சந்தேகமே வேண்டாம். ஆனால், ரூபாய் தான் அரை கிடைக்கிறதோ முழு ரூபாயாகவே கிடைக்கிறதோ என்பது சந்தேகம். ”

சிவானந்த சாஸ்திரிகள் :—“ என்னவோ! போஜனம் கிடைக்கின்றதே அதற்குமேல் கால்ரூபாய் கிடைத்தாலும் திருப்திதான். வேணுகோபாலருடைய நற்குணத்திற்கு அவருடைய பிள்ளையும் மருமகளும் ஆயுள் ஆரோக்கிய திடகாத்திரராய் வாழ கடவுள் கிருபை செய்யவேண்டும். என்னவோ புண்ணியாத்துமாக்கள் இருந்தால் நம்மை போன்ற ஏழைப்பிராமணர்களுக்கு க்ஷேமம் உண்டு. எட்டி மரம்* பழுத்து என்ன பலன் தரப்போகின்றது? அதைப் போல தருமகுணமில்லாதவர்களாவது பரோபகாரமான ஒரு வழியில் உழைக்கப் பிரியமில்லாதவர்களாவது இருந்து என்ன பிரயோசனம்? ”

சாம்பசிவ சாஸ்திரிகள் :—“ ஆம், நீர் சொல்லுவது மெத்த நியாயமாகத்தான் இருக்கிறது. ஆனால், உலகம் பெரும்பாலும் அப்படி நடை பெறவில்லையே! நல்லவர்களுக்

குத்தான் கஷ்டத்தின்மேல் கஷ்டம் துன்பத்தின்மேல் துன்பம் தொடர்ந்து வருகின்றது. அவர்களுடைய நற்குண நற்செய்கை முதலியவைகளைக்கண்டு பொறாமைப்படுவோரும், சுயநலப்பிரியருந்தாம் சுகமாய் இருக்கிறார்கள்."

சிவானந்த சாஸ்திரிகள் :—" நீர் சொல்லுவது உண்மையாய் இருக்கலாம்! பெரும்பாலும் நல்லவர்களுக்கே அதிக துன்பம் உண்டாவது, உலக வழக்கமாய் இருக்கிறது. நமது சௌந்தரநாதப்பிள்ளைக்கு என்ன குறைவு? அவர் குணத்திற்குத்தான் என்ன பழுது சொல்லமுடியும்? வேணு கோபாலரைவிட அவர் குணத்திலாவது தருமத்திலாவது குறைந்தவரென்று யாராவது சொல்லமுடியுமா? ஒரு போதும் முடியாது. அவர் மகனுக்குச் சென்ற வருஷம் தான் துபாஷ், ராமச்சந்திரன் மகளை விவாகம் செய்து வைத்தார். வருஷம் ஒன்றாவதற்குள் பிள்ளையாண்டான் இறந்து போய்விட்டான். அதுமட்டுமா? இன்னொன்று, பாவம்! அது உமக்குத் தெரிந்தவிஷயமென்றே நினைக்கிறேன். கோட்டேர் தனபதி நாயுடுவுக்கென்ன குறை சொல்ல முடியும்? அவருக்குச் சமானமான குணவான்களை நான் கண்டதேயில்லை! அப்படிப்பட்டவர் தேடாத இடமெல்லாம் தேடி போகாத இடமெல்லாம் போய், தம்முடைய ஒரே பெண்ணாகிய கோமளத்திற்கு, தகுந்த மாப்பிள்ளையைத்தேடி விவாகஞ் செய்வித்தார். பெண் ஒன்பது மாத கர்ப்பவதியாயிருக்கையில் புருஷன் இறந்துபோய்விட்டான். இப்படித்தான் அநேக இடங்களில், நல்லவர்களுக்கு வரும் கஷ்டம், வாயினால் சொல்ல முடியாததாக இருக்கின்றது. இதனால், நல்லவர்கள் நன்மையையும் கெட்டவர்கள் தீமையையும் அனுபவிப்பார்கள் என்பதற்கில்லையே."

சாம்பசிவ சாஸ்திரிகள்:—"அப்படிச் சொல்லாதீர். சத்தியம், தருமம், நியாயம் என்பன உலகத்தில் இல்லாமலா உலகம் நடை பெறுகின்றது? தீயவர்கள் சுகம் அனுபவிப்பதற்கும், நல்லவர்கள் துக்கம் அனுபவித்தற்கும் மனிதர் அறிவுக்கும் எட்டாத காரணங்கள் ஏதாவது இருக்கக் கூடும். அக்காரணம் இன்னதென்று அறிந்துகொள்ள முடியாததனால், நாம் சத்தியம் அசத்தியம் என்பவைகளுக்குத் தகுந்தபடி உலகத்தில் பலாபலன்கள் உண்டாவதில்லை என்று சொல்லிவிட முடியுமா?"

சிவானந்தசாஸ்திரிகள் :—(வழி நெடுகப்போய்க்கொண்டிருக்கும் பல தனவான்களையும், ஏழைகளையும் குறிப்பிட்டு), "ஓய், சாஸ்திரிகளே! இவர்கள் எல்லாரும் இவ்வளவு ஆனந்தமாய் வேணுகோபாலர் மகனுடைய கலியாணத்திற்குத்தான் போகின்றார்களோ?"

சாம்பசிவசாஸ்திரிகள் :—"ஆம்."

சிவானந்தசாஸ்திரிகள் :—"இது என்ன, நீர் சொல்லுவது எனக்கு வேடிக்கையாய் இருக்கிறதே தனவந்தர்கள் வீட்டு நன்மை தீமைகளுக்குத் தனவந்தர்கள் தானே அழைக்கப்படுகிறார்கள்? நம் ஆத்துக்குப்பக்கத்தில் இருக்கும் இராமச்சந்திரனைப்பாரும். இவன் தகப்பன் புரோகிதம் செய்துகொண்டிருந்தான். ஏதோ அதிர்ஷ்டவசமாய் இவன் படித்து ஒரு வக்கிலாக வந்துவிட்டான். இப்போது இவன் தன்னைச் சேர்ந்தவர்கள் இன்னின்னார் என்பதையே மறந்துவிட்டான். வழியே போகிறவர்களாயிருந்தாலும் சரி; அவர்கள் பெருந் தனவந்தர்களாக மட்டும் இருந்துவிட்டால், அவர்களைத்தான் இவன் தன்னுடைய வீட்டுச் சுபாசுபங்களுக்கு அழைக்கின்றான். உலகம் இப்படி இருக்

கையில் வேணுகோபாலர் தனவந்தர்களைத் தம் வீட்டுக் கலியாணத்திற்கு வரவழைத்திருப்பதுபோலவே ஏழைகளையும் வரவழைத்திருப்பது ஆச்சரியமாக இருக்கின்றது.”

சாம்பசிவ சாஸ்திரிகள்:—“ஏழைகளைக்கூட அவர் வரவழைத்ததோடு போகவில்லையே! ஏழைகள் ஒவ்வொருவரும் அவரவர்கள் ஜாதியாசாரத்துக்குத் தகுந்தபடி உட்கார்ந்து சாப்பிடுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார். சுப்பையர் வகையராக்கள்தான், ஓப்! அந்தச் சமையல் வேலையைச் செய்ய நூறு ரூபாய் பேசி ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.”

சிவாநந்த சாஸ்திரிகள்:—“கொடைவள்ளல் என்றாலும் அந்தப் பட்டம் வேணுகோபாலருக்குத் தகும்போலிருக்கே! பேஷ், ஜென்மம் எடுத்தாலும் இப்படியல்லவா குணங்கள் அமையவேண்டும்! என்ன, எப்படியானாலும் சில தருமப் பிரபுக்களுக்குக் கஷ்டத்தின்மேல் கஷ்டம் வருவதைப்போலில்லாமல், வேணுகோபாலரின் மாட்டுப்பெண்ணும் பிள்ளையும் பல்லாண்டு அரோக திடகாத்திரர்களாய் வாழ எம்பெருமான் கிருபை செய்யவேண்டும்”

இவ்விதமாய்ப் பேசிக்கொண்டே சாஸ்திரிகள் இருவரும் அரைக்கால்மயில் தூரம் (இரண்டு பர்லாங்கு தூரம்) சென்றனர். அப்போது சாம்பசிவ சாஸ்திரிகள் சிவானந்த சாஸ்திரிகளைப் பார்த்து, “சாஸ்திரிகளே! இரண்டு நிமிஷம் இங்கேயே நில்லும். கோடி வீட்டு மாத்துவாச்சாரியையும் அழைத்துக்கொண்டு வருகிறேன். பாவம்! ஏழைப்பிராமணன். அதோடு இந்த வயதில் இளையாளாக ஒருத்தியைக் கட்டிக்கொண்டு அவஸ்தைப்படுகிறான்” என்று கூறினார்.

அதற்குச் சிவானந்த சாஸ்திரிகள், சாம்பசிவ சாஸ்திரிகளைப்பார்த்து "என்ன ஓய்! இப்போதே நேரமாய்விட்டது! இந்நேரம் அங்கு முகூர்த்தம் நடந்து இருக்கும். அந்தக் கிழட்டு மாத்துவாச்சாரிக்கு வயது அறுபதாச்சுது. அந்தப் பிணம் இந்த வெய்யிலில் நம்மோடு எப்படி வேகமாக நடந்துவர முடியும்? ஏழையென்றால் நமக்கென்ன? இந்த வயதுக்குமேல் இவனை யார் இளையாள் ஒருத்தியை கட்டிக்கொண்டு அழச்சொன்னது?" என்று சொன்னார்.

"என்னவோ, பாவம்! அந்தியத்தில் இட்ட வேலையைச் செய்யவாவது ஒரு ஆள் தேவைதானே? அதற்காக இளையாள் ஒருத்தியைக் கட்டிக்கொண்டதாக இருக்கட்டுமே!" என்று சொல்லிப் பின்னும், "இங்கேயே இரும். நான் இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்" என்று கூறிக்கொண்டே, சாம்பசிவ சாஸ்திரிகள், கோடி மாத்துவாச்சாரி வீட்டிற்குச் சென்று, அவரைப்பார்த்து "ஆச்சாரியார்வாள்! புறப்படும். நமது வேணுகோபாலர் ஆத்துலே, அவர் பிள்ளைக்குக் கலியாணம். பிராமணாள் எல்லாருக்கும் தட்சணையும் நல்ல போஜனமும் கிடைக்கும். அதனால் உம்மையும் என்னோடு அழைத்துப்போகலாம் என்று வந்தேன். புறப்படும் சீக்கிரம். நமது சிவானந்த சாஸ்திரிகள் அதோ ரோட்டில் காத்துக்கொண்டிருக்கின்றார்" என்று சொன்னார்.

அதைக்கேட்ட வயோதிகரான மாத்துவாச்சாரியார், சாம்பசிவ சாஸ்திரிகளைப்பார்த்து, "அப்பா, நீ நெடுங்காலம் சுகமாய் வாழவேண்டும். என்மேல் உனக்குள்ள விசுவாசம் வேறு யாருக்கு வரும்! என்னமோ நான் ஒருவன் இருக்கி

றேன் என்பதை மறந்துபோகாமல் நினைவாக அழைத்துக் கொண்டுபோக வந்தாயே! நிரம்ப சந்தோஷம்" என்று கூறிக் கொண்டே வீட்டைவிட்டுப் புறப்பட்டார்.

சாம்பசிவ சாஸ்திரிகள் அவரை அழைத்துக்கொண்டு, சிவானந்த சாஸ்திரி நின்றுகொண்டிருந்த இடத்திற்குப் போய் அவரையும் அழைத்தார். மூவரும் கலியாணவீடு போய்ச் சேர்ந்தார்கள்.

வேணுகோபாலரின் பங்களாத் தோட்டம் சுமார் ஒரு மைல் சுற்றளவுடையது. அதன் நடுவில் அவருடைய அற்புத மாளிகை அழகாக விளங்கியது. அந்தப் பங்களாவுக்குமுன்னால் அமைத்திருந்த கலியாணப்பந்தல் இந்திர விமானம்போல் மிகச் சுந்தரமாகத் துலங்கியது. சுருங்கக் கூறுமிடத்து ஒரு கலியாணப் பந்தல் எவ்வளவு சுந்தரமாகத் தோன்றக்கூடுமோ அவ்வளவு சுந்தரமாகத் தோன்றும்படி அந்தக் கலியாணப்பந்தல் அமைந்திருந்தது. தரை முழுவதும் அழகிய பாய்கள் பரப்பி அவைகளின்மேல் இரத்தினக்கம்பளங்கள் விரித்திருந்தன.

கலியாணப்பந்தல் முழுமையும் தனவந்தர்களும் ஏழைகளும் அவரவர்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த இடங்களில் அமர்ந்திருந்தனர். கலியாணச்சடங்குகள் யாவும் விமரிசையாக நடந்தன. பெரியோர்கள் வாழ்த்த, உத்தம பிராமணர்கள் ஆசீர்வதிக்க, மேளக்காரன் ஆனந்தம்வாசிக்க, வேணுகோபாலரின் மகன் சிரஞ்சீவி இரத்தினவேலு, சௌபாக்கியவதி பச்சையம்மாளுக்கு மங்கலியதாரணம் செய்தான். அதன் பிறகு அம்மி மிதித்தல் அருந்ததி காணல் முதலிய சடங்குகள் நடந்தேறின.

அன்றுபகல் எல்லா வகுப்பினருக்கும் போஜனம் விமரிசையாக நடைபெற்றது. பிராமணர்களுக்கும் ஏழை களுக்கும் தலைக்கு ஒவ்வொரு ரூபாய் தக்ஷிணை கிடைத்தது. அன்று மாலை பலவித ஆடல் பாடல்கள் நடைபெற்றன. இவ்விதம் ஐந்துநாள் வரையில் கலியாணவைபவம் விசேஷ மாக விளங்கிற்று. பிறகு, எல்லாரும் தம்பதிகளை வாயார வாழ்த்தி, மனதாரப் புகழ்ந்து, தங்கள் இருப்பிடம் போ னார்கள்.

உண்மையாகவே தம்பதிகள் இருவரும் ஒருவருக் கொருவர் மெத்தப் பொருத்தமுடையவர்களாகக் காணப் பட்டார்கள்.

# 5-வது அத்தியாயம்

## காதலர்கள்.

வேணுகோபாலருடைய பங்களாத் தோட்டம் மிகவும் அழகுடையது. அதை ஒரு முறை நன்முகப் பார்த்தவர்கள் எல்லாரும் புகழ்ந்து பேசாமல் இருக்கமுடியாது. எல்லாவிதமான புஷ்பச்செடிகளையும் அங்குக் காணலாம். பலவித பழந்தரும் மரங்களும் செடி கொடிகளும் அங்கு உண்டு. ஓர் ஆள் உயரத்திற்கு அதிகப்படாத தென்னை மரங்கள் பல, குலை குலையாய்க் காய்த்து வரிசை வரிசையாய் நிற்பதைக் காண்போர் களிப்படைவர் என்பது திண்ணம். சுருக்கமாகக் கூறுமிடத்து, அத்தோட்டம் எல்லாவிதமான அழகிய வளங்களையும் உடையதாய் இருந்ததென்று கூறலாம்.

விவாகமான மூன்றும் மாதம் வேணுகோபாலரின் பங்களாவின் மேன்மாடியில் உள்ள தன்னுடைய அறையில் நின்றுகொண்டு தனக்கெதிரே கீழ்த்திசையில் அப்போதுதான் உதயமாகும் முழுச் சந்திரனைக் களிப்புடன் கவனித்துக்கொண்டிருந்தாள் பச்சையம்மாள். பூர்ணச் சந்திரனுடைய இயற்கை அழகில் ஈடுபட்டிருந்த அவளுடைய மனமானது வேறு எதையும் சிந்திக்கக்கூடியதாயில்லை.

அவளுக்குப் பின்னுல் அடிமேல் அடி வைத்து, அவளுடைய கணவன், இரத்தினவேல் ஓசைப்படாமல் வந்து அவளுடைய இரண்டு கண்களையும் தன்னுடைய கரங்களால் மூடினுன்.

அப்போது தான் உணர்ச்சியுற்றுப் பச்சையம்மாள் திடுக்கிட்டு நின்றாள். பிறகு, உடனே அவள் தன் கண்களை மூடியது, தன் கணவன்தான் என்பதை அறிந்துகொண்டு, "தயைசெய்து கையை எடுங்கள். தங்களைத்தவிர என் கண்களை மூடுகிறவர்கள் யாருமில்லையென்பது எனக்குத் தெரியும்" என்று கூறினாள்.

உடனே இரத்தினவேல் சந்திரனுக்கு நேரே கிடந்த ஒரு சோபாவின்மேல் உட்கார்ந்துகொண்டு பச்சையம்மாளையும் தன் அருகே கட்டாயப்படுத்தி உட்காருவித்து, அவளைப்பார்த்து, "உன்னை, நான், புத்திசாலியென்று நேற்றுக் கூறியதற்கு நீ ஏன் அந்த வார்த்தையை ஒப்புக் கொள்ள முடியாதென்று கூறிவிட்டாய்?" என்று கேட்டான்.

பச்சையம்மாள்:—(சற்றுப் புன்னகையுடன்) "நான் புத்திசாலி என்பதற்குத் தகுந்த அறிகுறிகள் ஒன்றும் என்னிடத்தில் இல்லாமையால், நான் எப்படி அந்த வார்த்தையை அங்கீகரிப்பது?"

இரத்தினவேல்:—(பச்சையம்மாளின் முகத்தைப் புன் சிரிப்புடன் பார்த்து) "கண்மணீ, உனக்கு விவாகம் நடந்து இன்னும் மூன்று மாதங்கள்கூட சரியாக முடியவில்லை. அதற்குள் நீ என் தாய் தந்தையர்களின் இஷ்டப்படி நடந்து அவர்களுடைய பிரியத்தை சம்பாதித்துக் கொண்டாயல்லவா! அதனால் உன்னைப் புத்திசாலியென்றேன்."

பச்சையம்மாள்:—"காரணம் பலமாயிருக்குமென்றல்லவா நினைத்தேன்? இந்தக் காரணத்தை முன்னிட்டுத் தாங்கள் என்னைப் புத்திசாலி என்று அழைப்பது, முன்னிலும் இப்போது எனக்கு அதிகமாகச் சம்மதமில்லை.

இரத்தினவேல்:—" ஏன், எதற்காகவோ?"

பச்சையம்மாள்:—"தங்கள் தாய்தந்தையர்கள் இயற்கையிலேயே நற்குணம் நற்செய்கை வாய்ந்தவர்கள். அதனால் அவர்கள் என்னிடம் அருமை பெருமை பாராட்டுகிறார்களேயன்றி, என்னுடைய புத்திசாலித்தனத்தினாலே யன்று."

இரத்தினவேல்:—"நீ அப்படியா சொல்லுகிறாய்? என் தாயார் அன்றொரு நாள், நீ வெந்நீர் சீக்கிரமாய்க் கொண்டு வரவில்லை என்று உன்னைக் கோபித்துக்கொண்டார்களே! அப்போதும், நீ முகங்கோணாமல் அவர்கள் அருகில் இருந்து அவர்களுடைய நோய்க்குப் புன்சிரிப்புடன் உபசாரம் செய்துகொண்டிருந்தா யல்லவா? இதனால், யார், இயற்கையிலேயே நற்குணமுடையவர்கள்?"

பச்சையம்மாள்:—"நாத, சரியாய் என்னைத் தங்களுடைய தாயார் கோபித்துக்கொண்ட காரணத்தைத் தாங்கள் அறிந்துகொள்ளவில்லை என்று நினைக்கின்றேன். இப்படி நான் கூறினேனென்று தாங்கள் என்மேல் கோபித்துக் கொள்ளக் கூடாது. வேலைக்காரர்களைக்கொண்டு தண்ணீர் சுடவைத்துக்கொண்டுவராமல் நானே சிரமப்பட்டு வெந்நீர் வைத்துக்கொண்டுவந்ததை, அவர்கள் எப்படியோ அறிந்து கொண்டு, வேலைக்காரர்கள் இருக்கையில் நான் ஏன் அவ்வளவு சிரமப்படவேண்டும் என்று, என்னை அவர்கள் கோபித்துக்கொண்டார்களே யன்றி, நான் வெந்நீர் சீக்கிரமாகக் கொண்டு வரவில்லையென்று என்னை அவர்கள் கோபித்துக் கொள்ளவில்லை. தலைவலியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் என் விஷயத்தில் அவ்வளவு அருமை பாராட்டின

போது அவர்கள் இயற்கையிலேயே நற்குணங்கள் பலவும் வாய்ந்தவர்கள் என்பது புலப்படவில்லையா!"

இரத்தினவேல்:—"அப்படியானால், அன்று நீ வெந்நீர் சிறிது தாமதமாகக் கொண்டுவரவில்லையோ?"

பச்சையம்மாள்:—"சற்று தாமதமாகத்தான் கொண்டு வந்தேன். நானே தயார்செய்து கொண்டுவரவேண்டிய தாயிருந்தபடியால் சற்று தாமதமாயிற்று. அதற்காகத் தங்கள் தாயார் என்னைக் கோபித்துக்கொள்ளவில்லை. நான் முன் சொல்லிய காரணத்திற்காகத்தான் என்னைக் கோபித்துக்கொண்டார்கள். அது எப்படிக் குற்றமாகும்? அந்தக் கோபம் அன்பு காரணமாக வந்ததல்லவா? அப்படியே, அவர்கள் என்னைக் கோபித்துக்கொண்டதாகவே இருக்கட்டும். அதனால் எனக்கென்ன குறை? நான் தவறிய விடத்தில் என்னை அவர்கள் கோபித்துத் திருத்தாவிடில் நான் திருந்துவதுதான் எப்படி?"

இரத்தினவேல்:—"இது போகட்டும். அன்று நீ அந்தப் பளிங்கு கிண்ணத்தை உடைத்துவிட்டாயே! அதற்காக உன்னை அவர்கள் கோபித்துக்கொள்ளவில்லையா?"

பச்சையம்மாள்:—"அவர்கள் நியாயப்படி கோபித்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் நீங்கள் எண்ணிய படி அவர்கள் என்னைக் கோபித்துக்கொள்ளவில்லை. முந்தியே உடைந்துபோயிருந்த அந்தப் பளிங்குக் கிண்ணத்தைக் கையில் எடுத்து நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அது தவறி விழுந்து உடைந்துபோயிற்று. அது கீழே விழுந்த சத்தத்தைக்கேட்டுத் தங்கள் தாயார் அங்கே வந்தார்கள். அவர்கள் என்ன சொல்லுவார்களோ என்று நான் எண்ணினேன். நான் பயப்படுகிறேன் என்பதை அறிந்து

கொண்டே என்னவோ தங்கள் தாயார் என்னைப்பார்த்து, 'அம்மா! அது போனுற் போகிறது. அது ஏற்கனவே உடைந்ததுதான்; பார்ப்பதற்கு அவலட்சணமாயிருந்தது. நேற்றே அதை நான் எடுத்து எறிந்துவிடும்படி வேலைக்காரியிடம் கூறினேன் என்று கூறிக்கொண்டே வேலைக்காரி சுந்தரத்தைக் கூப்பிட்டு, உடைந்துபோன கண்ணுடித்துண்டுகளையெல்லாம் அப்புறப்படுத்தும்படி கூறிவிட்டு, என்னை அழைத்துக்கொண்டுபோய் பகவத்கீதை படிக்கச்சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இவ்வளவு நற்குணம் வாய்ந்த தங்கள் தாயாரைப்பற்றித் தாங்கள் என்னென்னவோ கூறுகிறீர்களே! தாங்கள் அப்படியெல்லாம் சொன்னுல் என் மனம் வருத்த மடையும்."

பச்சையம்மாள் இவ்விதம் கூறியவுடனே, ஏதும் பேசாமல் இரத்தினவேல் சிரித்தான். அவன் சிரித்ததின் கருத்தையும் முகக்குறிப்பையும் அறிந்துகொண்டபச்சையம்மாள் "நீங்கள் என் மனதைப் பரிசோதிக்க நினைத்து இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்போலும்" என்று கூறிச் சிரித்துக் கொண்டே இரத்தினவேலை நோக்கி, "அதோ பாருங்கள், அந்த முழுச்சந்திரன், எவ்வளவு அழகாகப் பிரகாசிக்கின்றது!" என்று சந்திரனைச் சுட்டிக் கூறினுள்.

இரத்தினவேல்:—"நீ இன்றுதானு முழுச் சந்திரனைப் பார்க்கிறுய்?"

பச்சையம்மாள்:—"நான் இன்றுதான் பார்க்கின்றேன். நீங்கள் நேற்றுப் பார்த்தீர்களோ?"

இரத்தினவேல்:-(புன்சிரிப்புடன்) "ஆம் பார்த்தேன்."

பச்சையம்மாள்:—"காளிதாசருக்காகத் தெய்வானுக்ரகத்தால் அமாவாசையன்று முழுச்சந்திரன் உதயமானது

போல், தங்களுக்காக இன்று உதயமாகும் முழுச்சந்திரன் நேற்று இப்படியே உதயமாயிற்று போலும்!"

இரத்தினவேல்:—"காளிதாசனுக்காகச் சந்திரன் ஒரே ஒரு தினம்தான் உதயமாகும்படி தெய்வம் அனுக்கிரகம் செய்ததாகக் கதை. ஆனால், எனக்கு அனுக்கிரகம் செய்த கடவுள் முழுச்சந்திரன் எப்போதும் என் முன்னிலையி லேயே இருக்கும்படியன்றோ அனுக்கிரகம் செய்திருக்கின் றார். ஆகையால், காளிதாசனிலும் நான் அதிர்ஷ்டசாலியல் லவா?" உலகத்தார்களை எல்லாம் பார்த்துக்கொண்டு ஆகாய வெளியில் சஞ்சரிக்கும் அந்தச் சந்திரனை நான் பார்ப்பதை விட என்னையே நோக்கி என் அருகில் உட்கார்ந்துகொண்டி ருக்கும் இந்தச் சந்திரனை நான் பார்த்துக்கொண்டிருப்பது உயர்வென்று தோன்றுகிறபடியால், நான், நீ குறித்த சந்திர னைப்பார்க்கப் பிரியப்படவில்லை."

பச்சையம்மாள்:—(சற்று வெட்கத்துடன் தலைகு னிந்து) "உங்களுக்கு நான் சந்திரனாகத்தோன்றுகிறேனோ?"

இரத்தினவேல்:—"ஆம் சந்தேகமா? உன் முகம் சந் திரன்போல்தான் இருக்கிறது. ஸ்திரீகளின் முகத்தை நீ இப்போது கூறிய காளிதாச மகாகவியே சந்திரனுக்கு ஒப் பிட்டுக் கூறியிருப்பது உனக்குத் தெரியாதா?"

பச்சையம்மாள்:...(அன்புள்ள பார்வையுடன் இரத் தினவேலை நோக்கி) "அதெல்லாம் புலவர்களின் கற்பனை. இல்லாத பெருமையை ஒரு பொருளுக்கு இருப்பதாகக் கற் பித்துவிடுவது. அதனால்தான் ஜனங்களுக்கு ஒருவித மயக்க மேற்பட்டு அவர்களைப் புகழ ஆரம்பித்து விடுகிறார்கள்."

இரத்தினவேல்:—"அப்படியானால், காளிதாசர் ஜனங் களைத் தம் வார்த்தையில் மயங்கும்படி செய்துவிட்டாரா?"

பச்சையம்மாள்:—நீங்கள் சொல்லுவதுபோல் காளி தாசர் ஜனங்களை ஏமாற்றித் தம்மிடம் அன்பு பாராட் டும்படிசெய்து விட்டார் என்று நான் கூறவில்லை. ஒன்று பாருங்கள்: திருமலைராயன் என்னும் சிற்றரசனுடைய சமு கத்திற்குக் காளமேகப்புலவர் சென்றிருந்தபோது அங்கிருந் தோர் ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாத பொருள்களைச் சம்பந்தப்படுத்திச் சிலேடையாகப் பல வெண்பாக்களைப் பாடும்படி அவரைக் கேட்டார்கள். அவர் அப்படியே பாடி னார். அதைக்கேட்டு அவர்கள் மகிழ்ந்தார்கள். திருமலைராய னுடைய சபையில் இருந்தவர்கள், அப்போது மறுபடியும் காளமேகப் புலவரை ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் பொருத்தமில்லாத எள்ளுக்கும் நல்ல பாம்புக்கும் பொருத் தம் கற்பித்து ஒரு வெண்பாப் பாடும்படி கேட்டார்கள். உடனே அவர்,

‘ஆடிக் குடத்தடையும் ஆடும்போதே இரையும்
மூடித் திறக்கில் முகங்காட்டும் — ஓடி மண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற் பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடும் பெள்ளெனவே யோது?’

என்று பாடினார். அதைக் கேட்டு அங்கிருந்தார் அனைவரும் சந்தோஷித்தனர். ஒருவகையில்—கவித்திறத்தில்—நோக் கும்போது அவர் கூறிய கற்பனைப் பொருத்தங்கள் அழ காகவும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றன. ஆனால் ஆராய்ச்சிநோக்கத்துடன் பார்க்கும்போது குணத் தில் எள் நல்லபாம்பையும், நல்ல பாம்பு எள்ளையும் ஒத் திருக்கவில்லையென்று நன்றாய்த்தெரிகின்றதே! அதை, காள மேகத்தின் கற்பனாசக்தியைக் கண்டு களித்தவர்களில்அநேகர் அறியாதவர்களல்லவே! ஆயினும் ஒருவகையிலும் உண்

மைப் பொருத்த மற்றவைகளுக்குக் காளமேகப் புலவர் தம் முடைய அதி தீவிர கற்பனைசக்தியின் திறமையால் ஏதாவது ஒருவகையில் வேடிக்கையான பொருத்தங்களைக் கற்பித் துக் கூறுவதைக்கண்ட மற்றப் புலவர்கள் மகிழ்ந்தார்களே யன்றி, வேறல்ல. அதைப்போலவே ஒரு வகையிலும்...''

இரத்தினவேல்:—''ஒரு வகையிலும், அதற்கு மேல் என்ன.?''

பச்சையம்மாள்:— (சிரித்துக்கொண்டே) ''அதற்கு மேல் என்ன? அதைப்போலவே ஒருவகையிலும் பொருத்த மில்லாத சில பொருள்களுக்குக் காளிதாசர் போன்ற கவி வன்மையுடையவர்கள் ஏதாவது ஒருவகையில் பொருத்தங் கற்பித்துக் கூறியிருக்கின்றார்கள். சமயோசிதமாக அவர் கள் சொல்லியிருக்கின்ற சொற்களின் அழகையும் கற்பனை களின் திறத்தையும் கண்டு, பொது ஜனங்கள் அவர்களைக் கொண்டாடிப் புகழ்கின்றனரேயன்றி, அவர்கள் பொது ஜனங்களை ஏமாற்றமாக மயங்கும்படி செய்துவிடவில்லை. அதைப்போலவே இப்போது தாங்கள் கூறியபடி காளிதாசர் முதலியவர்கள் ஸ்திரீகளின்முகத்தைச் சந்திரனுக்கு ஒப்பிட் டுக் கூறியிருக்கின்றார்கள் என்பது உண்மையே. எப்பொ ழுதும் காளிதாசர்போன்ற கவிபாடும் திறமை வாய்ந்த கவிக ளுக்கு; எப்பொருள்களையும் தங்கள் கருத்திற்கேற்றவாறு, எவரும் ஒப்புக்கொள்ளவும், ஓழியாது கேட்டு மகிழவும் பாடிவிடுவது சர்வ சாதாரணமான காரியம். அத்தகை யோர் எதை எப்படிக் கற்பித்துப் பாடினாலும் அவர்க ளுடைய வாக்குவளத்தைக் கண்டு புகழாமல் யார்தான் இகழக்கூடும்? பெண்களின் முகத்தைக் காளிதாசர் முதலி யோர் சந்திரனுக்கு ஒப்பிட்டுக் கூறியிருப்பது, ஒரு

வகையில் பொருத்தமுடையதென்றே நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், சாதாரண அறிவோடு பார்க்கும்போது பெண்களின் முகத்திற்கும் சந்திரனுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை யென்றே கூறிவிடலாம்."

இரத்தினவேல்:—"அப்படியானால் உன்னுடைய முகத்தை நான் சந்திரனுடைய முகத்திற்கு ஒப்பிட்டது தவறு என்று கூறுகிறாயா?"

பச்சையம்மாள்:—"சிவ, சிவ! நான் தங்களுடைய வார்த்தையைத் தவறு என்று சொல்லுவதற்கு அவ்வளவு தைரியமுடையவளா? சந்திரனுக்கும் பெண்களின் முகத்திற்கும் கவிகள் சமம் கற்பித்திருக்கின்றனரே யன்றி, உண்மையில் யாதொரு சம்பந்தமு மில்லையென்றல்லவா கூறினேன்?"

இரத்தினவேல்:—"ரசாயன சாஸ்திரபண்டிதர் தாமோதரம் பிள்ளையும் நீ கூறியதுபோல்தான் ஒருதினம் என்னிடம் கூறினார். ஆனால், காளிதாசர் முதலிய மகாகவிகள் அப்படி கூறியிருக்கின்றார்களே!"

பச்சையம்மாள்:—"கவிகளின் வார்த்தைகள் ஆதாரமாகுமா! அவர்கள் உலகம் வேறு; மற்றவர்களுடைய உலகம் வேறு. கவிகள் பெரும்பாலும் தங்களுடைய பாட்டுகளில் கற்பனையும் அழகும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுகின்றார்கள். அவற்றோடு உண்மை உரைகளையும் எழுதியிருக்கின்றார்கள். ஆயினும் பெரும்பாலும் அவர்கள் உவமானமாகக்காட்டும் விஷயங்கள், படித்து மகிழ்வதற்கு உபயோகப்படுமேயன்றி, ஒரு விஷயத்திற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுவதற்குச் சரிப்படாது. வெற்றிலைக்கு விஷ்ணுவை

உவமானமாகக் கூறுகின்றார் காளமேகப்புலவர். அதனால், வெற்றிலைதான் விஷ்ணு என்றால் விஷ்ணுவை வணங்குவோர் ஒப்புக்கொள்ளுவார்களா ?"

இரத்தினவேல்:—"நீ சொல்லுவது உண்மைதான். கவிகள் மிகவும் திறமையுடையவர்கள்தான். அதிலும் காளிதாசர் மெத்த நிபுணர். ஏன், உண்மைதானே ?"

பச்சையம்மாள்:—"உண்மை யல்லாமலென்ன ? அவர் ஒரு சிறந்த கவியாக விளங்கியதோடு சாதுரியமாக எழுதுவதிலும் வல்லவர். நான் ஏதோ ஒரு புஸ்தகத்தில் படித்தேன். புஸ்தகத்தின் பெயர் நினைவுக்கு வரவில்லை."

இரத்தினவேல்:—"புஸ்தகத்தின் பெயர் போனாற் போகின்றது. விஷயமென்ன ?"

பச்சையம்மாள்:—"விஷயம் காளிதாசர் எழுதியது தான். அதைக் குறிப்பாக எடுத்து, அந்நூலிற் காட்டியிருக்கிறது. அதாவது—சுமார் அறுபது வயதுள்ள இலட்சாதிபதியாகிய கிழவன் ஒருவன், மேஜையின்மீது இருந்த ஒரு பெரிய நிலைக்கண்ணாடியின் எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்து அதில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். மூப்பால் முகம் சற்றுத்தளர்வுற்றுத் தோன்றிற்று. வெள்ளிக்கம்பிகள்போல் நரை மயிர் விளங்கிற்று. ஆனால் அவன் முகம் தங்கத் தகடுபோல் பிரகாசமாயிருந்தது. அவன் இருந்த இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் அவன் கண்ணுக்கு மறைவாக, அவனுடைய மூன்றாமனைவி, பதினாறு வயதுடைய அவன் இளம்மனைவி, உட்கார்ந்திருந்தாள். அவள் உட்கார்ந்து இருப்பதை அந்த வயோதிகன் பார்க்கமுடியாது. ஆனாலும் அவன், நிலைக்கண்ணாடியில்

தோன்றும் அவனுடைய முகத்தை அவள் பார்க்கக்கூடிய நிலையில் இருந்தாள். அதனால் கண்ணாடியில் தோன்றும் அவனுடைய கிழ உருவத்தைக்கண்ட அப்பெண், 'இந்தக் கிழவனுக்கு என்னை மனைவியாகும்படி கொஞ்சமேனும் யோசனையில்லாத என்னுடைய தாய்தந்தையர் செய்து விட்டார்களே!' என்று நினைந்து, நினைந்து மனம் வருந்தி கண்ணீர் விட்டு ஓசையின்றி விம்மி விம்மி அழலானாள். அதனால் அவளுடைய முகம் சிவந்துவிட்டது. அப்போதே தான் இருந்த இடத்தில் இருந்து அவளிடத்திற்கு வந்த அவளுடைய கிழக்கணவன் அவளைப்பார்த்து, 'ஏன் அழு கிறாய்? உனக்கு என்ன குறை' என்று பலவாறு கேட் டான். அவள் அவனைப் பார்ப்பதற்கும் இஷ்டமில்லாமல் கண்களை மூடிக்கொண்டு முன்போலவே துக்கித்தாள். கடைசியாக அவள் சொல்லாமலே, அவள் அழுவ தற்குக் காரணம் இன்னதென்று யூகித்து அறிந்து கொண்ட அவ்வயோதிகன் அவளைப்பார்த்து, 'கண்மணீ, என்னை வயோதிகன் என்று நினைத்தா இப்படி வருந்து கின்றாய்? நான் வயோதிகனல்ல. சந்திரனைப்போன்ற என் னுடைய முகத்தைச் சுற்றிலும் தண்கதிர்களன்றோ பிரகா சிக்கின்றன. அவைகளை நீ உன் அறியாமையால் நரை மயிர்களென்றெண்ணித் துக்கப்படுவது வீண் அல்லவா? இப்போதாவது நான் சொல்லியது உண்மையா, பொய்யா என்பதை அறிந்துகொள்ள, நீ தாமரை மலர்களைப்போன்ற உன்னுடைய கண்களைத்திறந்து சந்திரனைப்போன்ற என்னு டைய முக அழகைப்பார்,' என்று சாமர்த்தியமாகக் கூறி னன். அதற்கவளும் சாமர்த்தியமாகக் கண்களைத் திறவா மலே 'தாங்கள் கூறுகிறபடி தங்கள் முகம் சந்திரனாகவும்

என் கண்கள் தாமரையாகவும் இருந்தால் சந்திரனுக்கு முன்னால் தாமரை மலராமல் குவிந்திருப்பது இயற்கை தானே' என்று கூறினாள். பார்த்தீர்களா காளிதாசர் சாமர்த்தியம்!"

இரத்தினவேல் :—" ஆங்கிலத்திலும் மகாகவி ஷேக்ஸ்பியரும் இப்படிப் பட்டவர்தாம். ஆகையால்தான் இவரை ஷேக்ஸ்பியருக்குச் சமானமாகக் கூறுகின்றார்கள்?"

பச்சையம்மாள் :—" இருக்கலாம். நான் ஆங்கிலத்திலும், சமஸ்கிருதத்திலும் தேர்ந்த அனுபவசாலிகள் சொல்லக்கேட்ட அளவில் ஷேக்ஸ்பியரைவிட காளிதாசரே ஒருபடி உயர்வென்று நினைக்கின்றேன்."

இரத்தினவேல் :—" எப்படி ?"

பச்சையம்மாள் :—" ஆம், ஷேக்ஸ்பியரைவிடக் காளிதாசர் சற்று உயர்வுடையவராயிருந்தபடியால் தான் ஆங்கிலேயர் அவரை ஷேக்ஸ்பியரோடு சேர்த்துவிட்டார்கள். இல்லாவிட்டால் அவர்கள் தெய்வம்போல் கருதும் ஷேக்ஸ்பியரோடு அவரைச் சேர்த்துவிடுவார்களா ?"

இரத்தினவேல் :—" நீ கூறுவதுபோல் ஷேக்ஸ்பியரைப் பார்க்கிலும் கவித்திறத்தில் காளிதாசர் சிறந்தவரானால், அவர் ஷேக்ஸ்பியரினும் சிறந்தவர் என்று ஆங்கிலேயர்கள் கூறியிருக்க மாட்டார்களா."

பச்சையம்மாள் :—" அதெப்படி கூறுவார்கள்? அவர்கள் அப்படிக்கூறினால், நான் முன் குறித்தபடி அவர்கள் தெய்வம்போற் பாவிக்கும் ஷேக்ஸ்பியருக்குக் குறைவல்லவா. ஷேக்ஸ்பியரைப்பார்க்கிலும், உயர்ந்த கவிகள் யாரேனும் இருந்திருப்பின் அப்போது ஆங்கிலேயர்கள் காளிதாசரை

அவரோடு சேர்த்துவிட்டிருப்பார்கள். அப்படித்தான் இல்லையே! அதனால் அவர்கள், காளிதாசரும் ஷேக்ஸ்பியரும் சமம் என்று கொண்டார்கள்."

இரத்தினவேல் :—"ஷேக்ஸ்பியரை ஆங்கிலேயர்கள் தெய்வம்போல் பார்க்கிறார்கள் என்று கூறினாயல்லவா? அத்தகைய மகாகவியோடு காளிதாசரைச் சமமாக அவர்கள் கருதுகிறார்கள். உள்ளபடியே, காளிதாசர், ஷேக்ஸ்பியரினும் உயர்வுடையவரானாலும், அவர்கள் அதை மறுக்காமல் கூறியிருப்பார்கள். அப்படிக்கூற இஷ்டமில்லாதவர்களானால் அவர்கள் காளிதாசரை ஷேக்ஸ்பியரினும் குறைவாகக் கூறியிருப்பார்களல்லவா?"

பச்சையம்மாள் :—"அதெப்படி கூறமுடியும்? உண்மையிலேயே எல்லா விஷயங்களிலும் உயர்வுடைய ஒருவனை அறிவாளிகள் உயர்த்திக்கூற இஷ்டப்படாவிடினும் தாழ்வாகக்கூற முன் வரமாட்டார்கள் என்பது தாங்கள் அறிந்தது தானே!"

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, இரத்தினவேலுக்கு அங்கு இருந்த ஹார்மோனியத்தின்பேரில் பார்வை சென்றது. உடனே அவன், பச்சையம்மாளைப் பார்த்து, "கண்மணி, அந்தப் பேச்சுகள் அப்படியே நிற்கட்டும். இந்த ஹார்மோனியத்தில் சுதியுடன் ஏதாவது பாடு, கேட்போம். வெளியே போயிருக்கும் என் தாயாரும் தந்தையும் வருகிற நேரமாயிற்று" என்று கூறினான்.

"அதற்குப் பச்சையம்மாள், அவர்கள் வந்தால் என்ன என்னைப் பாடவேண்டாமென்று சொல்லமாட்டார்கள்" என்று புன்சிரிப்புடன் கூறிக்கொண்டே, தான் இருந்த

இடத்திலிருந்து எழுந்து மேஜையின்மேல் இருந்த ஹார்மோனியத்துக்குச் சமீபத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தன் குரலுக்கு ஏற்றவாறு ஹார்மோனியத்தில் சுதி கூட்டிக்கொண்டு

‘தந்தைதாய் தமர்தார மகவென்னும் இவையெலாம்
சந்தையிற்கூட்டம், இதிலோ
சந்தேகமில்லை மணி மாடமாளிகை மேடை
சதுரங்கசேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோர் இந்திரஜாலக்கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனையிலாத கனவே
எந்த நாளுஞ்சரி யெனத் தேர்ந்து தேர்ந்துமே
இரவுபகலில்லாவிடத்
தேகமாய் நின்றநின் அருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடறிய சத்தாகி யென்
சித்த மிசை குடிகொண்ட, அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே’

என்று தாயுமானுர் அருமைத் திருப்பாடலை மிக அழகுபடப் பாடினுள். சித்திரப்பாவைபோல் ஆடாதசையாது, அவள் பாடிய பாடலைக்கேட்ட இரத்தினவேல் ஆனந்தபரவசனுனுன்.

## 6-வது அத்தியாயம்.

### பலவித துன்பங்கள்.

உலகம் ஓய்வுற்று அமைதியுடன் இருப்பினும் உற்சாகத்துடன் ஏதாவது பல தொழில்களில் ஈடுபட்டிருப்பினும், இறைவன் இட்ட ஆணைப்படி காலமானது ஓயாதொழியாது ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. எவர் இறப்பினும் எவர் பிறப்பினும் இவ்வுலகத்திலுள்ள எவர் எப்படியானாலும், மாத்திரை விநாடியாய், விநாடி நிமிஷமாய், நிமிஷம் மணியாய், மணி நாளாய், நாள் வாரமாய், வாரம் பட்சமாய், பட்சம் மாதமாய், மாதம் வருஷமாய் மாறி, ஓட்டைப் பானையில் இட்ட நீர்போல், மனிதர்களுடைய ஆயுள்காலம் குறைந்துகொண்டே வருகிறது. காலத்தின் அருமையை அறிந்தோர் ஒவ்வொரு விநாடியையும் வீண்போக்காமல் நல்வழியில் செலவழித்து, தங்களுக்கும் உலகத்திற்கும் நன்மை விளைக்கிறார்கள். காலத்தின் அருமையை அறிந்தவர்களில் சோம்பேறிகளாயுள்ளவர்களும் ஏதுமறியாதவர்களும் காலத்தைத் தங்களுக்கும் பிறருக்கும் எந்தவகையிலும் பிரயோஜனமற்ற வழியிலேயே செலவழிக்கின்றனர். இத்தகையோர் ஒரு சமயத்தில் தாங்கள் வீணாக செலவழித்த காலத்தின் அருமையை அறிந்து வருந்தப்படுவார்களாயினும் அவர்களுக்காகச் சென்ற காலம் திரும்பிவருவதில்லையே. அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வருமா ?

முன் அத்தியாயத்தில் நடந்த விஷயங்களுக்குப் பிறகுள் இருபது வருடங்கள் எப்படியோ ஓடி மறைந்தன. இதற்

கிடையில் பச்சையம்மாளின் தங்கைமார் இருவருக்கும் தகுந்த இடத்தில் விவாகங்கள் நடைபெற்றன. அதற்கு அடுத்த இரண்டு வருடங்களுக்குள் பச்சையம்மாளின் தாய் தந்தையர் இருவரும் ஒருவர்பின் ஒருவராக, அப்போது சென்னைநகர் முழுவதும் சூறையாடிய வாந்திபேதியென்னும் கொடிய நோய்வாய்ப்பட்டு மடிந்தார்கள். அதனால் பச்சையம்மாளுக்கு உண்டான மனவருத்தம் இவ்வளவென்று சொல்வதற்கில்லை. பிறகு, ஆறுமாதத்திற்குள் வேணுகோபாலர், பச்சையம்மாளின் மாமனார், ஏதோ குடல் சம்பந்தமான வியாதியால் இவ்வுலகை நீத்தனர். அவர் பிரிவைச் சகியாது அதே மனோவியாதியுடன் அவர் இறந்த மூன்று மாதத்திற்குள் அவருடைய மனைவி, விசாலாட்சியம்மையும் இறந்தாள். ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்த இச்சம்பவங்களால் பச்சையம்மாளுக்கும் அவள் கணவன் இரத்தினவேலுக்கும் எத்தகைய துயரம் உண்டாயிருக்கக்கூடுமென்பதை இதை வாசிப்பவர்களே அறிந்துகொள்ளலாம்.

அதன்பிறகு துக்கத்தில் ஆழ்ந்துகிடக்கும் அவர்களுடைய மனம் சற்று தேறுதல் அடையவேண்டும் என்னும் கருத்துடனேயோ, அல்லது பின்னும் அவர்கள் மனம் புண்படவேண்டியோ பச்சையம்மாளுக்கு இரண்டு பெண் குழந்தைகளும் இரண்டு ஆண்குழந்தைகளும் பிறந்து சுகமாய் வளர்ந்தன. அவைகளின் முகத்தைப் பார்த்துப் பச்சையம்மாளும் அவள் கணவன் இரத்தினவேலும் தங்கள் துயரொழிந்து சற்று மனமகிழ்வுற்றிருந்தினர்.

உறவினர்களும் மற்றவர்களும் பச்சையம்மாளின் நற்குண நற்செயல்களில் ஈடுபட்டு அவளை எவ்வளவோ அருமை

பெருமையுடன் நேசித்துவந்தார்கள். சுருங்கக் கூறுமிடத்து, பச்சையம்மாள் எல்லோருக்கும் இனியவளாய் இருந்தாள், என்றே சொல்லவேண்டும். செல்வாருகும்போது பெரும்பாலும் தெய்வத்தை மறந்து விபரீதத்துறைகளில் இறங்குவதும் மனிதர்களின் இயல்பாய் இருந்துவருகின்றது. இவ்விதமான விபரீத வழக்கம் ஒரு சிறிதும் பச்சையம்மாளைப் பற்றாவண்ணம் அவள் மிகுந்த ஜாக்கிரதையுடன் நடந்து கொண்டாள். பாலைவனத்தில் நெடுந்தூரம் வழிநடந்து சுடும் வெயிலால் வாடி வதங்கி நாவறட்சியுற்று, நீர் தேடி அலையும் பிரயாணி ஒருவனுக்குக் குளிர்ந்த நீர் நிலையும், தங்கி இளைப்பாறுவதற்கு ஏற்ற குளிர் நிழலுடைய மரமும் கிடைத்தாற்போல மாமன் மாமி தாய்தந்தையர்கள் முதலானோரை இழந்து மனமுழைந்து வாடிய பச்சையம்மாள், தனக்கு இறைவன் நான்கு குழந்தைகளைக் கொடுத்துத் துக்கத்தை ஒருவாறு போக்கியதைக் குறித்து, அந்தத் தயாபரமூர்த்தியை அல்லும் பகலும் அன்புடன் நினைவில் இருத்தித் துதித்து வணங்கி வழிபட்டுவந்தாள். அப்போதெல்லாம் எக்காரணம்பற்றியோ அவள் மனதில் இன்பமும் துன்பமும் நிலையற்றது என்னும் எண்ணம் தோன்றிக்கொண்டே இருந்தது. அவ்வித எண்ணம் அடிக்கடி தன் மனதில் தோன்றுவதைக்கண்ட பச்சையம்மாள் ஆச்சரியப்படுவதும் உண்டு. நிற்க, ஜனப்பெருக்கம் உள்ள இடம் எதுவாயினும் சரியே அங்கு சற்றுச் சுகாதாரத்தில் கவனக்குறைவாயிருப்போமானால் நோய் பெருகிவிடும் என்பது எவரும் அறிந்த விஷயமாகும். நாகரிகம், நாகரிகம் என்று எல்லோரும் பேசும் விஷயம் சிறிது தலை தூக்கியிருக்கும் சென்னைமுதலிய இராஜதானிகளில் இப்போதும் சற்று ஒடுக்கமான இடங்களில்

மூலை முடுக்குகளில், குப்பை கூளங்கள் சேர்ந்து துர்க்கந்தத்தை உண்டாக்கிப் பலவித நோய்களுக்குக் காரணமாய் இருப்பதைக் காணலாம். இப்பொழுதே இந்த கதியானல், நாகரிகம் இன்னதென்றே பெரும்பாலார் அறியாதிருந்த அப்பொழுது; அதாவது பச்சையம்மாள் கணவனோடு வாழ்ந்த காலத்தில், சென்னப்பட்டணத்தில் நகர சுத்தி சங்கம் (முனிஸிபாலிடி) ஏற்பட்டிருந்தும் குறுகலான பல தெருக்கள் இருந்த கேவலத்தைச் சொல்லவும் வேண்டுமோ? வீதிகளின் இருபுறங்களிலும் வீடுகள் மிக நெருக்கமாகவும், நல்ல காற்று உள்ளே வர மார்க்க மில்லாமலும், பலவகையிலும் சுகாதாரத்திற்கு விரோதமாக விளங்கின. சுகாதாரம் என்றால் இன்னதென்று அறியாதவர்களே பெரும்பாலும் அவ்வீடுகளில் குடியிருந்தனர். சாக்கடைக்கால்களில் உள்ள சேறு முதலிய அழுக்குகள், ஒழுங்காகச் சுத்தம் செய்யப்படுவதே யில்லை.

நல்ல காற்றாவது சூரிய வெளிச்சமாவது வீட்டிற்குள் பிரவேசியாதபடியிருந்தால், காய்ச்சல், அம்மை, வாந்திபேதி முதலிய இன்னும் பயங்கரமான கொள்ளைநோய்கள் கொடும் சுழற் காற்றுபோல்தோன்றி மனிதர்களை வாட்டி வதைத்துப் பிராணனைப் போக்கக்கேட்பானேன்? இவ்வித நோய்கள் பல தோன்றி அப்போது ஆயிரக்கணக்கான மனிதருயிரைக் கொள்ளை கொண்டுபோயின. கணவரைவிட்டு இளமனைவியரும், இளமனைவியர் கண்ணீர் விட்டுக்கதறக் கணவர்களும், இளங்குழந்தைகளை விட்டு அநேகந் தாய்மார்களும், அருமையாகத் தங்களைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்களைவிட்டுச் சிறு குழந்தை

களும் இவ்விதமாகத் தங்கள் உயிருக்குயிரான ஒருவரை விட்டொருவர் பலவித நோய்வாய்ப்பட்டு மடிந்துகொண்டே இருந்தனர். அப்போது சென்னப்பட்டணம் முழுவதும் எங்கு பார்த்தாலும் பொலிவற்றிருந்தது. ஒரு விஷயத்தில் துன்பப்பட்டுத் தேறிய பிறகே, அத்தகைய துன்பம் பின்னும் தங்களைத் தொடராவண்ணம் தகுந்த ஏற்பாடுகள் செய்துகொள்ளுவது, இன்றளவு மனிதர்களுக்குப் பெரும்பாலும் வழக்கமாய் இருந்துவருகிறது. வெள்ளம் வருமுன் அணைகோலிக் கொள்ளவேண்டுமென்று நினைப்பவர்கள் எங்கோ ஆயிரத்திலொருவர் தானே! அதுபோலவே, மேற்குறித்த கொள்ளைநோய்கள் சண்டமாருதம்போல் தோன்றி ஒவ்வொருநாளும் நூற்றுக்கணக்கான உயிர்களைக் கொள்ளை கொண்டு போவதை அறிந்த நமது காருண்ய அரசாங்கத்தார், சற்றே கண் திறந்து நகர்சுத்தி சங்கம் ஒன்று ஏற்படுத்தி அதன் மூலமாகச் சுகாதாரத்திற்கு வேண்டியவைகளைச் செய்தால், கொள்ளைநோய்களின் வேகம் தணியுமென்பதை அறிந்து, அதற்காக வேண்டியவைகளைச் செய்யத் தொடங்கினார்கள். நாம் முற்கூறிய கொள்ளைநோய்கள் காட்டுத்தீப்போல் நகரமெங்கும் பரவி ஜனங்களை நடுங்கும்படி செய்துகொண்டிருந்தபோது, பச்சையம்மாளின் கணவனாகிய இரத்தினவேல் வீட்டிலும் அவைகள் நுழைந்தன. அப்போது பச்சையம்மாளின் ஐந்து வயதுள்ள பெண் குழந்தை ஒன்று விஷக்காய்ச்சல் கண்டு ஐந்தாறு நாட்கள் வரையில் வருந்தி பெற்றோர் மனம் அனலிடுமெழுகென உருக உயிர் நீத்தது. அதற்குமுன் அந்தக் குடும்பத்தில் அத்தகைய கொள்ளைநோய்கள் ஏற்பட்டதேயில்லை. 'பட்ட

காலிலே படும் ; கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழி ப்படி அந்தப் பெண் குழந்தை இறந்த ஒரு வாரத்திற்குள் ஆண் குழந்தையும் ஒன்று, அப்பெண் குழந்தையின் உயி ரைக்கொள்ளை கொண்ட அந்நோய் வாய்ப்பட்டு மடிந்தது. புண்ணிற் கோலிட்டாற்போல் பின்னும் தாய் தந்தையர் அன்று மனவேதனையுறுமாறு அந்த ஆண் குழந்தை இறந்த அன்று மாலையிலேயே மற்றொரு குழந்தையும் மடிந்தது. அப்பால் சிலமாதங்கள் வரையில் அக்குடும்பத்தில் யாதொரு வியாதியும் தலைகாட்டவேயில்லை. ஆயினுமென்ன ? இறந்து போன தம் மக்களை நினைத்து நினைத்து இரத்தினவேலும் பச்சையம்மாளும் பட்ட துன்பம் இத்தகைய தென்பதை ஏட்டில் எழுதிக்காட்ட முடியாதென்றே கூறலாம். ஆயி னும், கணவனும் மனைவியும் பக்தர்கள் ஆகையால், அவர்கள் உள்ளம் உருகி அழுத குரல்கேட்டுக் கடவுள் கருணை கூர்ந்து அவர்களுக்குப் பிச்சையிட்டதுபோல ஒரே குழந் தை பிழைத்திருந்தது. அதற்கொரு குறையும் வராது என்று ஆறித்தேறி இருந்தார்கள். ஆனால்,

" ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாதமுன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளும் ஈசன் செயல் "

என்றபடி அவர்கள் ஒன்று எண்ண, தெய்வம் ஒன்று எண் ணிற்று. பெருஞ்சுழற் காற்றால் தோப்பில் உள்ள மரங்க ளெல்லாம் நின்று நிர்வகிக்கமுடியாமல் தரையோடு தரை யாய்ச் சாய்ந்துபோக, ஒரே ஒரு மரம் மாத்திரம் கடுங்காற் றுக்கும் பெரு மழைக்கும் தப்பி நிற்பதுபோல், தங்கள் மூன்று குழந்தைகளும் கொடிய நோயால் மடிந்து போக,

பூங்காவனம் என்னும் பெயருடைய இப்பெண் மட்டும் எவ்வித நோய்களுக்கும் ஈடுகொடுத்துத் தப்பியதென்று பச்சையம்மாளும் அவளுடைய கணவனும் எண்ணி மகிழ்ந்திருந்தார்கள். ஆனால், சில மாதங்களில் அவர்களுடைய எண்ணம் புண்ணாயிற்று. மற்றக் குழந்தைகளுக்கு வந்ததுபோலவே சின்னஞ்சிறு குழந்தையாகிய பூங்காவனத்திற்கு வந்த நோய் முதலில் நிவர்த்தியாயிற்று. ஆனாலும் அது முற்றுங் குணமாகவில்லை. அக் குழந்தைக்கு வந்த சுரநோய் நாபியில் அடங்கியிருந்தது. சூதுள்ளவனையும் வியாதிகளையும் ஒருபோதும் நம்பலாகாது என்பது உண்மையேயன்றோ? சுரத்தின் மூலகாரணமான கிருமிகள் எலும்பில் பாய்ந்து, விஷம் உடலில் எங்கும் ஊறியிருந்தது. அதனால் பச்சையம்மாள் செய்த உபசாரபக்குவங்கள் ஒன்றும் பலிக்கவில்லை. அதிகம் கூறுவானேன்? பிறகு, சில தினங்களுக்குள் சிறு குழந்தையாகிய பூங்காவனமும், தன் தாய் தந்தையர் அனலின் மெழுகென உள்ளம் நைந்துருகத் தன்னுடைய மற்ற சகோதர சகோதரிகளைப்போலவே தானும் இவ்வுலகை நீத்தனள்.

பிறகு பச்சையம்மாள், இரத்தினவேல் ஆகிய இவர்களுடைய நிலைமையைப்பற்றிக் கேட்பானேன்? பச்சையம்மாளுக்கு இவ்வுலகப்பற்றே இல்லை என்னலாம். அவளுடைய துயரத்தைக்கண்டு வருந்தாதார் ஒருவருமில்லை. சில சமயங்களில் பச்சையம்மாள், பிள்ளைகளை நினைத்துக்கொண்டு 'பெற்ற தாயை மறந்து, அவளை வயிறு எரியச் செய்து மறைந்துபோனவர்களே'! என்று அலறியழுவாள். வாயில் அடித்துக்கொண்டு, மயங்கித்தரையில் விழுந்து கதறுவாள்.

கண்ணீர் அருவிபோல் பாய அழுவாள். தன் ஆவியைக் கொள்ளை கொள்ளவரும் எமனைக் கண்டு நடுங்குவது போல அவள் எதையோ நினைத்துக்கொண்டு ஏங்குவாள்.

தன் உயிருக்குயிரான பச்சையம்மாள், இவ்விதமெல்லாம் தேற்றினும் தேறாமல், ஆற்றினும் ஆறாமல் அழுவதைக் கண்ட இரத்தினவேலின் மனவருத்தத்தை அளவிட யாரால் ஆகும்? அவன் தன்னுடைய மனைவியின் துக்கத்தால் வாடிவதங்கினான். அதனால் அவனுடைய தேகம் நாளுக்கு நாள் மெலிந்து துரும்புபோலாயிற்று.

தன்னுடைய உயிரினுஞ் சிறந்த கணவன் துக்கப்பட்டு நாளுக்குநாள் உடல் மெலிவதைக்கண்ட பச்சையம்மாள் தன் துக்கத்தை மறந்து, திருவுளத்தின் செயல் எதுவோ அதுவே தனக்கு மோக்ஷபதவி யென்று மனந்தேறி, தன்னுடைய கணவன் துக்கமொழிந்து சுகப்படுமாறு பலவிதத்திலும் தன்னால் கூடியவரையில் அவனுக்குத் தேறுதல் கூறினாள்.

தன்மேல் பச்சையம்மாள் கொண்டிருக்கும்அன்பையும் அளவுகடந்த பக்தியையும் அவளுடைய உத்தம குணத்தையும் கண்டு இரத்தினவேல் மகிழ்ந்து முத்தி நெறியைநித்தம் நினைத்துப் பக்தி வைராக்கியனானான். தமது திருவருளை நாடித் தம்மைச் சார்வாரை அன்னையினும் மிக்க அன்புடன் அணைத்து அனுக்கிரகிக்கும் சர்வபரிபூரண கிருபாநிதியாகிய கடவுளின் பாத கமலத்தை அவன் மனத்தில் விடாது பற்றியிருந்தான். அதனால் அவனுடைய மனதிலிருந்த துன்பம் நாளுக்குநாள் ஒருவாறு குறையலாயிற்று. தம்மையே முற்றும்

நம்பிய அடியார்களைக் கடவுள் கைவிடார் என்பதை அறிந்த பச்சையம்மாளின் மனம் ஒரு சிறிது கவலை ஒழிந்து இருந்தது. அன்றியும் துன்பம் வந்தபோது தெய்வத்தை வெறுத்துக்கொள்ளும் மனிதசுபாவம் அவளுக்கு இல்லை. கடவுளால் நமக்குத் துன்பம் வருமாயின் அதை நாம் பொறுமையோடு சகித்துக்கொள்ள வேண்டுமே தவிர அதற்காக அவரை வெறுத்துக்கொள்ளுவது அறிவீனம். பிள்ளையின் சுகத்தைக் கருதி பெற்றதாய் அப்பிள்ளைக்கு மருந்தூட்டுவதேபோல்

'வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மீளாக் காதல் கொள்ளும் நோயாளன் போல்'

நம்முடைய நலத்தைக் கருதியே இறைவன் நமக்குத் துன்பத்தையும் தருதல்கூடும் என்பதை அல்லும் பகலும் எண்ணி எண்ணி பச்சையம்மாள் மன அமைதியுற்று நடந்தாள் இப்படி சில மாதங்கள் சென்றன.

அவள் கணவனாகிய இரத்தினவேல் எப்போதுமே அவ்வளவு தேகவலிமையுடையவன் அல்ல. ஆனால், அதுவரையில் நோயாளியென்று அவன் ஒரு நாளாவது படுக்கையில் படுத்தது கிடையாது. தன் மக்கள் அனைவரும் இறைவன் திருவடியை அடைந்தபின்னர் அவன் மனம் வாடிவருந்தியதால் தேக சுகம் கெட ஆரம்பித்தது. முக்கியமாய்த் தன் சுகத்தில் அதிக கவனம் பாராட்டுவதும், அற்பநோய்களுக்காக வருந்துவதும் அவனுடைய சுபாவ மல்ல. ஆனால் அத்தனைகாலமும் வியாதி, அவனுடைய தேகத்தில் குடிகொண்டு, பாட்டைசாரிகளின் பொருள்களைக் கொள்ளை கொள்ளத் திருடர்கள் மறைந்து சமயம் பார்த்திருப்பதுபோல், மீறிப்போகத்தக்க காரணம் உண்டாகு மளவும்

அடங்கி இருந்தது. அப்படி அந்த வியாதி இரத்தினவேலின் தேகத்தில் தங்கி சமயம் பார்த்துக்கொண்டிருந்ததைப் பற்றி பச்சையம்மாளுக்கும் இரத்தினவேலுக்கும் ஒன்றும் தெரியாது. இப்படியிருக்க, கண்ணின் கருவிழி போல் விரும்பி வளர்த்தெடுத்த அருமைக்குழந்தைகள் நான்கும் ஒன்றன்பின் ஒன்ருய் எதிர்பாராத விதமாய் இறந்ததால், உண்டான துக்கத்தை மறக்க இரத்தினவேலின் மனம் என்ன, கல்லா? மரமா? மண்ணு? சின்னஞ் சிறியவைகளான குழந்தைகளைக் கொள்ளை நோய்க்கு இரை கொடுத்ததை நினைந்து நினைந்து மறுபடியும் அவன் மனம் உருகி தேகம் மெலிந்ததனுல், ஒரு வளைக்குள் இருந்த விஷசர்ப்பம்போல அதுவரையில் அவன் தேகத்தில் அடங்கியிருந்த வியாதி சீறிச் சினந்து வெளிப்பட்டது. அந்தோ, பரிதாபம்! நாலாவது குழந்தையாகிய பூங்காவனம் இறந்த ஐந்தாறு மாதங்களுக்குள் இரத்தினவேலும் இறந்து நால்வரை ஐவராக்கினுன்.

ஆ, பச்சையம்மாளின் கதிதான் என்ன! ஈருடலும் ஒருயிருமாய் இருந்த அருமைக் கணவனை இழந்த பச்சையம்மாளின் நிலைமையை என்னவென்று கூறுவது! அவளைக் காண்போரெல்லாம் 'ஐயோ! இதென்னக் காலக்கொடுமை! யார்செய்த தவக்குறை? இவ்வுத்தமி எவருக்கும் தீங்கு செய்தவள் அல்லவே! எவர் பொருளுக்கும் ஆசைப்பட்டவளு மல்லவே! செல்வத்திற்குரியவளாய் இருந்ததனுல் மதி மயங்கிக் கடவுளைத் தொழாதிருந்தவளுமல்லவே! என்று நினைந்து வருந்தினுர்கள். மனிதர்கள் வருந்திப் பயன் என்ன? திருவுளத்தின் செயலுக்கு நிவர்த்தி யேது?

# 7-வது அத்தியாயம்.

## பரோபகார எண்ணம்.

தன்னுடைய கணவனை இழந்தது முதல்,

‘மயிரோடு சிறையிழந்த போகில்போல்,
வேலியோடு வரம்பிழந்த
பயிரேபோல், கரமிழந்த கரியேபோல்,
பொறியிழந்த பாவையேபோல்,
உயிரேபோய்ப் பரதவிக்கும் உடலே போல்
மத்தாலுள்ளுடைந்தலம்புந்
தயிரே போல், தளர்ந்தலைந்து’

சில காலம்வரையில் பச்சையம்மாள் கேவலம் நடைப்பிணம் போலிருந்தாள். அவள் மனம் தன்னலமொன்றிலும் பற்றுடையதாயில்லை. தன்னுடைய குடும்பத்தைப் பற்றிக் கவலை அவளுக்குப் பற்றறத் தீர்ந்தது. ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றெடுத்த மக்களை அதி சீக்கிரத்தில் இழந்த பச்சையம்மாள் உயிரோடிருந்த தன் கணவன் முகத்தைக் கண்டு மக்களின் பிரிவாலேற்பட்ட துக்கத்தை மறந்திருந்தாள். ஆனால் இறந்த மக்களோடு தன் கணவனையும் பறி கொடுத்தபின்னர், அவள் எப்படி மன அமைதியுடன் இருக்கமுடியும்? ஆயினும் அப்போது கூட அவள் எல்லாம் வல்ல இறைவனிடத்தில் கொண்டிருந்த பக்தி நெறியைக் கைவிட்டவளல்ல. அவள் ஒவ்வொருநாளும் இறைவனை நோக்கி, ‘என்னை ஆட் கொண்

டருள்புரியும் இறைவனே! உமது திருவடிகளை எந்நாளும் மறவாதிருக்க, அடியாளுக்கு நற்புத்திப் புகட்டி என் அஞ் ஞானத்தைப் போக்கிக் கடாட்சித்தருளவேண்டும். ஏழை யாகிய என்னுடைய எண்ணப்படியன்று, தேவரீருடைய சித்தப்படியே யான் வாழக்கடவேன்' என்று பிரார்த்தித்து வந்தாள். இறைவனுடைய திருவடியை அடைந்த தன் மக்களோடும், தன் கணவனோடும், தானும் தன் ஜன்மம் முடிவுபெற்றவுடன் போய்ச்சேருவதற்காக, இப்பூவுலகில் இருக்குமளவும் கடவுளை வந்தித்து வாழ்த்தி வழிபடத் தனக்குப் பக்தியும் பொறுமையும் மனவுறுதியும் தரவேண்டு மென்று பச்சையம்மாள் இடையறாது இறைவனை ஆரா தித்துவந்தாள். அவப்பொழுதிலும் தவப்பொழுதே மேல் என்பதை அவள் அனுபவத்திற் கண்டாள். தெய்வமும் அவள் பங்கில் இருந்து அவளுடைய பிரார்த்தனைக்குச் செவிகொடுத்ததாக அவள் எண்ணியிருந்தாள். அடியாருக் கெளியராகும் கடவுள் அவளுக்குப் பிரத்தியட்சமாகி, 'உத்தமியே உன் பக்திக்குச் சந்தோஷப்பட்டோம்; நீ விரும்பிய வரம் தந்தோம். துக்கத்தை விட்டுச் சுகமாயிரு'. என்று உரைத்ததுபோல் அவள் கருதினாள். அவளைப்போல் தெய்வத்தை அவ்வளவு அன்புடன் நேசித்தவர்களை, இக் காலத்தில் காண்பதரிது.

குடும்பத்தில் மனதை வருத்தும் துன்பங்கள் பல அடுத்தடுத்து வந்தும், பச்சையம்மாள் சித்தம் சலித்துத் தெய்வத்தை நோகாமல், இன்பமும் துன்பமும் இமை கொட்டுமுன் மாறி மாறி இம்மானிடர்களுக் கெய்துவது இயல்பே என்று நினைந்து, தெய்வபக்தியை விலைமதிப்பிலா அரிய பூஷணமாகப் போற்றிக் கடவுளை நோக்கி,

‘வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே’

என்று மனம் உருகி நிற்பதைக் கண்டு கேட்டறிந்தவர்களில் யார்தாம் மனம் உருகாதவர்கள்? அவளுடைய சுக துக்கங்களைத் தங்களுடைய சுகதுக்கங்கள்போல எண்ணி, தங்களால் கூடியவரையில் யார்தாம் அவளுக்கு உதவி செய்ய முன் வராமலிருப்பார்கள்?

ஒவ்வொரு சமயங்களில் பச்சையம்மாளுக்குத் தன்னுடைய குடும்பத்தில் நேரிட்ட எதிர் பாராத துன்பங்கள் நினைவில் வருவதுண்டு. அப்போதெல்லாம் அவள் மனம் நெருப்பிலிட்ட நெய்யென உருகுமாயினும் தன் அறிவால் மனதைச் சிதறவிடாமல் தடுத்து, வர வர, அவள் ஒருவாறு துயர் ஒழிந்து மனந் தேறினாள். எந்த வரத்தையும் ஒருவர் விரும்பியவண்ணம் கொடுத்தருளிய கடவுளுக்குத் திரும்பவும் மாற்ற சக்தியுண்டு. அதற்கு நாம் என்ன செய்வது? ‘கடவுள் சித்தம், நமது பாக்கியம்’ என்று மனமார வாயார நினைக்கவும் சொல்லவும் பழகியிருந்த அவள், மன அமைதியுற்றுத் தன் சரீரம் உள்ளவரையில் ஏதேனும் ஒரு பரோபகாரமான வழியில் நின்று உழைக்க வேண்டுமென்று எண்ணியிருந்தாள்.

இரத்தினவேல் இறந்த பத்தாவது மாதம் ஒரு நாட் காலையில், பச்சையம்மாள், பூசை முடித்துக்கொண்டு, பூசா விக்கிரகத்தின் எதிரில் உட்கார்ந்து, திருவாசகத்தில் சில பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தாள்.

அப்போது சுமார் எழுபது வயதுடைய கிழவி ஒருத்தி ஓசைப்படாமல் அங்குவந்து பச்சையம்மாள் பக்தியையும் அவளுக்கு நேர்ந்த விதியையும் நினைந்து முறையே இன்பமும் துன்பமும் ஒருங்கேகொண்டு, நின்றவிடத்திலேயே அசைவற்று நின்றாள். அவள் வந்து நிற்பதை பச்சையம்மாள் கவனிக்கவில்லை. அவள் தெய்வ பக்தியில் ஆழ்ந்த கருத்துடையவள். சிலரைப்போலப் பச்சையம்மாள்,

'கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்கப்.'

பூசை செய்பவளல்லள். ஆகையால் கிழவி ஒருத்தி வந்து தனக்குப் பின்னால் நின்றுகொண்டிருப்பதை அவள் அறியாதது ஆச்சரிய மல்லவே! வந்து நிற்கும் வயோதிக கமலாக்ஷியம்மாள் என்பது அங்குள்ளார் சிலர்க்குத் தெரியும். ஆதியில் சென்னைக்கடற்கரையில், இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னே நமது வாசகர்களே அவளை அறிந்திருக்கின்றார்கள். அன்று இருந்தது போலவே இன்றும் கமலாக்ஷியம்மாள் தீர்க்க சுமங்கலியாய் விளங்கி யிருக்கிறாள். ஆனால் கருநாகப்பழம் போல் இருந்த அவளுடைய தலைமயிர் சற்றேறக்குறைய வெண்ணாகப்பழம்போல் வெளுத்திருந்தது. தங்கத் தகடுபோல் இருந்த முகப்பொலிவும் சற்று மாறியேயிருந்தது. தேகம் தளர்ந்துவிட்டது. ஆனால் அவளுடைய பார்வையில் கருணை நிரம்பி முகத்திற்கே ஒரு புதுக்களையைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

பத்து நிமிஷங்களுக்கதிகமாகவே கமலாக்ஷியம்மாள் நின்று கொண்டிருந்தாள். பச்சையம்மாளோ, தான் இருந்த நிலையிலேயே அசைவற்று இருந்தாள். அதற்குமேலும் நிற்க

மூடியாமல் கமலாக்ஷியம்மாள் அங்கிருந்த ஒரு பாயின்மேல் உட்கார்ந்து, பச்சையம்மாள் பத்திரசம் நிரம்பப் பாடிக் கொண்டிருப்பதைக் கவனித்துக்கொண்டிருந்தாள். இயற்கை யிலேயே மிகுந்த புத்திசாலியும் தெய்வ பக்தியும் உடைய கமலாக்ஷியம்மாளின் மனதைப் பச்சையம்மாளின் வாக்கு வளமானது, இரும்பைக்கண்ட காந்தம்போல் கவர, கம லாக்ஷியம்மாளும் தன்னை மறந்தாள்.

பிறகு அரைமணிநேரம் பாடிக்கொண்டிருந்த பச்சை யம்மாள், திருவாசகத்தை விட்டுக் கைகளைக் கட்டிக் கொண்டு, கண்கள் மூடியவண்ணமாயிருக்க

"என் செயலாலாவதி யாதொன்று மில்லை; இனித்தெய்வமே,
உன் செயலேயென்றுணரப்பெற்றேன்; இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினையாதொன்றும் இல்லை; பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ, இங்ஙனே வந்து மூண்டதுவே?"

என்று பாடினாள். அப்போது அவளையறியாமலே அவளு டைய கண்களிலிருந்து இரண்டொரு நீர்த்துளிகள் சொட் டின.

அதுவரையில் தடைக்கஞ்சிய சர்ப்பம்போல் மௌன முற்றிருந்த கமலாக்ஷியம்மை, பச்சையம்மாள் கூறிய இந்தப்பாட்டில் உள்ள 'ஊனெடுத்தபின் செய்த தீவினையா தொன்றும் இல்லை' என்னும் வார்த்தைகளைக் கேட்டவுடன் தன்னையும் மறந்தவளாய், முற்றுந்துறந்தப் பட்டினத் தடிகள் கூறியது அது என்பது அறிந்தும், நினைவொழி ந்தவளாய் தான் இருந்த இடத்திலிருந்தபடியே துக்கத்தால் கண்ணீர் வடிய; பச்சையம்மாளை நோக்கி, "அம்மா, நீ ஊனெடுத்தபின் செய்த தீவினை யாதொன்றுமில்லை என்பது உன்னைப் படைத்த கடவுளுக்கே தெரியுமே! உன்னைப்

பேர்ல் புண்ணியவதி யார் உண்டு? தெய்வம் உன் விஷயத்தில் சிறிதும் கருணை காட்டாததற்குக் காரணம் இப்பிறப்பில் நீ செய்தது ஒன்றுமில்லையே!" என்று கூறினாள்.

என் செயலாவதி யாதொன்றுமில்லை என்னும் பாட்டையே கடைசிப் பாட்டாகப் பாடிமுடித்து எழுந்திருக்க வெண்ணிய பச்சையம்மாள், கமலாட்சியம்மை கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன், திடுக்கிட்டுத் திரும்பிப் பாயின் மேல் உட்கார்ந்திருக்கும் அவளைக் கண்டாள். அவள் எப்போதும் கமலாக்ஷியம்மாளை மாமி என்றே முறைகொண்டழைப்பது வழக்கம். அவ்வழக்கப்படியே அப்போதும் அவள் கமலாக்ஷியம்மையைப் பார்த்து "வந்தீர்களா மாமி, உங்களிடம் சில வார்த்தைகள் பேசவேண்டும். அதற்காகத்தான் இத்தனை காலையில் தங்களை வரவழைக்க ஆளனுப்பினேன். சில காரணங்களால் நான் தங்கள் வீட்டிற்கு வரமுடியவில்லை. தள்ளாத தாங்கள் இங்கு வரும்படி நான் கொடுத்த சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும்" என்றுகூறிக் கொண்டே தான் இருந்த இடத்தில் இருந்து எழுந்து சென்று, கமலாக்ஷியம்மாளை வேண்டிய உபசாரத்துடன் அழைத்துக்கொண்டுபோய்க் கூடத்தில் இருந்த ஒரு சோபாவின்மேல் உட்காருவித்து, அவளை நோக்கி "மாமி, தாங்கள் இன்னும் ஒன்றும் ஆகாரம் சாப்பிடவில்லை போலிருக்கின்றதே? கோயிலுக்கு அபிஷேகத்திற்கு அனுப்பியதுபோகக் கொஞ்சம் பால் மிஞ்சியிருந்தது. அதைத் தங்களுக்கென்று காய்ச்சிவைத்தேன். அதைக் கொண்டுவருகிறேன்" என்று கூறினாள்.

அதைக்கேட்ட கமலாக்ஷியம்மை, "இல்லையம்மா அவ்வளவு ஏன் சிரமம் எடுத்துக்கொண்டாய்? பாவம்! நீ

அழைத்தாயேயென்று புறப்பட்டு வந்தேன். இந்நேரம் வேலைக்காரி காப்பி போட்டு என்வருகைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். நீ என்னிடம் பேசவேண்டியது என்ன" என்று கேட்டாள்.

அந்த வார்த்தையைக் கேட்ட பச்சையம்மாள், சற்றுப் புன்சிரிப்புடன், "இல்லை மாமி! நீங்கள் அவ்வளவு சீக்கிரமாய்ப் போய்விடமுடியாது. என்மேல் தயைசெய்து சற்று நேரம் இருங்கள். இதோ, வந்து விடுகிறேன்" என்று கூறி, தானே சமையல் அறைக்குப்போய், வற்றக் காய்ச்சிய பாலை எடுத்து, அதிற் கொஞ்சம் கற்கண்டுபொடியைத் தூவி வெள்ளிப் பாத்திர மொன்றில் வார்த்துக்கொண்டு வந்து கமலாக்ஷியம்மாளுக்குக் கொடுத்துப் பருகும்படி உபசரித்தாள். பாலைக் கையில் வாங்கிக்கொண்டு கமலாக்ஷியம்மாள் பச்சையம்மாளைப் பார்த்து, "ஏன் அம்மா, நீ யொன்றும் ஆகாரம் சாப்பிடவில்லையோ?" என்று கேட்டாள்.

அதற்குப் பச்சையம்மாள், தரையில் கமலாக்ஷியம்மைக்கு எதிரேயிருந்த பாயின்மீது உட்கார்ந்துகொண்டு, அவ்வம்மையை நோக்கி, "இல்லை மாமி, நான் பிறகு சாப்பிடுகிறேன். நீங்கள் சாப்பிடுங்கள், பாவம்! உங்களுக்கு நேரமாகிறது" என்று கூறினாள்.

கமலாக்ஷியம்மாள் :—"என்ன அம்மா! மணி எட்டாகின்றது. இன்னும் எப்போது ஆகாரம் சாப்பிடப் போகின்றாய்?"

பச்சையம்மாள் :—"எனக்கென்ன? தாங்கள் வயது சென்று தேகம் தளர்ந்தவர்கள். தாங்கள்தான் சாக்கிரதையாகத் தேகத்தைக் கவனித்துக்கொள்ளவேண்டும்."

கமலாக்ஷியம்மாள் :—(சிரித்துக்கொண்டு) "நான் வயதானவள் என்பது உண்மையே! ஆனாலும் நீயும் உனக்கேற்பட்ட துக்கத்தாலும் துயரத்தாலும் தேகம் மெலிவுற்றுத்தானே காணப்படுகிறாய்? ஆகையால், நீ மட்டும் ஒன்றும் சாப்பிடாமல் இருக்க நான் மட்டும் என் பாட்டைப் பார்த்துக்கொள்ளுவது சரியல்லவே!"

பச்சையம்மாள் :—"இல்லை மாமி, நீங்கள் சாப்பிடுங்கள். நான சாப்பிடுவதாயிருந்தால் சாப்பிடமாட்டேனா?"

கமலாக்ஷியம்மாள் :—"ஏன், சாப்பிடுவதற்கு என்ன தடை? நீயும் என்னோடு ஏதாவது சாப்பிட வேண்டும்; இல்லாவிடில் சாப்பிடாததற்குத் தகுந்த காரணம் ஏதேனும் இருந்தால் சொல்லவேண்டும். இல்லை, நான் இந்தப் பாலைச் சாப்பிடமாட்டேன்."

பச்சையம்மாள் :—"மாமி, நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. நான் சாப்பிடுவதாயிருந்தால் சாப்பிடமாட்டேனா?"

கமலாக்ஷியம்மாள் :—"சாப்பிடமாட்டேனா என்றால், சாப்பிடுவதற்குத் தடையென்ன, அம்மா?"

பச்சையம்மாள் :—(சற்றுத் தலை குனிந்தவண்ணமாக) "அவர் இறந்த நாள் முதல் பகல் ஒருவேளை மட்டுந்தான் சாப்பிடுவது வழக்கம். காலையில் ஒன்றும் சாப்பிடுவதில்லை. இரவில் எப்போதாவது அதிக களையாயிருந்தால் கொஞ்சம் பால் சாப்பிடுவேன். இல்லாவிட்டால் அதுவும் இல்லை. இதுதான் இப்போது நான் ஒன்றும் சாப்பிடாமலிருப்பதற்குக் காரணம்."

கமலாக்ஷியம்மாள் :—"ஓ, அதுதான் உன்னுடைய தேகம் இப்படி இளைத்துப்போயிருப்பதற்கு ஒரு பெருங்

காரணமாயிருக்கலாம்! இதுவரையில் நான் இங்கு எத்தனையோ முறைவந்து இருக்கிறேன். என்னிடம் இதைப்பற்றி ஒன்றும் உரைக்கவில்லையே!"

பச்சையம்மாள் :—"இது, அப்படி ஒன்றும் சொல்ல வேண்டிய விஷயம் அல்லவே, மாமி! இதையெல்லாம் பெருமையாகக் கூறிக்கொள்ளுவது கேவலமாயிற்றே! உங்களுக்குத் தெரியாத விஷயமா? கையில் இருக்கின்ற பால் ஆறிவிடும் சாப்பிடுங்கள்."

கமலாக்ஷியம்மாள் :—"உன்னைப்போல ஒரு உத்தம ஸ்திரீயை நான் கண்டதில்லையம்மா!" என்று கூறிக்கொண்டே, தன் கையில் இருந்த பாலைப்பருகிவிட்டுப் பாத்திரத்தைத் தரையில் ஒரு புறமாக வைத்து விட்டு மறுபடியும் பச்சையம்மாளைப் பார்த்து, "எப்படியாவது, உயிருடன் இருக்கும் வரையில் தேகத்தைக் கொஞ்சம் ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள்ளுவது நலம்."

பச்சையம்மாள் :—"நாம் கவனித்துக்கொள்ளுமளவும் தான் கவனித்துக்கொள்ளலாம். அதற்குமேல் நம்மால் என்ன ஆகும்?"

கமலாக்ஷியம்மாள் :—"பச்சையம்மா, என்னை இவ்வளவு காலையில் அழைத்த விஷயம் என்ன? என்னால் ஆக வேண்டிய காரியம் என்ன? ஏதேனும் இருந்தால் சொல்லம்மா. என்னால் ஆனதைச் செய்யத் தடையில்லை."

பச்சையம்மாள் :—"அதிக தொந்தரைக் கிடமான வேலை ஒன்றும் சொல்வதற்கில்லை, மாமி! என் மனதில் சென்ற ஒரு வாரமாக ஓர் எண்ணம் தோன்றியிருக்கிறது. அதைத் தங்களிடம் சொல்லி, தங்கள் அபிப்பிராயம் இன்ன

தென்று அறிந்துகொள்ளவேண்டு மென்பது என்னுடைய எண்ணம். அதற்காகத்தான் தங்களை வரவழைத்தேன்.''

கமலாக்ஷியம்மாள்:—"அதென்னம்மா, விஷயம்? என்னவோ, சொன்னால் எனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ, அதைச் சொல்லுகிறேன்.''

பச்சையம்மாள்:—"உங்களுக்குச் சரியானதென்று தோன்றும் விஷயம் எனக்கும் சம்மதமே. உங்களுக்குப் போதுமான உலகஞானம் உண்டென்பது என்னுடைய கருத்து. ஆகையால்தான் நான் தங்களைக் கேட்க எண்ணினேன்.''

கமலாக்ஷியம்மாள்:—"ஆஹா! அப்படியே கேள், அம்மா.''

பச்சையம்மாள்:—"இப்போது எனக்குச் சொந்தமான என் கணவர் சொத்துகள், சுமார் பத்திலட்ச ரூபா மதிப்புடையதாயிருக்கும் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாமே?''

கமலாக்ஷியம்மாள்:—"அதென்ன பச்சையம்மா, அப்படிச் சொல்லுகிறாயே? உங்கள் வீட்டு விஷயங்களில் எனக்குத் தெரியாதது ஒன்றிருக்கிறதா, என்ன? உங்களுக்குச் சொந்தமான ஆஸ்திகளைத் திருடனிடம் ஒப்புவித்தாலும் அது எப்படிப்பட்டதென்று கேளாமலே பத்திலட்ச ரூபா வருமென்பது இவ்வூரிலுள்ள சாதாரணமான மனிதர்களுக்குந் தெரிந்த விஷயந்தானே!''

பச்சையம்மாள்:—"ஆம், அம்மா! அந்தத் தொகையை ஏதாவது நல்வழியில் செலவிடலாமென்பது என் கருத்து. என் வாழ்நாள் வரையில் நான், என் சீவனத்துக்காக ஒரு பதினாயிரம் ரூபாவையும், தம்புச்செட்டித்தெருவில் உள்ள

அந்த ஒரு சிறு வீட்டையும் வைத்துக்கொள்ளலா மென்பது என்னுடைய எண்ணம். தொகையை ஏதாவது ஒரு பாங்கியில் போட்டுவைத்தாலும் ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு ஐம்பது ரூபா வரக்கூடும். அதுகூட என் செலவுக்கு அதிகமென்றே நினைக்கிறேன்.”

கமலாக்ஷியம்மாள்:—(சற்றுநேரம் ஆலோசனை செய்துவிட்டு) “நல்லதம்மா! உன்னுடைய ஆலோசனையிற் குறை சொல்லுவதற்கு வகை ஒன்றுமில்லை. நான் கூட இதற்கு முன் பல முறைகளிலுமே அப்படி நினைத்தது உண்டு. ஆனால், அப்போதெல்லாம் அதை உன்னிடம் எப்படிச் சொல்லுகிறதென்றே நினைத்தேன். அது போகட்டும். பச்சையம்மா, நீ உன்னுடைய தொகையைக் கொண்டு கோயில் கட்டப் போகிறாயா? அல்லது என்ன செய்யப்போகிறாய்?”

பச்சையம்மாள்:—“இல்லை மாமி! கோயில்கள் கட்டுவிப்பதும் குளங்கள் வெட்டுவிப்பதும் என்னுடைய எண்ணம் அல்ல; இப்போதிருக்கும் கோயில்களே அதிகமென்பது என்னுடைய அபிப்பிராயம். வேறு பொது ஜனோபகாரமான பலவிஷயங்களில் மிகவும் முக்கியமான வைத்தியம், கல்வி, அன்னம் ஆகிய இம்மூன்று சிறந்த தானங்களில், முன்னையவாகிய வைத்தியம், கல்வி ஆகிய இரண்டு தானங்களையும் செய்யவே உத்தேசித்திருக்கிறேன்.”

கமலாக்ஷியம்மாள்:—“உன்னுடைய அபிப்பிராயம் பாடசாலை ஏற்படுத்துவதுதான் போலிருக்கிறது!”

பச்சையம்மாள்.—“பாடசாலைமட்டும் ஏற்படுத்தவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம் அல்ல, மாமி! அப்படி ஏற்படுத்தும் பாடசாலையும் ஆண்பிள்ளைகளுக்கன்று.

ஏழைப் பெண்பிள்ளைகளுக்கு மட்டும் ஏற்படுத்த வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும். அதோடு கொஞ்சமும் ஆதரவற்ற பெண்பிள்ளைகளுக்குப் பாடசாலையிலேயே ஆகாரம் முதலிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்பதும் என்னுடைய கருத்தாகும்.”

கமலாக்ஷியம்மாள்:—(சற்று புன்சிரிப்புடன்) “ஏன் பச்சையம்மா! பெண்பிள்ளைகள் மட்டுந்தானா புண்ணியம் செய்தார்கள்? ஆண்பிள்ளைகள் என்ன பாவம் செய்தார்கள்? அல்லது ஆண்பிள்ளைகளெல்லோரும் நூற்றுக்கு நூறுவீதம் கல்வி கற்றுத் தேறியிருக்கின்றார்கள் என்பது உன்னுடைய அபிப்பிராயமா? பச்சையம்மா, நான் சொல்லுவதைக் கேள்: நமது நாட்டில் நன்றாகக் கல்வி கற்றுத் தேறிய ஆண்மக்கள் நூற்றுக்கு இருபது பேர்கள் இல்லையே, அம்மா! அவர்கள் விஷயத்திலும் நீ உன்னாலான உதவியைச் செய்தாயானால் நலமாய் இருக்குமே!”

பச்சையம்மாள்:—“அப்படியல்ல, மாமி! நான் சொல்லுகிறேன் என்று நீங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. நமது நாட்டில் நன்றாய்ப்படித்த ஆண்பிள்ளைகள் நூற்றுக்கு இருபதுபேர்கூடத் தேறமாட்டார்கள் என்று சொல்லுவது உண்மையே. ஆனாலும், நமது நாட்டுப் பெண்களின் நிலைமையைப் பார்க்கும்போது எனக்கு எவ்வளவோ பரிதாபமாயிருக்கிறது. ஆண்பிள்ளைகளைப் பார்க்கிலும் கல்வியிலும் அறிவிலும் அவர்கள் எவ்வளவோ குறைவாக இருக்கின்றனர். அவர்களுடைய தற்கால நிலைமையைக் கூறவேண்டுமானால், அவர்கள் இன்னதென்றே எதையும் அறிந்து கொள்ளமுடியாத அந்தகாரத்தில் அழுந்திக் கிடக்கிறார்களென்றே கூறலாம். ஆகையால், அவர்களுடைய நிலைமையை

உயர்த்தி அவர்களை ஆண்பிள்ளைகளுக்குச் சமமான அந்தஸ்தில் கொண்டுவர வேண்டுமென்பதே என் கருத்தாகும். அப்படி நான் செய்வதால் ஒரு வகையில் ஆண்மக்களுக்கும் உதவிசெய்தவளாகின்றேன். எப்படியெனில், பெண்கள் படித்து உண்மை அறிவுடையவர்களானால் அவர்களோடு சேர்ந்துவாழும் ஆண்மக்களுக்கு நன்மையுண்டாகுமென்பதி னாலேயேயாம். நீங்கள் சொல்லுகிறபடி ஆண்பிள்ளைகளின் கல்வியை அபிவிருத்தி செய்ய எத்தனையோ தனவந்தர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஏன் அவ்வகையில் முயற்சி செய்யக்கூடாது? அவர்களெல்லாம் பெரும்பாலும் தங்கள் சுய நல முயற்சியைத்தானே பெரிதெனக் கருதிக்கொண் டிருக்கிறார்கள்! ஒன்று பாருங்கள், மாமி! நான் என்ன மட மடவென்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டே னென்று தாங்கள் எண்ணக்கூடாது. நம்முடைய நாட்டில் கோடிக் கணக்கான தொகை செலவிட்டு எத்தனையோ பழங் கோவில்களைப் புதுப்பித்தும் புதிய கோவில்களைக் கட்டியும் சிலர் கைங்கரியம் செய்கிறார்கள். இவைகளுக்கு ஆகும் செலவைக் கணக்கிடமுடியாது. இதனால் கோயில்களைப் புதுக்குவது கூடாதென்பது என்னுடைய அபிப்பிராயமல்ல. பசித்தீர ஆகாரமும், ஆகாரம் வைக்க போஜனபாத்திரமும் வாங்கவேண்டியது அவசியமே யாயினும், ஆகாரம் வாங்க வகை யில்லாதபோது போஜனபாத்திரம் வாங்குவதினால் பயன் என்ன? அதைப்போலவே தெய்வத்தை உண்மையில் வணங்கப் போதுமான அறிவு பொதுஜனங்கள் பெரும்பாலருக்கு இல்லாதபோது, மென்மேலும் ஏராளமான செலவில் பலகோவில்களை வீண்பெயருக்கு டம்பாகாரமாக கட்டிக் கொண்டு போவதால் பிரயோஜனமென்ன? இதுதான் என்

கேள்வி. நான் சொல்லுவதில் ஏதேனும் குறையிருந்தால் சொல்லுங்கள் மாமி! கோடிக்கணக்கான தொகையைக் கொட்டிக் கோயில் கட்டுவோர், அத்தொகையில் அரைப் பங்கையேனும் நம்நாட்டு மக்களின் கல்வி விஷயத்தில் செல விடுவார்களானால், நம் நாடு எவ்வளவோ மேன்மை அடை யக்கூடும். எத்தனையோ செல்வர்கள் தங்கள் பணத்தைத் தாறுமாறாகச் செலவு செய்துகொண்டும், அல்லது அதை ஒருவித நன்னோக்கமும் இல்லாமல் பூட்டிவைத்துக் காத்துக் கொண்டும் இருக்கின்றார்களே! அவர்கள் வேண்டுமென்று மனது வைத்தால் நமது இராஜதானியில் உள்ள ஒவ்வொரு தாலுக்காக்களிலும், ஒவ்வொரு உயர்தரக்கலாசாலையும் பல சாதாரண எலிமெண்டரிப் பாடசாலைகளும் கவர்ன்மெண் டாரின் உதவியை அவ்வளவு அதிகமாக எதிர்பாராமலே ஒரேவருடத்தில் ஏற்படுத்திவிடலாமே! அப்படி நடந்து விடுமானால், பிறகு சிலவருடங்களில் நம்முடையதேசம் கல்வி வளர்ச்சியில் ஏனைய நாடுகளினும் ஏற்றமாய்விடும் என்பதில் ஐயமில்லை. ஆனால் நம்நாட்டுச் செல்வர் பெரும்பாலாருக்கு அத்தகைய பரோபகார எண்ணம் எந்தக்காலத்தில் வருமோ அதைக் கடவுளே அறிவர்! பெருந்தனவந்தர்கள்எல்லோரும் பரோபகார குணத்துடன் கல்வி, கைத்தொழில் முதலிய விஷயங்களில் ஒரு மனதுடன் உழைக்க எப்போது ஒன்று பட்டுவருகின்றார்களோ அப்போதுதான் நம் மக்கள் நல மடைந்து நாகரிகம் பெறுவர். இன்றேல், உண்மை நாகரிகம் என்பது எப்போதும் இன்னதென்றே நம்மனோருக்குத் தெரியாமல் போயினும் போய்விடலாம். என்னவோ மாமி! எதையோ ஆரம்பித்து எதை எதையோ கூறிவிட்டேன்! ஆனால் இவ்விஷயமாக இன்னும் ஒன்றுமட்டும் கூறிவிடுகி

றேன்: ஆண்மக்களின் கல்வி விஷயத்தில் ஆண்மக்களே சிரத்தையெடுத்துக்கொள்ளட்டும். என்னுடைய சொத்துக்களில் பாதியை நான் பெண் கல்விக்காகவும், மீதியை இலவச வைத்தியசாலைக்காகவும் செலவழிக்க உத்தேசிக்கின்றேன்."

கமலாக்ஷியம்மாள்:—(சற்றுச் சிரித்துக் கொண்டே) "பச்சையம்மா, அந்த வைத்தியசாலையும் பெண்களுக்கு மட்டுந்தானே?"

பச்சையம்மாள்:—"அப்படி அல்ல மாமி, வைத்திய சாலையில் அப்படி ஏற்பாடு செய்வது பொருத்தமுடையதாகாது. அதை எல்லாருக்கும் பொதுவாகவே ஏற்படுத்த உத்தேசித்திருக்கின்றேன்."

கமலாக்ஷியம்மாள்:-(சற்று ஆலோசித்துவிட்டு) "நல்லதம்மா, உன்னுடைய ஆலோசனை மிகவும் சிறந்ததுதான். பெண்பிள்ளைகள் கல்வியறிவில் முன்னேறுவது ஆண்மக்களின் கல்வியூக்கத்திற்கு ஏற்ற வழியாகத்தான் முடியும். ஆனால், இந்த வகையில் உன் விருப்பப்படி உதவ, யாரை உனக்கு உதவியாக்கிக் கொள்ள எண்ணியிருக்கிறாய்?"

பச்சையம்மாள்:—"நான் யாரை உதவியாகக் கோருவது. * மாமாதான் எனக்கு எல்லாவித உதவியும் உடனிருந்து செய்யவேண்டும். வேறு யார் செய்வார்கள்?"

கமலாக்ஷியம்மாள்:—"நல்லதம்மா! நாங்கள் உன் விஷயத்தில் எவ்வித உதவிசெய்யவேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கின்றோம். அப்படியானால், உனக்குப் பிறகு, நீ உன் ஜீவனத்துக்காக வைத்துக்கொள்ள இருக்கும் பதினாயி

* மாமா என்று கூறியது கமலாக்ஷியம்மாளின் கணவரை.

ரம் ரூபாவையும் இனித்தங்கி வசிப்பதற்கிருக்கும் வீட்டை யும் எதற்கு உதவப் போகிறாய் ?"

பச்சையம்மாள்:—"அவைகளில் பாதியை வைத்திய சாலையின் நிதியிலும், மற்றதைப் பெண் பாடசாலையின் நிதி யிலும் சேர்த்துவிடும்படி இனி நான் எழுதிவைக்கும் * உயி லில் குறித்துவிடப் போகிறேன்."

கமலாக்ஷியம்மாள்:—"வைத்தியசாலையையும், பெண் கல்விச்சாலையையும் யாருடைய பெயரால் ஏற்படுத்த உத் தேசித்திருக்கின்றாய்?"

பச்சையம்மாள்:—"இரண்டையும் என் கணவர் பெய ரால்தான் ஸ்தாபிக்கப் போகின்றேன்."

கமலாக்ஷியம்மாள்:—"நல்லது பச்சையம்மா! என் மனதுக்கு நீ கூறியவைகள் மிகவும் திருப்தியாகத்தான் இருக்கிறது. அவைகளைப்பற்றி உன் மாமாவிடம் நான் வீட்டிற்குப் போனவுடன் சொல்லுகிறேன். அதைக்கேட்ட மாத்திரத்தில் அவர் மெத்தச் சந்தோஷப்படுவார் என்பது நிச்சயம். வேறு என்ன விசேஷம் ? அவ்வளவுதானே ?"

பச்சையம்மாள் :—"இல்லை மாமி! இப்போது நாம் பேசிய விஷயங்களை அவ்வளவு முக்கியமாகக் கருதி நான் தங்களை வரவழைக்கவில்லை: நான் ஏற்படுத்த இருக்கும் வைத்தியசாலையில் வேலைபார்க்கவரும் டாக்டர்களிடத்தில் நான் வைத்தியங்கற்றுத் தேர்ந்து, ஏழை எளியவர்கள் வீடு களுக்குச் சென்று, அவர்களுக்கு இலவசமாக என்னாலான உதவி செய்ய உத்தேசித்திருக்கின்றேன். ஏதோ இருக்கும் வரையில் பரோபகாரமான வழியில் மெய் வருந்த

* மரணசாஸனம்.

உழைக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். மனிதராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் தங் நலத்தோடு பிறர் நலத்தையும் கருதவேண்டும் என்பது ஆன்றோர் சம்மதம் அல்லவா? இவ்விஷயத்தில் தங்கள் அபிப்பிராயம் என்ன?"

கமலாக்ஷியம்மாள்:—"பச்சையம்மாள்! உன்னுடைய எண்ணம் மிகவும் சிலாகிக்கத்தக்கதேயாகும். பரோபகாரத்தம் ஏராளமான பொருளையும் கொடுத்து, நீயே ஏழைக்கு ஏழையாய் நின்று முன் வருவதைக்காணும் உலகம், உன்னை உள்ளநாள் உள்ளமட்டும் புகழும். அதனால் உனக்குப் புகழும் கீர்த்தியும் அதிகமாகும்."

பச்சையம்மாள்:—"மாமி, நான் புகழைக்கருதிஉழைக்க முன் வரவில்லை. என் உயிருக்குயிரான என்னுடைய கணவரை இழந்த பின் எனக்குப் புகழும் கீர்த்தியும் ஏன்? ஆகையால், அது என் எண்ணம் அல்ல. இப்போது பெரும்பாலார், தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் ஏதேனும் வியாதி கண்டால், அதற்குக்காரணம் பக்ஷிதோஷம், திருஷ்டிதோஷம், குளிதோஷம், தெய்வக்குற்றம் என்பவைகளே என்று நம்பி, வைத்தியம் ஒன்றும் செய்யாமலிருந்து மடிகின்றார்கள். அப்படித்தான் பிறர் வார்த்தையில் நான் நம்பிக்கை வைத்து, என் மக்கள் நால்வரையும் கணவரையும் பறி கொடுத்தேன். இப்போதுதான் நான் மூடர்களுடைய வார்த்தைகளைக் கேட்டது தவறு என்பது, பசுமரத்தாணிபோல் என் மனதில் பதிந்தது. ஆகையால், நான் வைத்தியம் கற்றுத் தேர்ந்து நோய்கண்டு அவஸ்தைப்படுவோரிடத்திற் சென்று, அவர்களுடைய நோய்க்குக் காரணம், தோஷமும் தெய்வக்குற்றமும் அல்லவென்றும்

வியாதிக்கு வைத்தியம் செய்யாமல் இருப்பது மூடத்தன மென்றும், அவ்வவ் வியாதிகளுக்குச் செய்யவேண்டிய வைத்திய முறைகள் இன்னின்னவைகளென்றும் கூறுவதாகிய இவ்விரண்டு ஊழியங்களையுமே முக்கிய ஊழியங்களாகக்கருதிச் செய்யத் துணிந்திருக்கிறேன். இந்த விஷயத்தில் தங்கள் அபிப்பிராயம் என்ன மாமி?"

கமலாக்ஷியம்மாள் :—(சற்று ஆலோசித்து விட்டு) "அம்மா நீ எண்ணியிருக்கும் எண்ணங்கள் எல்லாம் சரியானவைகளே. இதில் நீ பிரவேசிக்கத் தடைசொல்லுவார் ஒருவருமில்லை. ஆனால் ஒருவேளை போஜனத்தோடு உடம்பு மெலிந்து வாடும். உனக்கு இவ்வளவு தொழில்களை மேற்கொள்ளுவது சாத்தியமா என்றுதான் நினைக்கின்றேன்."

பச்சையம்மாள் :—"மாமி, நான் என்னுடைய தேகத்தில் யாதேனும் அபிமானம் வைத்திருந்தால் அல்லவோ பயப்படவேண்டும்? நான் மரணத்தை எந்த நிமிஷத்திலும் சந்தோஷத்தோடு எதிர்பார்க்கின்றேன். என்னவோ, இருக்கும் வரையில் நான் முற்கூறிய வழியில் உழைக்கலாமென்று கருதுகிறேன்."

கமலாக்ஷியம்மாள்:—" நீ எண்ணிய வழியில் நின்று உழைப்பதில் நான் ஒன்றும் குறைசொல்லவில்லையம்மா. எப்படியானாலும் சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுதலாம்? அதனால்தான் தேகத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று கூறுகின்றேன்."

பச்சையம்மாள்:—"என்னவோ இந்தத் தேகம் யாருக்குச் சதம்?

'நாய்நம தெனநரி நமதெனப் பிதா
தாய்நம தெனநமன் தனதெனப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோல்
ஆய்நம தெனப்படும் யாக்கை யாரதே'

என்று ஆன்றோரும் கூறியிருக்கின்றார்களே! ஆகையால் மாமி, என்னவோ இருக்கும்வரையில் இந்தத் தேகம் இருக்கட்டும்! போகும்போது போகட்டும். அதைப்பற்றிய கவலை எனக்கு ஒரு சிறிதும் கிடையாது. அது போகட்டும். இதுவரையில் நான் சொல்லிய விஷயங்களில் தங்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதை மட்டும் கூறிவிடுங்கள்."

கமலாக்ஷியம்மாள்:—"எனக்கு நீ கூறிய வார்த்தைகள் மிகவும் திருப்திதானம்மா."

பச்சையம்மாள்:—"நல்லது மாமி, இது விஷயமாக நானே இன்று மாலை, நேரில் வந்து, மாமாவோடு பேசிக்கொள்ளுகிறேன். அதற்கு முன் நீங்களும் சொல்லிவையுங்கள்."

இவ்விதம் பச்சையம்மாள் கூறியவுடன் கமலாக்ஷியம்மாள் உத்தரவுபெற்றுக்கொண்டு, தெருவில் தனக்காகக் காத்துக்கொண்டிருக்கும் வண்டியிலேறித் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

## 8-வது அத்தியாயம்

### பச்சையம்மாளின் பிற்காலநிலை

களங்கமற்ற மனமுடைய ஒருவன் சிறிதும் அரவமின்றி அடங்கியிருக்கும் ஓரிடத்தில் உட்கார்ந்து, தன் சிந்தனைகளையெல்லாம் ஒரு வழிப்படுத்திச் சிந்திப்பானாயின், இவ்வுலக வாழ்க்கை அவனுக்கு எவ்வளவோ விசித்திரமாகத் தோன்றக்கூடும். வேண்டும் காட்சிகளை வேண்டும்போது காணக்கூடியதாயிருக்கும் இந்த உலகமாகிய நாடகமேடையைக்கண்டு அவன் ஆச்சரியப்படாமல் இருப்பது அசாத்தியம்.

நாமும், பொய்மையிலும் மெய்மையே மேலாவது என்று எல்லோரும் சொல்ல, எத்தனைமுறை காதாரக் கேட்டிருக்கின்றோம். அனுபவத்திலும் அப்படித்தான் இருக்கின்றது. ஆங்காங்குள்ள மனிதர்களோடு பழகி, அவரவர்கள் அன்றன்று அனுபவிக்கும் இன்ப துன்ப வரலாற்றை அவர்களுடைய வார்த்தைகளைக் கொண்டே அறிவோமானால், அவை, ஒன்றுக்கொன்று எவ்வளவு அதிசயமுடையவைகளென்று அறிந்து, நாமும் அதிசயப்படுவோம் என்பது திண்ணம். அன்றியும் தம்மிடம் அன்புகூர்ந்து, தமது திருநாமத்தை உச்சரித்துத் துதிக்கும் தம்மடியார்களுக்கு எவ்வகைத் தீமையையும் கடைசியில் நன்மையாக முடிப்பவர் நம்மைச் சிருஷ்டித்து இரட்சிக்கும் ஞானபரிபூரண கருணாநிதியாகிய கடவுளென்று திருஷ்டாந்த பூர்வமாய் அறிவோம். அவர் திருநாமத்தை மானிடஜன்மம் எடுத்த யாவரும் துதித்து வழிபடவேண்டுவது கடமையாகும்.

நாம் முன் அத்தியாயத்தில் குறிப்பிட்ட விஷயங்கள் நடந்த மூன்று வருடங்களுக்குள் பச்சையம்மாள் எண்ணப்படி யாவும் நிறைவேறின. பச்சையம்மாள், தன்னால் ஏற்படுத்தப்பட்ட வைத்தியசாலையி லுள்ளவர்களிடம் வைத்தியம் கற்று ஒருவாறு தேர்ச்சியடைந்தாள். வைத்திய சாலையில் வைத்தியம் கற்கும் நேரம்போக மாலையில் இரண்டரை மணிநேரமும் பச்சையம்மாள் ஒழிவடைந்திருக்கும் காலமாகும். ஆனால், அந்தக் காலத்தை வைத்தியசாலையில் வைத்தியம் கற்கும் வழியில் செலவிடாவிட்டாலும் ஏழை எளியவர்கள் வீடுகள்தோறும் தன்னால் கூடியவரையில் வருந்திச் சென்று அவர்களுக்கு உதவி செய்வதிற் போக்கினாள். அவள் கொஞ்சமும் இளைக்காமல் பல வீடுகளுக்கும் போவாள்; பற்பல வியாதியஸ்தர்களைக் கண்டு உபசரித்து அவர்களுக்குத் தேறுதல் சொல்லுவாள். அநேக வியாதிகளுக்குத் தகுந்த ஔஷதங்கள் கொடுத்துத் தீர்ப்பாள். எத்தனையோ குடும்ப துக்கத்தைப் போக்கிச் சந்தோஷத்தைப் பெருக்கித் திரும்புவாள். ஒழிந்த வேளைகளில் பிறர் உதவி ஒரு சிறிதும் இன்றி, இவள் ஒருத்தியேசெய்த வெகு ஜனோபகாரத்தை நினைக்க நினைக்க வியப்புண்டாகின்றதே!

நோயாளிகளோ, பச்சையம்மாள் முகத்தைக் காணும் போதெல்லாம் தங்கள் பிணி பாதி அப்போதே தீர்ந்ததென்று மனம் தேறுவார்கள். இருட்டறையில் அடைபட்டு அவதி படுவோருக்குச் சடுதியில் சூரியக் கிரணம் தோன்றினால் எப்படியோ, அப்படியே வியாதியஸ்தர்கள் பச்சையம்மாளைப் பார்த்தமாத்திரத்தில், அகமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் அடைவது வழக்கம். தருமசிந்தையோடு அன்னையினும் மிக்க அன்புடன் ஆதரவுகாட்டும் பச்சையம்

மாளின் முக தரிசனத்தைக் கண்டவுடன் தங்கள் வியாதி நீங்கிற்றென்று நோயாளிகள் நம்புவது அதிசயமல்லவா! நற்குண நற்செய்கைகளிற் சிறந்த பெண்களுக்கெல்லாம் நெற்றித் திலகம்போல் பச்சையம்மாள் விளங்கினாள். என்றும், அந்த வார்த்தை அவளுக்குப் பொருத்தமுடையதே யாகும். அவ்வரிய குணாதிசயமுள்ள உத்தமியைத் தெருவில் கண்டவர்கள் சற்று நின்று அவளுடைய இனிய முகத்தை ஏறிட்டுப் பார்த்து, "ஆ இந்தச் சீமாட்டி இப்படி ஏழைகளோடு ஏழையாக இருந்து அவர்களுக்கு உதவி செய்யும் அற்புதக் குணந்தான் என்ன!" என்று வாயாரச்சொல்லி ஆச்சரியப்படுவார்கள். அந்தப் பெண்கள் நாயகத்தைக் காணும் எவருக்குத்தான் அதிசயம் உண்டாகாது!

அதுமட்டுமா! தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் பால்மணம் மாறாத சிறுவர், சிறுமியர் எல்லோரும் பச்சையம்மாளைக்கண்டால், ஆடும் ஆட்டத்தைச் சற்று நிறுத்தி, வழி விட்டு ஒதுங்கி நின்று, முகம் மலரத் தலை வணங்கி, மரியாதை செய்வார்கள்.

காய் கனி முதலான இலைக்கறிகளைக் கூடைகளில் சுமந்துகொண்டு கடைக்குப்போகும் நாகரிகமறியாத பெண்களும் புருஷர்களுங்கூட பச்சையம்மாளைக் கண்டால், வழி விட்டு ஒதுங்கிச் செல்லுவார்கள். வீதியில் ஆங்காங்கே பற்பல வீடுகளின் வெளியில் நின்று சண்டையிட்டுக் கலகம் விளைப்போரும் பச்சையம்மாளைக் கண்டுவிட்டால், அவள் சற்றுத் தூரம்போய் மறையுமட்டும் வாய்திறவாமல் அடங்கி யிருப்பார்கள்.

புரட்டாசி மாதத்தில் ஒருநாள் காலையில் மப்பு மந்தாரமின்றி இளவெயில் நன்றாய்க்காய்ந்துகொண்டிருந்தது. கடற்

காற்று சில்லென்று வீசியது. வீதிகளில் போவார் வருவாருக்கு இவைகள் யாவும் இன்பம் தருவதாய் இருந்தன. அப்போது பகல் முப்பது நாழிகையும், இரவு பன்னிரண்டு நாழிகையும் ஜனங்கள் ஓயாமல் அடர்ந்து செல்லும் சென்னைத் தங்கசாலைத்தெருவிலிருந்து பிரியும் குறுகலான தெரு ஒன்றில், ஒருஸ்திரீ திரும்பினாள். அவள், விலை யுயர்ந்த ஆடையாபரணங்கள் ஒன்றிலும் விருப்பம் உள்ளவளாகத் தோன்றவில்லை. கஜம் மூன்று அணு விலையுள்ள சீமைத் தோம்புச் சேலையைத்தான் அவள் பிரியமாக உடுத்தியிருந்தாள். அவள் பூண்டிருந்த ஆபரணம் கழுத்தில் மூன்றால்; காதில் சாதாக் கம்மல் இவைகளைத்தவிர வேறில்லை. வீதியில் செல்லும் பலரும், அவளைக் காணாத புதுமையைக் கண்டது போல் கவனித்துக்கொண்டு போயினர். அவளுடைய வஸ்திர பூஷணாதிகளின் அலங்காரத்தைக் கண்டு எவரும் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. இனிய குணத்தால் அவள் முகத்தில் விளங்கிய அருளையும் மரியாதைக்குறிப்பையும் கண்டே ஆச்சரியப்பட்டு அவளைப் பார்த்தார்கள் என்பது திண்ணம். தக்க வயதில் அவள் இருந்த அழகைக் காண்போருக்கு ஆயிரம் கண்கள் வேண்டும். அப்போது அவள் தன்னைக் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரும் அபூர்வசுந்தரியாய் இருந்தாள். பிறகு காலஞ் செல்லச் செல்ல, ஆபத்தின்மேல் ஆபத்து, துக்கத்தின்மேல் துக்கம், துயரத்தின்மேல் துயரம் நேரிட்டதனால், அவள் முகக்களை குன்றி, மேனிகறுத்து, கடற்கரைக் கருமணல்போல் விளங்கிய அவளுடைய அழகிய கூந்தல், வயது முதிருமுன் நரைத்துப் போயிற்று. கூந்தல் நரைத்தும், இனிய குணத்தால் முகத்தில் விளங்கிய புன்னகையோ, அன்றிருந்த வண்

ணம் அழியாதிருந்தது. அன்றியும் தனக்குச் சம்பவித்த ஆபத்து விபத்துக்களை அவள் சகித்து, இவ்வுலக வாழ்வு தாழ்வு, இன்ப துன்பம் இவைகள் மாறி மாறி மனிதர்களுக்கு நேரிடுவது இயல்பேயென்று துயரொழிந்து அமைதியுற்றிருக்கப் பழகிவிட்டபடியால், முகத்தழகு குறையக் குறைய; முகத்தில் அதற்கு முன் இல்லாத ஒரு வகைக் காந்தியுண்டாயிற்று. இது நிற்க,

குறுகலான அந்தத் தெருவழியே சென்ற அவளை யார் என்று ஒருவரும் கேட்கவேண்டிய அவசியமேயில்லை. அவள்தான் நமது பச்சையம்மாள் என்பது எல்லோருக்குந் தெரியும். குறுகிய அந்தத் தெருவூடே சென்றுகொண்டிருந்த பச்சையம்மாள் அந்தத் தெருவில் ஒரு ஏழைக் குடும்பத்தார் வசித்துக்கொண்டிருந்த வீட்டிற்குப் போய், சாத்தியிருந்த கதவை மெல்லெனத் தட்டினாள்.

கதவைத் தட்டின சத்தம் கேட்டவுடன் உள்ளேயிருந்த இலக்ஷ்மி எழுந்துவந்து கதவைத் திறந்து பச்சையம்மாளைக் கண்டு, “பச்சையம்மாளா, வாருங்கள், வாருங்கள்! இங்கே இப்பொழுது நீங்கள் வந்தது கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் ஆயிற்று. இனிச் சங்கடம் தீர்ந்ததென்று விசாரமற்று இளைப்பாறியிருக்கலாம். நீங்கள் செய்யும் உபசாரத்தைத் தவிர நான் செய்வதொன்றும் என் தாயாருக்குப் பிரியமாயில்லை. நான் எப்படி உபசாரம் செய்தாலும் அதற்கெல்லாம் குறை சொல்லுகிறார்கள். அந்தக் குறைகளைக் கேட்டு என் மனமும் வெறுத்துப் போயிற்று” என்று சற்று வெறுப்பாகவே கூறினாள்.

சுமார் பதினெட்டுவயதுடைய பெண்ணாகிய இலக்ஷ்மி மனவெறுப்புடன் கூறிய வார்த்தைகளை அங்கு ஒரு சாதா

ஜணக் கட்டிலின்மேல் படுத்துக்கொண்டிருந்த அவளுடைய தாயாகிய மீனாக்ஷி கேட்டு, "இலக்ஷ்மி, ஏன் இப்படி என் மீது அபவாதம் சொல்லுகிறாய், அம்மா! நான் எப்போதும் உன்னைக் கடு கடுத்துப் பேசுகிறேனா? இரணமாயிருக்கின்ற என்முதுகைச் சற்றுத் தாங்கிக்கொள்ளச் சொன்னால் நீ தாங்குவது ஒரு விதம்; பச்சையம்மாள் தாங்குவது ஒரு விதம். அந்தப் பக்குவம் உனக்கு வருமா?" என்று சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டே முகத்தை ஒருபக்கமாகத் திருப்பிக்கொண்டாள்.

அதைக் கண்ட பச்சையம்மாள், "நான் சொல்வதைக் கேளுங்கள், மீனாக்ஷியம்மா! எனக்கு வயது என்ன? உங்களுடைய இலக்ஷ்மிக்குவயது என்ன? அவள் இன்னும் அறியாப்பெண்தானே; காலஞ் செல்லச் செல்ல அவளுக்குப் பருவமுதிர்ந்து, அனுபவம் ஏறும். அப்போது என்னைப் போல அவளும் நோயாளிகளுக்குப் பக்குவ பரிகார பணிவிடைகளைச் செய்யத் தகுந்தவளாவாள்" என்று கூறினாள்.

பச்சையம்மாள் தனக்காகப் பரிந்துபேசவே இலக்ஷ்மி மனம் குளிர்ந்து, அவளைப் பார்த்து, "என் மனதில் கவடு சூது இல்லை. என்றால் ஆனமட்டும் தாயாருக்கு உபசாரம் செய்து வருகிறேன்" என்று சொன்னாள்.

அதற்குப் பச்சையம்மாள், "ஆம் ஆம். மெய்தானம்மா! நீ கொஞ்சமும் வஞ்சனையில்லாதவளென்பது நீ சொல்லாமலே எனக்குத் தெரியும். போனதடவை நான் இங்கே வந்திருந்தபோது, சொல்லிப் போனதையெல்லாம் நீ தவறாமல் செய்து இருக்கின்றாயே! அதுவே நீ வஞ்சனையில்லாதவளென்பதைக் காட்டுகின்றது, அம்மா! மனிதர்கள் வசிக்கும் வீடு இப்படிச் சுத்தியாயிருப்பதுதான் கண்ணுக்கும் அழகு;

தேக சுகத்திற்கும் அனுகூலம்” என்று கூறிப் படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கும் மீனாட்சியம்மாளைப் பார்த்து, “இலக்ஷ்மி உங்களைப் பக்குவமாகப் பிடித்துத் தூக்கிக் கீழே வளர்த்திவிட்டு, சமுக்காளத்தையும், மெத்தையையும், எடுத்து உதறி, மறுபடியும் மெத்தையைக் கட்டிலின் மேல் போட்டு சமுக்காளம் விரித்தபின் உங்கள் முதுகு இரணத்தை நான் பார்வையிட்டு, அதற்கேற்ற பக்குவம் செய்கின்றேன். நேற்று நான் அனுப்பிய துப்பட்டிகள் எங்கே?” என்று கேட்டாள்.

“இதோ இருக்கின்றன” என்று இலக்ஷ்மி அதை எடுத்துக்கொண்டு போய்க் கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்டு பச்சையம்மாள், பின்னும் இலக்ஷ்மியைப் பார்த்து, “அங்கிருக்கும் அந்தக் கம்பளியையும், சல்லாத் துணி ஒன்றையும் கொண்டுவா” என்று கட்டளையிட்டாள்.

அவள் கட்டளைப்படியே, இலக்ஷ்மி, மெல்லிய வஸ்திரம் ஒன்றையும் எதிரிலிருந்த கம்பளியையும் எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தாள்.

பச்சையம்மாள் அவைகளை வாங்கிக் கீழே விரித்து மெத்தையாக மடித்தாள். அப்பால் துப்பட்டிகளையெடுத்து, ஒன்றை மீனாட்சியினுடைய தோள்பட்டையின்கீழும், மற்றொன்றை இடுப்பின்கீழும் போட்டு, தோள்பட்டைத் துப்பட்டியின் இருதலைப்பையும் இலக்ஷ்மி பிடிக்கக் கனம் அதிகமுள்ள இடுப்பின் கீழிருந்த துப்பட்டியின் இரண்டு தலைப்பையும் தான் பிடித்து, இருவரும் ஏககாலத்தில் மீனாக்ஷியைத் தூக்கி, கீழ் மெத்தையில் மெதுவாக வைத்தார்கள்.

பிறகு பட்டை நாடாவினால் பின்னிய அந்தக்கட்டிலின் மேல் இருந்த மெத்தையைத் திருப்பிப்போட்டு சமுக்காளத்தை உதறி விரித்து, கால் மாடு தலைமாடுகளில் தலையணைகளைப்போட்டு, இருவரும் மீனாக்ஷியை முன்போலப் பத்திரமாகத் தூக்கிக் கட்டிலில் வளர்த்தினார்கள்.

அப்போது பச்சையம்மாள் இலக்ஷ்மியைப் பார்த்து, "வியாதியால் வருந்துகிறவர்களை உடம்பு அதிராமல் மெதுவாக எடுக்கப் பிடிக்கப் பயில்வது கஷ்டந்தான். உடம்பு வலிக்காமல் வெகு பக்குவமாய் அவர்களைத் தொடவேண்டும். சிலசமயங்களில் துப்பட்டியாவது கம்பளியாவது கிடைக்காமற்போயினும் பரவாயில்லை. நல்ல கைக்குட்டை ஒற்றடம் கொடுக்க உதவும். சில தருணங்களில் அதுதான் கம்பளியைக் காட்டினும் சிறந்தது. முதுகில் அக்குட்பக்கத்திலும் இடுப்பிலும் கைக்குட்டையைக் கொண்டுபிடித்து, நோயாளிகளை உடம்பு அசையாமல், கையணையுள்ள நாற்காலியில் தேகத்திற்கு வருத்தமில்லாமல் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருப்பதுபோல், அத்தனை சுகமாகத் தூக்கிக்கொண்டு போகலாம்" என்று சொல்லி, மீனாக்ஷியைப் பார்த்து, "இனி இரணத்தைக் காட்டு அம்மா! பார்ப்போம்" என்று கூறி, அவள் முதுகிலிருந்த இரணத்தைப் பார்த்துவிட்டு, உடனே இலக்ஷ்மியைப் பார்த்து "ஐயோ! இலக்ஷ்மி இரணத்தில் இரத்தக் கசிவு இருக்கிறது. நீ ஒற்றடம் கொடுத்திருப்பது போதாது" என்று கூறினாள்.

அதற்கு இலக்ஷ்மி, பச்சையம்மாளைப் பார்த்து "இல்லை அம்மா ஒற்ற ஒற்றப் பஞ்சு புண்ணில் உறுத்துகிறதென்று, அம்மா என்னைத் தொடவேண்டாமென்று கூறுகிறார்கள்" என்று சொன்னாள்.

அதைக் கேட்ட பச்சையம்மாள், "ஆம்ஆம் உறுத்தும், ஆனாலும் என்ன செய்கிறது" என்று சொல்லிக்கொண்டே மீனாக்ஷியைப் பார்த்து, "மீனாட்சியம்மா, எவ்வளவு வருத்த மாயிருந்தாலும் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும்? வேறு வழியில்லையே அம்மா! இவ்வித இரணத்தில் இரத்தக் கசிவு கொஞ்சமும் இருக்கக் கூடாதே. ஆனால் பாவம் இது உங்களுக்குத் தெரியாது. பழக்கமுள்ள எனக்குத் தெரியும். எங்கும் படரவிடாமல் எளிதில் புண்ணை ஆற்றவேண்டுமானால் அதில் இரத்தக் கசிவு இல்லாதபடி நன்றாகப் பஞ்சால் ஒற்றிச் சுத்தி செய்ய வேண்டும். இரணத்திற்கெல்லாம் நன்றாகச் சுத்தம் செய்வதே முக்கியமான ஔஷதமாகும். பக்குவம் தவறிவிட்டதனால் இனி இதற்கு, ரொட்டியைக் கிளறி வைத்துக் கட்ட வேண்டும். அது புண்ணிலுள்ள நீரையும் சீழையும் வாங்கி வருத்தம் போக்கி, புண்ணை உலர்த்தி விரைவில் ஆற்றும்" என்று சொல்லி, மறுபடியும் இலக்ஷ்மியைப் பார்த்து, "இலக்ஷ்மி, கோதுமை ரொட்டி ஒரு துண்டு இங்கு அகப் படுமா" என்று கேட்டாள்.

அதற்கு இலக்ஷ்மி "அகப்படும்" என்று சொல்லிக் கொண்டேபோய், அங்கு அறையில் இருந்த மூங்கில்பெட்டியைத் திறந்து, அதில் ஒரு பெரிய ரொட்டியில் கொஞ்சம் பிய்த்துக்கொண்டுவந்து பச்சையம்மாளிடம் கொடுத்தாள்.

பச்சையம்மாள் அதைக் கையில் வாங்கிக்கொண்டு இலக்ஷ்மியைப் பார்த்து, "இந்த ரொட்டித் துண்டை அகலக் காண்டியிலிட்டுக் கிளறிக் கட்டும்வகை தெரியுமா?" என்று கேட்டாள்.

அதற்கு இலக்ஷ்மி சிரித்துக்கொண்டே, "என்ன அம்மா? ரொட்டிமாவைக் கிளரத் தெரியாதவர்களும் உண்டா?" என்று சொன்னாள்.

பச்சையம்மாளுக்கு அந்த வார்த்தையைக் கேட்டவுடன் சற்றுச் சிரிப்பு தோன்றியது. உடனே அவள் இலக்ஷ்மியைப் பார்த்து, "நான் சொல்லுவதைக் கேள், இலக்ஷ்மி, எந்த வேலையும் பலமுறையிற் பயிலாமல் எளிதில் செய்துவிடலாமென்று சொல்லுவது வாய்க்குச் சுளுவுதான். செய்து பார்த்தால் அல்லவோ அதன் அருமை பெருமை தோன்றும். எல்லாப் பெண்களுக்கும் ஒருவாறு சமைக்கத் தெரிந்திருக்கலாம். அந்த வகையில் அவர்கள் சமைத்துக் கைபடிந்திருப்பார்கள். ஆனால், அளவறிந்து செய்யும் முறைதவறாமல் மாவைக் கிளறும் விதம் எல்லாருக்கும் தெரியுமா? தெரியாது. நல்லது; நான் இந்த ரொட்டியைத் துணுக்கைத் துணுக்கையாகப் பிய்த்து வைக்கின்றேன். நீ போய்க் கொஞ்சம் வெந்நீர் சுட வை" என்று கூறி, வெந்நீர் கொண்டுவரும்படி அனுப்பினாள்.

உடனே இலக்ஷ்மி சென்று பத்து நிமிஷத்தில் நன்றாகக் கொதிக்கக் கொதிக்கச் சுடும்படி வெந்நீர் காய்ச்சிக் கொண்டுவந்து பச்சையம்மாளிடம் கொடுத்தாள். பச்சையம்மாள் அந்த வெந்நீரை வாங்கி அதிற்கொஞ்சம் தான் அதற்கு முன்னதாகவே ஒரு கிண்ணத்திற் சன்னமாய்ப் பிய்த்து வைத்திருந்த ரொட்டி, நன்றாய் பெருக்கத்தகுந்த அளவு மெதுவாக வார்த்து, ஆவி போகா திருக்கும்படி உடனே அந்தக் கிண்ணத்தின் வாயை மற்றொரு தட்டைக் கிண்ணத்தால் மூடினாள்.

ரொட்டித் துண்டுகள் வெந்நீரில் ஊறிக்கொண்டிருக்கையில் பச்சையம்மாள் கொக்கின் இறகுபோன்ற துல்லியமான துணித்துண்டு ஒன்றைத் தன்னுடைய சிறு பிரம்புப் பெட்டிக்குள்ளிருந்து எடுத்து அங்கிருந்த ஒரு அகலமான பலகையின்பேரில் விரித்தாள்.

பிறகு ஐந்தாறு நொடிப்பொழுதிற்குள் உபநாகத்துக்கு (மாக்கட்டுக்கு) வேண்டுமளவிற்கு நீராவியில் பக்குவமாயிற்று. பச்சையம்மாள் மூடியிருந்த கிண்ணத்தைத் திறந்து, அகப்பைக்காம்பால் நீரூறி இளகியிருந்தரொட்டித் துணிக்கைகளைச் சூடாறுமுன் கிளறி, மேற் குறிப்பிட்ட வெள்ளை வஸ்திரத்தில் கொட்டி, கத்தியலகால் மெதுவாகப் பரப்பி, அதன்மேல், துணியின் ஓரங்களை மடித்து, புறங்கையை வைத்து, சூடு சரியாயிருக்கிறதா என்று பதம் பார்த்தாள். கிளறின மாவானது (உபநாகம்) நோயாளியை வருத்தாதபடி புண்ணில்வைத்துக் கட்டத் தக்க இளஞ் சூடாயிருந்தது. பச்சையம்மாள் அதையெடுத்து, மீனாக்ஷியின் முதுகு இரணத்தில் மிருதுவாக வைத்து, அது நிலைபெயரா திருக்கத் துணிசுற்றிப் பணிக்கையாகக் கட்டினாள்.

அதன் பிறகு பச்சையம்மாள் பிரம்புப்பெட்டிக்குள்ளிருந்து பின்னும் ஒரு கவணம் (குறைந்த அகலமும் நீளமுமான துணி) எடுத்து, இலக்ஷுமிக்கு அதைக்காட்டி, "பார் அம்மா, இது அகப்படாத அரும்பொருளல்ல. இதைவாங்க டில்லிக்குப் போகவேண்டியது தில்லை. எங்கும் குறைந்த விலைக்கு, வேண்டும்போது அகப்படும். இதை கஜம் ஒன்றுக்கு ஆறு அணா கொடுத்து வாங்கினேன். இந்தக் கவணம் தாராளமாய் உடலைச் சுற்றிக் கட்டத் தகுந்த அளவிற்கு நீண்டிருக்கவேண்டும். கவணத்தின் இருதலைப்பிலும் நாடா

வைத்துத் தைக்கவேண்டும். ஒரு தலைப்பில் மட்டும் நாடா வை நாலைந்து அங்குலம் உட்கொள்ள வைத்துத் தைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் அது கட்டுச் சற்று இறுகவேண்டும் பொழுது, சங்கடமின்றி இறுகவும், தளர வேண்டும்பொழுது தளரவும் உதவியாகும். இவ்விதத் துணி சொற்பவிலைக்கு அகப்பட்டாலும் இதன் பிரயோசன மென்னவோ அதிகந்தான். எப்படியென்றால், இதை எளிதில் கசக்கி வெளுக்கச் செய்யலாம். அதனால் சிரமமில்லாமலே வெளுத்த துணி இரண்டொன்று எப்போதும் கையில் இருக்கும்படி செய்துகொள்ளலாம். அதனால், களறின் மாவை வைத்துக் கட்டத் துணியில்லையென்று சமயத்தில் அலையவேண்டுவதில்லை. இதைத் தேடி வைக்காதிருந்து வேண்டும்போது கையில் கிடைக்கும் கந்தற் துணிகளைக் கொண்டு இரணத்தில், களறினதை வைத்துக்கட்டி வருவோமானால், அவ்வளவு நல்லசுகமும் உண்டாகாது. சில சமயங்களில் அந்தக் கந்தற் துணிகள் கூட கிடையாமல் அங்கும் இங்கும் தேடித்திரியவும் நேரிட்டாலும் நேரிடும். அதற்குள் மாக்கட்டு வைத்த இடத்திலிருந்துவழுவிப்போம்; வழுவாதிருப்பினும் சூடாறிப்போகும். ஆகையால் நான் சொல்லியபடி களறினதே வைத்துக் கட்டுவதற்கு, இம் மாதிரித் துணி எப்போதும் கையில் இருப்பாக இருக்க வேண்டும்" என்று சொல்லி, "மறுபடியும் கேள் இலக்ஷுமி, இப்போது கட்டின மாவு இரண்டரை நாழிகை, அதாவது கொஞ்சம் குறைய ஒரு மணி நேரம் வரையில் இருக்கட்டும். அதன் பிறகு கட்டவிழ்த்து, மாவை எடுத் தெறிந்துவிட்டு நான் தரும் மெல்லிழைத் துணியை நாலைந்தாக மடித்து இரணத்தின் பேரில் போடு. இரணம் மறுபடியும் அதிக

மாகப் பொங்குமானால் நீ வைத்தியசாலைக்குவந்தால் தைலம் ஒன்று கொடுக்கிறேன். அதைக் கொண்டுவந்து மேலே பூசலாம்” என்று சொன்னாள்.

அதைக்கேட்ட இலக்ஷ்மி, “ஏன் அம்மா! அந்தத் தைலம் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டுமா?” என்று கேட்டாள்.

அதற்குப் பச்சையம்மாள், “இல்லை இலக்ஷ்மி! வாங்க வேண்டுமென்னும் அவசியமேயில்லை. நமது வைத்தியசாலையில் இருக்கிறது, தருகிறேன். அப்படி வாங்குவதானாலும் நான்கு அணு கொடுத்து வாங்கும் தைலம் உன் தாயின் முதுகு இரணத்திற்குப் பூச இரண்டு வாரத்திற்கு வரும். அதிகமாய்ப் பூசவேண்டிய அவசியமேயில்லை. இன்னும் உன் தாயாருக்கு ஒரு பக்குவம் யூகித்துச் செய்யவேண்டும். இலக்ஷ்மி! மெதுவான தலையணை ஒன்றைக் கொண்டுவந்து கொடுப்பாயா?” என்று கேட்டாள்.

அதைக் கேட்ட இலக்ஷ்மி “அப்படி ஒன்றும் இல்லையே, அம்மா! மாணிக்கம் அம்மாள் நேற்றுக் கொண்டு வந்து கொடுத்த காற்றுமெத்தைதான் இருக்கின்றது. அது தாயாருக்கு இஷ்டமில்லை. அது கல்லுபோலிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்” என்று கூறினாள்.

இலக்ஷ்மி அவ்விதம்கூறியவுடன்,பச்சையம்மாள் அவளைப்பார்த்து, “அது எப்படியேனும் இருக்கட்டும். அதைக் கொண்டுவா நான் பார்க்கிறேன்” என்று சொன்னாள்.

உடனே இலக்ஷ்மி அதைக் கொண்டுவந்து பச்சையம்மாளிடம் கொடுத்தாள். அதைக் கையில் வாங்கிப் பார்த்தவுடன் பச்சையம்மாளுக்குச் சிரிப்பு வந்தது. அவள் இலக்ஷ்மியைப் பார்த்து, “இலக்ஷ்மி, இது கல்போல் இருக்கிற

மென்று உன்னுடைய தாயார் கூறியது பொய்யல்லவே! அது உண்மைதான். நீ உன்னுடைய சுவாசாசயத்திலி ருந்த வாயு முழுவதையும் இந்த மெத்தைக்குள் பூரித்திருக் கின்றாய் ; அதனால் இது கல்லுபோல் இருக்கின்றது ; இதை மெத்தைபோல் மிருதுவாகும்படி செய்வதும் உன்னாலாகக் கூடிய காரியமேயாகும். இதோ நான் இந்த மெத்தையை மிருதுவாகும்படி செய்வதைக் கவனி" என்று சொல்லி, காற்று போகும் வழியை அடைத்திருக்கும் தடை காணவச் சிறிது விலக்கி, உள்ளிருந்த வாயுவிற் பாதியைப் போக்கி, பின்பு காற்றுப் போகும்வழியை அடைத்தாள். அப்போது அந்த மெத்தை, பஞ்சு மெத்தையினும் பதின் மடங்கு மிருதுவாயிருந்தது. அப்பால், மீனாக்ஷியம்மாளைத் தூக்கி உடற்கனம் முதுகிற் பொருந்திருக்கும்படி மெத்தை யில் உபாயமாய் வளர்த்தி, இப்போது உங்களுக்குப் படுக்கை மெதுவாயிருக்கிறதா ? பிரியமா யிருக்கிறதா ?" என்று கேட்டாள்.

அதற்கு மீனாக்ஷி "அம்மம்ம ? இந்த சுகம் எனக்குச் சென்ற எண்பது நாட்களாக இல்லவேயில்லை. தாங்கள் இங்கே வந்ததனால் என் பிணி தீர்ந்து, பூரண சௌக்கி யத்தை அடைவேனென்று நான் முன்னே கூறியது என்ன பொய்யா ?" என்று சொன்னாள்.

அப்போது பச்சையம்மாள் மீனாக்ஷியைப் பார்த்து, "இப்போது நான் மாவு கிளறி வைத்துக் கட்டிய விதத்தைத் தங்கள் குமாரத்தி பார்த்துக்கொண்டிருந்தபடியால் இனி மேல் அவள் தங்களுக்குத் தகுந்தபடி செய்யக்கூடும் என்று நம்புகிறேன்" என்று சொல்லி இலக்ஷ்மியைப் பார்த்து, "என் இலக்ஷ்மி, உனக்கு இனிமேல் மாவு கிள

னும் முறை மயக்கமறத் தெரியுமல்லவா? உள்ளதைச் சொல்லம்மா!” என்ருள்.

அதற்கு, “ஆம் அம்மா தெரியும்” என்று இலக்ஷ்மி பதில் சொன்ஞள்.

மறுபடியும் பச்சையம்மாள் இலக்ஷ்மியைப் பார்த்து, இன்னும் சொல்லக்கேள்: “இலக்ஷ்மி, உபநாகம் இன்னும் சூடாக இருக்கவேண்டுமானுல், கிண்ணத்திலுள்ள உபநாகத்தை அளவிற்குத் தக்கதாய் சூடேற்றும்பொருட்டும் ஆவி பறந்துபோகாதபடி அதை மூடியபின் அதை அடுப்பிற்கொதிக்கும் வெந்நீர் பாத்திரத்திற்குள் சற்றுநேரம் வைக்கவேண்டும். கொதி நீர், மாவுள்ள கிண்ணத்திற்குள் விழாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். எவ்விதமான உபநாகம் செய்வதற்கும் முறை என்னவோ ஒன்றுதான். ஆனுல், ஆளிவிரை கிளறுவதற்கு வெந்நீர் சற்று அதிகம் விடவேண்டும். கிண்ணத்தின் மூடியைத் திறந்து மாவைக் கிளறும்பொழுது அது வெண்ணெய்போல் மசிந்து சூடாறுதிருக்கும்படி அளவறிந்து வெந்நீர் விடவேண்டும். ஒரு துளி கூடினுலும் குறைந்தாலும் தவறுதான். ஆவியில் வெந்தபின்னும் வெந்நீர் விட்டால் உபநாகம் பழுதாகிவிடும். முதலில் அளவிற்கு அதிகமாய் விட்டால் மாவின் சூடுகை ஆறிப்போய் ரோகிக்குச் சுகமாயிராது” என்று கூறி செய்பாகத்தைத் திட்டமாகக் கற்பித்தாள்.

அதன்பிறகு இலக்ஷ்மி பச்சையம்மாளைப் பார்த்து “கடுகுமாவு கிளறு முறையும் இதுதானு? அன்றொருதினம் என் நெஞ்சு நோவிற்கு மாணிக்கம் அம்மா கடுகு அரைத்து வைத்துக் கட்டச் சொன்னுர்கள். அதைச் செய்ய வகை தெரியாமல் விட்டுவிட்டேன்” என்று ஆவலாய்க் கேட்டாள்.

அதற்குப் பச்சையம்மாள், "ஆமாம் எவ்வகை உபநாக மாஞலும் நான் கூறியபடிதான் செய்யவேண்டும். கோது மை மா, கடுகு மா இரண்டும் சரிக்குச் சரி சேர்த்து, வெந் நீரில் காடி அல்லது புளித்த நீர் கொஞ்சம் கலந்து அளவாக விட்டுக் கிளறவேண்டும். காரம் அதிகமுள்ள உபநாகம் செய்யவேண்டுமாஞல் ஒரு அகலக்கரண்டி கடுகும், உச்சிக் கரண்டி கோதுமை மாவும் சேர்த்து, காடியைக் கொதிக்க வைத்து, அதை வேண்டுமளவு விட்டுக் கிளறிக் கட்டலாம். இந்த உபநாகத்தை, உற்ற சமயத்திலன்றி எப்போதும் கட் டலாகாது. பாலியர்களுக்கு இது பெரும்பாலும் கூடவே கூடாது. இன்னும் ஒரு வகை உத்தமமான உபநாகம் உண்டு. அதெப்படியென்ருல், சிறிய ஆளிவிரை மாவில் இரண்டு அகலக்கரண்டியும் கடுகு மாவில் ஒரு சிறிய கரண் டியும் எடுத்து ஒன்ருகச் சேர்த்து நன்ருய்க் கலந்து செய்வ தாகும். அதைத் துணிமடிப்பில்லாமல் இரணத்தின்மேலே யே வைத்துக் கட்டவேண்டும். கடுகு மா கிளறிக் கட்டும் போதெல்லாம் மெல்லிய கந்தைச் சல்லாத் துணியை மடிப் பிட்டுக் கட்டுவது முறையாகும். இதை நீ மறந்து போகா மல் இருக்கவேண்டும். இரணத்தை ஆற்றப் பெரும்பாலும் ரொட்டி உபநாகமும் கைகண்ட மருந்தாகும். இவ் விரண்டும் சீழ் முதலிய கள்ள நீரை அற வாங்கிவிட்டு இர ணத்தைச் சுத்தி செய்யும். ஆஞல் இந்த விஷயங்களெல் லாம் தெரிய, யுக்தியும் அனுபவமும் அதிகமாகத் தேவையா கும். நீ புத்திகூர்மையுடன் இதையெல்லாம் கற்றுக்கொள் ளத் தகுந்த முயற்சியுடையவளாயிருந்தால் நோயாளிக்கு வேண்டிய உபசாரங்கள் அனைத்தையும் செய்யத் தகுந்த பக்குவசாலியாவாய். இன்றைக்கு நான் இன்னும் நாலைந்து

ரோகிகளைப் போய்ப் பார்க்கவேண்டும். நாழிகையாகின்றது. போய்வருகின்றேன் அம்மா" என்று கூறிக்கொண்டே போக நினைத்து எழுந்தாள்.

அதைக்கண்ட இலக்ஷ்மி, "அம்மா! இன்னும் அரைக்கால் நாழிகை நில்லுங்கள். ஒரு விஷயம் உங்களிடம் சொல்லவேண்டும். என் பெரிய தாயார் ஒரு கட்டி வந்து படும் உபத்திரவத்தை, நினைத்தால் மனம் விடவிடவென்று உதறுகின்றது. அதை இராஜக் கட்டி என்று சொல்லுகிறார்கள். உங்களைக் காணும்போது அதற்குக் கைகண்ட மருந்து கேட்டுச் சொல்லுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன். அதற்கு என்ன அம்மா செய்யலாம்" என்று அனுதாபத்துடன் கேட்டாள்.

போவதற்கு எழுந்த பச்சையம்மாள், மறுபடியும் உட்கார்ந்து கொண்டு இலக்ஷ்மியைப் பார்த்து, "உன் பெரிய தாயார் இருக்கும் இடம் எங்கே?" என்று கேட்டாள்.

பச்சையம்மாள் கேட்டதற்கு, இலக்ஷ்மி, "என் பெரிய தாயார் இருப்பிடம் சைதாப்பேட்டை. என் பெரிய தாயாரின் மகளாகிய என் சகோதரி இன்று இங்கே வருவாள். நீங்கள் பக்குவத்தைக்கூறினால் நான் அப்படியே அவளிடம் சொல்லிவிடுகிறேன்" என்று சொன்னாள்.

அதைக்கேட்ட பச்சையம்மாள், "ஆமாம், இலக்ஷ்மி! உன் பெரிய தாயாருக்கு வந்திருக்கும் கட்டியை ஒரு முறை பார்த்து சிகிச்சைசெய்வதற்குச் சமயம் எதுவுமில்லை. ஆனால் என்ன செய்யலாம்? சைதாப்பேட்டை தூரத்தில் இருக்கிறது. அவ்வளவுதூரம் போய்வர இப்போது எனக்கு அவகாசம் ஏது? ஆனால் நான் அதைப் போன்ற கட்டிகளைக்

குணப்படுத்த அறிந்துள்ள உத்தம சிகிச்சை ஒன்று சொல்லுகிறேன்" என்றாள்.

அதற்குப் பச்சையம்மாள், "ஆஹா சொல்லுங்கள் அம்மா, கேட்கிறேன்" என்று பணிவுடன் கூறினாள்.

இலக்ஷ்மி, இவ்விதம் கூறியவுடன் பச்சையம்மாள் அவளைப் பார்த்து, "இலக்ஷ்மி! மரத்தில் கடைந்த வட்ட வடிவமான கிண்ணங்கள் இரண்டைவாங்கிக்கொள்ளவேண்டும். விலை என்னவோ அப்படி ஒன்றும் அதிகமாயிராது; நான்கு, அல்லது ஐந்தணுகொடுத்தால் இரண்டு கிண்ணங்கள் வாங்கலாம். ஒரு தவலையில் தண்ணீர் கொதிக்கவைத்துத் தவலையை அடுப்பிலிருந்து கீழே இறக்காமலே, அதில் கொதித்துக்கொண்டிருக்கும் வெந்நீரில் அந்த மரக்கிண்ணங்கள் இரண்டையும் வேகப்போடவேண்டும். அதில் சூடேறுவதற்கு இரண்டொரு நிமிஷம் செல்லும். அதற்குள் கம்பளித்துண்டு ஒன்றை எடுத்து இரண்டு மூன்றாக மடித்து, அதன் மத்தியிற் கட்டியின் அளவு துவாரம் அறுத்து, அத்துவாரத்தின் வழியாகக் கட்டி தெரிய, கம்பளி மடிப்பைத் தோளில் அழுந்தவைத்து, அடுப்பில் வேகும் கிண்ணங்கள் இரண்டில் ஒன்றை மேகம் மின்னி மறைவதுபோல் அவ்வளவு விரைவாக எடுக்கவேண்டும். தாமதமாய் எடுத்தால் கையில் சுடும். அன்றியும் அதில் சுவறிய நீர் நொடிக்குள் வற்றிப்போம். வெந்நீரில் இருந்து அவ்வளவு வேகமாக எடுத்த அந்தக் கிண்ணத்தை கம்பளிக்குமேல் இருக்கும் கட்டியின் வீக்கத்தில் அழுந்தவைக்கவேண்டும். நீராவியின் சூடு படபட வீக்கம் வற்றி வலியுந்தீரும். சூடாறிய பின் அந்தக் கிண்ணத்தை வெந்நீரில் போட்டு வெந்துகொண்டிருக்கும் வேறு ஒரு கிண்ணத்தை எடுத்து மேற்கூறிய

படியே செய்யவேண்டும். இப்படிச் செய்யக் கைச் சூடு சுறுப்பு அதிகமாய் இருத்தல்வேண்டும். கட்டியில் குளிர் காற்றுபடாதபடி ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். இவ்விதமாக மாக்கிண்ணங்களினால் உன் பெரிய தாயாருக்கு வந்திருக்கும் கட்டிக்கு ஏறக்குறைய அரை மணிநேரம் வரையில் சூடு காட்டியபிறகு, முன்னே நான் சொல்லியபடி உபநாகம் செய்து கட்டவேண்டும். தோல் காரம் தங்குமானால், ஆளிவிரை மா உபநாகங் கட்டுவதே உத்தமம். இத்தோல்காரத்துக்குப் பாதி ஆளிவிரைமா, பாதி ரொட்டிப்பொடி ஆகிய இரண்டையும் சேர்த்துக் கிளறிக் கட்ட வேண்டும். கட்டிக்கு ஆளிவிரை மாக்கிளறி கட்டுவ தால் உண்டாகும் குணத்தைப் போல் மற்றெந்தக் கட்டா லும் குணமுண்டாகாது. காரம் தாங்கக் கூடாதவர்களுக்கு ரொட்டி உபநாகந்தான் கட்டவேண்டும். வேறு சிகிச்சை யில்லை. கட்டி முகம் கண்டு, தானே உடையாதிருந்தால் சத்திரம் செய்யவேண்டும். மேற்குறித்தவாறு நீராவி சூட் டின் அனலை, கட்டி முகத்திற் காட்டினால் அது தானே உடைந்துவிடும். கட்டி வலிய உடைந்தாலும் சத்திரம் செய் தாலும் கட்டியைக் கரைத்து, சீழையும் புண்ணீரையும் கக்கு வித்து இரணத்தைச் சுத்திசெய்து ஆற்றும்படி பின்னும் நீராவி சூடுகாட்டவேண்டும். ஆணிச்சீழ் வந்தவுடன் தோல் தடிப்பின்றி வெளுத்திருக்கும். அதன் பிறகு நீராவிச்சூடு காட்டவேண்டியதில்லை. ஒரு பகல் முழுவதும் தண்ணீரில் கை வைத்திருப்பவர்களுக்கு அந்தக் கை வெளுத்திருப்பது போல் கட்டியின் முகத்தோல் வெளுக்குமானால் அதுவே புண்ணீர் அறத் தொலைந்ததற்குக் குறிப்பாகும். பிறகு உலர்ந்த இரணம் ஆற, துணியில் ஏதாயினும் ஒரு தைலம்

தடவிப்போடவேண்டும். வெண்ணெய் தடவினாலும் நல்லாம். சாதாரணக் கட்டி, எரிவந்தப் பருவு, இராஜக்கட்டி இவைகளுக்கு நான் அறிந்த உத்தம சிகிச்சை இதுதான் அம்மா இவ்வித சிகிச்சையால் அநேகருக்கு இலகுவாயிருக்கிறது. உன் பெரிய தாயாருக்குக் கண்டிருக்கும் கட்டி, சற்று விஷமுள்ளதானால் உடனே வைத்தியருக்குக் காட்டி ஔஷதத்தால்தான் போக்கவேண்டும். பலத்தை விருத்தி செய்யும் உண்டிவகைகளையும் கொடுப்பது அவசியமெனத் தோன்றுகிறது. ஆனால், எளியவர்களுக்கு நோய் வந்தால் அவர்களுக்கும் வேண்டும்படியான ஆகாரத்தைத் தேடுவது என்னமோ கஷ்டந்தான். ஆனாலும், உதிரம் சீழாக வடிந்த வண்ணமாயிருந்தால் தேகம் மெலிவடையாதிருப்பதற்காக நன்றாய்ப் போஷித்து வரவேண்டும். உண்டி எவ்வளவு கொடுத்தாலும் பெரும்பாலும் பசியெடுக்கும். வலிதெரியாதிருக்க சாராயம் முதலிய உத்தீபன மருந்துகளைக் கொடுத்துவர நினைப்பது தவறாகும். அதனால் நான் நன்மையுண்டாகுமென்று கூறமாட்டேன். முக்கியமாக புஷ்டி தரும் உண்டி வகைகள், பாலுவகைகள், "ஆரரூட்" இராஜா வள்ளிக்கிழங்கு முதலியவற்றைத் தேடிக்கொடுக்கவேண்டும். உன் பெரிய தாயார் மாம்சவகைகள் தின்று வழக்கப் பட்டிருந்தால் இப்பொழுது உண்ணத்தகும் உத்தமபோஜனம், ஊன்சாறுதான் (சூப்) என்பதை எனக்கு வைத்தியம் கற்பித்தவர்கள் கூறியிருக்கின்றார்கள். அவ்வளவுதான் நான் கூறவேண்டியது" என்று கொஞ்சமும் சலிப்பு வெறுப்பின்றி பொறுமையுடன் கூறி முடித்தாள்.

இவ்விதம் பச்சையம்மாள் கூறிய சிகிச்சா முறைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இலக்ஷ்மி பச்சையம்மா

ளைப் பார்த்து, "இந்த உபகாரத்தை நான் எப்போதும் மறவேன் அம்மா! தாங்கள் தருவதாகச் சொன்ன மருந்துக்காக, இப்போது நான் தங்களோடு வரட்டுமா?" என்று கேட்டாள்

அதற்குப் பச்சையம்மாள் அவளைப் பார்த்து, "நீ வருவது பின்னும் நலந்தான் அம்மா! ஆனால் நாளைக் காலை ஒன்பது மணிக்குள் வைத்தியசாலைக்கு வருவாயானால் நான் உனக்குத் தரவேண்டிய மருந்தைத் தருகிறேன்" என்று சொல்லி அவளிடத்திலும் அவள் தாயாரிடத்திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு வேறு ஒரு வீட்டிற்கு நோயாளியைக் காணச் சென்றாள்.

# 9-வது அத்தியாயம்.

## அம்மைவடு நீங்க உபாயம்.

தங்கள் சுகமே பெரிதெனக் கருதி அல்லும் பகலும் ஓயாதுழைத்துத் திரிவோர் என்னதான் குபேரசம்பத்தை யுடைவர்களாயினும் சரி; அவர்களுக்கு உண்மையான இன்பம் இன்னதென்றே தெரியதென்னலாம். அன்றியும் அவர்களுடைய மனதில் நிகழும் இன்பமானது தந்நலத்தோடு பிறர் நலமும் கருதி உழைக்கும் ஓர் ஏழையின் மனதில் நிகழும் இன்பத்திற்கு ஒரு சிறிதும் ஈடாகாதென்றும் உறுதி கூறலாம். இது அனுபவமுடையார் எல்லாரும் ஒப்புக்கொள்ளத் தகுந்த உண்மையேயாம்.

பரோபகாரிகளாய் வாழ்ந்தவர்களைப் பற்றித்தான் அந்நாள்தொட்டு இந்நாள் வரையில் வாழையடி வாழையாய் வரும் உலகம் புகழ்ந்துரையாடுகின்றது; போற்றுகின்றது. பரோபகாரிகளாற்றான் இப்போது நாம் பொன்னேபோற் போற்றிப் படித்து இன்புறும் பல நூல்கள்—அவைகள் எந்நூல்களாயினும் சரி—ஏற்பட்டு நின்று நிலையாயின. பாண்டிய மன்னர்கள் பலரும், வேறு பல்லரசர்களும் பரோபகார குணத்துடன் போற்றி ஆதரிக்காவிடின் இப்போது நாம் போற்றிப்புகழும் அநேகம் அருமைத் தமிழ் நூல்கள் ஏற்பட்டிருக்கக்கூடுமா? அவர்களுடைய ஆதரவில்லாதிருக்குமாயின் நம்முடைய பழப்பெருமை இன்னதென்றே அறியாதவர்களாய், நாம் காரிருளிற் செல்லுங் கண் தெரியாக் குருடரைப்போல் தவிப்போம். பரோபகாரிகளின்

தமையாலன்றோ, நம்மிந்தியமாதா பண்டைக்காலத்தில் ஒப்புயர் வில்லாத உன்னதநிலையை அடைந்திருந்தாள். இரந்தவர்க்கு இல்லையென்னாது கொடுத்து, இறுதியில் சொன்ன சொல் தவறாது, தன் தலையையும் பகைவர் கைவாளுக்கு இரைகொடுத்த பாரியென்ன! தன்னுடன் பிறந்தான், தன்னை அறியாவண்ணம் கானகத்திடையே வதிந்தபோது, தன்னை வந்து யாசித்த புலவர்பெருமானாகிய பெருஞ்சித்திரனார்க்குத் தன் தலையைக் கொடுக்க முழுமனதுடன் சம்மதித்த குமணச் சக்கரவர்த்தி யெங்கே? பட்டினப்பாலையென்னும் ஒரு பாட்டுப் பாடிய உருத்திரங் கண்ணனாருக்குப் பத்து நூறாயிரம் பொன் பரிசிலாக அளித்த சோழன் கரிகாற் பெருவளத்தானெங்கே? அவர்களெல்லோரும் இறந்து எத்தனையோ நூற்றாண்டுகளாயின ஆம், அவர்கள் எல்லோரும் இறந்து பலநூறு வருடங்களாயின. அவர்கள் எல்லோரும் இன்னின்ன இடத்தில் இருந்து வாழ்ந்தார்கள் என்று மயக்கமறக் கூறுவதற்கே இப்போது நம்மால் முடியவில்லை. ஆயினும் என்ன? அவர்களோடு நேற்றுத்தான் கூடிக்குலாவி பழகியவர்களைப்போல் ஓர் எண்ணம் நாம் அவர்களைப்பற்றி நினைக்கும்போது நம்முடைய மனதில் தோன்றுகிறது. அவர்களுடைய பூதவுடம்பு போயினும் புகழுடம்புடன் அவர்கள் இன்றும் நம்மிடையே இருந்து கொண்டுதான் இருக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் என்ன? அவர்களுடைய பரோபகார குணமேயாகும். பிற உயிர்களிடத்து அன்பு கொண்டு தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்து உயிர் நீத்தவர்கள் நமது பரத கண்டத்தில் எத்தனையோ பேர் இருந்தனர். அவர்களின் பெயர்கள் கல்லிற் செதுக்கிய எழுத்துகளைப்போல் பிரகாசிக்கின்றன.

அத்தகையோர்களின் சந்ததியார்களாகிய நாமோ, அவர்கள் சென்ற அடிச் சுவட்டைக்கூட கண்ணுற் காண மனமில்லாதவர்களாய் இருக்கின்றோம். ஆயினும் திருவருட் கிருபையால் இப்போதும் சேற்றிற் செங்கழுநீர் தோன்று வதேபோல் நம்மிடையே எங்கோ சிலர் உலகோப காரிக ளாகத் தோன்றி உழைத்துவருகின்றனர். அதனால் அவர் களுக்கு வரும் நன்மை மற்றவர்களுக்கும் கிடைக்கிறது.

'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால்வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை'

என்னும் ஆன்றோர் வாக்கு இதற்குத் திருஷ்டாந்தமாக விளங்குகின்றதே! பரோபகாரமானது அன்பின் வயப்பட் டதாகும். அன்புடையார் எவரோ அவர்கள்தாம் பரோ பகாரிகளாவர். உண்மை அன்புடையவர்கள் பிற உயிர்கள் வருந்தக்கண்டு தாங்கள் சகிக்கமாட்டார்கள்.

'அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு'

என்பது தமிழ்வேதம். அவர்கள் தங்கள் உயிர் போயினும் சரி, பிறவுயிர்களைப் காப்பாற்ற முந்துவர் என்பது திண் ணம். தேவர்களின் நன்மையைக் கருதி தேவேந்திரன், முதுகெலும்பைத் தரும்படி கேட்டபோது, ததீசி என் னும் முனிபுங்கவர் சற்றுந் தாமதியாது தம்முதுகெலும் பைக் கொடுத்துப் பிராணனை விட்டார். அற்பமாகிய, ஒரு புறாவின் ஜீவனைக் காப்பாற்று நிமித்தம் தன் தேகத்திலுள்ள தசைகளையெல்லாம் அறுத்துத் தராசிலிட்டார் சிபிச் சக்கிர வர்த்தி. இன்னும் பிறர் நன்மையைக் கருதித் தங்களுடைய

உடல், பொருள், ஆவி மூன்றையும் வெறுத்து உழைத்தவர்கள் இவ்வுலகில் எத்தனையோ பெயர்கள் உண்டு. ஐரோப்பா கண்டம் என்று அழைக்கப்படும் மேல்நாட்டில் அநேக வருடங்களுக்கு முன்னே கொடிய யுத்தம் ஒன்று நடந்தது. அப்போது அந்த யுத்தத்திலே படுகாயப்பட்டுத் தாகவறட்சியுடன் தரையில் விழுந்தார் ஒரு தளகர்த்தர். அப்போது ஒருவன் எங்கிருந்தோ அவருக்கு ஒரு கோப்பைத் தண்ணீர் குடிப்பதற்குக் கொண்டுவந்து கொடுத்தான். நெருப்பைப் போல் எரியும் தம்முடைய தாகந்தீர அந்தத் தண்ணீரை அவர் பருகப்போகும் சமயத்தில், அவரைப் போலவே அடியுண்டு தாகவறட்சியுடன் தரையில் விழுந்து கிடந்த மற்றொரு போர்வீரன் அதை ஆவலோடு பார்த்தான். அதையறிந்த தளகர்த்தர் தம்முடைய கையிலிருந்த தண்ணீரில் ஒரு துளியையும் தாம் தொடாமலே அப்படியே அந்தப் போர்வீரனுக்குக் கொடுத்துப் பருகும்படி செய்து தாம் தமது பிராணனைவிட்டார். அத்தகைய சந்தர்ப்பத்தில் அந்தத் தளகர்த்தர் தமது கடமையையும் பரோபகாரகுணத்தையும் காண்பித்து, உயிர் துறந்தார் என்பதை நினைக்கும்போது யார்தான் ஆச்சரியப்படாமலிருக்கமுடியும்? ஆகையால், மனிதர்களாய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் தங்கள் சுகமேபெரிதெனக் கருதி, உண்டு உலவிவருவது அறிவுடையோர் விரும்பத்தகுந்த விஷயமல்ல. அப்படிப் பார்த்தால் கேவலம் மிருகங்கள் கூட யாதொரு கவலையுமின்றி உண்டு உறங்குகின்றனவே! மற்றெல்லாச் சராசரங்களைக் காட்டிலும் மனிதர்கள் உயர்ந்தவர்கள் என்பதற்கு உணவும் உடையும் பேதப்பட்டிருந்தால் மட்டும் போதுமா? குணத்திலும் பேதப்பட்டிருத்தல் வேண்டுமன்றோ? மிருகங்கள்

வேறுவிசாரமின்றித் தம்மளவில் கிடைத்ததை உண்டு வாழ்கின்றன. மனிதர்களும் அவ்விதமே தங்கள் வரையில் கிடைத்ததை உண்டு, பிறரிடத்தில் எவ்வகை அன்பும் காட்டாதிருப்பார்களாயின்; அல்லது எவ்வகையிலா பரோபகாரங் கருதா திருப்பார்களாயின், அவர்களுக்கும் ஏனைய பிராணிகளுக்கும் இருக்கும் பேதந்தான் என்ன! ஆகையால், மனிதர்களாய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் தங்நலத்துடன் பிறர் நலங்கருதி வாழ்வதே தாமெடுத்த இவ்வரிய பிறவியாலடையும் பெருமையாம். நிற்க, பரோபகாரமே ஓருருவாய் வந்த பச்சையம்மாள், இலக்ஷ்மியின் வீட்டிலிருந்து புறப்பட்டவுடன், வேறு ஒரு வீட்டிலுள்ள நோயாளி ஒருவரைக் காணப்போனாள், என்று முன்னமே கூறியிருக்கிறோமல்லவா?

அவ்வீட்டாரை அவள் அதற்குமுன் ஒருபோதும் கண்டதேயில்லை. வந்துபார்க்கும்படி அவர்கள் அன்று காலையில்தான் பச்சையம்மாளுக்கு ஒரு ஆளை அனுப்பியிருந்தார்கள். அவர்கள் வீடு அழுக்கடைந்து அவலக்ஷணமாயிருந்தது. அங்கு வீசிய துர்நாற்றம் அங்கிருந்து பழகாத அன்னியர் நாசியில் நுழைந்தால், அந்த நிமிஷமே அவர்களுக்கு நோய் கண்டு படாதபாடு படுத்திவிடும் என்பது திண்ணம்.

பச்சையம்மாள் அந்த வீட்டுக்குப் போனவுடன் அங்கிருந்த பெண்கள், அவளை அன்புடன் வரவேற்றனர். இரண்டொரு நிமிஷத்தில் அப்பெண்களின் பெயர்களையும் அவர்களுடைய நிலைமையையும் பச்சையம்மாள் அறிந்து கொண்டாள். பிறகு அவ்வீட்டை ஒரு முறை நன்றாய் உற்றுப் பார்த்து வெறுப்படைந்தவளாக, எதிரில் இருந்த வீட்டின் எஜமானியைப் பார்த்து, "சுப்பம்மா, இதென்ன அலங்

கோலமாயிருக்கின்றதே! இந்த நிர்பந்தத்தை நான் எங்கும் கண்டதில்லையே. இவ்விதமான துர்நாற்றக் காற்று உலாவும் அறையில் வசிப்பவர்களுக்கு நோய் உண்டாவது அதிசய மல்லவே அம்மா!" என்று கூறிக்கொண்டே, அடைக்கப்பட்டிருந்த ஜன்னல்களை யெல்லாம் நல்ல காற்று தாராளமாக உள்ளே வரும்படித் திறந்துவிட்டாள்.

அவள் சொன்ன வார்த்தைகளைக் கொஞ்சம் கூட கவனியாமல் சுப்பம்மாள் அவ்வறைக்குள் ஒரு மூலையில் தூசிகள் படிந்த கட்டிலின்மேல் அழுக்கடைந்த வஸ்திரம் ஒன்றைப் போர்த்துக்கொண்டு படுத்திருந்த தன்னுடையப் பிள்ளையைக் காட்டி, "அம்மா, இவன் காய்ச்சல் கண்டு படுத்திருக்கின்றான். அதற்கென்ன செய்யலாம்? பாருங்கள்" என்று கூறினாள்.

அதைக் கேட்ட பச்சையம்மாள், "அவனைப் போல் காய்ச்சல் உங்களுக்கும் வராமல் இருக்கிறதே அது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது, சுப்பம்மா! நான் ஏன் இப்படிக் கூறுகிறேன் என்று தாங்கள் மனவருத்தப்படக்கூடாது. என்னைப்பற்றி உங்களுக்கு ஒன்றுந் தெரியாதாகையால் நான் எது சொன்னாலும் அது உங்கள் நன்மைக்காகவே சொல்லுகிறேன் என்பது உங்களுக்கு நினைவில் இருக்கட்டும். எந்தக் குடும்பத்தாரும் தங்கள் தேகசௌக்கியத்தில் கருத்து உடையவர்களானால் அதற்காக அவர்கள் தங்களுடைய வீட்டைப் பெருக்கிச் சுத்தமாய் வைத்திருப்பதே முதற்கடமையாகும். தினமும் வீட்டின் அடித்தளத்தை அழுக்குப் போகப் பெருக்கவேண்டும். நல்ல காற்று வீட்டிற்குள் உலாவும்படி செய்தல் வேண்டும்" என்று சொன்னாள்.

பச்சையம்மாள் கூறிய வார்த்தை, பேதையான சுப்பம்மாளுக்குத் திருப்தியாயில்லை. அவள் பச்சையம்மாளைப் பார்த்து, "பச்சையம்மா, நீங்கள் கூறுவது எனக்கு ஆச்சரியமா யிருக்கின்றதே! என் குழந்தை அறியாத பாலன், வியாதிகண்டு கட்டிலோடு கட்டிலாய்ப் படுத்திருக்க, வீட்டின் தளவரிசியை அழுக்கறத் தேய்த்துப் பெருக்கும்படி கூறுகிறீர்களே. அது எக்கேடுகெட்டால் எனக்கு என்ன? என் குழந்தையை அல்லவோ நான் கவனிக்கவேண்டும்" என்று கூறினாள்.

அதற்குப் பச்சையம்மாள், "சுப்பம்மா, நான் சொல்லும் வார்த்தையின் கருத்து இன்னதென்று தெரியாமல் தாங்கள் கூறுகிறீர்கள். குப்பைகூளத்தை அறத் துடைத்துப் பெருக்கித் தள்ளுவதினால் குழந்தைக்குச் சங்கடம் ஒன்றும் உண்டாகாது. வீட்டில் அழுக்கடைந்து துர்நாற்றம் வீச விட்டிருக்கின்றீர்களே! இதனால்தான் இவனுக்கு இந்த வியாதி வந்திருக்கிறதென்பதை நீங்கள் அறிவீர்களானால் இப்படிக் கூறுவீர்களா? ஐயோ, அம்மா! நான் சொல்லுகிறேன் என்று வருத்தப்படாதீர்கள். உடனே நான் சொன்னபடி செய்யுங்கள்" என்று சொன்னாள்.

பச்சையம்மாளின் வாக்குத் திறமை, யாரும் மதிக்கத்தக்கது. சுப்பம்மாளைப் பார்த்துக் கூறின அவளுடைய வார்த்தைகள் அதிகாரிகளுடைய வாக்கிலிருந்து புறப்படும் உத்தரவைப்போலும்; ஆப்த நண்பர்கள் விசுவாசமாகக் கூறும் மதுர வசனம்போலவும் இருந்தன.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சுப்பம்மாளுக்கு ஒரு நாளும் இல்லாத உற்சாகம் பிறந்தது. அடைக்கப்பட்டிருந்த பலகணிக் கதவுகளை அவள் உடனே திறந்தாள்.

சமையலுக்கு அடுப்பில் நெருப்பை மூட்டினாள். அறைகளில் இருந்த தும்பு தூசி குப்பை கூளம் முதலிய எல்லாவற்றையும் பெருக்கிக் கூடைகளில் வாரிக்கொண்டு போய்ப் புறக்கடைவாயில் வழியாகத் தெருவில் கொட்டினாள். அழுக்கு வஸ்திரங்கள் எல்லாவற்றையும் எடுத்து மூட்டைகட்டி வண்ணான் வரும்போது வெளுக்கக் கொடுப்பதற்காகப் பின்கட்டில் இருந்த ஓர் அறையில் கொண்டு போய் வைத்தாள். பெட்டிக்குள் மடித்துவைத்திருந்த சுத்தவஸ்திரங்களையும் எடுத்து, மடிப்புப் பிரித்து வாசலில் கட்டியிருந்த கொடியில் காற்றாரப் போட்டாள். அவ்விடத்தில் இருந்த அசுத்தங்களெல்லாம் அவ்வளவோடு தொலைந்தன. போகும் வழியில்லாமல் அடைபட்டிருந்த துர் நாற்றமான காற்றுந் தொலையவே, சுகத்தைத் தரும் நறுங்காற்று உட்புகுந்து உலாவியது. தன் வீட்டைப் பார்க்கப் பார்க்க அப்போதுதான் சுப்பம்மாளுக்கு அதிசயம் உண்டாயிற்று. அவ்வீட்டிற்கு அதற்குமுன் இல்லாத ஒளியும், களையும், மணமும் குணமும் உண்டாயின.

தன்னுடைய வியப்பையும் சந்தோஷத்தையும் அடக்குந் திறமின்றி, சுப்பம்மாள் பச்சையம்மாளைப் பார்த்து, "அம்மா, பிணியாளிகள் இருக்கும் அறைகளைத் தாங்கள் இப்படித்தான் நித்தமும் சுத்தம் செய்விப்பது வழக்கமா?" என்று கேட்டாள்.

அதற்குப் பச்சையம்மாள் "ஆம். எப்போதும் பிணியாளிகள் இருக்கும் அறைகளை நான் இப்படித்தான் சுத்தம் செய்வித்து வருகிறேன்" என்று கூறினாள்.

சுப்பம்மாள் :—" ஏன் பச்சையம்மா! இப்படிச் சுத்தமாயிருப்பதினாலேயே வியாதி வாராதிருந்துவிடுமா?"

பச்சையம்மாள் :—“ அநேகமாய் வராது. அப்படி வந்தாலும் இலேசானபக்குவத்தில் போய்விடும். தொத்துவியாதிகள் வராமல் தடுப்பதற்கும், வந்த நோய்களைப் போக்குவதற்கும் தேகத்தையும் வீட்டையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை நோயாளிகளுக்கு உபசாரம்செய்து அநுபவப்பட்டவர்களே நன்றாய் அறிந்திருக்கின்றார்கள். அதற்கு உதாரணமாக, என் அநுபவத்தில் நடந்த பல செய்திகளில் ஒன்றைச் சொல்லுகிறேன் கேள் அம்மா! கொஞ்ச காலத்திற்குமுன் அம்மை வியாதிகண்டு அவஸ்தைப்படும் ஒரு எளிய ஸ்திரீயை, வந்து பார்க்கும்படி என்னைச் சிலர் அழைத்தார்கள். அவர்கள் இஷ்டப்படியே நோயாளியைப் போய்ப் பார்வையிட்டேன். அவள் படும் இம்சையைக் கண்டவுடன் என்னுடைய மனம் பரதவித்தது. அவள் இருந்த அந்த வீடு, இன்று நான் வரும்போது உங்களுடைய வீடு இருந்த மாதிரியே இருந்தது அதைக் கண்டு பொறுத்திருக்க என்னுடைய மனம் சகிக்கவில்லை உடனே நானும் அங்கிருந்த ஸ்திரீ ஒருத்தியும் வீட்டை அழுக்குப் போகும்படி விளக்கினோம். எருமுட்டையைக்கொண்டு அடுப்பில் நெருப்புமூட்டினோம். மழை தூறியதனால் தூவானம் இறைக்குமென்று பலகணிகளை நன்றாய்த் திறக்கவில்லை. யாராவது வரும்போதன்றி மற்ற வேளைகளில் அடைபட்டிருக்கும் கதவைத் திறந்து வைத்தோம். அதன்பிறகு வீடுபரிசுத்தமாகவும் கண்ணுக்கு அழகாகவும் இருந்தது. கெட்ட காற்று அங்கிருந்து தொலையவே நல்ல காற்று தாராளமாக வீடெங்கும் உலாவியது. அப்பால், நோயாளிக்கு மருந்தும் வேண்டுமா? சுத்தமும் சௌகரியமுமான வீட்டில் வியாதி தங்குமா பிறகு நான்கு தினங்களுக்குள் அந்த ஸ்திரீக்கு வியாதி படிப்

படியாய் சௌக்கியமாயிற்று. அங்கிருந்த ஒருவருக்கும், நான் வழி காட்டுவதற்குமுன், அப்படிச் செய்தால் வியாதி சொஸ்தமாகுமென்று தெரியவில்லை. பார்த்தையா சுப்பம்மா! சுத்தமாயிருப்பதனால் எவ்வளவு நன்மை உண்டாகிறது! அதுமட்டுமா! வியாதியால் இருந்த அந்த ஸ்திரீ நான் சொன்னபடியெல்லாம் நடந்துகொண்ட படியால், அவள் முகத்தில் அம்மைவடு இல்லாமல் செய்துவிட்டேன்."

சுப்பம்மாள்:—"அதெப்படி அம்மா! நீங்கள் செய்துவிட்டீர்கள்? நீங்கள் சொல்லுவதெல்லாம் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறதே."

பச்சையம்மாள்:—"ஆச்சரியப்படும்படியான அதிசயம் ஒன்றும் எனக்குத் தெரியாதம்மா. அந்த ஸ்திரீயின் முகத்தில் இருந்த அம்மை வடுவைப் போக்கிய இரகசியத்தைக் கூறுகிறேன் கேள், அம்மா! தேர்ச்சிபெற்ற வைத்தியர் ஒருவர் அம்மைத்தழும்பைப் போக்கு முறையை எனக்குச் சொல்லிக் கொடுத்தார். அவர் சொல்லியபடியே நான் அந்த மனுஷிக்குச் சிகிச்சை செய்தேன். அந்த மட்டும் அவள் அதிர்ஷ்டக்காரியென்றே சொல்லவேண்டும். நான் செய்த சிகிச்சையால் அவள் முகத்தில் ஒரு அம்மைத் தழும்புகூட இல்லாமல் மாறிப் போயிற்று."

சுப்பம்மாள்:—"அந்த அம்மைத் தழும்புகள் மாறும்படி தாங்கள் செய்த சிகிச்சை என்ன அம்மா?"

பச்சையம்மாள்:—"சொல்லுகிறேன் கேள் அம்மா, ஒரு புட்டியில் தண்ணீர்விட்டு அதில் கருவேலம் பிசினி போட்டு ஊறவைத்து, அதோடு தேன் கொஞ்சம் கலந்து நன்றாய்த் தண்ணீர் கறுப்பாகும்படி புட்டியைக் குலுக்கிப் பிறகு அதில் வீடுகளில் பிடித்திருக்கும் ஒட்டடையை வேண்டு

மளவிற்குப்போட்டுத் திரும்பவும் புட்டியை நன்ருய்க்குலுக்கிவைத்துக்கொண்டு, சாதாரணமாக எங்கும் கிடைக்கக்கூடிய கோழி இறகால் புட்டியில் உள்ள மேற்படி மருந்தை எடுத்து ஒவ்வொரு அம்மைத் தழும்பிலும் இடை வெளியின்றித் தடிக்கப் பூசினேன். அப்போது அந்த ஸ்திரீ அங்கம் கறுத்து காப்பிரித்தேசத்தாளைப்போல் கொஞ்சமும் வித்தியாசமில்லாமல் தோன்றினுள். அதனுல் குற்றமொன்று மில்லையே! ஜீவன் உள்ளளவும் அம்மை வடு மாருத குரூபியாகிக் காணும் எவருக்கும் அருவருப்பை உண்டாக்குவதிலும் அம்மை வடு மாறுமளவும் அதாவது பத்துப் பன்னிரண்டுநாள் வரையில் மேனி கறுத்துக் காப்பிரியைப்போல் காணப்படுவது குற்றமல்லவே! சுப்பம்மா, இப்போது நான் கூறியதுபோலவே மருந்து செய்து பூசினுல் அம்மைப் புண்கள் ஆறி உலர்ந்து தழும்பும் மாறிப்போய்விடும். ஒளியும் காற்றும் அம்மை கண்டிருப்போர்மீது அதிகமாகப் படாதிருந்தால் குழி குழியாய் அம்மைவடு உண்டாகாதிருக்கும் அப்படி உண்டாளுல், உடனே நான் முன் சொன்னபடி மருந்துசெய்து பூசினுல் தழும்புகள் மாறிப்போய் விடும். ஆனுல் இந்த சிகிச்சையை அம்மைத் தழும்புகள் ஏற்பட்ட வெகு காலத்திற்குப் பிறகு செய்தால் பிரயோசனமுண்டாகாது."

சுப்பம்மாள்:—"அம்மா! அந்த மருந்தின் அதிசயமே அதிசயம். அம்மைத் தழும்பைப் போக்குவதற்கு இவ்வளவு இலேசாய் செய்யக்கூடிய மருந்து ஒன்று இருப்பதாக இதுவரையில் எனக்குத் தெரியாதம்மா, என்ன அதிசயம்!"

பச்சையம்மாள்:—"அதிசயந்தான். ஆதியில் இந்த மருந்து கண்டறிந்த வகையைப்பற்றிக் கேள்விப்படுவீர்

களானால் பின்னும் ஆச்சரியப்படுவீர்கள் என்பது திண்ணம். அந்த அதிசயத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அநேக வருஷங்களுக்குமுன்னே ஒரு பட்டணத்தில் பட்டாளம் ஒன்று தங்கியிருந்தது. அவர்கள் தங்கியிருந்த கூடாரம் தேகசுகத்துக்குத் தகுந்தாற்போல் அமைந்திருக்கவில்லை. அதனால் இராணுவ வீரர்கள் தேகசுகம் குறைந்து அம்மை வியாதிக்குள்ளானார்கள். அந்த வியாதியும் வர வர விர்த்தியாயிற்று. அம்மை காணக்காணை, நோயாளிகளை வைத்தியசாலையில் வைத்து உபசரித்தார்கள். சில தினங்களுக்குள் வைத்தியசாலை நிரம்பிவிட்டது. அதன் மேல், அவ்வியாதி கண்டவர்களை வைத்து வைத்தியம் செய்ய வைத்தியசாலையில் இடம் இல்லை. இதைப்பற்றி உத்தியோகஸ்தர்களுக்கு அதிகக் கவலையுண்டாயிற்று. பற்பல விதமாகச் சிந்தித்தும் ஒருவித உபாயமும் அவர்களுக்குத் தோன்றவில்லை. ஒன்றுக்கும் உதவியற்ற பழைய சாமான்கள் முதலிய பொருள் வைக்கும் ஓரறை வைத்தியசாலையின் பக்கத்தில் இருந்தது. அது வியாதியஸ்தரை வைத்து உபசரிக்க உதவுமென்று ஒருவன் உத்தியோகஸ்தருக்குக் கூறினான். ஆனால் அந்த அறையோ மனிதர்கள் தங்குவதற்கு ஏற்றதேயல்ல. வெளிச்சமும் காற்றும் அவ்வறைக்குள் பிரவேசிக்கத் தகுந்த பலகணிகள் ஒன்றும் கிடையாது. அது ஒரு புழுக்கமான இருட்டறையென்றே கூறவேண்டும். என்ன செய்கிறது? அது ஒழிய அவர்களுக்கு அச்சமயத்தில் வேறு புகலிடம் இல்லை. ஆயினும், வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்னும் பழமொழிக்கிணங்க, உத்தியோகஸ்தர்கள் தகுந்த ஏற்பாடு செய்து அவ்வறையையும் தம் புத்தியின் திறமையினால் வைத்தியசாலை

யாக்கி, அங்கே சில நோயாளிகளை இருக்கச் செய்தார்கள். வெளிச்சமும் காற்றும் உட்செல்லப் பலகணிகள் இல்லையாதலால் அவைகளுக்குப் பதிலாக சுவரில் அங்கங்கே வட்டமான துவாரங்கள் செய்தனர். இனி பிழைப்பது அரிதென்று கைவிடப்பட்ட நோயாளிகள் பலர் அவ்வறைக்குள் கொண்டுபோய் வைக்கப்பட்டனர். அந்த நோயாளிகளும் தாங்கள் அந்த அறைக்குள் இருப்பதிலும் இறப்பதே மேலென்று நினைத்தனர். தங்களை அவ்வறைக்குள் விட்டுக் கொல்லுவது அதர்மமாகுமென்று கூறினார்கள். ஆனால் மனிதர்களுக்கு; ஆதியில் நன்மையாகத் தோன்றுவது கடைசியில் தீமையாகவும்; முதலில் தீமையாகத் தோன்றுவது முடிவில் நன்மையாகவும் விளைவதை பெரும்பாலும் நாம் நம்முடைய அனுபவத்தில் கண்டிருக்கிறோமல்லவா ? ஆனால் தீர்க்காலோசனையும், ஆழ்ந்த அறிவும் இல்லாதவர்கள் அவ்வப்போது நேரிடும் இன்ப துன்பங்களைச் சாசுவதமென்றெண்ணி வீணைமிதமிஞ்சி சந்தோஷப்படுவதும், துக்கப்படுவதும் இயற்கை. பிழைக்கமாட்டார்கள் என்று கைவிடப்பட்டுச் சுகத்திற்கனுகூலமில்லாத அறையில் வைக்கப்பட்ட இராணுவ வீரர்களாகிய நோயாளிகள், எல்லோரும் கண்டு ஆச்சரியப்படும்படியான பூரண சுகத்தையடைந்து அவ்வறையிலிருந்து வெளிப்பட்டபோது முன்பு தாங்கள் அவ்வறையில் வைக்கப்பட்டதற்காக மனக்குறையடைந்ததும், முறையிட்டதும் அறியாமையேயன்றி வேறன்றென்று திருஷ்டாந்த மூலமாக அறிந்தனர். அதையெல்லாம் குறித்து அதிசயப்படவில்லை. ஆனால் காற்றும் ஒளியுமில்லாத நிர்ப்பந்தமான அறைக்குள் இருந்து பிணி தீர்ந்துவந்த அவர்களுக்கு அம்மை வடு அணுவளவும் இல்லை. காற்றாகலம்

ஒளிநலம் முதலியன பூர்த்தியாயுள்ள சிறந்த வைத்திய சாலையில் சுகித்திருந்து வந்தவர்களோ, சாங்காலமளவும் நீங்காத அம்மைத்தழும்பு அங்கமெங்கும் நிறைந்த விகார ரூபிகளானார்கள்.

சுப்பம்மாள்:—"இதுவரையில் நான் எங்கும் இப்படிப்பட்ட அற்புதச் செய்தியைக் கேள்விப்பட்டதில்லையம்மா. நீங்கள் சொல்லுவதென்ன ஆச்சரியமாகவே இருக்கின்றது? இருட்டறையில் இருந்தவர்கள் பிழைத்ததே பெரிய காரியம். அதோடு அவர்களுக்கு அம்மைத் தழும்பும் ஏற்படவில்லை என்று கூறினீர்களே! அதற்குக் காரணம் இன்னதென்று தெரிந்திருந்தால் சொல்லுங்கள்."

பச்சையம்மாள்:—"சுப்பம்மா, இப்போது உம்மிடம் நான் கூறிய வார்த்தைகளைக் கேட்டோர் யாவரும் உம்மைப்போலவே அம்மைத் தழும்பு ஏற்படாமல் இருந்ததற்குக் காரணம் கேட்டதுண்டு. இராணுவ அதிகாரிகள் அதிசயப்பட்டதைப் போலவே அம்மைவடுவில்லாதவர்களைக்கண்ட வைத்தியசாலையில் இருந்த வைத்திய நிபுணர்களும் அதிசயப்பட்டனர். அன்றுமுதல் வைத்தியர்களுக்கும் பலவித கல்வித்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்னும் ஆவல் உண்டாயிற்று. அவர்கள் பற்பல விதமாகச் சிந்தனைசெய்து தீர்க்காலோசனை செய்தனர். காரணம் இன்னதென்று கண்டறியும் வரையில் அவர்களுடைய ஊக்கம் கொஞ்சமும் குறையவில்லை. சில மாதங்கள் சென்ற பிறகு அதற்குக் காரணம் இன்னதென்று அவர்களுக்குத் தகுந்த அத்தாட்சியுடன் புலப்பட்டது."

சுப்பம்மாள்:—"அந்தக் காரணம் இன்னதென்று அறிய எனக்குப் பெரிதும் ஆவலாக இருக்கிறது. அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள் அம்மா, கேட்போம்."

பச்சையம்மாள்:—"ஆஹா! தடையில்லாமல் கூறுகின்றேன், நான் கேட்டதைச் சொல்லத் தடையென்ன! சொல்லுகிறேன் கேள் அம்மா! அம்மை வார்த்திருப்பவர்களுக்குப் பால் கொண்டு முத்து உடைந்து இருக்கும்போது அந்தப் பாலில் சூரிய ஒளிபட்டால் அதற்கு மேலும் மேலும் காரம் ஏறும். ஆகவே, நைந்த சதையைப் பின்னும் நைந்துபோகச் செய்து தின்றுவிடும். அதனால் புண் ஆறும்போது கொப்புளம் இருந்தஇடம் குழிந்து கறுத்து முகம் முதலிய அவயவங்களை விகாரமாகத் தோற்றுவிக்கும். அது தான் அவர்கள் ஆராய்ந்து அறிந்த சாஸ்திர இரகசியம்."

சுப்பம்மாள்:—"அந்த அறையில் சூரிய ஒளிபட நியாயமில்லாத படியினால்தான் அந்த இராணுவ வீரர்களுக்கு அம்மை வடு இல்லையோ? சரிதான். ஆனால், ஏன் அம்மா இனி அம்மைகாணும் எவரும் இந்த முறையை எளிதாக அனுசரித்துத் தங்களுக்கு அம்மை வடுவில்லாமல் செய்து கொள்ளலாமே?"

பச்சையம்மாள்:—"நான் நினைப்பதும் அப்படித்தான். ஆனால் நல்லதைச் சொன்னால் பல பேதை மனிதர்கள் கேட்பதேயில்லை. சொல்லுவதின் கருத்தை அவர்கள் சிந்திப்பதேயில்லை. அம்மை வடு மாற, நான் முன்னே சொன்ன மருந்தைப் பூசிக்கொள்ளும்படி கூறினால் முகத்தை விகாரமாக வைத்துக்கொள்ளுவது தங்களுக்குப் பெரிய உபத்திரவமென்று கூறி, அவர்கள் என் வார்த்தைக்கு உடன்படுவதில்லை. அவர்கள்தான் என்ன செய்வார்கள் பாவம்.

அவர்கள் அறியாமையால், நன்மை தீமைகளை அறியமுடி யாமல் அவ்விதமெல்லாம் கூறி கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இது போகட்டும் சுப்பம்மா, உன் மகன் செய்தி என்ன! அவனுக்குத் தாகம் எடுக்கிறதா?"

இவ்விதம் அவள் கேட்டவுடன் படுக்கையில் இருந்த அவளுடைய மகனாகிய கதிர்வேல், மெல்லிய குரலில் "தொண்டை வறண்டுபோயிற்று. தாகம் அதிகமாய் இருக்கிறது" என்று கூறினான்.

அவன் சொன்ன அவ்வார்த்தைகள் பச்சையம்மாள் காதில் விழுந்தன. உடனே அவள் அவன் படுத்திருந்த படுக்கைக்குச் சமீபத்திற் போய் நின்றுகொண்டு, அவனுடைய கை நாடியைப் பிடித்துப் பார்த்தாள். பிறகு அவள் சுப்பம்மாளைப் பார்த்து, "இப்போது நம்முடைய வைத்திய சாலைக்குப் போய்வர யாராவது ஒரு ஆளை அனுப்பமுடியுமா?" என்று கேட்டாள்.

அதற்கு, சுப்பம்மாள், "இதோ என்னுடைய இளைய மகன் கந்தசாமி இருக்கிறான். அவனை அனுப்புகிறேன்" என்று கூறி, சுப்பம்மாள் தன்னுடைய இளைய மகனாகிய கந்தசாமியை அழைத்துப் பச்சையம்மாள் எதிரில் நிறுத்தினாள்

உடனே பச்சையம்மாள் தன்னுடைய பிரம்புப்பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு பென்சிலும் காகிதமும் எடுத்து, ஏதோ இரண்டொரு வரிகளை எழுதி மடித்து அந்தக் காகிதத்தைச் சிறுவன் வசம் கொடுத்து, "தம்பி, நீ இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் நமது வைத்தியசாலையில் இருக்கும் வைத்தியரிடம் கொடு. பிறகு அவர் கொடுப்பதை வாங்கிக்கொண்டுவா" என்று கூறி, அனுப்பினாள்.

அவன் சென்றபிறகு பச்சையம்மாள் சுப்பம்மாளைப் பார்த்து; "இப்போது வைத்தியசாலைக்குப் போயிருக்கும் உன் மகன் கொஞ்சம்புளிக்கஷாயமும், வேண்டும்போது காய்ச்சிக் கொள்ளுவதற்காக ஒரு ஜாடியில் புளியும் கொண்டுவருவான். அந்தப் புளிக்கஷாயம் உஷ்ண சாந்தி செய்யக்கூடியதாகும். எவரும் வேண்டும்போது எளிதில் செய்து கொள்ளலாம். அதைச் செய்யும் பக்குவத்தைச் சொல்லுகிறேன் கேள். அரையே அரைக்கால் ரூபா எடை புளியைக் கால்புட்டி வெந்நீரில் போட்டு ஒரு மணி நேரம் ஊற வைத்துக் குலுக்கி அந்தப் புளி நன்றாய்க் கரைந்தவுடன் அதை வடிகட்டி அதிற் கொஞ்சம் கொஞ்சமாக உன் மகனுக்குக் கொடுக்கலாம். புளிக்கஷாயம் குடிப்பதில் உன் மகனுக்கு வெறுப்புண்டானால், அரைரொட்டிக் கிழங்கு மா உச்சிக்கரண்டி அவ்வளவு எடுத்து அதிற் குளிர்ந்த ஜலம் சிறிது விட்டு மாவை நன்றாகக் கரைத்து அதில் காலே அரைக்கால் இராத்தல் வெந்நீரும் ஒரு எலுமிச்சம்பழம் இரசத்தில் பாதியும் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்து நன்றாகக் கலக்கி மெல்லிழை வஸ்திரத்தினால் வடிகட்டி அதைத் தாகம் எடுக்கும்போது குடிப்பதற்குக் கொடு. கஷாயம் சற்றுத் தடிப்பாயிருக்கவேண்டுமானால் தண்ணீரைக் குறைக்கவேண்டும். புளிக்கஷாயத்தைப் பார்க்கிலும் இந்தக் கஷாயம் வாய்க்கு ருசியாய் இருக்கும். இதனால், சரீரபுஷ்டியும் உண்டாகும். அன்றியும், இது எளிதில் ஜீரணமாகும். அரைரொட்டிக் கிழங்குமாவை நான் கொடுத்தனுப்புகின்றேன். கதிர்வேலுக்கு வியாதி கண்டு அதிக நாளாயிற்றா?" என்று கேட்டுக் கொண்டே படுக்கையில் இருக்கும் கதிர்வேலைப் பார்த்தாள்.

சுப்பம்மாள்:—"ஆம் அம்மா, அவன் வியாதியில்விழுந்து பதினறு நாட்கள் ஆகின்றது. இப்பொழுது உள்ள வருத்தம் இதற்குமுன் இல்லை."

பச்சையம்மாள்:—"பதினறு நாட்களாயிற்று? அப்படியானல் ஏன் எனக்கு இதற்கு முன் சொல்லி யனுப்பவில்லை?"

சுப்பம்மாள்:—"சொல்லி அனுப்பாதது என்னவோ குற்றந்தான். ஆயினும் ஒன்று சொல்லுகிறேன் பச்சையம்மா. குற்றமாக நினைக்கவேண்டாம். என்போலும் எழுத்தறியாப் பேதைகளுக்கு வியாதியின் குணம் குறி சந்தேகமறத் தெரியுமா? மூக்கைப்பிடித்தால் வாயைத் திறக்கத் தெரியாத பேதை நான். பிள்ளைக்குச் சொற்ப ஜலதோஷம் கண்டிருக்கிறதென்றும் விரைவில் சொஸ்தமாய்விடுமென்றும் நினைத்து அஜாக்கிரதையாயிருந்து விட்டேன். இந்த விபரீதம் வருமென்று அறிந்தேனயின் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த பாலகனுக்குத் துரோகம்செய்வேன?"

பச்சையம்மாள் :—"அதிருக்கட்டும் சுப்பம்மா! கதிர்வேலுக்கு இதற்குமுன் எப்போதாவது குளிர் ஜுரம் வந்ததுண்டா?"

சுப்பம்மாள்:—"ஆம் அம்மா, குளிர் ஜுரம் கண்டது. அப்பொழுது என் மகன் பட்டபாட்டை என்ன சொல்லி ஆறுவேன்! தேகமுழுவதும் உதறிக் குளிர் அவனை விடவிடென்று குலுக்கிவிட்டது; பல் கிட்டியது; தொட்டால் கைகொப்பளிக்கக் காய்ச்சல் உலையில் மூட்டிய நெருப்பைப்போல் காய்ந்தது."

பச்சையம்மாள்:—“அப்போது யாரேனும் வைத்தியர் ஒருவரை வரவழைத்து மருந்து கொடுக்கச் செய்தாயா?”

சுப்பம்மாள்:—“இல்லையம்மா.”

பச்சையம்மாள்:—“ஏன்?”

சுப்பம்மாள்:—“இதெல்லாம் என்னைப் போன்றவர்களுக்கு எப்படித் தெரியும். வைத்தியரை அழைப்பதென்றால், அவருக்குக் கை நிறையப் பணம் அள்ளிக் கொடுக்க வேண்டாமா! அதற்கு வகையிருந்தால், நான் இந்த தரித்திர நிலையில் இருந்து கஷ்டப்படுவேனா?”

பச்சையம்மாள்:—“வாஸ்தவந்தான். வைத்தியரை அழைக்கவும், மருந்து செலவுக்குப் பணம் கொடுக்கவும் முடியாதுதான். உடனே வந்து என்னிடமாவது, அல்லது வைத்தியசாலைத் தலைவரிடமாவது விஷயத்தைத் தெரிவிப்பதற்கு நாலு ஐந்து ரூபாய்கள் செலவிடவேண்டிய அவசியம் இல்லையே? வியாதியின் குணம் குறி தெரியாதென்று நீ சொல்லியதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். நோய் கண்டவுடனே, அது இன்னநோய் என்று அதன் குணங்குறிகளால் கண்டறிவது உன்னால் முடியாது என்பது எனக்கும் தெரியும். ஒரு வியாதி கண்டிருக்க, சிலர் அவ்வியாதியை வேறு ஒருவியாதியாக நினைத்துக்கொண்டு ஏதாவது ஒரு மருந்தைக் கொடுத்து விடுகிறார்கள். தெய்வாதீனமாக வியாதி தீர்ந்தாலும் தீரும். மருந்து, நோயாளிக்கு வினையாக நேர்ந்தாலும் நேரும். ஆனால், உடலைப்பற்றிய தாப ஜுரம் தான் மிகவும் கெடுதலானது. அதற்குச் சில குறிகள் உண்டு. அது கண்டவர்களுக்கு குளிர், காய்ச்சல், இரைப்பு, நடுக்கம், கைகால் குடைதல், ஜன்னி, மயக்கம், முதலியன

உண்டாகும். அதற்கு அப்பொழுதே தேர்ந்த டாக்டரைக் கொண்டு ஜாக்கிரதையாகச் சிகிச்சை செய்யவேண்டும். ஏனோதானோ என்று இராமல், மேற்குறித்த வியாதி கண்டவுடன் டாக்டரை அழைத்துக் கவனிக்கச் செய்தால் நோயாளிகளில் பெரும்பாலோர் நிச்சயமாகச் சுகமடைவார்கள் என்பது திண்ணம்.”

சுப்பம்மாள்:—“நல்லது அம்மா, இனிமேல் தாங்கள் கூறியபடியே நடந்துகொள்ளுகிறேன். கதிர்வேலுக்கு இப்போது மருந்து ஒன்றும் கொடுக்கவேண்டாமா?”

பச்சையம்மாள்:—“ஆம் அம்மா, நான் முக்கியமான விஷயத்தை மறந்துபோனேன்!” என்று சொல்லிக்கொண்டே பச்சையம்மாள் தன்னுடைய பிரம்புப் பெட்டியைத் திறந்து அதிலிருந்த ஒரு சிறிய குப்பியில் இருந்து மூன்று மாத்திரைகளை எடுத்துச் சுப்பம்மாளிடம் கொடுத்து, “இந்த மாத்திரைகளை மூன்று மணி நேரத்திற்கு ஒரு தரம் ஒவ்வொன்றாக உன் மகனுக்குக் கொடு. நாளைக் காலையில் நான் வருகிறேன்” என்று கூறினாள்.

சுப்பம்மாள்:—“நல்லது அம்மா, அப்படியே செய்கிறேன். என் கைக் குழந்தைக்கு அஜீரணம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு என்ன செய்யலாம் அம்மா?”

பச்சையம்மாள்:—அப்படியா. உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோ. நான் சொல்லி யனுப்பியதாகச் சொல். தகுந்த மருந்து கொடுப்பார்கள். உடனே குணமாகும்.” என்று சொல்லிப் பச்சையம்மாள் சுப்பம்மாளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

காற்றோடுக்கமாயிருந்த சுப்பம்மாளின் வீட்டை விட்டு நீங்கியது பச்சையம்மாளுக்குப் பெரிய ஆறுதலாயிருந்தது. அவள் தன் வீட்டிலிருந்த காடிபுட்டியை எடுத்துக் கொஞ்சம் காடியை வாயில் ஊற்றி ஐந்தாறு துளி விழுங்கி மற்றதை நன்றாய் அலசிக் கொப்பளித்துச் சாக்கடையின் ஓரமாகச் சென்று உமிழ்ந்துவிட்டாள். தொத்துவியாதியைத் தவிர்க்க இதற்கு மிஞ்சிய எளிய மருந்து இல்லையென்று பச்சையம்மாளுக்கு அனுபவசித்தமாகத் தெரியும்.

பிறகு பச்சையம்மாள் வேறு சுத்தமான புடவை ஒன்றை அணிந்துகொண்டு போஜனம் செய்து மறுபடியும் வைத்தியஞ் செய்யப் புறப்பட்டாள்.

# 10-வது அத்தியாயம்.

## கமலாக்ஷியம்மாள்.

பச்சையம்மாள் தன்னுடைய வீட்டிலிருந்து புறப்பட்டவுடன் ஒரு வேலைக்காரன் அங்கு வந்து அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதை அவள் பிரித்துப் பார்த்தாள். அதில் தனக்கு ஒழிவிருந்தால் உடனே வந்து தன்னைப் பார்க்கும்படி கமலாக்ஷியம்மாள் எழுதியிருந்தாள்.

உடனே பச்சையம்மாள் வந்த வேலைக்காரன் பிறகே சென்று, தன் வீட்டின் மேல்மாடியில் சாய்வான நாற்காலி ஒன்றில் அமர்ந்து நளச்சக்கிரவர்த்தி சரிதத்தைப் படித்துக் கொண்டிருந்த கமலாக்ஷியம்மையைக் கண்டாள்.

பச்சையம்மாளைக் கண்டவுடன் கமலாக்ஷியம்மை கையிலிருந்த புஸ்தகத்தையும், அணிந்துகொண்டிருந்த மூக்குக் கண்ணாடியையும் அருகிலிருந்த மேஜையின்மீது வைத்துவிட்டு, "வந்தாயா பச்சையம்மா! நான் அழைத்ததும் இவ்வளவு விரைவாக வந்தாயே! ஒரு சமாசாரம் சொல்வதற்காக வரவழைத்து, நான் இவ்வளவு சிரமத்தை உனக்குக் கொடுத்துவிட்டேன்" என்று கூறினாள்.

பச்சையம்மாள்:—"நன்றாய்ச் சொன்னீர்கள். எனக்கு என்ன சிரமம் வந்தது. முன் தங்களை இங்கு வந்து பார்த்துப்போன பிறகு, இதுவரையில் மறுபடியும் வந்து பார்க்கவில்லையே என்று எனக்கெவ்வளவோ வருத்தமாயிருக்கிறது. உடனே வருமாறு அழைக்கவே, என்னவோ என்று அஞ்சினேன். இப்போதுதான் என்மனம் சமாதானமடைந்தது."

கமலாக்ஷியம்மாள்:— "அப்படி எனக்கு ஒன்றும் குறையில்லை. என்னிடத்தில் வேலைக்கமர்ந்துள்ள சிறு பெண் ஒருத்தி நோயாளிகளை உபசரிக்கும் முறைகளைக் கற்றுக்கொள்ள மிகவும் ஆவலுடையவளாயிருக்கிறாள். நான் அவள் விரும்பிய வழியில் அவளை விருத்தியடையச் செய்ய விரும்புகிறேன்."

பச்சையம்மாள்:—"தங்கள் விருப்பம் சரியானதுதான். அதற்காக நான் ஏதாவது செய்யவேண்டியிருந்தால் சொல்லுங்கள்."

கமலாக்ஷியம்மாள்:—"ஆம் அம்மா, சொல்லத்தான் வரவழைத்தேன். அந்தச் சிறுமிக்குக் காயம்கட்டுவது, காரம் வைத்துக் கொப்புளிக்கச்செய்து இரணத்தை ஆற்றுவது, அட்டை விடுவது முதலிய சாதாரண சிகிச்சைகளை வைத்தியம் செய்யப்போகும் இடங்களுக்கு உன்னுடன் அவளை அழைத்துக்கொண்டுபோய், அனுபவத்தையொட்டி அவளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும்."

பச்சையம்மாள்:—"சந்தோஷம், அந்தக் கருத்துள்ள பெண்பிள்ளைகளைத் தேடி அவர்களுக்கு வைத்தியம் கற்பிக்க வேண்டுமென்பது என்னுடைய நெடுநாளைய எண்ணம். கடவுளே இப்போது என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றினார் என்று நினைக்கிறேன். நல்லது மாமி, அந்தச் சிறுமியை நாளைய தினம் காலையில் ஏழு மணிக்குள் என்னுடைய வீட்டுக்கு வரச்சொல்லுங்கள். அவளுக்கு வேண்டிய உதவியை நான் தடையின்றிச்செய்கிறேன்."

கமலாக்ஷியம்மாள்:—"ஆம், பச்சையம்மா! அந்தப் பெண்ணுக்கு ஆகவேண்டியதைக் கவனித்துக்கொள்ளுவது உன்னுடைய கடமை."

பச்சையம்மாள்:—“ஆஹா, தங்கள் இஷ்டப்படியே ஆகட்டும் மாமி, நமது பெண்கள் ஒவ்வொருவருக்கும் வைத்தியம் சிறிது தெரிந்திருக்கவேண்டியது அவசியந்தான். வைத்தியத்தைப் பற்றியே ஒன்றும் அறியாத பெண்களால் குடும்பத்தில் எவ்வளவோ சிறு நோய்களெல்லாம் பெரு நோய்களாக மாறிவிடுகின்றனவே!”

கமலாக்ஷியம்மாள்:—“அவ்வளவு தூரம் போவானேன். நம்முடைய வீட்டில் இருக்கும் வேலைக்காரிகளில் ஒருத்திக்காவது வைத்தியம் இன்னதென்றே தெரியாது. நான் சொல்லுவது உனக்கு ஆச்சரியமாயிருந்தாலும் இருக்கும். நாலைந்து நாட்களுக்குமுன் ஒரு நாள் சமையற்காரி ஒருத்தி தேக அசௌக்கியமாயிருந்தாள். வைத்தியர் வந்து பார்த்து அட்டைவிடச் சொல்லிப்போனார். இங்குள்ள வேலைக்காரிகள் ஏழெட்டுப் பெயரில் ஒருத்திக்காவது அட்டை பிடித்துவிடத் தெரியவில்லை. அவர்கள் அட்டையைக் கையால் தொடவும் கைகூசினார்கள். அர்த்த ராத்திரியில் யாரைக் கூப்பிடுவது? பிறகு நானே அட்டையைப் பிடித்து விட்டேன்.”

பச்சையம்மாள்:—“ஆம் மாமி, அற்ப நோய்களுக்கும் ஏற்றவாறு சிகிச்சை செய்துகொள்ள நம்முடைய ஸ்திரீகளுக்குத் தெரியவில்லையென்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கின்றேன். ஆனால் அதைப்பற்றி நாம் அதிசயப்படுவதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை. அவர்கள் அப்படியிருப்பதற்குக் காரணம் பெண்களுக்கு இளமையில் கல்வி கற்பிக்காமலிருப்பதேயாகும். நம்மவர்களிற் சிலர், பெண்களை இளமையில் கைதட்டிக் கூத்தாடிச் சுழன்றும், தீவிரமாகவும் தாமதமாகவும் வேறு இன்னும் பலவாறாகவும் கும்மியடிக்க

வும், கும்மிபாட்டுப் பாடவும், சோபனப் பாட்டுப் பாடவும், ஊஞ்சலாடவும், உலாப்பாடவுமான சில விளையாட்டுகளில் பழகி விடுகிறார்களெனினும் அவைகளைக் கற்றுக்கொள்ளவேண்டியது அவ்வளவு அவசியமல்ல. அவ்விளையாட்டுகள் இயற்கையில் தானே அறிந்துகொள்ளக்கூடியவையாகும். கண்ணென்று சொல்லத்தகுந்த எண்ணையும் எழுத்தையும் தான் அவர்களுக்குப் பிரதானமாகக் கருதிக் கற்பித்தல்வேண்டும். அதனால் அவர்கள் குடும்பவாழ்க்கைக் குரியவர்களாகும்போது பிள்ளைகளுக்கும் அயலார் சுற்றத்தார்களுக்கும் பலவிதத்திலும் உபகாரிகளா யிருப்பார்கள் இதையெல்லாம் மறந்து, பெற்றோர்கள் பெண்களை ஆடல் பாடல்களிலேயே அவர்களுடைய காலத்தைக் கழிக்கச் செய்வது பரிதாபமான விஷயமாகும். நெருப்புச்சூடு, கத்திவெட்டு, நரம்புச்சுளுக்கு, எலும்புமுறிவு, நெரிவு முதலிய விபத்துக்களோ, ஒன்றில்லாவிடினும் ஒன்று பிரதிதினமும் ஜனங்களுக்குச் சாதாரணமாயுண்டாகும். நிர்மூடிகளாயிருக்கும் ஸ்திரீகள் இவ்விபத்துக்களுக்கு எவ்வித சிகிச்சை செய்வது என்று தோன்றாமல் தடுமாறுவார்கள். கைபாகமாக அவைகளுக் கெல்லாம் மருந்து செய்யக் கற்றிருக்கும் பெண்களோ அவற்றிற்கு ஏற்ற சிகிச்சைகளைச்செய்து பரோபகாரியாவார்கள். பெண் கல்வி விருத்தியடைய தனவந்தர்களும் துரைத்தனத்தாரும் வேண்டியமுயற்சியை எடுத்துக் கொள்வார்களானால் நலமாயிருக்கும். பெண்பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதோடும் நோயாளிகளுக்குச் சிகிச்சா உபகாரம் செய்யக் கற்பிக்க வேண்டியதும் அவசியமாகும். அதைக் கற்பதில் பெண்களுக்கு அதிக கஷ்டம்தோன்றாது. அதனால்நேரும் செலவும்

அதிகமாய்விடாது. அற்ப வைத்தியங்கள்கூட பெண்களுக்குத் தெரியாதிருப்பதனால் எவ்வளவோ கஷ்டங்கள் உண்டாகின்றன."

கமலாக்ஷியம்மாள்:—"ஆம், அம்மா, நீ கூறுவதெல்லாம் என்னவோ உண்மைதான். அதிருக்கட்டும் பச்சையம்மா! காரச்சீலை போட்டுக் கொப்புளிக்கச் செய்து கொப்புளத்தை ஆற்றுகிற விதம் எப்படி?"

பச்சையம்மாள்:—"அது அவ்வளவுபெரிய காரியமல்ல, மாமி. நீங்கள் அதை மிகவும் எளிதாகச் செய்துவிடலாம். காரச் சீலையின் மத்தியில் நாலைந்து துளி காடிவிட்டு விரல் நுனியால் நன்றாகத்தேய்த்து அதன் பிறகு அதை வேண்டும் இடத்தில் போடவேண்டும். நோயைப் பொறுத்துக் கொள்ளக்கூடிய தேகவலிமையுடையவர்களானால் காரச் சீலை நிலை பெயராதிருக்கச் சேர்வைக் கட்டுப் போடுவதும் உண்டு. ஓரிடத்தில் அடங்கியிராமல் உடம்பதிர ஆடிக் கலைந்து திரிவோர்களுக்கன்றி மற்றவர்களுக்கு இந்தச் சேர்வைக்கட்டுப் போடவேண்டிய அவசியமில்லை. சீழையும், நீரையும் அற வாங்கியபின், பெரும்பாலும் காரச்சீலை தானே நெகிழ்ந்து விடும். அது வலிய விழுந்தாலும் அதை யாரேனும்விழும்படிச் செய்தாலும் அந்த நிமிஷமே நோயாளி மூர்ச்சையாய் விழுவதும் உண்டு. ஆகையால் அத்தகைய சமயத்தில் பிராந்தியும் தண்ணீரும் கலந்து கொடுக்கவேண்டும். அவசியமில்லாவிடில் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. காரத்தாற் புறப்பட்ட கொப்புளத்தில் தோல் சிறிதுமேலே எழுந்திருக்கும். அந்தத் தோலைக் கூர்முனையுள்ள கத்தரிக்கோலால் சாவதானமாகக் கத்தரித்துவிடவேண்டும். அப்படிக் கத்தரிக்குமுன் கொப்புளத்தின் அடித்தோலில் படியச் சுத்த

மான மெல்லிழைத் துணியை வைத்துப் பிடித்துக்கொள்ள வேண்டும். கொப்புளித்தெழுந்த தோலை அளவு கடந்து கத்தரிக்கக்கூடாது. உப்பலாக இருக்கும்போது கத்தரித்தால் பிறகு தவறாமல் இரணம் உண்டாகும். தோலைக் கத்தரித்தவுடன் கொப்புளம் உடைந்து நீர் குபீரென்று வடியும். மேற்கூறிய ஒற்றடையால் அதைத் துடைத்து உடனே வெந்நீர்விட்டுக் கிளறிய இளஞ்சூடுள்ள மிருதுவான ரொட்டிமாவை வைத்துக்கட்டினால் அது இரணத்தில் துர்நீர் கொஞ்சமும் தங்காதபடி போக்கி, உலர்ந்து நெகிழ்ந்த தோலை உரிந்துவிடும்படிச்செய்யும். அந்தத் தோல் உரிந்து விழாமல் இருக்குமானால் எதிலேனும் பட்டு அடித் தோல் உரிந்து காயமும் இரணமும் உண்டாகும். கட்டின ரொட்டிமா நெகிழ்ந்துவிழுந்தபின் வெண்ணெயாவது, இரணத்தை ஆற்றக்கூடிய எந்தத் தைலத்தையாவது மெல்லிழைத் துணியில் பூசி இரணத்தின்மேல் போட்டால் இரணம் சீக்கிரத்தில் ஆறிப்போய்விடும்."

கமலாக்ஷியம்மாள் :—"கொப்புளித்த புண்ணை ஆற்ற வெண்ணெய் தடவுகின்றீர்களா? பச்சையம்மா, அதற்கு ஏதாவது வேறு ஒரு தைலம் விற்கிறதென்றல்லவோ கேள்விப்பட்டேன்?"

பச்சையம்மாள்:—"அந்தத் தைலம் வெண்ணெயில் செய்கிறதுதான். நமது வைத்தியசாலையில் பெரும்பாலும் புண்ணை ஆற்றுவதற்கு உபயோகப்படுத்துவது வெண்ணெய் தான். எளியவர்களுக்கு எப்பொழுதும் சிரங்குகளுக்குத் தடவும்படி நான் அதைத்தான் சொல்லுவது வழக்கம். வெண்ணெய் எங்கும் உண்டு. எந்த வெண்ணெயாயிருந்தாலும் உபயோகப்படுத்தலாம். வேண்டும்பொழுது அகப்

படும். எளிய மருந்தே பெரும்பாலும் நோயைத் தீர்க்கும் மருந்தாகும்."

கமலாக்ஷியம்மாள் :—"ஏன் பச்சையம்மா, நாகரீகம் சிறிதும் தெரியாதவர்களும், ஏழைகளும் இருக்கும் வீட்டிற்கு நீ போவது உண்டா ?"

பச்சையம்மாள்:—"ஆம், அடிக்கடி போவது உண்டு. அந்த வீடுகளின் சீர்கேடான நிலைமைகளைத் தாங்கள் கண்டாவது கேட்டாவது இருக்கமாட்டீர்களென்று நினைக்கிறேன். நன்ருய்ச் சுத்திசெய்யப்படாத அவர்களுடைய வீடுகளையும், துர்நாற்றம் நிறைந்து சீர்படுத்தாத சாக்கடைகளையும் நினைக்க மனதிற்கு மிகவும் கஷ்டமாயிருக்கின்றது. அவ்வளவுதானு, அவர்களுடைய அழுக்குப் படிந்த துணிகளை நெருப்பில் போட்டாலும் வேகாது. அவர்களுடைய உடம்பிலே ஒரு விரற்கிடை அழுக்குப் படிந்திருக்கும் துணிகளுக்குச் சவர்க்காரமும், உடம்புக்குச் சோப்பும் வாங்கித் தண்ணீருடன் உபயோகப்படுத்தும்படி நான் பல முறையும் கூறுவது உண்டு. அவைகளை வாங்க கதியில்லாதவர்களுக்கு நானே என் செலவில் வாங்கிக்கொடுப்பதும் வழக்கம். முதலில் சொன்னல் அவர்கள் சோப்பு வாங்குவது பணவிரயம் என்று கருதி என்பேச்சைக் கேட்பதில்லை. பிறகு அழுக்கேறிச் சிரங்கு முதலிய நோய்களுக்கு அடிமைகளாகி அப்போது தேகக் கஷ்டத்தோடு ஒன்றுக்கு ஒன்பது பங்கு பணக்கஷ்டத்திற்கும் உட்படுகின்ருர்கள். சென்ற வருடம் நடந்த சங்கதி ஒன்றை இதற்குத் திருஷ்டாந்தமாகக் கூறுகிறேன் கேளுங்கள். சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள மாணிக்கத்தம்மாள், வைத்தியம் பார்க்க ஒரு நாள் என்னைத் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துப் போனாள்.

அவளுடைய வீட்டில் குப்பையும் கூளமும் அரை அடி உயரம் அடைபட்டிருந்தன. பலகணிக் கதவுகளைத் திறக்க முடியாதபடி ஆணி அடித்திருந்தது. வீட்டறைகளில் நல்ல காற்றே கிடையாது. ஆனால் பலகணிகளில் அடித்திருந்த ஆணிகள் புத்தம் புதியவைகளாகத் தோன்றினபடியால் அதற்குமுன் இரண்டு மூன்று வாரங்களுக்குள்தான் பல கணிகளைச் சாத்தி ஆணிகள் அடித்திருக்கின்றன என்பதை அறிந்துகொண்டேன். அங்கு போனவுடன் மாணிக்கத்தம்மாள் என்னைப் பார்த்து, "தன்னுடைய வீட்டில் கட்டி, ஜுரம், ஜலதோஷம், வயற்றுவலி முதலிய பல பிணிகளால் வருந்தாதவர்கள் ஒருவருமில்லையென்று மனத்துயரத்துடன் சொன்னாள்." அதற்கு நான் 'பலவிதவியாதிகள் இவ்வீட்டில் குடிகொண்டதைப்பற்றி அதிசயப்படுவானேன். இந்த வீட்டில் கொஞ்சமும் சுவாசிப்பதற்கு உதவாத கெட்ட காற்று அடைபட்டிருக்கிறதேயன்றி சுத்தமான காற்று கொஞ்சமும் இல்லையே' என்றுசொன்னேன். அந்தவார்த்தைகளைக்கேட்ட மாணிக்கம், "எனக்கு நல்ல காற்றென்று எப்படியம்மா தெரியும்? நான்தான் ஒரு எழுத்தும் தெரியாத குருடியாயிற்றே" என்று கூறினாள். அதற்கு நான், "ஆம் மாணிக்கத்தம்மா! உனக்குப் படிக்கத் தெரியாதென்பது உன்னைப் பார்த்தவுடனேயே எனக்குத் தோன்றியது ஆயினும் என்ன? நாம் சுவாசிக்கும்காற்றுதான் நமது ஜீவனுக்கு ஆதாரமென்பதைக் கல்வியில்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா? காற்று கொஞ்சமும் வரமுடியாத பெட்டிக்குள் உன்னைப் போட்டுப் பூட்டிவிட்டால் நீ மூச்சுத் திணறி இறந்துபோவாயல்லவா" என்று கேட்டேன். "ஆம் இறந்து போவேன்" என்று மாணிக்கம் சொன்னாள். அதன்பிறகு நான் அவளைப்பார்த்து

"மாணிக்கத்தம்மா, நான் சொல்லுவதைக் கவனி. நமது தேகமும் ஒரு பெட்டிபோலத்தான் இருக்கிறது. இதில் உள்ள பலவித உறுப்புகளுக்குச் சுகம் உண்டாகத் திவ்வி யமான சுத்த வாயு உலாவவேண்டும். நாம் சுவாசம் வாங் கும்போதெல்லாம் காற்று உட்சுவாசாசயத்தில் சேர, அங்கி ருந்து அது அசுத்தமாகி விஷக்காற்றாகச் சுவாசம் விடும் பொழுது வெளிப்படும். ஆதலால் சுத்தமான காற்று நம் சுவாசத்தின் வழியாக தேகத்திற்குட்சென்று உலாவ விடா மல் அறையை வெளிச்சமும் காற்றுமில்லாதபடி அடைத்து வைத்தால், அங்கிருப்பவர்கள் உள்ளிருந்து வெளிவிடும் அசுத்தமான காற்றையே மீண்டும் மீண்டும் உட்கொள்ளும் படி நேரிடும். அதனால், அந்தக் காற்று மென்மேலும் விஷ மாய்விடும் இது உனக்குத் தெரியாதா, மாணிக்கத்தம்மா? இதைக் கட்டிவைத்திருக்கும் காலேஜுகளில்போய்ப் படித் துத்தானா தெரிந்துகொள்ளவேண்டும். சாதாரணமான புத் தியுள்ள எந்த மனிதர்களும் இந்த விஷயத்தை இலேசில் அறிந்து கொள்ளலாமே" என்று கூறினேன். அப்போது அவள் என்னை ஆச்சரியத்துடன் பார்த்து, "பச்சையம்மா, நல்ல காற்றால் எவ்வளவு நன்மை உண்டாகிற தென்பதை இப்போதுதான் நீங்கள் சொல்லச் சந்தேகமறத் தெரிந்து கொண்டேன். தெரிந்தால் என்ன வஞ்சனையா அம்மா!" என்றாள். பிறகு நான் அவளைப் பார்த்து "அம்மா, காற்று நமக்கு ஜீவாதாரமாகக் கடவுளால் அருளப்பட்ட சொத்து. இச்சொத்தை யாவரும் அனுபவிக்க வேண்டுமென்பது அவருடைய அபிப்பிராயம். இல்லையானால், கடவுள் காற் றைப்படைக்கவேண்டிய அவசியமில்லை. அவ்வளவு அருமை பெருமை வாய்ந்த ஜீவாதாரமான காற்று இவ்வறைக்குள்

வருவதற்காகவே பலகணிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அப் பலகணிகளை அடைத்துவிட்டால் அறைக்குள் இருப்பவர்கள் சுகமாயிருப்பதற்கு வகையில்லையே. எல்லோருக்கும் சொந்தமாகிய இப்பொதுச் சொத்தை இங்கு இருப்பவர்கள் அனுபவிக்க முடியாதபடி இந்தப் பலகணிகளை மூடிவிட்டபடியால் இந்தக் கஷ்டங்களெல்லாம் நேரிட்டன. நல்லது, இப்போதே இந்தப் பலகணிகளைத் திறந்துவிடு. உடனே மனதிற்கு எவ்வளவு ஆறுதல் தோன்றுகிறது பார்" என்று சொன்னேன்.

உடனே மாணிக்கத்தம்மாளும் அவளுடைய மகனும் அடித்திருந்த ஆணிகளைக் கழற்றி மூடியிருந்த ஜன்னல்களைத் திறந்தார்கள். உடனே காற்று விர்ரென்று வீட்டிற்குள் நுழைந்து எங்கும் நன்றாக வீசியது. அதன் நலம் இன்னதென அப்பொழுதே உள்ளங்கை நெல்லிக்கனிபோற் புலப்பட்டது. அதுவரையில் அவ்வறைக்குள் சோர்ந்து மெலிந்து படுத்திருந்த மாணிக்கத்தின் பிள்ளைகள், மழை அபரிமிதமாகப் பெய்யும்போது வாடிக் குவிந்து தரையில் படிந்திருக்கும் மலர்கள், மழை நின்றதும் வாட்டமுற்றுக் குவிந்த இதழ்களெல்லாம் விரிய நிமிர்வதுபோலக் கலை தெளிந்து தலை தூக்கிப் பார்த்தார்கள். அவர்களுடைய முகத்தில் ஜீவகளை தோன்றிற்று. பிறகு, நான் மாணிக்கத்தம்மாளைப்பார்த்து, "உன் பிள்ளைகளைப் பிரதிதினமும் குளிக்கும்படிச் செய்கின்றாயா?" என்று கேட்டேன். அதற்கு அவள், "இல்லை வாரத்திற்கு இரண்டொரு முறை அவர்களைக் குளிக்கும்படிச் செய்வேன்" என்றாள். அதைக் கேட்ட நான் ஆச்சரியப்பட்டு, "வாரத்திற்கு இரண்டொரு

முறை அவர்கள் குளித்தால் அதற்குள் அவர்கள் தேகத்தில் அழுக்கு சேர்ந்து அவர்கள் கஷ்டப்படமாட்டார்களா ?" என்றேன். அதற்குள், "உடம்பில் கொஞ்சம் அழுக்கு இருப்பதினால் கஷ்டம் என்ன அம்மா உண்டாகக்கூடும் ?" என்றாள். அதற்கு நான் அவளைப் பார்த்து, "மாணிக்கத் தம்மா, சரீரத்தில் வியர்வை உண்டாகிறது என்று சொல்லுகிறார்களே, அதைப்பற்றி உனக்குத் தெரியுமா ?" என்று கேட்டேன். "ஆமாம் தெரியும்" என்றாள். அதைக் கேட்டவுடன் நான் "நல்லது, உடம்பு வியர்க்கிறது உனக்குத் தெரியுமே! அதென்னவென்று உனக்குத் தெரியுமா ? அது தேகத்திற்குள்ளிருந்து வெளிப்படும் கொடிய அழுக்கு நீரென்று அறிந்துகொள். பிரதி தினமும் குளித்து அதைப் போக்கிக்கொள்ளாவிடில் அது உரோமத் துவாரங்களை அடைத்துக்கொள்ளும். பிறகு தேகத்தின் உள்ளிருந்து அசுத்த நீர் வெளிப்பட வழியின்றி உள்ளேயே தங்கிப் பலவித வியாதிகளை உண்டாக்கிவிடும். இதை நீ அறியவில்லையா" என்றேன். அதைக் கேட்ட மாணிக்கத்தம்மாள், "நீங்கள் சொல்லுவதெல்லாம் மெய்யாகத்தான் இருக்கவேண்டும். அந்த வார்த்தைகளை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இதற்குமுன் அதைப்பற்றியெல்லாம் நான் ஒன்றும் அறிந்ததில்லையம்மா" என்று சொன்னாள். உடனே நான் அவளை நோக்கி "மாணிக்கத்தம்மாள், நான் சொல்லுவது மந்திரமும் மாயமுமல்ல. இதன் உண்மையை நீயே பரீட்சை செய்தறியலாம். தேகத்திற் சிறிதும் அழுக்குத் தங்காதபடி ஒவ்வொரு தினத்திலும் குளித்துத் தேகத்தைச் சுத்திசெய்துகொண்டு நல்ல காற்றில் உலவிவருவோர்க்கு இரண்டுவித சுகங்களும் பூரணமாகக் கிடைக்கின்றன. சுத்தமான ஆகாரம் உட்கொள்

ளுவதனால் ஏற்படும் சுகம் ஒன்று, நல்ல காற்றை அனுபவிப்பதனால் உண்டாகும் சுகம் மற்றொன்றுமாகும். அது மட்டுமா. தேகத்தை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குச் சொற்ப ஆகாரமும் போதுமானதாயிருக்கும்" என்று சொன்னேன். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் மாணிக்கத்தம்மாள், "என் பிள்ளைகளுக்கு நான் ஒவ்வொரு நாளும் ஸ்நானம் செய்துவைத்தால் அவர்கள் உணவு குறைவாக உண்பார்கள் என்று கூறுகிறீர்களா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள். அதற்கு நான் "அந்த விஷயத்தில் உறுதி கூறுவது கஷ்டம். சரீரத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதனால் உன் பிள்ளைகளின் உண்டிச்செலவும் குறையாவிடினும், வைத்தியர் கூலியும் மருந்துச் செலவும் சுருங்கிவிடும் என்பது திண்ணம். அதோடு வேளை வேளைக்கு நல்ல பசியும் தேகபலமும் முக அழகும் உண்டாகும். இனிமேல் வீட்டுப் பலகணிகளை அடைத்துவிடாமல் உன் பிள்ளைகளைப் பிரதிதினமும் குளிக்கும்படிச் செய்வாயானால் அதற்காகச் செல்லும் சீயக்காய் அல்லது சோப்பை நான் தருகிறேன். சுத்தமானதும் ஈரத்தைச் சீக்கிரமாக கிரகித்துக்கொள்ளும்படியானதுமான இரண்டு துணிகளையும் குளித்தவுடன் ஈரம் போக்கிக்கொள்ளுவதற்காகத் தருகின்றேன். அதனால் உண்டாகும் நன்மை இன்னதென்று உனக்குத் தெரியாமற் போகாது" என்று சொன்னேன். அதன்பிறகு அந்த மாதம் முழுவதும் நான் சொன்னபடியே அவள் செய்தாள். அதனால் அவளுடைய பிள்ளைகளுக்கு, முகக்களையும், தேக புஷ்டியும் உண்டாவதைக் கண்டாள். ஒரு முறை அவள் என்னைக் கண்டபோது "சீயக்காய்க்கும், சோப்புக்கும் தண்ணீருக்கும் இவ்வளவு மகத்துவம்

இருக்கிறதே!" என்று கூறினாள். பிறகு, அவள் தன் பிள்ளைகளின் தேகத்தில் கருத்துடையவளானாள்.

கமலாக்ஷியம்மாள்:—"அவள் கருத்துடையவளாயிரா விட்டாலும் குளிப்பதினால் உண்டாகும் சுகத்தை அறிந்து கொண்ட அவளுடைய பிள்ளைகள் கருத்துடையவர்களாய் இருப்பார்களென்பது திண்ணம்."

பச்சையம்மாள்:—"ஆம், மாமி, முதலாவது தேக சுத்தி, இரண்டாவது தெய்வபக்தி, என்றொரு பழமொழி யிருப்பதையும் தாங்கள் அறிந்திருப்பீர்களே! அந்த வார்த்தையிலுள்ள நன்மைகளை அநேகர் ஊன்றிக் கவனிப் பதேயில்லை. தேகசுத்தியும் தெய்வ பக்தியும் வலக்கை இடக்கை போல் ஒன்றுக்கொன்று இணைபிரியாதபடி மனி தர்கள் ஒவ்வொருவரும் கொண்டொழுகத் தகுந்தவைகளா கும். ஒன்று பாருங்கள் மாமி, இப்போது நான் சொல்லப் போகும் விஷயத்தை முற்காலத்து நமது முன்னோர்கள் அறிந்துதான் இருந்தார்கள். ஆனால், இக்காலத்திலோ அநேகர் அதை அறியாமலே இருக்கின்றார்கள். அதாவது, பிரதி தினமும் குளித்துத் தேகத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளுகிறவர்கள் புத்திகூர்மையுடையவர்களாயும், பெரும் பாலும் தருமசிந்தையுடையவர்களாயும் இருப்பதைக் காண லாம். சேற்றில் புரளும் பன்றிகளைப்போல அழுக்கில் அழுந்திக்கிடக்கும் மனிதர்கள், புத்தி மழுங்கியவர்களா கவும், மிருகத்தனமான குணமுடையவர்களாகவும் இருப் பதை அறியலாம். சில பேதைகளுக்கு என்னதான் கூறி னாலும் அவர்கள் திருந்துவதேயில்லை. அழுக்கிற்கிடந்து புரளுவதே அவர்களுக்குச் சுவர்க்கமாயிருக்கின்றது."

கமலாக்ஷியம்மாள் :—“அத்தகைய அசுத்தமுடையவர்களின் வீட்டுக்கு நீ அடிக்கடி போய் வருகின்றாயா பச்சையம்மா! தொத்து வியாதி உன்னைப் பிடித்துக்கொள்ளாதா?”

பச்சையம்மாள் :—‘தொத்து வியாதிக்குப் பயப்படவேண்டியதுதான். ஆனாலும், நோயாளிகளுக்கு உபசாரம் செய்து நாள் கழிக்கும் என்னைப்போன்றவர்களைத் தெய்வம் மனமிரங்கிக் காப்பாற்றும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. ஒரு சமயம் நான் மூட பக்தியில் இப்படி நினைக்கிறேன் என்று சிலர் எண்ணுவதும் உண்டு. அது எப்படியானாலும் ஆகட்டும். தெய்வம் காட்டியவழியில் நின்று குற்றேவல் செய்வதே எனக்குத் திருப்தியாகும். நோயினால் வருந்தும் உயிர்களிடத்தில் அன்பில்லாத உயிர்வாழ்க்கையும், ஒரு வாழ்க்கையா? மாமி, பிறிதின்நோய் தன் நோய் போல் போற்றாக் கடை அறிவினால் ஆவதொன்றுண்டோ? என்றும், ‘அன்பின் வழியதுயிர் நிலை, அஃதிலார்க் கென்பு தோல் போர்த்தவுடம்பு’ என்னும் நாயனார் அருமைத் திருவாக்கியங்களை அறிந்தபிறகும் பரோபகாரிகளாயிருக்கப் பின்வாங்குவது தகுமோ? மாமி! ‘கடவுளை நம்பினோர் கைவிடப்படார்’ என்னும் வாக்கியம் உண்மையாதலால் தொத்து வியாதிக்கு நான் அஞ்சவேண்டுமென்னும் அவசியமில்லையே!”

கமலாக்ஷியம்மாள் :—“நீ சொல்லுவது உண்மைதான் அம்மா! பிணியாளரை உபசரிப்போருக்குத் தெய்வம் உதவி செய்யும் என்னும் நம்பிக்கை நல்ல நம்பிக்கைதான். ஆனபோதிலும் தொத்து வியாதிகள் நம்மை அணுகாதபடி இருக்கவேண்டியது அவசிய மல்லவா?”

பச்சையம்மாள் :—“ஆம் மாமி, எந்த அபாயத்தையும் என்னுடைய அஜாக்கிரதையினால் வரும்படி நான் செய்துகொள்ளுவதில்லை. போஜனம் செய்து பசி தீர்ந்தபிறகுதான் நான் நோயாளிகளைப் பார்க்கப்போவதேயன்றி அதற்குமுன் போகிற வழக்கமேயில்லை. போனால், காற்று வீசுகிற முகமாய் நின்று நோயாளியைப் பார்ப்பதேயல்லாமல் காற்றுக்கு எதிர்முகமாய் நின்று பார்க்கின்ற வழக்கமேயில்லை. அதாவது, நோயாளி உடம்பிற்பட்ட காற்று என்னுடைய உடம்பில் படும்படியாக நான் நிற்கமாட்டேன். என் பக்கத்திலிருந்து காற்று செல்லும் வழியில்தான் நிற்பேன். அன்றியும், நான் சிகிச்சை செய்யுமிடங்களிலெல்லாம் வேனிற்காலத்தில் பலகணிகளைத் திறந்துவைக்கும்படியும், மாரிகாலத்தில் கதவைக் கொஞ்சமாகத் திறந்துவைக்கும்படியும் சொல்லுவது உண்டு. அறைக்குள் கும்பிடுசட்டியில் நெருப்பு எப்போதும் அணையாமல் இருக்கும்படியும் வைக்கச் சொல்லுவேன், இதற்கு மட்டும் ஆக்ஷேபனை சொல்லுகிறவர்களும் உண்டு. ஆனால் நான் அவர்களுடைய வார்த்தையைக் கேட்பதில்லை. அதற்கான காரணங்களைச் சொல்லி யார்க்கும் எக்காலத்திலும் சரீரம் சுத்தியாகவும் ஜாக்கிரதையாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது என்னுடைய கடமை. அவற்றோடு வீட்டின் அடித் தரையை அழுக்கில்லாதபடி பெருக்கவும், கட்டிலில் ஏறியிருக்கும் தூசியைத் தட்டி தலையணை, மெத்தை, பாய், இவைகளை உதறிச் சுத்தம் செய்யவும் பின் வாங்கப்படாது. சுண்ணாம்புக்குத் தொத்து வியாதிகளைத் தடுக்கும் குணமுண்டாகையால் தொத்து வியாதிகள் ஊரில் பரவி யிருக்கும்போதும் மற்ற சமயங்களில் வருடத்

திற் கொருமுறையும் தவறாமல் வீடுகளுக்கு வெள்ளையடிக்க வேண்டும். அதோடு நல்ல காற்றின்மேலேயே கவனமா யிருப்பது மிகவும் அவசியமான காரியம் என்று இப் படியெல்லாம் அவர்களுக்குத் தெரியச் சொல்லுவேன். நல்லது மாமி, தொத்துவியாதிகள் என்னை அணுகாதபடி நான் கவனித்துக்கொள்ளுகின்றேன். நான் அறிந்தவரை யில், தங்களிடம் அலுவல் பார்த்துக்கொண்டிருக்கும் சிறுமிக்கு, வைத்தியம் கற்பிக்கச் சித்தமாயிருக்கிறேன். நாளைக்கு என்னை வந்து பார்க்கும்படி அவளிடம் கூறுங் கள். எனக்கு நேரமாயிற்று, போய்வருகிறேன்."

என்று சொல்லிப் பச்சையம்மாள் கமலாக்ஷியம்மா ளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட் டுப்போனாள்.

## 11-வது அத்தியாயம்.

### சிக்கனம்.

'மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்,—செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங்கொள்ளார்,
கருமமே கண்ணாயினார்'

என்னும் பாட்டு பச்சையம்மாள் விஷயத்தில் மிகவும் பொருத்த முடையதேயாம். பச்சையம்மாளைப் போன்ற பரோபகார குணமுடைய மனிதர்களின் சரிதத்தை ஒரு முறையல்ல, பலமுறை வாசித்தாலும் மனம் திருப்தியடைவதில்லை. ஸாது ஜன உழைப்பாளர்களின் சரிதங்களைப் படிப்பதையே தங்கள் ஒழிவு காலத்தைப் போக்கும் விரதமாகக் கொண்டவர்கள் மனம் திருந்தி மக்களில் உயர்ந்த மனத்தினராவது திண்ணம். அத்தகையோருக்கு அருளும் அன்பும் ஊற்றெடுத்துச் சுரக்கும். அவர்களைப்பற்றி சமுத்திரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக ஓயாது தோன்றி ஒளித்துக்கொண்டிருக்கும் அலைகள்போல, கடலென்ற புவிமீது அலையென்ற உருக்கொண்டு வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஓயாது புகழ்ந்து பேசாதிருப்பதில்லை. கமலாக்ஷியம்மாளின் வீட்டிலிருந்து புறப்பட்ட பச்சையம்மாள் வைத்தியசாலைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு வீட்டுக்குப் போனாள். அந்த வீடு சற்று ஒழுங்குடையதாகக் காணப்பட்டது. அங்கிருந்த நாற்காலி மேஜை முதலியசாமான்கள் நாட்பட்டவைகளாயிருந்தும் அழுக்கு ஒரு சிறிதுமின்றி

பரிசுத்தமாயிருந்தன. அங்கு சிறு பையன்கள் மூன்று பேர் யாதொரு கவலையுமின்றி விளையாடிக்கொண்டிருந்தனர். மூப்பது வயதுடைய ஒரு ஸ்திரீ என்ன சமாதானம் சொன்னாலும் கேளாமல் அழுதுகொண்டிருக்கும் நான்கு வயதுடைய குழந்தையை நோக்கி, "இராஜா! ஏன் அழுகிறாய், என்ன வேண்டும்? பீங்கான் பொம்மை வேண்டுமா? தள்ளு வண்டி வேண்டுமா?" என்று பின்னும் கேட்டுக் கொண்டிருந்தாள். பருவம் முதிர்ந்த கிழவி ஒருத்தி அவ்வறைக்குள் ஒரு மூலையில் இருந்த கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள்.

பச்சையம்மாள் அங்கு போனவுடன் குழந்தைக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டிருந்த ஸ்திரீயைப் பார்த்து, "க்ஷேமந்தானா, மங்கத்தம்மா! இன்றைக்கு உன் தாயாருக்கு உடம்பு எப்படி இருக்கின்றது?" என்று கேட்டுக்கொண்டே அங்குத்தரையின்மீது விரித்திருந்த பாயின்மேல் உட்கார்ந்தாள்.

பச்சையம்மாளைக்கண்ட மங்கத்தம்மாள், வாருங்கள், பச்சையம்மா என்று உபசார வார்த்தை கூறி, "தாயாருக்கு இன்னும் தேகம் அசௌக்கியமாகத்தான் இருக்கிறது" என்று அவள் கேள்விக்கும் பதில் கூறினாள்.

பச்சையம்மாள்:—"இப்போது எப்படி இருக்கின்றது?"

மங்கத்தம்மாள்:—"என் தாயாருக்குத் தாங்கமுடியாத குளிர் ஏற்பட்டபடியால் அது அடங்கத் துணியை நாலைந்தாக மடித்துப் போர்த்திருக்கிறேன். சீதளம் கண்டு விடுமோ என்று எனக்குப் பயமாய்இருக்கிறது."

இப்படி மங்கத்தம்மாள் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன் பச்சையம்மாள், கிழவி படுத்திருந்த கட்டிலின் சமீ

பத்தில் போய்ப் பார்த்தாள். அந்தத் தள்ளாத கிழவி குப்பலாகக் குவிந்த துணிமூட்டையைத் தாங்கிக்கொண்டு அப்படி இப்படி திரும்பக்கூடாமல் வருத்தப்பட்டாள். அவள் வருந்துவதைக் கண்ட பச்சையம்மாள் "ஐயோ பாவம்! ஒரு காரியம் தவறுதலாயிருக்கின்றது. இப்படிச் செய்வது அநேகருடைய வழக்கமாய்த்தான் இருக்கிறது. தேகத்தின் மீது போர்க்கும் துணிகள் ஒன்றின்மேல் ஒன்றாக எத்தனை சேர்த்தாலும் அவைகள் குளிரைப் போக்குவதற்குச் சாதகமாயிருக்குமென்று அநேகர் நினைக்கிறார்கள். அது தவறு. குளிரைத் தடுப்பதற்கு நாணயமான ஒரு நல்ல கம்பளியால் தான் முடியும். இங்கு ஏதாவது ஒரு நல்ல கம்பளி இருக்கின்றதா" என்று கேட்டாள்.

உடனே மங்கத்தம்மாள், "இருக்கிறது அம்மா," என்று கூறிக்கொண்டே ஒரு கம்பளியைக் கொண்டுவந்து பச்சையம்மாளிடம் கொடுத்தாள்.

பச்சையம்மாள் அதைக் கையில் வாங்கிப் பார்த்து, "இந்தக் கம்பளி வெகு நன்றாய் இருக்கின்றதே! எங்கு வாங்கினாய் அம்மா" என்று கேட்டாள். "பார்வதியம்மாள் கொண்டுவந்து கொடுத்தார்கள்" என்று மங்கத்தம்மாள் பதில் கூறினாள்.

"இது மிகவும் நல்ல கம்பளி. பக்குவமாய் இதை உபயோகித்து வருவது அவசியம்" என்று கூறிக்கொண்டே, பச்சையம்மாள், கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கும் கிழவியைப்பார்த்து, "பாட்டியம்மா, உங்களைப் பிடித்துத் தூக்கி உட்கார வைத்துப் படுக்கையைத் தட்டி சுத்தப்படுத்த விரும்புகிறேன். அது உங்களுக்குச் சம்மதியா?" என்று கேட்டாள்.

அதற்குக் கிழவி "அம்மா, அதற்குத் தடை சொல்லு கிறவர்கள் யார்? நோயாளிகளின் தேகத்திற்குக் கஷ்டமில் லாமல் அவர்களை உம்மைப்போல் பத்திரமாய் எடுக்கப் பிடிக்கப் பழகிய கைத்திறமுடைய வேறு ஒருவரையும் நான் கண்டதில்லை!" என்று கூறினாள்.

கிழவி அவ்விதம் கூறியவுடன், பச்சையம்மாள் அங்கு அழுகிற குழந்தையைப் பார்த்து, "அப்பா ராஜு, அழாதே! நீ நல்ல பிள்ளை. உன்னுடைய அம்மாளை ஒரு நிமிஷநேரம் எழுந்துவரவிடு. நான் சற்றுப் பொறுத்து உன்னை எடுத் துக்கொள்ளுகிறேன். இப்போது எனக்கும் உன்னுடைய அம்மாளுக்கும் இங்கொரு வேலை இருக்கிறது" என்று கூறினாள்.

அறிமுகமில்லாததினாலோ, பச்சையம்மாள் ஒரு சமயம் தனக்கும் ஏதாவது மருந்துகொடுத்துவிடுவாள் என்னும் பயத்தினாலோ அவள் வார்த்தைகளைக்கேட்டவுடன் அந்தக் குழந்தை அழுகையைநிறுத்தி மௌனமாயிருந்தது. உடனே மங்கத்தம்மாள் இராஜுவை ஒரு நாற்காலியின்மேல் உட் கார வைத்துவிட்டுத் தன்னுடைய தாயார் படுத்திருக்கும் கட்டிலின் அருகே சென்றாள்.

அப்போது கிழவி, "எனக்கு இதற்குமுன் இப்படி இருந்ததில்லையே! குளிர் கொஞ்சமும் குறையாமலே அவஸ் தைப்படுகிறேன்" என்று கூறி வருத்தப்பட்டாள்.

அதைக் கேட்ட பச்சையம்மாள் "பாட்டீ, உங்க ளுக்கு மாத்திரமல்ல. வயது அதிகமாக ஆக ஆக அனைவருக் கும் இவ்விதமாக வருத்தம் உண்டாவது இயற்கையே. பருவம் முதிர முதிரப் பலம் குறையும். அங்கமெல்லாம் மெலிகிற நாட்களில் இரத்த ஓட்டம் குறையும். ஆகவே

பிறர் கையுபசாரமில்லாது குளிர் நீங்காதென்பது திண்ணம். குளிரால் விறைக்க அவயவங்கள் ஒன்றை ஒன்று பற்றியிருக்கும்போது தேகத்தின்மீது எத்தனை வஸ்திரங்களைத்தான் அடுக்கடுக்காகப் போர்த்துக்கொண்டாலும் குளிர் ஒழிந்துவிடுமா? இல்லை. கை, கால் முதலிய அவயவங்கள் ஒவ்வொன்றையும் பிரத்தியேகமாகக் கம்பளிகளைக் கொண்டு மறைக்கவேண்டும்'' என்று சொல்லிக் கிழவியைத் தேற்றித் தானும் மங்கத்தம்மாளுமாகக் கிழவியை நோகாமல் பிடித்துத் தூக்கிக் கம்பளியை உதறிக் கட்டிலின்மீது விரித்து அதன்மேல் அவளை வளர்த்தி, கால்களிரண்டிலும் தனித்தனியே கம்பளிகளைச் சுற்றி கால்களின் விரற்சந்துகளில் காற்று புகாதபடி கம்பளித்துண்டுகளால் போர்த்துவிட்டு, மற்றொரு கம்பளியை எடுத்து அதனால் கைகளிரண்டையும் மார்பையும் மூடிவிட்டார்கள். பச்சையம்மாளின் உபாயம் வீணாகாமல் சித்திபெற்றது. அவ்விதம் செய்த சில நிமிஷங்களுக்குள் வயோதிகையின் தேகத்தில் சூடு பிறந்தது. கிழவியும் பச்சையம்மாளின் யுக்தி புத்திகள் யாருக்கு வரும் என்று மனமாரச் சந்தோஷத்துடன் கூறினாள்.

பிறகு பச்சையம்மாள் மங்கத்தம்மாளைப் பார்த்து, "ஏன் அம்மா, உன் தாயாரின் தேகத்தில் பின்னும் சூடு உண்டாவதற்கு வெந்நீர் ஒற்றடம் கொடுக்கவேண்டும். அதற்காக வெந்நீரின் சூடு தாங்கக்கூடிய அவ்வளவு உறுதியான புட்டி ஏதாவது ஒன்று இங்கு இருக்கிறதா?" என்று கேட்டாள்.

அதற்கு மங்கத்தம்மாள் "அப்படிப்பட்ட புட்டி ஒன்றும் எங்கள் வீட்டில் இல்லையே அம்மா!'' என்று கூறினாள்.

அதைக் கேட்ட பச்சையம்மாள், "அப்படியா! அவசியம் அப்படிப்பட்ட புட்டி ஒன்று உங்களுடைய வீட்டில் இருந்தே தீரவேண்டும். அதற்காகப் பத்து எட்டு செலவிடவேண்டிய அவசியமில்லையே! முக்கால் ரூபாய் கொடுத்தால் திவ்வியமான கல் புட்டி ஒன்று வாங்கலாம். அதற்குக் குறைவாகவும் வாங்கலாம். ஆனால் நல்ல புட்டியாய் இராது. மங்கத்தம்மா, உன் தாயாரைப்போன்ற கிழவிகள் இருக்கும் வீட்டில் சமயத்தில் ஒற்றடம் போட ஒரு கல் புட்டி இருப்பது மிகவும் பிரயோசனமாய் இருக்கும். வாங்கும் புட்டி உறுதியுடையதாயிருக்கவேண்டும். இன்னொரு விஷயம் கவனிக்கவேண்டும். ஒற்றடமிடும்போது புட்டி உடைந்தாவது, மேல் மூடி நெகிழ்ந்தாவது நீர் கசிந்து நோயாளியின் உடம்பில் ஈரம் சுவறினால், பிராண சங்கடம் நேரிடும். அப்படி புட்டி உடைந்து நீர் சிந்தி மெத்தையில் நீர் ஊறியதனால் இரண்டொருவர் இறந்து போயிருக்கிறார்கள். ஆதலால் வெந்நீர் ஒற்றடம் இடும் புட்டியானது சூட்டை நன்றாகத் தாங்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஒற்றடமிடும்போது தண்ணீர் கசியாதபடி, மேல்மூடி, புட்டியில் நன்றாகப் பதிந்திருக்கவேண்டும். திருகுமூடியுடைய புட்டியிருந்தால் திருகு மறைத்தளராமல் பொருந்தி இருக்கவேண்டும். மங்கத்தம்மா! இன்றைக்கே நான் சொல்லியபடி ஒரு புட்டி வாங்கிவிடு. பருவம் முதிர்ந்தவர்களுக்குத் தேகத்தில் தாங்கமுடியாத குளிர் உண்டாகும் சமயத்தில் நான் இப்போது செய்துகாட்டியபடி கம்பளியால் போர்வையிடுவதும் வெந்நீர் புட்டியில் ஒற்றடம் கொடுப்பதும் சிறந்த பக்குவங்களாகும். கட்டுப்பட்ட உதிரத்தைத் தேகம் முழுவதும் ஓடும்படி செய்வதற்

காகச் சிலர் உடம்பைப் பிடித்துத் தேய்க்கிறார்கள் அல்லவா? அது தவறுதலான காரியமாகும். அப்படிச் செய்வதால் தோல் உரிந்து இரணமாறுலும் ஆகும். விருத்தருக்கு வரும் காயம், இரணம் முதலானவை வரவர விருத்தியாகும். அப்படி உண்டாகும் இரணத்தை ஆற்றுவது மிகவும் கஷ்டமான காரியமாகும்'' என்று கூறினாள்.

அதுவரையில் அச்சத்தால் நல்ல பிள்ளைபோல வாய்த் திறவாதிருந்த இராஜுவுக்கு அலுப்பு உண்டாக அவன் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். உடனே மங்கத்தம்மாள், அதட்டி, "இராஜு நீ நல்ல பிள்ளையல்ல, அழாதே, மகனே! உனக்கு என்ன நோய் அப்பா?'' என்று கூறிக்கொண்டே அவன் சமீபத்திற்குப்போய் அவனைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டாள்.

அதைக் கண்ட பச்சையம்மாள், மங்கத்தம்மாளைப் பார்த்து, "அம்மா குழந்தையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டதனால் அதனுடைய நோய் மாறிவிடுமோ? சிற்றுமணக்கெண்ணெய் ஒரு சங்கு வார்த்தால் நோய் மாறும்'' என்று சொல்லிக்கொண்டே அவள் சமீபத்தில் சென்றாள்.

பச்சையம்மாள் தன் சமீபத்தில் வருவதைக்கண்ட குழந்தையாகிய இராஜு பயத்துடன் பச்சையம்மாளை மிரள மிரள, கண்களை விழித்துப் பார்த்தான். பச்சையம்மாள் அவன் கையைப்பிடித்துப் பார்த்தவுடன் நாவை நீட்டச்சொல்லிப் பார்த்தாள்.

உடனே அவள் மங்கத்தம்மாளைப் பார்த்து, "மங்கத்தம்மா, நான் கூறியது உண்மையாகவே முடிந்துவிட்டதே. ஒருதரம் தாராளமாக மலம் போகும்படி மருந்து கொடுத்தாலன்றிக் குழந்தை இரண்டொரு நாளைக்குமேல் சுகமாய்

நோயில்லாமல் இருக்கமுடியாது. அவன் வயிற்றில் புளிப்பு தட்டியிருக்கின்றது குழந்தை தித்திப்புப் பண்டத்தை மனம் தெகிட்டத் தின்றிருப்பதாகத் தோன்றுகிறது" என்று சொன்னாள்.

அதற்கு மங்கத்தம்மாள், "ஆம், நீங்கள் சொல்லுவதில் ஒன்றும் குற்றமில்லை. நீங்கள் சொல்லியது உண்மைதான். ஆயினும் என்ன செய்கிறது? பிள்ளைகள் ஓயாமல் அழுதுகொண்டிருந்தால், பெற்றவள் பின் விளையும் தீமையைக் கொஞ்சமும் கவனியாமல் அழுகையை நிறுத்தத் தின்பண்டங்கள் ஏதேனும் வாங்கிக்கொடுத்து வாயை மூடச்செய்கிறது வழக்கந்தானே, அம்மா!" என்று தன் செய்கைக்குச் சமாதானம் கூறினாள்.

அதைக் கேட்ட பச்சையம்மாள், "குழந்தைகளுக்குத் தித்திப்புப் பண்டம் வாங்கிக்கொடுத்து வியாதியை வலிய அழைத்துக்கொள்ளுவதைவிட அழுகையை நிறுத்த வேறு வழியில்லையா! தித்திப்புப்பண்டம் வாங்கிச் சாப்பிடுவதால் செலவழியும் காசுகளைச் சேர்த்துவைத்தால் ஒரு வாரத்தில் சேரும் தொகையைக்கொண்டு உன்னுடைய பிள்ளைகளுக்கு வேண்டிய விளையாட்டுக் கருவிகளை வாங்கிக்கொடுக்கலாமே?" என்று சொன்னாள்.

அதற்கு மங்கத்தம்மாள், "நீங்கள் சொல்லுவது என்னமோ நல்ல யுக்திதான் அம்மா. ஆனால் தித்திப்புப் பண்டங்களை வாங்கும் காசைச் சேர்த்துவைத்து அந்த அற்ப தொகைக்கு வாரமுடிவில் எந்தப்பொருளை வாங்கக்கூடும்?" என்று கேட்டாள்.

உடனே பச்சையம்மாள் மங்கத்தம்மாளைப் பார்த்து, "அற்ப தொகை என்று சொல்லுகிறாய் மங்கத்தம்மா!

கணக்குப் பார்த்தால் எல்லாம் தெரியும். நீ ஏறக்குறைய ஒவ்வொரு வாரத்திலும் உன் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி எத்தனை அணா கொடுத்து வருகிறாய்?" என்று கேட்டாள்.

அதற்குத் "தங்களுடைய வாக்கிலிருந்து புறப்படும் கேள்விகள் ஒன்றுங்கொன்று அதிசயமாயிருக்கின்றனவே! நான் என்னுடைய குழந்தைகளுக்கு அன்றன்றுகொடுக்கும் காசுகள் இவ்வளவென்று கணக்கு எழுதி வைத்திருக்கிறேனா? என்ன! அன்று கொடுக்கும் துட்டுக் கணக்கு அன்றே மறந்து போகும். அப்படியிருக்க எனக்குச் சராசரி கணக்கு நிதானம் எப்படித் தெரியும் பச்சையம்மா?" என்று கேட்டாள் மங்கத்தம்மாள்.

அதைக்கேட்ட பச்சையம்மாள் மங்கத்தம்மாளைப் பார்த்து, "நீ நினைத்துப் பார், மங்கத்தம்மா! இந்த வாரம் கொடுத்த தொகை என்ன? அது உனக்கு மறதியாய்ப் போனாலும் உன்னுடைய பிள்ளைகளுக்கு ஞாபகமிருக்குமென்று எண்ணுகிறேன்" என்று கூறினாள்.

இவ்விதம் பச்சையம்மாள் சொல்லி வாய் மூடுமுன்னர், மங்கத்தம்மாளின் மூத்தகுமாரத்தியாகிய அன்னம் என்பவள் பச்சையம்மாளின் முன்னே ஓடிவந்து "திங்கட்கிழமை சின்னம்மா தந்தது நாலு துட்டு; செவ்வாய்க்கிழமை அம்மா கொடுத்தது இரண்டு துட்டு; புதன்கிழமை எனக்குத் துட்டு யாருந் தரவில்லை. நேற்று வியாழக்கிழமை ஒரு அணாவும் இரண்டு துட்டும் கிடைத்தன. இன்றைக்கு இரண்டு துட்டு வாங்கிக்கொண்டேன்" என்று தன் தாயாரைக் கேட்ட கேள்விக்கு மகள் பதில் கூறினாள்.

அதைக்கேட்ட பச்சையம்மாள் சந்தோஷப்பட்டு அன்னத்தைப் பார்த்து, "நீ வாங்கின துட்டின் கணக்கை மறவாமல் நினைவுடன் கூறியதைப்பற்றி நான் சந்தோஷப்படுகின்றேன். நீ ஒருவருக்கு வாழ்க்கைப் படும்போது குடித்தனப்பாங்கு உனக்கு நன்றாய் அமையும்; நல்லது இவ்வாரத்தில் இதுவரையில் உனக்குத் தின்னும் பண்டத்தில் செலவழிந்த பணம் இரண்டணு நான்கு துட்டு அல்லவா?" என்று கேட்டாள்.

உடனே அன்னம் துட்டுகளைக் கணக்கிட்டுப் பார்த்து "ஆம், இரண்டணு நான்கு துட்டுதான்" என்று கூறினாள்.

"சந்தோஷம்! உன்னுடன் பிறந்தவர்கள் எத்தனைபேர் அம்மா!" என்று கேட்டாள் பச்சையம்மாள்.

அதற்கு அன்னம் "நான்குபேர், என்னுடன் ஐந்து பேர்" என்று கூறினாள்.

"நாலைந்து என்ன?" என்று கேட்டாள்.

"இருபது" என்று கூறினாள் அன்னம்.

உடனே பச்சையம்மாள், "நாலிருபது துட்டு எத்தனை அணு?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு அன்னம் கூறிய பதில் தப்பாயிருந்தது. உடனே அருகிலிருந்த அன்னத்தின் தம்பி, அருணாசலம் தலைநிமிர்ந்து, புருவத்தை நெறித்து ஆலோசித்து, "பதின்மூன்று அணு இரண்டு துட்டு. நான் அன்றொரு நாள் பள்ளிக்கூடத்தில் என்னுடைய வகுப்பில் இதே கேள்விக்குப் பதில்கூறி ஒருவனுக்கு முன்னேபோய் உட்கார்ந்தேன்" என்று தைரியமாகச் சொன்னான்.

பிறகு பச்சையம்மாள், "நீ மிகவும் கெட்டிக்காரன் தான். பதின்மூன்றணு இரண்டு துட்டை ஐம்பத்திரண்டால் பெருக்கினால் எவ்வளவு தொகை வரும்" என்று கேட்டாள்.

அதற்குப் பதில் கூறமுடியாமல் அருணாசலம் தலை இறங்கிக்கொண்டான். "என்ன பதில் சொல்லுவதென்று அவனுக்குத் தோன்றவில்லை. கடைசியாக அவன் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. ஆனால் பதின்மூன்று அணு இரண்டு துட்டை ஐம்பத்திரண்டால் பெருக்கி வந்த தொகை அதிகமாய் இருக்கும்; அது கையில் அடங்காது. பை நிறைய இருக்கலாம்" என்று சொன்னான்.

அதைக் கேட்ட பச்சையம்மாள், "பெருந்தொகையென்று நீ சொல்வது மெய்தான். நாற்பத்துமூன்று ரூபாய் ஐந்து அணு, நான்கு பை" என்றாள்.

அதைக் கேட்ட பிள்ளைகள், "அடேயப்பா!" என்று ஆச்சரியப்பட்டார்கள்.

தின் பண்டங்களில் செலவாகும் பணம் இவ்வாறு அளவு கடந்திருப்பதைச் சொல்லக் கேட்டபொழுது, ஓயாது அழுத கண்ணையிருந்த குழந்தை ராஜூவும் ஆச்சரியத்தால் அழுவதை விட்டுத் தனக்குள் துட்டுகளை நினைத்துச் சிரித்துக்கொண்டிருந்தது.

பிறகு பச்சையம்மாள் பொதுவாக யாவரையும் பார்த்து "மிட்டாய்க்கடையில் பாழாக்குகின்ற அவ்வளவு பணத்தையும் மற்றேதாகிலும் ஒரு வழியில் செலவிட்டு நன்மையடையக்கூடாதா?" என்று கேட்டாள்.

இரண்டொரு நிமிஷம் வரையில் எல்லாரும் மௌனமாயிருந்தார்கள். பிறகு அன்னம், பச்சையம்மாளைப் பார்த்து

"பிரயோஜனமாகப் பணத்தைச் செலவிடும் உபாயம் உண்டு. காமாக்ஷியின் பட்டுச்சிற்றாடையைப்போல் ஒன்று வாங்கலாம்; அது எனக்கு ஆசையாய் இருக்கின்றது" என்று அவசரமாய்ச் சொன்னாள்.

பிறகு தணிகாசலம் வைத்திருப்பதுபோல் அழகிய தச்சுவேலைக்காகும் ஆயுதப்பெட்டி ஒன்று தனக்கு வேண்டுமென்று அருணாசலமும், தலையாட்டும் பொம்மை ஒன்று வாங்குவது தனக்கு இஷ்டமென்று இளைய சொர்ணமும் சந்தோஷத்துடன் கூறினார்கள். தாய் மடியில் இருந்த இராஜு வோ, "பந்து ஒன்று வாங்கினால் உருட்டி விளையாடுவேன். அதுகூட எனக்கு அவ்வளவு முக்கியமல்ல. மிட்டாய்க்கடையில் கை நிறையும்படியான பெரிய லட்டு ஒன்று இருந்ததைக் கண்டு ஆசைப்பட்டேன், அதை வாங்கித் தின்றால் வாயில் தேன் ஒழுகும்" என்று சொல்லிக் குதித்துக் கூத்தாடினான்.

அவ்விதம் இராஜு கூறிய மழலைச் சொற்களைக் கேட்ட பச்சையம்மாள், "இராஜு, வயிற்றுவலிக்குச் சிற்றாமணக்கு எண்ணெய் குடிக்க மாட்டேனென்று அழுகிற நீ, ஆசைதீர பெரிய லட்டு வாங்கித்தின்றால் அப்புறம் ஒரு பங்குக்கு இரு பங்கு எண்ணெய் குடிக்கவேண்டுமே! அதற்கு என்ன செய்வாய்? மிட்டாய் முதலிய சிற்றுண்டிகள் வாங்கித் தின்று அதனால் பலவித வியாதி கண்டு உபத்திரவப்படுவதினும் பந்து வாங்கி உருட்டி விளையாடுவதுதான் நல்லதாகும்" என்று, மறுபடியும் எல்லாப் பிள்ளைகளையும் பார்த்து, "பிள்ளைகளே! கையில் கிடைத்த பணத்தை வீண்செலவு செய்யாமல் சேர்த்துவைப்பீர்களானால் உங்களுடைய மனம்போல் அன்னம் பட்டுச்சிற்றாடையும், அருணாசலம் தச்சன் ஆயு

தப் பெட்டியும், சொர்ணம் பொம்மையும், இராஜா பந்தும் சுலபமாக வாங்கிக்கொள்ளலாமே! அப்போது அவைகளை வாங்கித்தரும்படி நீங்கள் யாரையும் வேண்டிக்கொள்ள வேண்டியதில்லையே! உங்களுக்குக் கிடைக்கும் பணத்தை நீங்கள் வீண் செலவு செய்யாமல் சேர்த்து வைத்து அடுத் தடுத்துப் பல பொருள்களை வாங்குவீர்களானால் எவ்வளவோ பிரயோசனமாயிருக்குமே!'' என்று சிறுவர் சிறுமியர்களுக்கு அகப்படும் பணத்தை அவர்கள் செலவிடவேண்டிய வழிகளைக் குறிப்பிட்டாள்.

அதுவரையில் பொறுமையுடன் பச்சையம்மாள் கூறும் விஷயங்களையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த மங்கத் தம்மாள் சந்தோஷத்துடன் பச்சையம்மாளைப் பார்த்து, "மெய்தானம்மா. இப்போது நீங்கள் கூறியதைப் பற்றி நான் ஒருபோதும் நினைத்ததேயில்லை. தின்பண்டத்தில் செலவிடும் தொகையை நீங்கள் கூட்டிச் சொன்னீர்களே! அது சரியாய் இருக்குமா? நீங்கள் கூறுவது அதிகத் தொகையாய் இருக்கின்றதே'' என்று கேட்டாள்.

பச்சையம்மாள் :—"நான் சொல்லிய கணக்கில் ஏதேனும் தவறு இருக்குமென்னும் சந்தேகம் வேண்டியதில்லை. பதின்மூன்று அணா இரண்டு துட்டை, ஐம்பத்திரண்டால் பெருக்க வரும் தொகை, நாற்பத்துமூன்று ரூபாய் ஐந்து அணா நான்கு பை ஆகின்றது. ஆனால் ஒரு வருஷ காலத்தில் ஐம்பத்திரண்டு வாரங்களில் உன்னுடைய பிள்ளைகளுக்குத் தித்திப்பு பண்டங்கள் வாங்கித் தின்பதற்காக நீ செலவிடும் தொகையின் அளவு ஒரோர் சமயத்தில் கொஞ்சம் கூடினாலும் கூடும். குறைந்தாலும் குறையும். அவ்வளவே. மங்கத்தம்மா, ஒன்றைப்பற்றி மட்டும் நான்

உறுதியாகக் கூறுவேன். சிற்றுணவுகளில் பாழுக்கிறைக்கும் பணத்தைப் பத்திரமாக வைத்திருந்தால் அது உன்னுடைய பிள்ளைகளுக்குச் சிறக்க உடுக்கத்தக்க விதவிதமான துணிகள் வாங்குவதற்கு உதவும்; அல்லது அவர்களுக்கு இன்பத்தையும் பிரயோசனத்தையும் தரத்தக்க விளையாட்டுக் கருவிகளை வாங்கிக்கொடுக்கவும் உதவும். நீ அவர்களை ஓரிடத்தில் விட்டு, அவர்களுடைய விளையாட்டுக் கருவிகளையும் அவர்களிடம் கொடுத்துப் பிறகு நீ உன்னுடையவேலையைக் கவனிக்கப்போய்விட்டால், பிள்ளைகள் நெடுநேரம்வரையில் விளையாட்டில் கவனமாய் இருப்பார்கள். உன்னுடைய வேலைக்கு அவர்களால் இடையிடையே தொந்தரவு ஒன்றும் உண்டாகாது. இப்படிச் செய்வதை விடுத்து, தாயானவள் அழுகிற பிள்ளையைப் பார்த்து, "இந்தா அரையணு, இனி அழாமல் வாயை மூடிக்கொள். இதைக் கொண்டுபோய்த் தெருவில் எள்ளுண்டை வாங்கிக்கொண்டு வந்து சாப்பிடு" என்று சொல்லுவது நல்லதா? அரையணு கொடுத்துவிடுவது பெரு நஷ்டத்திற்கு இடமென்பது தாய்க்கு அந்த வேளையில் தோன்றுவதில்லை. தினம் ஒன்றுக்கு அரையணு விகிதம் ஒரு வாரத்திற்கு மூன்றரையணுவும், மாதத்திற்கு பதினைந்தணுவும் வருஷத்திற்குப் பதினைன்றேகால் ரூபாவாகவும் தொகை உயர்ந்துகொண்டு போவது தெரிகிறதில்லை."

மங்கத்தம்மாள்:—"பச்சையம்மா! கல்வியறிவில்லாத எனக்கு, இந்தக் கணக்கெல்லாம் எப்படித் தெரியப் போகிறது? என் தாயும் தந்தையும் என்னை இளமையிற் படிப்பிக்கவில்லையே! வயதாய்விட்டது. இனி நான் படிப்பை நினைத்துப் பயன் என்ன?"

பச்சையம்மாள்:—"நான் சொல்லிய கணக்கை நிதானித்தறிய கல்வி அவசியம் கற்றிருக்கவேண்டுமென்னும் கட்டாயம் ஒன்றுமில்லை, மங்கத்தம்மா. இயற்கையாக உள்ள அறிவே அதற்குப்போதுமானது. உனக்கு இயற்கை அறிவு விசேஷமாய் உண்டு என்பதை நான் அறிவேன். இல்லாவிடில், வீட்டை இப்படிச் சுத்தப்படுத்தி அலங்கரித்து வைக்க எப்படித் தெரியும்? எந்தக் காரியத்தையும் உன் சிந்தையிற் பதியும்படி உனக்கு ஒரு முறை சொன்னால் அதை நீ எந்நாளும் மறக்கமாட்டாய். இனி நான் இப்போது குறிப்பிட்டுக் கூறிய குடும்பசிக்கனத்தை இனி மறக்கமாட்டாய் என்று நினைக்கிறேன்"

மங்கத்தம்மாள் :—"ஆம், பச்சையம்மா! தாங்கள் கூறியதை இனி நான் ஒரு போதும் மறக்கமாட்டேன். கையிற் கிடைக்கும் பணத்தை வீண்செலவு செய்யாமல் சேர்த்துவைக்கப் பிள்ளைகளுக்கு இஷ்டமானால் அது எனக்குச் சந்தோஷந்தான். அது இருக்கட்டும்அம்மா, வயிற்று வலியுடன் இருக்கும் இராஜுவுக்கு என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்? சிற்றாமணக் கெண்ணெய் கொடுக்கத்தான் வேண்டுமா?"

பச்சையம்மாள் :—"ஆமாம், இராஜுவுக்கு சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்கவேண்டியது அவசியந்தான். நேற்றிரவு சிற்றாமணக்கெண்ணெய் கொடுத்திருந்தால் உன் குழந்தை இராஜு இன்றைக்குச் சிறிதும் தேக அசௌக்கியமின்றி ஓடி யாடித் திரிவானே!"

மங்கத்தம்மாள்:—"ஆம் அம்மா, நானும் அப்படித்தான் நினைத்தேன். குழந்தைக்கு எவ்வளவு எண்ணெய் கொடுக்க

வேண்டுமென்னும் அளவு தெரியாதபடியால் நான் நினைத்தபடி செய்யாமல் இருந்துவிட்டேன். இந்த அற்பவிஷயங்களுக்கெல்லாம் வேறு வைத்தியர்களை அழைப்பதென்றாலும், ஆலோசனை கேட்பதென்றாலும் செலவு அதிகப்படும் என்னும் பயமும் எனக்கு உண்டு.''

பச்சையம்மாள் :—''இவ்வித அற்ப நோய்களுக்கெல்லாம் வைத்தியரை அழைக்க வேண்டுவதில்லை. வைத்தியரிடத்திற்குப் போகவேண்டியதுமில்லை. கோழியை அடிக்கக் குறுந்தடி வேண்டுமா? கையில் வெண்ணெய் இருக்க நெய் தேடுவானேன்? பெரும்பாலும் எளிய மருந்துகள் எத்தனையோ குழந்தைகளுக்கு ஏற்படும் வியாதிகளைப் போக்கத்தக்கனவாய் இருக்கின்றன. குழந்தைகளுக்கு அவ்வப்போது ஏற்படும் வியாதிகளைப் போக்குவதற்கான மருந்துகளைச் சேகரித்து கைத்துணையாக வைத்திருப்பது அனைவரும் கவனிக்கவேண்டிய விஷயமாகும். நோய்வந்தபிறகு தேடித் திரிந்து கடைமருந்து வாங்கப்போனால், கடைக்காரன் கேட்கும் பணத்தைக் கட்டாயம் கொடுத்தே தீரவேண்டியதாயிருக்கும். கொடாமல் இருப்பதற்கும் அப்போது வேறு வழி என்ன ஏற்படப்போகின்றது? இப்படி மருந்து வேண்டும் சமயந்தோறும் பணத்தைக் கொட்டி வந்தால் பல துளி பெரு வெள்ளம் என்னும் பழமொழிக்கிணங்க நாளடைவில் மருந்துக்காக செலவிடும் பணம், அளவு கடந்து பெருந்தொகையாய் விடும். ஆகையால் அவசியமான மருந்துகளை மலிவாக விற்கும் கடையைத் தேடிச் சென்று ஒரே தடவையில் வாங்கி வைத்துக்கொள்ளுவோமானால் பணச்செலவு குறையும். கால மாறுதலினாலுண்டாகும் சீதோஷ்ண நிலைமைக்குத் தகுந்தபடி குழந்தைகளுக்கு இரண்டு, மூன்று

நான்கு உச்சிக்கரண்டி வரையில் எண்ணெய் கொடுக்கலாம். விரோசனத்திற்கு மற்றொருவித அருமையான மருந்து உண்டு. அதாவது ரூபார்ப்பு (Ruburb) என்னும் ஒருவகையான சீனக்கிழங்கு நான்கு குண்டுமணி எடை, உழமண் உப்பு நான்கு குண்டு மணி எடை, சுக்காவது மிளகுத் திராவகமாவது கொஞ்சம், ஆகிய இம்மூன்று பொருள்களும் கலந்து செய்யப் படுவதுதான் அந்த மருந்து. அந்த மருந்தைச் செய்து புட்டியில் விட்டு வைத்திருந்தால் வேண்டும் போது சிறிது கொடுக்கலாம். இதனால் செலவு குறையும். இப்போது குழந்தை இராஜுவுக்கு ஏற்பட்டிருக்கின்ற வயிற்று வலி முதலிய நோய்களுக்கு இது கைகண்ட மருந்து. இம் மருந்து கொடுத்தும் குணமில்லாவிட்டால் பிறகு வைத்தியரை அழைத்துக் காட்டவேண்டியது அவசியமான காரியமாகும். இனி மருந்து கொடுக்கவேண்டிய திட்டத்தைக் கூறுகிறேன் கேள். எந்த மருந்தை வாங்கினாலும் சரிதான். அந்தமருந்தை பெரியவர்களுக்கு எவ்வளவுகொடுக்கவேண்டுமென்பதைக் கேட்டறிந்து கொண்டு, அதில் மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அரைக்காற் பங்கு, மூன்று முதல் ஏழு வயதுவரையில் உள்ள பிள்ளைகளுக்குக் காற் பங்கு, ஏழு முதல் பதினான்கு பருவமாகிற வரையில் அரைப்பங்கு, பதினான்கு பருவம் கடந்தவர்களுக்கு மூன்றில் இரண்டு பங்குவீதமாகக் கொடுக்கவேண்டும். தெரிகிறதா, நான் சொல்லுவது ?"

மங்கத்தம்மாள் :—"இந்த அளவு திட்டங்கள் தவறாமல் ஞாபகத்தில் வைத்திருக்க என்னால் முடியுமென்று நான் நினைக்கவில்லையம்மா ! என்னுடைய நினைவு தவறிவிடுமானால் ஏதேனும் விபரீதம் ஏற்படவும் கூடும். வேறு ஒன்றானாலும்

மாயில்லை. மருந்தில் ஞாபகப் பிசகு ஒரு சிறிதுமின்றி ர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமே அம்மா!"

பச்சையம்மாள் :—"ஆம் மங்கத்தம்மா, நீ சொல்லு பதும் சரிதான். ஆனால், நான் மருந்து பட்டோலை தயார் செய்து தருகின்றேன். நான் இப்பொழுது உனக்கு விவர மாகக் கூறிய மருந்து, பிரமாண முதலிய நுட்பங்களை வீடு கள்தோறும் உள்ள தாய்மார்கள் வேண்டும்போது எளிதில் பார்த்து அறிந்துகொள்ளும்பொருட்டுத் துண்டுக் கடிதங் களில் அச்சிடுவித்துக்கொடுத்தால் நன்மையாக இருக்கு மென்று நான் பலமுறை எண்ணியதுண்டு. ஒரு உச்சிக் கரண்டி கொள்ளும் எண்ணெய் ஒரு டிராம்; ஒரு அகலக் கரண்டி கொள்ளுவது அரை அவுன்ஸ்; ஆனால் சில வீடு களில் ஒன்று முதல் அதற்குமேல் இரண்டு மூன்று டிராம் அதிகமாக பிடிக்கத்தகுந்த அகலக் கரண்டியும் இருப்பதைக் கண்டிருக்கின்றேன். அவைகளை அளவாகப் பாவிப்பது ஆபத்திற்கிடமாகும். ஆதலால் டிராம், அவுன்ஸ் இவை களைக் குறிக்கும் அளவுகுப்பி கடைகளில் உண்டு. அவை களை வாங்கி உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளுவது நல மாகும். இன்னும் இவைபோன்ற அளவு திட்டங்கள் அநேக ருக்குத் தெரியாது. அவ்வித அறியாமையினால் நேரிடும் கஷ்டங்கள் அநேகம் உண்டென்பதை நான் அறிவேன். இத் தகைய கெடுதல்களை நிவர்த்தி செய்யவே நான் மருந்துப் பட்டோலை அச்சிட உத்தேசித்திருக்கின்றேன்."

மங்கத்தம்மாள் :—"அம்மா, நீங்கள் சொன்னபடி மருந் துப் பட்டோலை அச்சிட்டுப் பிரசுரப்படுத்துவீர்களானால் அது முக்கியமாக என்னைப்போன்ற படிப்பில்லாதவர்களுக்கு எவ்வளவோ நன்மையை உண்டாக்கும்.

பச்சையம்மாள் :—"உண்மைதான். கூடிய சீக்கிரத்தில் நான் சொல்லியபடி செய்கின்றேன். பொது நன்மைக்கான காரியங்களைச் செய்வதற்கு நான் எப்போதும் மனமுவந்து இருக்கின்றேன். மருந்துப்பட்டோலை அச்சிட்டு ஆயத்தமானதும் அதில் உனக்கு ஒரு பிரதி தருகின்றேன்."

மங்கத்தம்மாள் :—"அம்மா, நீங்கள் தயவுசெய்து கொடுப்பீர்களானால் அந்நன்றியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். எனக்கு அறிமுகமான பெண்கள் அச்சிடப்பட்ட அந்தப் பட்டோலையைக் கண்டால் விடமாட்டார்கள். தலைக்கொன்று வீதம் தங்களுக்கும் வேண்டுமென்று கேட்பார்கள். பச்சையம்மா, வெகுநேரம் பேசி, வீணாக உமது அருமையான காலத்தைப் போக்கிவிட்டேன், மன்னிக்க வேண்டும். இன்னும் ஒரே ஒரு விஷயம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். அன்றொரு தினம் இரணத்தை ஆற்ற ஊமத்தம் இலைவைத்துக் கட்டுவதைப்பற்றித் தாங்கள் எனக்குக் கூறியமுறையை மறந்துபோனேன். இவ்வீதியிலேயே வசிக்கும் துளசியம்மாளுடைய குழந்தையின காலில் இரணம் ஏற்பட்டு மிகுதியும் உபத்திரவப்படுகிறது. ஊமத்தம் இலைவைத்துக் கட்டும் முறையைத் தயைகூர்ந்து இன்னும் ஒரு முறை எனக்குச் சொல்லுங்கள், அம்மா!"

பச்சையம்மாள் :—"அது ஒன்றும் பிரமாதமான காரியமல்ல மங்கத்தம்மா. குழந்தைகளும் அதை எளிதில் அறியலாம். இரணத்தை ஆற்ற ஊமத்தம் இலை ஒன்று மாத்திரம் அல்ல. காளைப்பாவட்டை, இரணக்கள்ளி, ஆடுதின்னாப்பாளை முதலிய இலைகளும் உதவும். ஆடுதின்னாப்பாளைக்கு இரணப் போக்கியென்றும், புழுக்கொல்லி யென்றும் வெவ்வேறு பெயர் வழங்கும். இந்த இலைகளில் ஏதாவதொன்றை

ருப்பில் வதக்கி, விளக்கெண்ணெய் தடவி, இரண்டு மல்வைத்து மெல்லிழைத்துணித்துண்டை இரண்டாக மன்றாக மடித்து அதன்மேல் வைத்துக் கட்டவேண்டியது. ட்டி மூன்றுமணிநேரம் சென்றபிறகு அதை அவிழ்த் தறிந்துவிட்டு மறுகட்டு கட்டவேண்டியது. இப்படி ஐந்து கட்டு கட்டினால் விஷநீர் முழுவதும் வெளிப்படும். றகு இலகுவில் இரணம் ஆறிப்போகும்."

மங்கத்தம்மாள்:—"பச்சையம்மா, மன்னிக்கவேண்டும். ப்போது நீங்கள் போகும்போது தயைசெய்து துளசியம் மாளைக் கண்டு இப்போது தாங்கள் என்னிடம் கூறிய க்குவத்தைக் கூறக்கூடுமானால் நலமாயிருக்கும். தாங்கள் சொன்னவைகளையெல்லாம் கொஞ்சமும் பிசகாமல் அப் படியே கூறும் வாக்குத்திறமை எனக்குக் கிடையாது. துளசி யம்மாளின் குழந்தை அதிக உபத்திரவப்படுகின்ற படியால் அந்த அம்மாள் தங்கள் வரவை அதிக ஆவலோடு எதிர் பார்க்கிறார்கள். இந்தச் சமயம் தாங்கள் செய்யும் உதவியை அந்த அம்மாள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்."

பச்சையம்மாள்:—"நல்லது மங்கத்தம்மா, துளசியம் மாளின் வீடு எது?"

மங்கத்தம்மாள்:—"இவ்வீதியில் இருபதாவது கதவி லக்கமிட்ட வீடு. வாசலில் மகிழ மரம் ஒன்று நன்றாய் வளர்ந்து தழைத்து பூத்து நிற்கின்றது. அந்த அடையாள முள்ள வீடுதான், துளசியம்மாள் வீடு."

பச்சையம்மாள்:—"அப்படியா! நல்லது மங்கத் தம்மா, நான் துளசியம்மாளைக் கண்டு சொல்லவேண்டி யதைச் சொல்லிவிட்டுப் போகிறேன்" என்று சொல்லி விட்டுப் படுக்கையிற்கிடந்த கிழவியின் சமீபத்திற்போய்,

"பாட்டி, தங்களுக்கு முன் இருந்த குளிர் உபத்திரவம் இப்போது தீர்ந்ததா?"

கிழவி:—"ஆம் அம்மா, குளிர் கொஞ்சமும் இல்லை. இப்போது என்னுடைய உடம்பு எவ்வளவோ சுகமாய் இருக்கிறது. நீ மகராஜியாய் இருக்கவேண்டும்."

பச்சையம்மாள்:—"மிகவும் சந்தோஷம் மங்கத்தம்மா நான் போய் வருகிறேன். இராஜூவுக்குச் சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்க மறந்துபோகாதே. நான் சொல்லும் முறையாக எண்ணெ கொடுப்பாயானால் நாவில் ருசிதட்ட, இராஜூ பின்னும் வேண்டுமென்று வலியக்கேட்டாலும் கேட்பான்"

மங்கத்தம்மாள்:—"அதென்ன முறையம்மா?"

பச்சையம்மாள்:—"சொல்லுகிறேன் மங்கத்தம்மா, ஆழாக்குப்பாலில் கொஞ்சம் சர்க்கரையும் அதற்குச் சமன் எடையாக வால்மிளகு, ஏலம், இலவங்கம், ஜாதிபத்திரி இவைகளையும் போட்டு, நன்றாக ஊறும்படி செய்து, பிறகு அடுப்பில் வைத்து, இளங்கொதியாக கொதிக்கும்படி செய்து இறக்கிக்கொண்டு, அதன்பிறகு கொதிக்கவைத்து இறக்கிய பாலளவு சிற்றாமணக்கெண்ணெயும் கொஞ்சம் பாலும் ஒரு புட்டியில் விட்டு, புட்டியின் வாயை மூடிக் கொண்டு நன்றாகக் குலுக்கிப் பிறகு அதைக் கொதிக்க வைத்த பாலில் ஊற்றி இராஜூவுக்குக் குடிக்கக்கொடு. தேனை உண்டு ருசி கண்டவனைப்போல இராஜூ பின்னும் கொஞ்சம் மருந்து குடிக்கலாமா என்று எண்ணுவான். இம்மருந்தைக் குடித்த சிறுவர் சிறுமியர் வெகுபேர் ஒரு நாழிகைக்குள்ளே பின்னும் அம்மருந்து வேண்டுமென்று கேட்பதுண்டு."

மங்கத்தம்மாள்:—"நல்லது அம்மா. தங்கள் கட்டளைப் படியே செய்கிறேன்."

பிறகு பச்சையம்மாள் மங்கத்தம்மாளிடத்திலும் கிழவியிடத்திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு மகிழுமாக்குறிப் பின்படியே துளசியம்மாளின் வீடுபோய்ச் சேர்ந்தாள். பச்சையம்மாளைக்கண்டவுடன் துளசியம்மாள் கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்தாற்போல, அகமகிழ்வுடன் வரவேற்றாள். உடனே தன்னுடைய குழந்தையைக் கொண்டுவந்து அதனுடைய காலில் இருந்த இரணத்தைக் காட்டினாள்.

அதைக் கண்ட பச்சையம்மாள், "மங்கத்தம்மாள் சொன்னதற்கு அதிகமாகவல்லவோ இருக்கின்றது கேவலம் இக்குழந்தையின் காலின் இரணம் ஊமத்தம் இலை முதலிய கை மருந்துகளில் தீரும். பருவம் கடந்து வெந்து அளிந்து பார்க்கப் பரிதாபமாயிருக்கின்றதே!" என்று சொல்லிவிட்டுப் பிறகு, நோகாமல் இரணத்தை மெதுவாகக் கழுவிச் சுத்திசெய்து ஒற்றுடையால் ஈரம் போக்கி, கோதுமை ரொட்டி போல்டிஸ்செய்து வைத்துக் கட்டியபின், மறுபடியும் துளசியம்மாளைப் பார்த்து, "துளசியம்மா, நான் வீட்டுக்குப் போகும் மார்க்கத்தில் வைத்தியசாலையில் உள்ள இரணவைத்தியரிடம் இந்தக் குழந்தையின் காலை வந்து பார்க்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுப் போகின்றேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட எத்தனித்தாள். அப்போது அவ்வீட்டின் மற்றொரு அறையில் சுமார் பத்தொன்பது வயதுடைய பெண்ணொருத்தி வைக்கோல் மெத்தையின்மேல் படுத்து, "அப்பா, அம்மா!" என்று வாய் விட்டுக் கதறி வருந்திக்கொண்டிருந்தாள். அந்தச் சத்தத்

தைக் கேட்ட பச்சையம்மாள் துளசியம்மாளைப் பார்த்து, "அது யார் அம்மா" இன்னும் ஒரு நோயாளி இவ்வீட்டில் இருக்கிறதாகத் தோன்றுகிறதே? உன்னுடைய மகளா?" என்று கேட்டாள்.

துளசியம்மாள் :—" அம்மா, அவள் என்னுடைய தமக்கை மகள். சிவகாமி என்பது அவள் பெயர். நேற்று மழையில் நனைந்தபடியால் ஜலதோஷம் கண்டு வருந்துகிறாள். மூச்சுவிடவும் வாங்கவும் முடியாமல் சங்கடப்படுகிறாள்."

இவ்விதம் துளசியம்மாள் கூறியவுடன் பச்சையம்மாள், நோயாளியாகிய சிவகாமியின் சமீபத்திற்குப்போய், அவள் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, துளசியம்மாளை நோக்கி, " அம்மா இது சாதாரணமான நோயல்ல. தாமதம் செய்யக்கூடாது. சீக்கிரம் வைத்தியரை அழைத்துக் காண்பிக்கவேண்டும். நான் போய் வைத்தியரை அனுப்புகிறேன். ஆனால், அவர் வருவதற்குமுன் செய்யத் தகுந்த உபசாந்தி ஒன்று சொல்லுகின்றேன். நீராவி வேது பிடிக்கவேண்டும். வேது பிடித்தால் மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படும் சிவகாமிக்குச் சற்று ஆறுதல் உண்டாகும்" என்று கூறினாள்.

அவ்வார்த்தையைக் கேட்ட துளசியம்மாள், "நீராவி வேது பிடிப்பிக்கு முறை எனக்குத் தெரியாதம்மா. அதெப்படி சொல்லுங்கள்?" என்று கேட்டாள்.

அதற்குப் பச்சையம்மாள் " நீராவி வேது பிடிக்கு முறை சாதாரணமாக எவரும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடியதேயாம். நெருப்புப்போல ஆவி பறக்கும்படி வெந்நீர் காய்ச்சி கழுத்து சிறுத்த பாத்திரத்தில் விட்டு அப்பாத்திரத்திலிருந்து கிளம்பும் ஆவி முகத்திற்பட்டு அவசரத்

துடன் உட்செல்லும்படி பாத்திரத்தை உள்ளடக்கி முகத்தில் நன்றாய் ஆவி படும்படி உட்கார்ந்து, பாத்திரத்தையும் சேர்த்து இழை நெருங்கிய துணியினால் முக்காடிட்டுக் கொள்ளவேண்டும். ஆனால், வேது பிடிக்கும்போது முக்காடிட்டிருக்கும் துணிக்குள் கொஞ்சமும் காற்று நுழையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். வாய் அகலமான பாத்திரம் இதற்கு உதவாது. வெந்நீர் விரைவில் ஆறிப்போகும். சூடாறிப் பாத்திரத்திலிருந்து கிளம்பும் ஆவி நின்றுபோன பிறகும் வேது பிடிக்க வேண்டுமென்று தோன்றினால் அடுப்பில் கொதிக்கும் வெந்நீரை வேறு ஒரு பாத்திரத்தில் ஊற்றி முன் போலவே வேது பிடிக்கவேண்டும். இப்படிச் செய்ய கை சுறு சுறுப்பாக இருக்கவேண்டும். ஒரு பாத்திரத்தை விலக்கி மறு பாத்திரத்தை வைப்பது மேகம் மின்னி மறைவதுபோல் அத்தனை தீவிரமாயிருக்கவேண்டும். தாங்கக்கூடுமானால் அரைமணி நேரம் வேது பிடிப்பது நல்லது. ஆவியைப் பொறுக்கச் சக்தி இல்லாமற் போனால் அரைமணி நேரமாவதற்கு முந்தியே வேது பிடிப்பதை நிறுத்திவிடுவது நலம். பாத்திரத்தை விலக்கும்போது சடுதியில் முக்காட்டை எடுக்கக்கூடாது. எடுத்தால் நீராவியால் உடம்பு முழுவதும் தோன்றிய வியர்வை குளிர்காற்றுப் பட்டு அடங்கிப்போகும். அதனால் செய்த சிகிச்சை வீணாகிவிடும். ஆகையால், வேது பிடித்தானதும் முக்காடிட்டபடியே படுத்திருந்து இளைப்பாறி பிறகு முக்காட்டைக் கொஞ்சங் கொஞ்சமாக விலக்கவேண்டும். இவ்விதம் வேது பிடிப்பதினால் சுகமேற்படுகிறதென்று தோன்றினால் ஒரு நாளைக்கு மூன்று, நான்குமுறை வேது பிடிக்கலாம். அதையும் அப்படிச் செய்தால் நோயாளியின் தேகம் தாங்கத்

தகுந்த நிலையில் இருக்கிறதா என்பதை அறிந்தே செய்ய வேண்டும். வேது பிடித்தானதும் வீசும் காற்று, முகத்திற் படும்படி நிற்கவே கூடாது. செய்யும் முறையறிந்து செய்தால் தொண்டை நோய், மார்நோய், சுவாசாசயம் முதலிய வியாதிகளுக்கு வேது பிடிப்பதைக் காட்டிலும் வேறு மருந்து வேண்டியதேயில்லை. அன்றியும் இந்த வேது பிடிக்குமுறை எவரும் எளிதில் செய்துகொள்ளத் தக்கதே யாம். இதற்குச் சமானம் வேறில்லை. வெந்நீருக்கு வழியில்லாதவர்களும் உண்டா. தண்ணீரின் அருமைபோ மனிதர்களுக்குத் தெரியாது. ஒரு முறை தெரிந்து கொள்ளுவார்களானால், கடவுள் யாவருக்கும் தயைபுரிந்தளித்துள்ள இந்த பெரிய வரத்தை அவர்கள் ஒருபோதும் அவமதிப்பு செய்ய மாட்டார்கள்" என்று கூறி மறுபடியும் துளசியம்மாளைப் பார்த்து, "அம்மா, உடனே கொஞ்சம் வெந்நீர் வைத்துக் கொடுத்தால் வேது பிடிக்கு முறையை நான் காட்டிவிட்டுப் போகிறேன்" என்று கூறினாள்.

அவ்வார்த்தையைக் கேட்ட துளசியம்மாள், "ஆம் அம்மா! அது தான் மிகவும் நல்லது. இதோ நொடிப்பொழுதில் வெந்நீர் வைத்துக் கொடுக்கிறேன். தாங்கள் தயைசெய்து வேதுபிடிக்கும் முறையைச் செய்து காட்டிவிட்டுப்போக வேண்டுமென்பதே என்னுடைய கோரிக்கை" என்று கூறிக்கொண்டே வெந்நீர் வைக்கச் சென்றாள்.

வெந்நீர் சுண்டக் காய்ந்தபின்னர் பச்சையம்மாள் அதை வாய்குறுகிய ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் விட்டு சிவகாமியை உட்கார வைத்து வெந்நீர் பாத்திரத்தை அவள் சமீபத்தில் வைத்து கம்பளிச் சால்வையால் காற்று புகாதபடி அவளுக்கு முக்காடிட்டுப் பத்து நிமிஷம் வரையில்

வேது பிடிக்கச் செய்தாள். பிறகு கொஞ்சநேரம் பொறுத்து முக்காட்டை நீக்கிப் பார்த்தபோது, சிவகாமிக்கு இருந்த நோய் பாதி குணமாய் இருப்பதாகத் தெரிந்தது.

அதைக்கண்ட துளசியம்மாள், "இந்த அதிசயத்தை நான் இதற்குமுன் எப்போதும் கண்டதில்லையம்மா.' அப்பா! இதுவரையில் சிவகாமி என்ன பாடுபட்டுவிட்டாள். வெந்நீருக்கு இவ்வளவு அற்புத சக்தி உண்டென்று நான் இதுவரையில் அறியவில்லையம்மா" என்று கூறினாள்.

பச்சையம்மாள்:—"கண்ணும்பில் இருக்கிறது சூக்ஷமம் என்பதுபோல், வியாதிகள் பல, எளிய மருந்தால் தீரத்தகுந்தனவாகவே யிருக்கின்றன. ஆனால், சிவகாமிக்கு வந்திருக்கின்ற ஜலதோஷம் சற்றுக் கடுமையானது. ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். எனக்கு இப்படிப்பட்ட ஜலதோஷம் வந்துவிடுமானால் நான் குளிர்ந்த ஊற்று நீரில் ஒரு செம்பு மடமடவென்று குடித்து உடனே படுத்துத் துப்பட்டியால் நன்றாக போர்த்துக்கொள்ளுவேன். மூச்சுவிடுவதற்காக, வீசுங்காற்றுக்கு நேரே வாயைமட்டும் துணியால் மூடாதிருப்பேன். ஒரு சமயம் நவசார உப்புத் திராவகம் கிடைக்குமானால், அதில் ஒரு உச்சிக் கரண்டி தண்ணீரில் விட்டுக் கலக்கிக் குடிப்பதும் உண்டு. வெறுந்தண்ணீர் கொஞ்சமும் குடிக்காததற்குமுன்னமே அந்த திராவகத்தைத் தண்ணீரில் கலந்து குடிப்பது மிகவும் நலமாகும். படுத்து அரை நாழிகை செல்லுமுன் உடம்பு முழுவதும் சலசலவென்று வெயர்க்கும். காலையில் எழுந்திருக்கும்போது பெரும்பாலும் ஜலதோஷம் இல்லாதிருக்கக் காணலாம்."

துளசியம்மாள்:—“இது மிகவும் இலேசான சிகிச்சையாய் இருக்கின்றதே!”

பச்சையம்மாள்:—“ஆம், சிகிச்சை சாதாரணமானது தான். ஆனால், நான் என்னுடைய அனுபவத்தில் கைகண்ட முறையாகும். செய்து பார்த்தால் உண்மை தெரியும். மனிதர்கள் தங்களுக்குண்டாகும் நோய்களுக்குத் தங்களாலான எளிய சிகிச்சைகளைத் தாங்களே செய்துகொள்ளத் தகுந்த திறமை யுடையவர்களாயிருந்தால் பெரும்பாலும் வைத்தியர்களைத் தேடவேண்டிய அவசியமே கிடையாது.”

துளசியம்மாள்:—“அப்படியானால், சிவகாமிக்கு இனி வைத்தியர் வந்து பார்த்து மருந்து கொடுக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லையே?”

பச்சையம்மாள்:—“இல்லை, இல்லை. சிவகாமி இப்போது இருக்கும் நிலைமைக்கு வைத்தியர் வந்து பார்த்துத்தான் காரியம் ஆகவேண்டும். நான் இப்போது சொன்ன முறையெல்லாம் சாமானிய ஜலதோஷத்திற்கே யல்லாமல் இவ்விதக் கடும் வியாதிக்கன்று.”

துளசியம்மாள்:—“அப்படியே செய்வோம். தயை செய்து நீங்கள் முன்னே கூறியபடி வைத்தியரை இங்கு வந்து இவளைப் பார்த்துப் போகும்படி செய்யுங்கள்.”

பச்சையம்மாள்:—“ஆஹா, அப்படியே சொல்லிவிட்டுப்போகின்றேன். துளசியம்மா, நான் இப்போது சொல்லப்போகும் இரண்டொரு விஷயத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். வீட்டிலுள்ள தாய்மார்கள் உடம்பு வணங்கி பிரதிதினமும் தாங்களும் குளித்துத் தங்கள் பிள்ளைகளையும் குளிக்கச்செய்து, தாங்கள் இருக்கும் வீடுகளைச் சுத்தம்

செய்து வைத்திருந்தால் ஒரு நோயும் வருவதற்கு வழி யில்லை. ஒரு சமயம் நோய் வரினும் எளிய மருந்துகளினுல் தீர்ந்துவிடக்கூடியதா யிருக்கும். புத்திகூர்மை யுடைய அநேகம் தாய்மார்கள் தங்கள் வீடுகளில் வரும் நோய்களின் நிலைமையைக்கண்டறிந்து அந்நோய்களுக்கு வைத்தியரின் உதவியின்றியே தாங்களே ஏற்ற மருந்துகளைக் கொடுத்து அவைகளைப் போக்கியதை அநேக இடங்களில் கண்டிருக்கின்றேன். குடும்பத்தில் தலைமையாய் இருக்கும் தாய்மார்கள் அற்ப வியாதிகளுக்கான மருந்துகள் இன்னின்னவை யென்று கண்டறிந்து, அவ்வியாதிகளைப் போக்கக்கூடிய புத்தி கூர்மை உடையவர்களா யிருக்கவேண்டும். அவ்வித புத்தி கூர்மைக்கு மருந்தும் ஈடல்ல; வைத்தியரும் ஈடல்ல. 'மந்திரம் கால் மதி முக்கால்' என்றொரு பழமொழியும் நமது நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற தல்லவா? ஆனல், நம்மால் போக்கமுடியாதென்று தோன்றும் வியாதிகளைப் புத்திகூர்மையும் நுண்ணறிவும் உடைய வைத்தியர்களைக் கொண்டே போக்கும்படிச் செய்யவேண்டும். கொடிய வியாதிகள் பெரும்பாலும் அத்தகையோரின் சாமர்த்தியத்தாலும், மருந்தின் பலத்தாலும்; உபசாரத்தினுலும் அன்றி, மற்றொரு விதத்தாலும் நீங்கா. இப்போது நான் கூறியவைகளெல்லாம் தங்கள் நினைவில் மறந்துபோகாமல் இருக்கட்டும். நேரமாயிற்று. நான் போய்வருகிறேன். பொழுது போவதற்குள் வைத்தியரை இங்குவந்து பார்த்துப் போகும்படி ஏற்பாடு செய்கின்றேன்."

என்று கூறிய பச்சையம்மாள் சிவகாமியைப் பார்த்து, "அம்மா சிவகாமி, பயப்படாதே! உனக்குச் சீக்கிரம் சுகமேற்படும். கடவுள் காப்பாற்றுவார்" என்று கூறி எல்லாரிடத்

திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு அவ்வீட்டினின்றும் புறப்பட்டாள். போகும்வழியில் பின்னும் இரண்டுநோயாளி களின் வீடுகளுக்குப்போய் அவர்களுக்கு வேண்டிய உப சாரங்களைச்செய்துத் தேறுதல் சொல்லி அங்கிருந்து புறப் பட்டு, வைத்தியசாலைக்குப் போய் டாக்டரிடம் அவர் இன் னின்ன வீதியிலுள்ள இன்னின்ன வீடுகளுக்குப் போய் நோயாளிகளைப் பார்த்து வரவேண்டுமென்பதை சொல்லி விட்டும்பொழுதமரத் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

## 12-ம் அத்தியாயம்.

### பச்சையம்மாளுடைய கதையில் அறியத்தக்க புத்திமதிகள்.

பச்சையம்மாள் வசிக்கும் வீடு சிறிதாயினும், வெகு சுத்தியாயிருக்கும். அங்குள்ள மணை, நாற்காலி, முக்காலி, கட்டில், பெட்டி முதலிய சாமான் தட்டு முட்டுகள், அங்கங்கே ஒழுங்காகவும் அழகாகவும் வைத்திருந்தன. அன்றிராத்திரி காற்றொடுக்கமாயிருந்தது. அப்போது பூஞ்செடிகளில் இலைகளும் அசையவில்லை ஆகையால், பலகணிக்கதவு திறந்திருந்தது. பலகணியோடு பொருந்த, வட்டமான முக்காலி ஒன்று வைத்திருந்தது. அதன் பக்கத்தில் விசுப்பலகையின் மீது உட்கார்ந்து பச்சையம்மாள் அண்ணாந்து பார்த்தபடி, தெய்வசிந்தனையாயிருந்தாள். திருவாய்மொழி புத்தகம் ஒன்று முக்காலிமேல் திறந்துவைத்திருந்தது. பிறருக்கு உபகாரம் செய்து பகற்பொழுதை இனிதாகக் கழித்துப் பழகிய பச்சையம்மாள், இராத்திரி காலத்தில் நித்திரை செய்து இளைப்பாறி விழித்திருக்கும் பொழுது தனக்குச் சித்த சுத்தியும் பக்தியும் ஞானவிருத்தியும் அருளும்படி கடவுளைப் பிரார்த்திப்பாள்.

மேலே பச்சையம்மாளைக் குறித்துச் சொல்லிய வரலாறுகளை வாசித்துச் சிந்திக்கும் அனைவருக்கும் நற்புத்தியும், நல்லொழுக்கமும், பிறர் சுகத்தில் விருப்பமும், திரிகரணசுத்தியும் உண்டாகாதிரா.

இதுவரையில் படித்து வந்த கதையினால் நாமறியத் தக்க புத்திமதி யாதென்று பார்ப்போம். யாவரும் செய்யாத காரியத்தை ஒருவரும் செய்வது கூடாது. ஒருத்தி செய்ததையோ, அவளைப்போல ஒன்பதுபேர் செய்யினும் செய்யலாம். பச்சையம்மாளைப்போல் யாவரும் நோயாளிக்கு சிகிச்சோபசார முயற்சி ஒன்றையே கைக்கொள்ளுவது அசாத்தியமாகாது. அவளைப்போல் ஸ்திரீகள் தம் கணவனை இழந்து, மக்களைப் பறிகொடுத்து, வீடுவாசலைவிட்டு, ஊரெங்கும் திரிந்து, தமக்குச் சம்மந்தம் இல்லாத வேலைச் சுமையைத் தன் தலைமேல் ஏற்றிச் சுமக்கவேண்டுமென்று நாம் சொல்ல வரவில்லை. அப்படிச் செய்வது சிரமமென்று கடவுள் அவரவருக்கு அமைத்த செய்கடனையே அவரவர் செய்வது தருமம். இவ்வரம்பு கடந்து நடப்பவருக்குத் தெய்வானுகூலம் கிடைக்க மாட்டாது. நாம் இங்கே வற்புறுத்திச்சொல்லுவ தெல்லாம்கூடி ஒன்றுதான், அதாவது, பெண்பிள்ளைகள் அனைவரும்; முக்கியமாய் அந்தந்தக் குடும்பத்தில் பிள்ளைகள் பெற்று வாழும் தாய்மார்கள் யாவரும் அற்ப நோய்களுக்குத் தங்கள் கைக்கு எட்டும் சுளுவான மருந்தின் விவரமும், அது செய்யும் முறையும் தீர விசாரித்தறிந்திருப்பது அவசியமான கடமையாம். ஓ, பெண்மணிகாள் கருணாநிதியாகிய ஜகத்ரக்ஷகனுக்குத் தன் சிருஷ்டிவர்க்கங்களாகிய ஜீவகோடிகள் படும் உபத்திரவங்களில் ஆனந்தமுண்டென்று எண்ணுகிறீர்களா ? இல்லையே. இயற்கைப் பொருள்கள் அனைத்தும் ஜீவகோடிகளின் நல்வாழ்க்கைக்கும் சுகத்திற்கும் சாதகமாக வேண்டுமென்பதே பகவானுடைய திருவுளப்பாங்கு. அத் திருவுள்ளத்தில் என்றும் அருள் சுரந்து வழிகின்றது. அத் திருவுள்ளத்தின் நினைவின்

பயனை நாம் அக்கிரமத்தினாலும் அவிவேகத்தினாலும் அவமதித்துப் பெருமல், அச் சர்வேசனுடைய பேரருளின் பெரும்பயனைக் கடவுள் தமது திருக்கரத்தால் அமைத்துப் பரமோத்தம பெருங் குணமின்றி அழிக்கின்றோம். நமது முயற்சியால் எளிதிற் பெறத்தக்க பெரும் பாக்கியத்தை, கடவுள் அற்புதமாய் நமக்கு அநுக்கிரகம் செய்வார் இதை கவனித்துக்கொள்ளுங்கள். அவர் விதித்த சட்டதிட்டத்தைக் காப்பவருக்குச் சுகமும் அதனை கடந்து நடப்பவருக்குத் துக்கமும் உண்டாவது நிச்சயமே.

பலவிதமாய் சொல்லியுங் கேளாமல், நீங்கள் வீட்டுப் பலகணிக் கதவுகளைத் திவ்வியமான காற்று உட்செல்லாதபடி மூடிவைத்து, வீட்டில் பூர்த்தியாய்ச் சேரும் விஷக் காற்றை உச்சுவாச நிச்சுவாசம் செய்வீர்களானால், வர வர தேகம் மெலிந்து, பிணியால் வருந்தி இறந்துபோவீர்கள். இது நிஜம். படுக்கும் மெத்தை, உடுக்கும்ஆடை, எடுத்த உடம்பு இவைகளைச் சுத்தி செய்யாதிருப்பீர்களானால், நேரிடும் கெடுதிகளை நீங்களே அநுபவிக்கவேண்டும். சரீரத்திற் சேரும் அழுக்கு, வியர்வை ரூபமாய் உரோமத்துவாரத்தால் வெளிப்படும். இது சரீரத்தின் இயற்கை. அழுக்கு நீர் தடையில்லாமல் வெளிப்பட உரோமத் துவாரம் திறந்திருக்கவேண்டும். அதில் ஊத்தை அடைந்திருக்க விடுவீர்களானால், சரீரம் வியர்க்காது. வியர்வை வெளிவரும் வழியில்லாமையால் உள்ளடங்கியிருந்து, காளாவட்டத்தில் கட்டி, புண், சொரிசிரங்குகள் புறப்படும்; நானாவியாதிகளும் உண்டாகும். யாவருக்கும் வருவது வியாதியானாலும், அதை வருவிக்கும் ஹேதுக்கள் உங்கள் ஓட்டாரமும் அசட்டையும், சோம்புலுமேயாம்.

ஓ, பெண்கள் சிகாமணிகாள்! உங் [illegible] பாரம் இலேசானதன்று. அதைக்குறித்த் [illegible] வதைச் சற்றே கவனமாய்க் கேளுங்கள் [illegible] மனிதர்கள் சுகத்திற்கும் அதன் பயனு [illegible] துஷ்டிக்கும் நீங்களே காரணம். ஆடவர் செ [illegible] செய்ய நிமித்தம் இல்லை. உங்களுக்கு அ [illegible] உங்களுக்கு இயல்பான வேலையைச் செய் [illegible] உங்கள் காலம் போதாதே! இனி உங்களுக்கு [illegible] சந்ததிகளுக்குப் பாராட்டுந் தாய், ஊட்டுந் தா [illegible] தாய், வைப்புத்தாய், செவிலித் தாய் எனத் தா [illegible] போகிற நீங்கள், உங்கள் பிள்ளைகளை தே [illegible] மும் சௌரியமும் உடையவராகும்படி வள [illegible] காத்து வருவதிலும் உத்தமமான தொழி [illegible] இருக்கிறது? சகோதரிகாள், மிகுபாரமும் [illegible] உங்கள் நிலைமையை நிமிஷமும் மறவாதிருங்க [illegible] உங்கள் வயிற்றில் உருவாகி ஜனிக்கும் குழந்தைகள் [illegible] அழிவில்லாத இயற்கை அமைப்பாயுள்ள ஜீவ [illegible] களல்லவா! இதை உங்கள் உள்ளத்தில் மறவாமல் வைத்திருப்பீர்களாக.

ஓம் தத்சத்.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

Printed at the Chandra Press, Madras.